ஸ்ரீ வீழிச்சிவாக்கிர யோகிகள்
அருளிய

# சிவநெறிப் பிரகாசம்



பொழிப்புரை
டாக்டர் S.P. சபாரத்தினம்

வெளியீடு
ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்
சென்னை

## நூல் விளக்கக்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின்பெயர் | : | சிவநெறிப்பிரகாசம் |
| பொருள் | : | சைவ சித்தாந்தம் |
| ஆசிரியர் | : | வீழிச்சிவாக்ர யோகிகள் |
| உரையாசிரியர் | : | S.P. சபாரத்தினம் |
| பதிப்பாண்டு | : | 10.05.2003 |
| பதிப்பாளர் | : | க.கார்த்திகேயசிவம் |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு |
| உரிமை | : | ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட் |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | 18cm X 24cm |
| தாள் | : | மேப்லித்தோ |
| கட்டமைப்பு | : | |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 207 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | .80/- |
| அச்சிட்டோர் | : | பாலா ஆப்செட் பிரிண்டர்ஸ், புதுவை |
| முகப்புஅட்டை | : | ச.சபரிகிரி |
| கணினி வடிவமைப்பு | : | ச.சபரிகிரி, க.கார்த்திகேயசிவம் |

நூல் கிடைக்குமிடம்
ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட், சென்னை

உ

சிவமயம்



திரு. ச.குழந்கைவேலு முதலியார்

திருமதி. கு.சிவகாமி அம்மாள்

இடம்: கும்பகோணம்

நாள்: 10.05.2003

உ

சிவமயம்

ஸ்ரீவீழிச்சிவாக்ர யோகிகள்

அருளிய

# சிவ நெறிப்பிரகாசம்

மூலமும் உரையும்


விளக்கவுரை

சைவாகம - சிற்பாகம கலாநிதி

பேராசிரியர் டாக்டர் S.P. சபாரத்தின சிவாச்சார்யார்

M.A (Tamil) M.A (Sanskrit) M.A (Philospy) Dip in French & German


இந்நூல்

உயர்திரு. ச.குழந்தை வேலு, திருமதி கு.சிவகாமி

தம்பதியினரின்

சதாபிஷேக மலராக

வெளியிடப்படுகிறது


வெளியீடு

ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்

சென்னை-78

2003

உ
சிவமயம்

## சமர்ப்பணம்

ஓமெனும் ஓரெழுத் துள்நின்ற ஓசைபோல்
மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மானடி
ஆய்நின்ற தேவர் அகம்படி யாகுமே.

- திருமந்திரம்

ஒப்பில்லாத ஓமென்னும் ஒரு மொழிக்கண் காணப்படும் பிரிவில்லாத ஓசைபோல் தேவர்கள் விழையும் விழுப்பொருள் சிவபெருமான். அவன் திருவடியினை நித்தமும் நினைந்து பூஜித்து அன்பு பூண்டு ஒழுகும் எங்கள் தாத்தா, பாட்டிக்கு அவர்தம் உள்ளத்துள் சிவபெருமான் என்றென்றும் விளக்கமாய் நின்று துணை புரிந்தருள எம்பெருமான் திருவடியினை வணங்குகிறோம் நாங்கள்.

வைஷ்ணவி, யமுனா,
காயத்ரி,
சபரிகிரி, சுபத்திரா.

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | I |
| 2. | ஆசியுரைகள் | VI |
| 3. | GREETINGS | XI |
| 4. | முன்னுரை | XII |
| 5. | INTRODUCTION | XVI |
| 6. | நூற்பொருள் அட்டவணை | XXI |
| 7. | சிவநெறிப்பிரகாசம் மூலமும் உரையும் | 1 |
| 8. | பாட்டு முதற்குறிப்பு அகராதி | 139 |
| 9. | அருஞ்சொல் அகராதி | 143 |
| 10. | சைவ பரிபாஷைச் சொற் பொருள் அகராதி | 153 |
| 11. | தருக்கச் சொல் அகராதி | 170 |

உ
சிவமயம்

## பதிப்புரை

### சிவபெருமான்துதி

ஆகமத்தொடு மந்திரங்களமைந்த சங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த சனங்கள் வெட்குறுபக்கமா
மாகதக் கரிபோல்திரிந்து புரிந்து நின்றுனு மாகசேர்
ஆகதர்க்கெளியேனலேன் திருஆலவாயரன் நிற்கவே
- முத்தமிழ்விரகர்

**சதாபிஷேகவிழா**

ஆரணமுடிமேலும் ஆகமமுடிமேலும் அருட்பெருஞ்ஜோதியாகி விளங்குகின்ற சிவபெருமானின் திருவருள் துணையோடும், சத்குருநாதர்களின் நல்லாசியோடும் எங்களது "ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்" என்ற அமைப்பின் மூலமாக பல்வேறு சமயப் பணிகளை செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். ஒரு சமயம் சிறந்து விளங்க வேண்டும்எனில் அந்த சமயத்தை விளக்குகின்ற நூல்கள் யாவும் வெளிவர வேண்டும் என்பது இன்றியமையாதது ஆகும். மேலும் அந்த நூல்கள் கூறுகின்ற கருத்துக்களை சமயத்தை பின்பற்றும் அனைவரும் அறிந்துகொள்ள ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். அந்த சமயத்தை பின் பற்ற முற்படுபவர்கள் அச்சமயத்தின் மூலஇலக்கியங்களில் முழுதுமாக நம்பிக்கைவைக்க வேண்டும். அவற்றில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை நன்றாக கடைபிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் அச்சமயத்தின் சிறப்பைப் பற்றியும் சமயத்தின் பரம்பொருளாகிய இறைவனைப் பற்றியும் நன்றாக அறிந்து கொண்டு அந்த இறைவனின் அருளை பூரணமான அனுபவிக்க முடியும். இவற்றில் நம்மிடம் சிறிதளவேனும் குறைகள் இருந்தால் இறைவனின் கருணையை நம்மால் உணர முடியாது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சைவசமயத்திற்கு எங்களால் இயன்ற வரையும் பணியாற்ற முயற்சி செய்கிறோம். இதன் முதல் அங்கமாக சைவ சமயத்தின் உண்மைகளை விளக்குகின்ற வடமொழிக் களஞ்சியங்களையும், தண்டமிழ் இலக்கியங்களையும் வெளியிட்டு வருகிறோம். அதன்வழி 10.05.2003 இன்று எங்களது அமைப்பின் உறுதுணையாளர் திருவாளர் ச.சபரிகிரி அவர்களுடைய தாயாரைப்பெற்ற பெற்றோர்கள் சிவபூசைச்செல்வர் உயர்திரு. ச.குழந்தைவேலுமுதலியார் திருமதி கு.சிவகாமிஅம்மாள்

தம்பதியினரின் சதாபிஷேக விழா நடைபெறும் நன்னாளில் "சிவநெறிப்பிரகாசம்" என்ற நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

__சமயம்__

உலகில் வாழ்கின்ற உயிரினங்கள் யாவும் துன்பத்தில் வெறுப்பும் இன்பத்தில் விருப்பும் இயல்பாகவே கொண்டு விளங்குவதைக் காணலாம். மேலும் அவ்வுயிர்கள் தான் இன்பம் என்று கருதும் பொருள்களை அடைவதற்காக பல்வேறுவகைகளிலும் முயற்சிகளை செய்வதையும் காணலாம். அம்முயற்சியில் சில வெற்றியாயும் சில தோல்வியாயும் அமைகின்றன. நன்றாக முயற்சி செய்தும் பலமுறை தோல்வியடைந்த பிறகு தான் உயிர்கள் தோல்விக்கான காரணத்தை அறிய முற்படுகின்றன. அப்பொழுதுதான் அவைகளுக்கு பல்வேறு பிறவிகளைப் பற்றிய அறிவும் அதற்கு காரணமான பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்ற வினைகளைப்பற்றிய அறிவும் உண்டாகிறது. உண்டாகவே நாம் செய்த நல்வினை, தீவினைகளின் பயனாகிய இந்த இன்ப துன்பங்களெல்லாம் அறிவிலிப்பொருள்கள் ஆதலால் அவை தானாகவந்து நம்மைஅடையா என்றும் அவற்றை தருபவன் ஒருவன் வேண்டும் என்றும் அறிகின்றன. அவ்வொருவன் என்னும் ஒருவனாகிய இறைவனைப்பற்றி அறியும் பொழுதே அவ்வுயிர்கள் இவ்வுலக இன்பங்கள் எல்லாம் மாயா காரியங்கள் என்றும் இவைகளைக்காட்டிலும் மேலான இன்பம் ஒன்று இருக்கவேண்டும் என்றும் அறிகின்றன. அறியவே கருணையேவடிவான இறைவன் உயிர்களாகிய நாம் அனைவருக்கும் பேரின்பத்தை வழங்குவதற்காகவே ஐந்தொழில்கள் என்னும் விளையாட்டின் வழி பல்வேறு பிறவிகளைத் தந்து நம்மை பக்குவப்படுத்துகிறான் என்பதை உணர்கின்றன. உடனே அப்பெருங்கருணை பேரருளாளனின் கருணையை வியந்து அவனதுதிருவடிகளில் சரண்புக விழைகின்றன. இவைகளிலிருந்தே இறைவன் உலகத்தை படைத்ததன் நோக்கம் உயிர்களுக்கு பெற்ற சிற்றின்பத்தின் வழி பேரின்பத்தை உணர்த்துவதற்கே என்பதை நாம் உணரலாம். எனினும் உயிர்கள் சிற்றின்பமாகிய கடலை கடந்து பேரின்பமாகிய கரையை அடைவது எப்படி? அதற்கு ஒரு வழி வேண்டுமே ! அதுதான் சமயம் என்னும் வழியாகும்.

__சைவசமயம்__

சமயம் என்பது உயிர்கள் பேரின்பப்பொருளாகிய இறைவனை அடைவதற்கான வழி என்பதைக்கண்டோம். எனினும் செல்கின்றவழி செம்மையாக இருந்தால்தான் அடையவேண்டிய இலக்கை அடையமுடியும்.

செம்மையான வழியை அறிய முற்படும்பொழுது உலகில் நிலவும் பல்வேறு சமயங்களைக் கண்டவுடன் எந்த சமயத்தை பின்பற்றுவது என்னும் கேள்வி எழலாம். எல்லாச்சமயங்களுமே உயிர்களை மேல்நிலைக்கு உயர்த்துவதற்காக எழுந்தவையே ஆகும். ஆதலால் சமயங்கள் யாவுமே சிறந்தவையே. அவையாவும் உயிர்களின் அறிவின் முதிற்சிக்கேற்ப அவைகள் கடைபிடித்து ஒழுகும் வண்ணம் இறைவனால் படைக்கப்பட்டவை என்பது சைவசமயக் கொள்கை ஆகும். அவ்வாறு பல்வேறு பிறவிகளிலும் பல்வேறு சமயங்களில் பிறந்த உயிர்கள் அந்தந்த சமயங்களின் தருமநெறிகளை கடைபிடித்து உண்மைகளை எல்லாம் உணர்ந்து அந்தப் புண்ணியங்களின் பயனால் நிறைவாக சைவசமயத்தை அடைகின்றன. எனவே தான் சைவசமயம் எந்த ஒருமதத்தையும் சமயத்தையும் குறைகூறாது, பெற்றோர்கள் தம் பிள்ளைகள் செய்த பிழைகளை எவ்வாறு கண்டிப்பார்களோ அதுபோல மற்ற சமயத்தின் முக்தி கொள்கைகளில் உள்ள பிழைகளை கண்டித்து உண்மையை உணர்த்துகின்றது. அஃதன்றி மற்ற சமயங்களை பொய்யென்றோ கடைபிடிக்கத்தகாதனவென்றோ கூறவில்லை. ஆகையால் தான் சைவசமயம் தாய்ச்சமயம் என்று போற்றப்படுகின்றது. உலகில் உள்ளஅனைத்து சமயங்களின் கொள்கைகளையும் சைவசமயத்தில் காணலாம். ஆனால் சைவசமயத்தின் சிறப்புக் கொள்கைகளை வேறு எந்தசமய நூல்களிலும் காணமுடியாது. அதுவே சித்தாந்தசைவ சமயத்தின் சிறப்பாகும். அதனால்தான் சைவத்தின் மேல்சமயம் வேறில்லை என்றும், சைவசமயமே சமயம் என்றும் பல்வேறு சமயங்களையும் ஆய்ந்தறிந்த நம்முன்னோர்கள் சைவசவமயத்துள் மற்றஎல்லாசமயங்களும் அடங்கும் என்பதை உணர்ந்து கூறியுள்ளார்கள். உலகின்தலை சிறந்த நெறியாகிய சிவநெறியில் நம்மை பிறக்கவைத்த சிவபெருமானை வணங்கி சிவநெறியை பிரகாசிக்கசெய்யும் இந்நூலைப்பற்றி சிறிது சிந்திப்போம்.

## சிவநெறிப்பிரகாசம்

சிவநெறிப்பிரகாசம் என்னும் இந்நூல் சைவசித்தாந்த உண்மைகளை விளக்குகின்ற நூல்களுள் ஒன்றாகும். எனினும் இன்றைய சைவசித்தாந்த வித்தகர்கள் பலரும் இந்நூலைப்பற்றி குறிப்பிடுவதே இல்லை. காரணம் என்ன என்றும் புரியவில்லை. யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிகுருக்கள் அவர்களுடைய வேதாகம நிருபணம் என்னும் நூலிலும், சென்னை பேராசிரியர் திரு Dt . அருணாசலம் அவர்களுடைய சைவசமயம் என்னும் நூலிலும், மதுரை பல்கலைகழக பேராசிரியர் திரு. கங்காதரன் அவர்களின் Saiva Siddantha With Special Refernce

to Sivaprakasam என்னும் நூலிலும் இந்நாலைப்பற்றிய குறிப்புகளைக் காணமுடிந்தது. அவையே இந்நூல் வெளிவரமுதல்காரணமாகும். அவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இந்நூலாசிரியர் சூரியனார்கோயில் ஆதீனத்தில் இரண்டாவது குருமகாசன்னிதானமாக விளங்கிய **ஶ்ரீ சிவாக்ரயோகீந்த்ர சிவாச்சாரியார்** ஆவார். இவர்16ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்வாழ்ந்தவர். இந்நூல் 215 திருவிருத்தங்களைக்கொண்டு விளங்குகின்றது. இந்நூலுக்கு நூலாசிரியரின் மாணவர்களுள் ஒருவராகிய **நந்தி சிவாக்ரயோகிகள்** என்பார் சிறந்த உரைவரைந்துள்ளார். இந்நூலை முதன்முதலாக சென்னை பல்கலைகழகத்தில் தமிழ்ரீடராகஇருந்த திரு S.அநவரதவிநாயகம்பிள்ளை M.A.L.T.அவர்கள் 1936ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்கள். பின்பு திருவாவடுதுறை ஆதீனத்தின் 22வது குருமகாசன்னிதானமாக விளங்கிய **ஶ்ரீலஶ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகளின்** அருளாணையின் வண்ணம் ஆதீனவித்வான் **திரு த.ச.மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை** அவர்கள் 5.2.1968ஆம்ஆண்டு வெளியிட்டுள்ளார். நந்தி சிவாக்ரயோகிகளின் உரையையே அடித்தளமாகக்கொண்டு சென்னை பேராசிரியர். டாக்டர்சிவஶ்ரீ.S.P. சபாரத்தினசிவாச்சார்யார், அவர்களைக்கொண்டு தற்காலத்திற்கேற்ப எளிய உரையுடன் வெளியிடுகிறோம்.சைவசித்தாந்தம் பயிலும் மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சைவசமயிகள் யாவரும் கிடைத்தற்கரிதாகிய இவ்வருள்நூலை வாங்கிப்படித்து சைவசமயத்தின் உண்மைகளை உணர்ந்து முழுமுதற்பொருளாகிய சிவபெருமானின் பேரருளைப்பெற்றுய்ய வேண்டுகிறோம்.

## உரையாசிரியர்

இந்நூலுக்கு அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் எளியஉரைஎழுதி உதவியவர் சென்னை பேராசிரியர் டாக்டர் S.P சபாரத்னசிவாச்சார்யார் (M.A[Tamil],M.A[Sanskrit], M.A[Philosophy], Dip in French & German) ஆவார். அவர் தமிழ், ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம், இந்தி, பிரெஞ்சு, ஜெர்மன் ஆறு மொழிகளில் புலமை கொண்டவர். கிரணாகமத்தை ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றவர். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கல்லூரியிலும், பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மற்றும் தத்துவப்பேராசிரியராக விளங்கியவர். இந்தியாவின் பல்வேறுமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் சுமார் 250க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியும், பல கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகளை

சமர்ப்பித்தும் உள்ளவர்கள். அமெரிக்காவின் ஆகமஆய்வியல் நிறுவனத்திற்காக பத்துஆகமங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். எங்களுக்காக இந்நூலுக்கு உரைஎழுதி உதவிய அவர் இன்னும் பல்வேறு சமயப்பணிகளை மேற்கொள்ளவும், மூலாகமங்களுக்கு உரை எழுதவும் நீண்ட ஆயுளையும், நல்லாரோக்யத்தையும் வழங்கவேண்டி எல்லாம்வல்ல ஆகமச்செல்வன் சிவபெருமானின் திருவருளை இறைஞ்சுகிறோம்.


<u>நன்றி</u>

இந்நூல்வெளிவர பொருளுதவி செய்த சிங்கப்பூர் ஸ்ரீ ரெ.சம்பந்தன் ஸ்ரீமதி ச.சேது சௌ.ச.சுபத்ரா சிர.ச.சபரிகிரி அனைவருக்கும் சகல நலன்களும் உண்டாக எல்லாம்வல்ல இறைவனின் திருவடிகளை வழுத்துகிறோம்.

இந்நூல் நல்லமுறையில் வெளிவர பல்வேறு வகைகளிலும் உதவிபுரிந்த சகோதரர்ஸ்ரீக.கல்யாணசுந்தரசிவம், மானாமதுரை தெ.ராஜேஷ் @ சோமசுப்ரம்மண்ய பட்டர், சகோதரிசௌ.க.உமாமகேஸ்வரி, மதுரை வே.ந.வெங்கடேசன் ஆகியோருக்கும், ஆங்கிலத்தில் முன்னுரை எழுதி வழங்கிய பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்தின் முதுநிலை சித்தாந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் திரு. T.கணேசன் அவர்களுக்கும் ஆசியுரை வழங்கிய குருமகா சன்னிதானங்களுக்கும், சிவாச்சார்ய பெருமக்களுக்கும் எங்களுக்கான அரசாங்க அலுவல்களை செய்து வரும் ஆடிட்டர் ஸ்ரீ.G.நடராஜன் அவர்களுக்கும், மிகவும் நல்லமுறையில் அச்சிட்டு தந்த அச்சகத்தாருக்கும் (பாலா ஆப்செட்) ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்டின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



என்றும் அன்புடன்
க.கார்த்திகேயசிவம்
செயலாளர்
ஸ்ரீஅகோரசிவாச்சார்யடிரஸ்ட்
சென்னை.78

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

வேதபுரீ, சத்திரப்பட்டி சாலை, தேனி - 625 531.

## ஶதாபிஷேக வாழ்த்து மடல்

நாள் : சித்திரை 27-ம் நாள் ( 10 - 5 - 2003 ) சனிக்கிழமை

**அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறன் அறிந்து தேர்ந்து கொளல்** (திருக்குறள் 441)

இதன் பொருள்:

அறம் உணர்ந்தவராய்த் தன்னைவிட மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை, கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

பேரன்புமிக்க

ஸ்ரீமான் குழந்தைவேலு முதலியார் ஸ்ரீமதீ சிவகாமி அம்மாள்

தம்பதிகளுக்குப் பரிபூர்ண ஆசிகள்!

எண்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்நாளில் தங்களை மனமார வாழ்த்துகிறோம். எமது வழிபடு தெய்வம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் திருவருளால் தாங்களும் தங்கள் சுற்றமும் எல்லா நலன்களும் பெற்று இன்புற்று வாழ ப்ரார்த்தனை செய்து மனமார வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

ஸ்வாமி ஓங்காராநந்த



உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்,
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை 609 803
நாகை மாவட்டம்

தொலைபேசி எண்
04364 -232021

## அருள் வாழ்த்துரை

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத்துறைவிளங்க
-சேக்கிழார்

ஞானநூலதனை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை
-சிவஞானசித்தியார்

சூரியனார்கோயில் ஆதீனம் இரண்டாம் பட்டம் ஸ்ரீவீழிச் சிவாக்கிரயோகிகள் அருளிச்செய்த சிவநெறிப் பிரகாசம் என்னும் நூலுக்குச் சூரியனார்கோயில் ஆதீனம் மூன்றாம் பட்டம் ஸ்ரீநந்திசிவாக்கிரயோகிகள் உரைவகுத்துள்ளார்கள். அந்நூல் அச்சாகி வெளிவந்துள்ளது.

ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்டின் மூலமாக சென்னை பேராசிரியர் டாக்டர் எஸ்.பி. சபாரத்தின சிவாச்சார்யார் சிவநெறிப் பிரகாசத்துக்கு எழுதிய உரை வெளிவர இருப்பது வரவேற்கத்தக்கது: பாராட்டுக்கும் உரியது.

திருக்குறளுக்குப் பத்து ஆசிரியர்கள் உரை எழுதி இருப்பது திருக்குறளின் பெருமையைப் புலப்படுத்துவது போலச் சிவநெறிப்பிரகாசத்துக்கு மற்றும் ஓர் உரை வெளி வருவது சிவநெறிப்பிரகாசத்தின் பெருமையை நன்கு புலப்படுத்துவதாக அமையும்.

இந்த உரையின் வெளியீட்டு விழா, திரு குழந்தைவேலு முதலியார் திருமதி சிவகாமி அம்மாள் ஆகியோரின் சதாபிஷேக விழாவுடன் இணைந்து சிறப்புற நடைபெற நமது வழிபடு கடவுளான அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

உ
சிவ சிவ

Ph: 56655
கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி
முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.
திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)
தேதி 27.2.03
2905/2412

**வாழ்த்துரை**

சிங்கப்பூர், ஸ்ரீஅகோர சிவாச்சாரிய டிரஸ்ட், உறுதுணையாளர் திரு. ச. சபரிகிரி அவர்களின் பாட்டனார் திரு. குழந்தைவேலு முதலியார் அவர்களின் சதாபிஷேக விழா 10.5.03 நிகழவிருப்பதும், விழா மலராக, சிவநெறிப்பிரகாசம் என்னும் நூலை வெளியிடுவதும் அறிந்து மகிழ்கிறோம்.

ஆயிரம் பிறைகண்டு, உறவினராலும், நண்பர்களாலும் மிகுந்த குதூகலத்துடன் எடுக்கப்பெறும் விழாவில் "சிவநெறிப்பிரகாசம்" எனும் நூலை வெளியிடுவது பொருந்தியதாகும்.

சதாபிஷேக விழாவும், நூல்வெளியீடும் சிறப்புற நிகழச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவருட் பிரசாதம் இத்துடன்.

சுபம்



உ

பதிவு எண் : 1577/95

ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் சதாப்தி
வேத சிவாகம பாடசாலை டிரஸ்ட்

பதிவு அலுவலகம் : *66, சன்னதி தெரு, திருப்பரங்குன்றம்*
*மதுரை - 625 005.*

பொருள் :

நாள் : 21-3-03

## அருள் வாழ்த்துரை

**"கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்"**

**பேரன்புடையீர் !**

**ஆயிரம் பிறைகாணும் அன்பர் உயர்திரு.ச. குழந்தைவேலு முதலியார் திருமதி கு.சிவகாமிஅம்மாள் தம்பதியினரின் சதாபிஷேவிழா 10.05.2003 அன்று நடைபெற இருப்பது குறித்து மகிழ்ச்சி. அவ்விழாவில் விழா நாயகரின் பேரப்பிள்ளை சிரஞ்சீவி ச.சபரிகிரி அவர்களின் முயற்சியில் சூரியனார்கோயில் ஆதீனத்தின் இரண்டாவது குருமகாசன்னிதானமாக விளங்கியவரும் சித்தாந்தசைவத்தைப் பற்றி சிவாக்கிரபாஷ்யம், சிவஞானபோத சங்கிரஹ வியாக்கியானம் முதலிய பல்வேறு நூல்களை அருளிச் செய்தவருமாகிய ஸ்ரீவீழிச் சிவாக்கிர யோகிகளின் சிவநெறிப்பிரகாசம் என்னும் நூலை வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறோம். சிவநெறி உலகெங்ஙனும் பிரகாசிக்க வேண்டும் என்னும் ஆசிரியரின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து நம்மால் இயன்றளவும் பணி செய்ய வேண்டும் என்ற உங்களின் முயற்சி கண்டு மனம் மகிழ்கிறது. இந்நூல் சைவ சமயத்தினருக்கு பெரிதும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சதாபிஷேக விழா இனிதே நிறைவேறவும் தம்பதிகள் சீரோடும் சிறப்போடும் வாழவும் நூல் நல்ல முறையில் வெளிவரவும் திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் எமது வழிபடு கடவுளான தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் திருவருளைச் சிந்தித்து மனமார வாழ்த்துகிறோம்.**

அன்புள்ள

K. [illegible]
21-3-03.

உ

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

**K. பிச்சைக்குருக்கள்**
*தலைமை அர்ச்சகர்*
*ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில்*
பிள்ளையார்பட்டி – 630 207
சிவகங்கை மாவட்டம்
தென் இந்தியா.



**K. Pitchaikurukkal**
Cheif Priest
Sri Karpagavinayakar Temple
Pillayarpatti 630 207
Sivagangai Dist.
South India.

## வாழ்த்துரை

சென்னை அகோர சிவாசாரியார் அறநிலையத்தார் பல நல்ல பணிகளை சைவ உலகிற்குச் செய்து வருகின்றனர். ஞானமிர்தம் உரையுடன் தற்காலத்தில் படித்து புரிந்து கொள்ளும் வகையில் வந்தது குறிப்பிடத்தக்கது. அதுபோல சிவநெறிப்பிரகாசம் தற்சமயம் திரு. குழந்தைவேலு முதலியார் திருமதி. சிவகாமி அம்மையார் தம்பதிகளின் மணிவிழா வெளியீடாக வருவது குறித்தும் மகிழ்ச்சி. முக்கியமாக இப்பணியை மேற்கொண்டுவரும் சிங்கப்பூர் வீரமாகாளி அம்மன் திருக்கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ கார்த்திகேய சிவமும் மற்றும் எல்லாரும் எல்லா நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழப் பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

K. Pitchaikurukkal
12/6/2003

(K. பிச்சைக்குருக்கள்)

**Aum Namasivaya**

*Satguru Bodinatha Veylanswami*
163rd Jagadâchârya of the Nandinâtha
Sampradâya's Kailâsa Paramparâ
Kauai Aadheenam, Hawaii USA

Himalayan Academy
Kauai's Hindu Monastery
107 Kaholalele Road
Kapaa, HI 96747-9304
USA

## *Greetings*

We are pleased at the release by the Sri Aghora Sivacharia Trust of Chennai of their new publication "Shiva Neri Prakaasham" by Sivagra Yogeendra Sivacharyar, which was written in the 16th century. The book includes important but little known facts about the history of Saiva Siddhanta which are also in the English summary. Sivagra elaborated and established an independent Saiva Siddhanta System in Tamilnadu with significant differences from the pluralistic Meykandar system.

Many blessings to the Sri Aghora Sivacharia Trust to continue to bring out additional publications on Saiva Siddhanta and the Saiva Agamas.

**Satguru Bodinatha Veylanswami**
Kauai Aadheenam, Hawaii USA

உ
திருச்சிற்றம்பலம்

## முன்னுரை

சைவ ஆதீனங்கள் நம் தமிழ் நாட்டிலே பல உண்டு. அவற்றுள் சில ஒரு காலத்திலே சைவஆகமப் பூஞ்சோலைகளாகவும் சிவஞானப் பொழில்களாகவும் திகழ்ந்திருந்தன. இவ்வாறு திகழ்ந்திருந்தவைகளுள் ஒன்று சூரியனார் கோயில் ஆதீனமாகும். இந்த ஆதீனத்தை நிறுவி முதற்பட்டத்து ஞானகுரவராக விளங்கியவர் ஸ்ரீ சிவக்கொழுந்து சிவாசாரியார் எனும் ஸ்ரீசிவாக்கிர யோகிகள் ஆவார். இவர் கந்த பரம்பரையில் தோன்றிய ஞானாசிரியர் என்பதால் இப்பரம்பரையைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்வது அவசியம்.

ஸ்ரீவாமதேவ முனிவர் என்பவர் பரமபக்குவ நிலையில் இருந்த பொழுது கந்தப் பெருமானை வணங்கி சிவஞான உபதேசம் தந்தருளுமாறு வேண்டிநின்றார். குமரநாயகன் கருணைகூர்ந்து சுத்தாத்துவித சைவ உண்மையைப் போதிக்கும் சருவக்ஞானோத்தரம் எனும் ஆகமத்தையும், பிரணவ பஞ்சாக்ஷரத்தின் உட்பொருளையும் கந்தகாலோத்தரம், முதலான சிவாகமங்களையும் உபதேசித்தருளி ஆசாரியத்தலைமை நிலையிலும் அபிஷேகம் செய்துவைத்தார்.

சந்தான மரபில் வாமதேவ சிவாச்சாரியார் ஒரு தனிப்பெரும் இடத்தைப் பெற்றுள்ளார். அவரது கருணை எல்லையற்றது: நிலவுலகத்து உயிர்களையும் கடந்து நரக புவனத்தே துன்புற்றுக் கொண்டிருந்த எளிய உயிர்களிடமும் அவரது கருணை சென்று படிந்தது.

" அருளதனால் நரகிலுள்ளோர் அனைத்தும் உய்ய
அஞ்செழுத்தை அறைந்தொருகால் அவர்கள் எல்லாம்
இருள்நிரயம் தனில் நின்றும் ஏறச் செய்தோன் "

என இந்நூலுள் கூறப்பட்டிருக்கும் குருவணக்கம் வாமதேவ முனிவரின் மகத்தான கருணைப் பெருக்கைப் புலப்படுத்துகின்றது. நரக உயிர்கள் அனைத்தும் உய்திபெறத் திருவைந்தெழுத்தை உபயோகித்த முதற்பெரும் மகான் இவராகத்தான் இருக்க வேண்டும்.

வாமதேவமுனிவர்- நீலகண்ட சிவாசாரியார்- விசுவேசுவரசிவாசாரியார்- சதாசிவசிவாசாரியார்- சிவமார்கப் பிரகாச தேசிகர்- சிவாக்கிரயோகிகள்- என இப்பரம்பரை தொன்றுதொட்டு வருகிறது. ஞானவதி முறையால் சிவாக்கிர யோகிகளிடம் நிருவாணதீக்ஷையும் சன்னியாசமும் பெற்றபின்னர் அவரால் ஞானாபிஷேகம் செய்யப்பட்டு " சிவாக்கிர யோகி " எனும் திருநாமமும் அருளப்பட்டு, சூரியனார் கோயில் ஆதீனத்து இரண்டாவது குரவராக

எழுந்தருளிய பெருமான்தான் " சிவநெறிப் பிரகாசம் " எனும் இந்த ஞானக் கருவூலத்தின் கருத்தா.

சிவாக்கிர யோகிகள் திருவீழிமிழலையில் அரசரின் உதவியால் திருமடம் அமைத்துக் கொண்டு சைவசந்நியாசிகளாகிய மாணவர் பலர் சூழ வீற்றிருந்து சைவசமய பரிபாலனம் செய்து வந்த காரணத்தால் " வீழி-சிவாக்கிர யோகிகள் " என வழங்கப் பெற்றார்.

சிவாக்கிர யோகிகளால் முதன்முதல் செய்யப்பட்ட நூல் சைவசந்நியாச பத்ததி என்பது ஆகும். (இது என்னால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது, எட்டு ஆண்டுகளுக்கு முன்) துறவறம் என்பது கேலிக் கூத்தாக ஆக்கப்பட்டு வரும் இந்நாளில் சைவசந்நியாச பத்ததி என்னும் நூல் எந்த அளவுக்கு ஆழ்ந்து பயிலப்பட வேண்டும் என்பதும், எந்த அளவுக்கு நன்னெறி காட்டுவதாக அது திகழும் என்பதும் சொல்லாமலேயே விளங்கும். சிவபூஜையில் ஐந்து வகைத் தூய்மை (பஞ்ச சுத்தி) அவசியம் செய்யப்பட வேண்டும். ஐந்தனுள் ஒன்றாகிய மந்திர சுத்தி என்பதற்கு சிவாக்கிர யோகிகள் இந்நூலில் தந்துள்ள விளக்கம், வேறு எந்தப் பத்ததி ஆசிரியராலும் புலப்படுத்தப்படாத ஒன்று. முதன் முதல் அந்த விளக்கத்தைப் பயின்ற போது என்னுள் நின்மல துரியம் எவாவாறு நிகழ்ந்தது என்பது விளக்கிச் சொல்ல முடியாது. இந்த விளக்கத்தை அவரவர் படித்து உணர்ந்து கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இரகசியம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதால் அந்த விளக்கத்தை இங்கே விவரிக்கவில்லை. சிவஞானபோத சங்கிரஹ வியாக்கியானம், சிவாக்கிர பாஷ்யம், சைவ பரிபாஷை, முதலானவற்றை வடமொழியில் எழுதிய சிவாக்கிர யோகிகள் சர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம் ஆகிய ஆகம நூல்களுக்குத் தமிழில் உரையும், சிவஞானசித்தியார் பரபக்க உரை, சுபக்க உரை ஆகியவற்றையும் அருளியுள்ளார். இவற்றுள் சில இப்பொழுது கிடைப்பதில்லை.

இத்துணை அரிய படைப்புகளுக்குப் பின்னர் சிவானுபவமும் உரையாற்றலும் முதிர்ந்து நிறைவுற்ற நிலையிலே சிவாக்கிர யோகிகளால் அருளப்பட்ட நூலே சிவநெறிப்பிரகாசம் எனும் இவ்விவிழுமிய நூல். சுவானந்த நாச்சியார் எனப் பெயரிய சைவ அம்மையார் பிராட்டிக்கு உபதேசித்து அருளும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

" ஓதியிடும் சிவாகமங்கள் ஆதலினால் உயிர்கட்கு
உறுதி சிவபக்தி, அன்னே! உணர்ந்து கொள்ளே"

என இந்நூலின் நிறைவாக அவர் கூறுவது, நம் நெஞ்சை நெகிழவைக்கின்றது.

தமிழில் அமைந்துள்ள சைவசித்தாந்த நூல்களுக்குள்ளே சிவநெறிப்பிரகாசம் என்னும் நூலுக்குத் தனிச்சிறப்பு உள்ளது. இந்நூலின் பெரும் பகுதி பௌஷ்கராகம ஞானபாதத்தையும், வாதுள ஆகமத்தையும் ஆற்றொழுக்கான தமிழ்ச்செய்யுள் நடையில் வெளிப்படுத்துவதாகவே உள்ளது. சிவஞானசித்தியாரையும், சிவஞானமாபாடியத்தையும் முழுமைபெறத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு இந்நூல் விழுத்துணையாக உள்ளது என்பதை உறுதியாகக் கூறலாம். சிவனுக்கு நிமித்தகாரணம் கூறாமல் நிமித்தோபாதான காரணம் கூறுவது ஆழ்ந்து நோக்கத் தக்கது. நிமித்தோபாதான காரணம் கூறுவது சிவாகம நோக்கில் மிகவும் பொருத்தமாகவே தோன்றுகிறது. சிவனுக்குரிய பரை முதலான ஐந்து சக்திகள், சக்திகளின் வெளிப்பாடு, செயற்பாடுகள், நிவீர்த்திகலையின் மண் தத்துவம் வரை சக்திகள் அருளாற்றலைச் செலுத்தி நிற்கும் இயல்பு முதலான விளக்கங்களைத் தமிழில் இந்நூலில் மட்டுமே காண முடியும். சிவனுக்கும் சக்திக்கும் உள்ளது இன்னவகைத் தொடர்பு ( சம்பந்தம்), சிவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ளது இன்னவகைத் தொடர்பு, சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ளது இன்னவகைத் தொடர்பு, என்பன போன்ற நுட்பமான கருத்துக்கள் இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல்களுக்கும் சிவனின் அறிவு, இச்சை, செயல்களுக்கும் உள்ள வேறுபாடு நன்கு நிறுவப்பட்டுள்ளது. ஐந்தொழில் என்பதை சூக்கும ஐந்தொழில், தூலஐந்தொழில் என வகைப்படுத்தி நூலாசிரியர் மிருகேந்திர ஆகம அடிப்படையில் தெளிவாகக் கூறியுள்ளார். கன்ம சாதாக்கியரிடமிருந்து வெளிப்பட்ட மகேசுவரரிடமிருந்து கணபதி, முருகன், பிரமன், திருமால் முதலானோர் வெளிப்படும் முறையை வாதுளாகம அடிப்படையில் இந்நூல் கூறுகிறது. ஒவ்வொரு தத்துவத்திற்கும் உரிய அதிதேவதையைப் பற்றியும், அவத்தைகளின் பேதங்களைப் பற்றியும், ஐங்கோசங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளவை இந்நூலின் தனிச்சிறப்பை புலப்படுத்துவனவாக உள்ளன.

தனிச்சிறப்புகள் பலவற்றைக் கொண்டுள்ள இந்த நூலுக்கு, சிவாக்கிர யோகிகளிடம் தீக்ஷையும் ஞானாபிஷேகமும் பெற்றுச் சிறந்த ஸ்ரீநந்தி சிவாக்கிர யோகிகள் சிறந்த உரை அருளியுள்ளார். அந்த உரையை அடியொட்டியே இப்பொழுது பொழிப்புரை எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் அவையடக்கத்தில் சிவாக்கிர யோகிகள் இந்த நூலை அமைத்திருப்பதில் பொருந்தியுள்ள அடிப்படை ஆதாரங்களைக் கூறியுள்ளார்:

"குருசரணர் அருள்புரிந்த வாக்கும், எம்பால்
கூடும் அனுபவம் தானும், ஆகமத்தே
வருபொருளும் பேதமற்று ஓர்வகையேயாக
மதித்து உரைத்தலால் பொருட்பால் மருவாகுற்றம்"

இந்நூல் குற்றமற்றுள்ளது என்பது முற்றிலும் உண்மையே. நந்தி சிவாக்கிர யோகிகளும் தமது உரையைக் குருவாக்கு, அனுபவம், ஆகமம் ஆகிய மூன்றின் அடிப்படையில்தான் செவ்விதாக ஆக்கியுள்ளார். இதே அடிப்படையில்தான் இப்பொழுது பொழிப்புரையும் வரையப்பட்டுள்ளது.

குருவாக்கு, சொந்த அனுபவம், ஆகமப்பொருள் ஆகிய மூன்றும் பேதமின்றி இணைந்து ஒரு நூலில் அமையுமானால் அந்த நூல் சிறந்த ஆதாரநூலாக- அடிப்படைநூலாகத் திகழ்ந்து விடும் என்பது உறுதி. சிவநெறிப் பிரகாசம் என்னும் இந்த நூலுக்கு உரை அமைத்துக் கொடுக்கும் சிவானுபவமான நற்பணியை எனக்கு வழங்கிய சென்னை ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்டின் செயலாளர் சிவத்திரு. க.கார்த்திகேய சிவம் அவர்களுக்கும் மற்றும் குழுவினர்க்கும், சதாபிஷேக விழா தம்பதியினர் சைவசீலர்கள் திருவாளர் குழந்தைவேலு முதலியார், திருமதி சிவகாமி அவர்களுக்கும் என் நன்றி விரவிய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிப்படை ஆதாரநூல்களாகவும், இப்பொழுது கிடைத்தற்கு அரியனவாகவும் உள்ள ஞானக்கருவூலங்களாகிய நூல்களை வெளியிடும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள சிவத்திரு க.கார்த்திகேயசிவம் அவர்களுக்கும், அவர்தம் இல்லத்தினர்க்கும் சிவனருட் செல்வமும் சீரிய பொருட்செல்வமும் மேன்மேலும் ஓங்கி நிற்க எல்லாம்வல்ல கூத்தப் பெருமானின் திருவடிகளைப் போற்றுகின்றேன்.

அன்பன்
S.P. சபாரத்தினம்

சென்னை-40
3-4-2003

# INTRODUCTION

*Śivaneriprakāśam*, as the title indicates, is the Illumination on the religio-philosophical doctrines of Śaivism. It explains in verse form the essential philosophical concepts of Śaivasiddhānta and the necessary religious practices (Saivism is taken here by the author in its restricted sense, *stricto sensu*).

- **The tradition of Śivāgra**

As is well known to scholars of Śaivasiddhānta, the author, Sivagrayogin (Śivāgra in short), who lived in the middle of the 16th centurey, comes in a tradition of a distinct and illustrious school of Śaivasiddhānta. His paramaguru, Sadāśivaśivācārya, is the first commentator on the Sanskrit text of the *Śivajñānabodhasūtra* which has come down to us[1]. It is also well-known that *Śaivasamnyāsapaddhati* composed by Śivāgra deals elaborately with the ritual of initiation into monasticism according to Śaivasiddhānta system. But in fact he is not the first to compose such a text. For, before him, Īśvaraśiva who, again, is the great-grand teacher of Sadāśivaśivācārya had already composed a *Saṃnyāsakārikā*[2]. This is one of the important contributions of Śivāgra in the domain of śaiva ritual system.

The second one is his elaboration and subsequent establishment of an independent Śaivasiddhānta system in Tamilnadu as against or in contrast to that of the Meykaṇṭār system which is based on the *Śivajñānabodhasūtra* in Tamil. Śivāgra comes in the tradition of

---

[1] This text has been first published in the Bulletin of Government Oriental Manuscripts Library, Chennai, vol.16, n° 1, 1963. There is subsequent edition in Grantha characters with Tamil meaning published by the Tamilnadu Arcaka Assoociation,

[2] ibid. GOML, vol.16, p.

Vāmadeva[3] whereas Meykaṇṭār in that of Nandi (Nandiparamparai). In fact Śivāgra belongs to the tradition of Śaivasiddhānta system that was prevalent in Varanasi with a monastery on the Maṇikarṇikā Ghat in circa $15^{th}$ century as mentioned in the introductory portion of the commentary of Sadāśivaśivācārya referred earlier.

- **The textual sources**

In the Maṇipravāla commentary on the *Civañāṉacittiyār* which is one of the important texts of Śivāgra as well as in his *Bṛhadbhāṣya* on the *Śivajñānabodhasūtra* he does not confine himself to texts of Śaivāgama corpus alone such as the *Pauṣkara, Parākhya* alone; he cites from texts such as the *Kūrmapurāṇa, Īśvaragītā, Śivadharmottara, Tattvaprakāśa* of Bhojadeva and *Ratnatraya* of Śrīkaṇṭha and Kashmirian Āgama text such as the *Mālinīvijaya*. In his *Saṃgrahabhāṣya* on the *Śivajñānabodhasūtra* he even approvingly cites the *Brahmasūtra* the fundamental text of the Vedānta tradition.

- **Specialities of Śivaneṟiprakāśam**

In the manner of *Civañāṉacittiyār* it treats briefly the sources of valid knowledge (pramāṇa), inference and its types, etc. That Śivāgra is well-versed in the Nyāya system is evident at every step not only in this text but also in his *Saṃgrahabhāṣya* and the *Bṛhadbhāṣya* as well. His erudition in and an attempt at rapproachment with the Vedānta system is also evident in these commentaries. The treatment of various types of paśu such as the Vijñānākala, Pralayākala and different states of paśu such as Kevala, Sakala follows the Āgamic mode. In fact digests (Nibandha) such as the *Ñāṉāmirtam, Civañāṉacittiyār* which might have been the model for Śivāgra follow this method of giving the quintessence of the

---

[3] In the Vedic tradition also the sage Vāmadeva is the ôseerö of the Pañcākṣaramantra. For, this mantra occurs in the $8^{th}$ anuvāka of the Śatarudrīya for which Vāmadeva is the "sage" (Ṛṣi). This fact is referred to by Śivāgra in his Vāmadevar Tuti (Śivaneṟiprakāśam, verse, 6)

Vidyāpāda of the major Āgama-s and it is no wonder that Śivāgra also adopts the same. In giving out the fundamental definition and basic characteristics of paśu the one given by the *Kiraṇāgama* seems to have attracted the attention of all system builders. For, we find the succinct definition of Paśu in the *Kiraṇāgama*, I, 15:

पशुर्नित्योऽप्यमूर्तोऽज्ञो निष्क्रियो निर्गुणोऽप्रभुः ।
व्यापी मायोदरान्तःस्थो भोगोपायविचिन्तकः ।।

which is repeated in the sane fashion in the above mentioned texts.

Another common feature of these texts is the establishment of a Supreme Agent for the created universe on the basis of the inference. The example of the potter producing the pots out of clay is the standard one in all these cases. In fact, one can say that this inferential argument is one of the distinguishing features of the Meykaṇṭār branch (may also be called Śivajñānabodha school) of Śaivasiddhānta system as against the classical Śaivasiddhānta school that was prevalent in Kashmir in the earlier period, that is, from the $7^{th}$-$10^{th}$ centuries of our era.

To cite a few of the special views of Śivāgra: He holds that the Āṇavamala does not entirely cover the innate power of the self; it exists as one of the operative modes of the essential nature of the self and thereby functions as an impedement for the complete manifestation of the Icchā, Jñāna and Kriyā Śakti of the selves. The example he gives is that of the power of mantra that stops the burning power of fire (*Śivaneṟiprakāśam*, verse, 54).

In verse 67 the text clearly states the types of relationship that exists between Śiva and Śakti; individual self and Śiva[4]; individual self and Pāśa and that between individual self and the phenomenal world (Prapañca).

---

[4] He says that since both Śiva and jīva are all-pervasive (vibhu) the relation between them can only be ôaupaśleṣikaö. The example he gives for such a

His concept of mukti also is somewhat distinct: He holds that the liberated self exists so non-different from Śiva that it is Śiva Himself[5] and experiences supreme bliss (paramānanda). According to him the self whose power of knowledge and action are covered by mala in the transmigratory state exists as non-different[6] from Śiva in the liberated state just as pure water merges with the salty water of the ocean without any separate existence[7]. One may notice here the echo of the view of mokṣa spoken in some of the śaivāgamas[8].

In explaining the pure creation (śuddhasṛṣṭi) Śivāgra says that Śiva and Śakti by first taking Nāda and Bindu as their support get their names also Nāda and Bindu and they in turn get their names as Śiva and Śakti (*Śivaneṟiprakāśam*, verse, 82). Another revolutionary concept of Śivāgra which is unique in the History of Śaivasiddhānta is that of abhinna-nimittopādāna: Śiva with His inseparable Śakti is both the material and instrumental cause of the phenomenal universe. This he establishes in all his major works such as the *Śaivaparibhāṣā*, *Saṃgrahabhāṣya* on the *Śivajñāna-bodhasūtra*, commentary on the *Civañāṉacittiyār* as well as in *Śivaneṟiprakāśam* (verse, 95). He explains that Śiva the pure ôCitö is the instrumental cause (nimittakāraṇa) and His Śakti which is inseparable from Him is the material cause (upādānakāraṇa); since śakti and its possessor are non-different Śiva is the material cum instrumental cause of the world[9].

---

relation is that of milk and ghee and that between fruit and its taste. See his *maṇipravāla* commentary on Civañāṉacittiyār, sūtra 2, verse 1.

[5] Śivaneṟiprakāśam, 208.

[6] Ibid. 162

[7] ibid. 208

[8] Rauravasūtrasaṃgraha, VIII. 11-13

[9] Commentary on Civañāṉacittiyār, sūtra 2, verse, 1

This is a bird's eye view of some of the special contributions of Śivāgra which strikes one at the first reading of his texts. In fact a detailed analytical study of all his Ēuvres in order to assess his singular contributions to Śaivasiddhānta of the medieval period will definitely be a rewarding task[10].

**T. GANESAN**

Pondicherry
23-042003

---

[10] I am happy to say that I have embarked on this project in a humble way under the title **Study of Saivasiddhanta of the period 1600-1800 A.D.** which consists in a detailed and interpretative study of other contemporary authors such as Maṟaiñāṉacampantar, Guruñāṉacampantar, etc.

உ

சிவமயம்

# இந்நூற்பொருளின் அட்டவணை


நூல் வரலாறு

விநாயகர் துதி 1

சிவபெருமான் ஸ்வரூபதடத்த இலக்கணம் 2

சத்தி துதி 3

குமார வணக்கம் 4

நந்திகேசுரர் வணக்கம் 5

வாமதேவ மகரிஷி துதி 6

சைவாசாரிய சமயாசாரியர் தோத்திரம் 7

குரு வணக்கம் 8

ஸ்வகுரு வணக்கம் 9

அவையடக்கம் 10

புறனடை 11

ஓதும் அதிகாரி 12

நூல்விஷயம், பிரயோஜனம், அதிகாரம், சம்பந்தம் 13

தர்மம் முதலியன 14

பொருட்பால் காமப்பால்கள் 15

மோக்ஷம் 16

பிரமாணவகை 17

இலக்கணத்தின் ஸ்வரூபம் 18

உத்தேச இலக்கண பரீட்சைக்கு இலக்கணம் 19

சைவசித்தாந்தத்துக்கு பிரமாணம் சிற்சத்தி 20

சிற்சத்திப் பிரமாணத்துக்கு அபிவியத்திக் கரணம் 21

பிரத்தியட்சம் மூன்றுவகை 22

இந்திரியபிரத்தியட்ச மானதப் பிரத்தியட்சங்களின் ஸ்வரூபம் 23

சிற்பிரத்தியட்சம் இருவகை 24

ஐயம், திரிவுகளுடைய ஸ்வரூபம் 25

அநுமானப் பிரமாணம் 26

ஸ்வார்த்த, பரார்த்த அநுமானங்களும் ஆகமப் பிரமாணமும் 27

ஏத்துவாபாசம் 28

பதியின் ஸ்வரூப இலக்கணம் 29

அப்பொருள் ஸ்வானுபவ வேத்தியம் 30

தடத்த இலக்கணம் 31

பிரபஞ்சம் கர்த்தாவையுடையது 32

| | |
|---|---|
| கர்த்திருத்துவம் கூடும் எனல் | 33 |
| சிவனுக்கு சன்னிதி மாத்திர கர்த்திருத்துவம் | 34 |
| நின்மலனாகிய சிவன் சமவாயசத்தியால் தனுவாதியை உண்டாக்குதல் | 35 |
| மாயா கன்மங்களுக்குச் சங்காபரிகாரம் | 36 |
| பசு இலக்கணம் | 37 - 38 |
| ஆன்மாக்களுக்கு மூன்றவத்தை | 39 |
| சகலர் இலக்கணம் | 40 |
| பிரளயாகலர் இலக்கணம் | 41 |
| விஞ்ஞானகேவலர் இலக்கணம் | 42 |
| எண்ணிறந்த ஆன்மாக்கள் உண்டு | 43 - 45 |
| ஆணவம், திரோதாயி இலக்கணம் | 46 |
| ஆணவமல அங்கீகார நியாயம் | 47 |
| ஆன்ம ஞானத்தைத் திரோதான சத்திதடுக்காது | 48 |
| கன்மமலமும் ஆன்ம ஞானத்தை தடுக்காது | 49 |
| ஆன்ம ஞானத்தை ஆணவமே மறைக்கும் | 50 |
| மாயை ஆன்ம ஞானத்தை விளக்குமேயன்றி மறைக்காது | 51 |
| அஞ்ஞானம் ஞானத்தினுடைய இல்லாமை என்பது குற்றம் | 52 |
| சர்வஞ்ஞதையைத் தடுப்பது ஆணவமலம் | 53 |
| ஆணவம் ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளைத் தடுக்கும் | 54 |
| சுத்த மாயா இலக்கணம் | 55 |
| சுத்தமாயை உண்டு என்பதற்குரிய நியாயம் | 56 |
| அசுத்தமாயா இலக்கணம் | 57 |
| கன்ம இலக்கணம் | 58 |
| கன்மங்கள் பந்தமாக ஏறும் வகை | 59 |
| கன்மபலன்கள் இம்மையிலும் மறுமையிலும் பொருந்தும் | 60 |
| கன்மம் புத்தியிலே நின்று பரிபாகமான பொழுது புசிப்பிக்கும் இருவினையொப்பில் கெடும் | 61 |
| பஞ்ச மலங்களின் தொகை | 62 |
| பாசங்கள் ஆன்மாவை பந்திக்கும், சர்வ வியாபியாகிய சிவனை வாதியா | 63 |
| அதற்குப் புறனடை | 64 - 65 |
| பாசங்கள் பெத்தான்மாவையே வருத்தும் | 66 |
| சத்தி-சிவம், ஆன்மா-சிவம், ஆன்மா-பாசம், ஆன்மா-பிரபஞ்சம் இவைகளுக்குள்ள சம்பந்தங்கள் | 67 |
| சிவனே சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களை பண்ணுவர் | 68 |
| ஆன்மாவின் ஞானேச்சா கிரியைகளுக்கும், சிவனுடைய ஞானேச்சாகிரியைகளுக்கும் உள்ள பேதம் | 69 |
| ஆன்மாக்களுக்கு ஈசுவரன் தன்மை முன்னிலை படர்க்கையால் | 70 |

| | |
|---|---|
| உணர்த்துதல் | |
| பரையாதி பஞ்சசத்திகளின் தோற்றமும் தொழிலும் | 71 - 73 |
| சத்தியின் இலக்கணமும் அவர் கிருத்தியமும் | 74 - 84 |
| தாம் பண்ணும் சூக்கும பஞ்ச கிருத்தியம் | 75 |
| சத்தருடைய சமவாயசத்தி முதலியன | 76 |
| அம்பிகாதி சத்தி உதிக்கும் முறை | 77 |
| பைசந்தி முதலிய வாக்குகள் உதிக்கும் முறையும் புறனடையும் | 78 - 79 |
| அகாராதி அக்ஷரங்களுக்குத் தேவதைகள் | 80 |
| வாக்குகள் ஆன்மாக்களை பந்தித்தலும் நீங்குதலும் | 81 |
| சுத்த தத்துவங்களின் உற்பத்திக் கிரமம் | 82 |
| சிவன் ஷடத்துவ வியாபியாய் நிற்றல் | 83 |
| சதாசிவத்துக்கு நாயகர் கன்மசாதாக்கியர் | 84 |
| சதாசிவர் ரூபாரூபமாய் நிற்கும் முறை | 85 |
| சதாசிவர் தனுவாதிகளுடன் கூடிப் பஞ்சகிருத்தியம் பண்ணுதல் | 86 |
| சதாசிவருடைய கிருத்தியம் | 87 - 91 |
| பதி தியான பூஜா நிமித்தம் ரூபம்,ரூபாரூபம் அரூபம் ஆகிய திருமேனி கொள்ளுதல் | 92 |
| பதி பிரபஞ்சத்தில் நிற்கும் முறைமை | 93 |
| கன்ம சாதாக்கியரிடத்து மகேசுவரரும், அவரிடத்துப் பிரமாதி தேவர்களும் உற்பத்தியாதல் | 94 - 95 |
| சீகண்ட பரமேசுவரன் உற்பத்தியும், கிருத்தியமும் | 96 |
| சீகண்ட ருத்திரர் சகலருக்கு பரதத்துவர் | 97 |
| மகேசுவரர் பிரளயாகலருக்குப் பரம மோக்ஷம் கொடுத்தல் ,உருத்திர ஆன்மக்களாகச் செய்தல் | 98 |
| ஈசுரசத்தி பிரபஞ்ச கிருத்தியம் நடத்தும் முறைமை | 99 |
| மகேசுவரர்,சீகண்டர்களின் பிரபஞ்ச கிருத்தியம் | 100 |
| கலாதிபஞ்ச தத்துவங்களின் கிருத்தியம் | 101 |
| புருட தத்துவோற்பத்தியும் தொழிலும் | 102 |
| சீகண்டர்,பிரம விஷ்ணு ருத்திரர்களைக் குண அதிட்டிதராக்குதல் | 103 |
| சித்தம் புத்தி தத்துவங்களின் உற்பத்தியும் கிருத்தியங்களும் | 104 |
| புத்தி பாவாஷ்டகமும் பேதங்களும் | 105 - 106 |
| ஆன்மாக்களின் கன்மானுகுணமாகக் குணங்களின் ஏற்றக்குறைச்சல் முதலியன | 107 - 108 |
| புத்தி தத்துவத்திலே அகங்காரம் தோன்றுதல் முதலியன | 109 |
| தைசத அகங்காரத்திலே தோன்றும் மனம்-ஞானேந்திரியங்களின் கிருத்தியம் | 110 |
| சங்கையும் உத்தரமும் | 111 |
| வைகாரி அகங்காரத்தில் கன்மேந்திரியமும் ,பூதாதி | 112 |

| | |
|---|---|
| அகங்காரத்தில் தன்மாத்திரையும் உற்பத்தியாதல் அவற்றின் கிரியைகள் | |
| புரியட்டக தேகத்தால் ஆன்மாக்கள் போக்குவரவு புரிதல் ,தூலதேகம் உண்டாதல் | 113 - 114 |
| ஆகாசாதிகள் ஒன்றிலொன்று தோன்றும் கருத்து | 115 - 116 |
| பிருதிவியாதி பஞ்சபூதங்களின் கிரியை குணங்கள் | 117 - 118 |
| பஞ்ச பூதங்களின் பஞ்சீகரணம் ,தேகபேதம், அண்டங்களின் முறைமை | 119 - 120 |
| பஞ்ச பூதங்கள் வியாபித்து நிற்றல் அதிதேவதை ,பஞ்சகலைகள் முதலியன | 121 - 122 |
| சத்தி சிவர்கள் ,தத்துவங்களில் அநுப்பிரவிஷ்டராய் நின்று பிரேரித்தல் | 123 |
| ஞானேந்திரிய கன்மேந்திரியங்களில் தேவதைகள் பொருந்தி நின்று செலுத்துதல் | 124 |
| அந்தக்கரணம் குணம் இவைகளில் தேவதைகள் பொருந்தி நின்று கிரியைகளைச் செய்வித்தல் | 125 |
| இராக தத்துவ முதலிய ஆறினையும் தேவதைகள் பிரேரித்தல் கிருத்தியங்களைச் செயவித்தல் | 126 |
| காரிய மாயையை ஈசுர சத்தி அதிட்டித்தல் | 127 |
| சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியங்களில் அதிட்டித்தல் | 128 |
| தத்துவங்களைத் தேராகக் கொண்டு ஆன்மா சுகதுக்கங்களைப் புசித்தல் ,துரியத்தை அடைதல் | 129 |
| சாதாரண அசாதாரண தத்துவங்கள் | 130 |
| தாத்துவிக பேதம் | 131 - 132 |
| சுத்த தத்துவங்களைச் சிவசத்திகள் அதிட்டித்தல் | 133 |
| சுத்தாசுத்தம் | 134 |
| அசுத்தம் | 135 |
| பிரேரக காண்டம்,போகசயித்ரு காண்டம் ,போகபோக்கிய காண்டங்கள் | 136 |
| சத்தியும் சிவமும் மாதா பிதாக்கள் | 137 |
| சிவன் பஞ்ச கோசங்களைச் சுத்த மாயாதிகளில் உண்டாக்குதல் | 138 - 139 |
| சூக்கும பஞ்சபூத காரியமான தாத்துவிகங்கள் | 140 - 141 |
| அஞ்ஞானிகள் நிற்குந்தன்மை | 142 |
| கேவலாவத்தை | 143 |
| சகலாவத்தை | 144 |
| சுத்தாவத்தை | 145 |
| கேவல சாக்கிராதி | 146 - 148 |
| சகலத்தில் துரியாதீதாதி பஞ்சாவத்தை | 149 |

| | |
|---|---|
| புண்ணிய விசேஷத்தினால் சைவ சமயத்தைச் சார்ந்து முத்தியடைதல் | 150 - 154 |
| இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதங்கள் | 155 |
| சத்திநிபாதம் வருவதற்கு உபாயம் | 156 |
| மந்தாதியான நான்கு சத்திகள் | 157 |
| சத்திநிபாதமுடைய ஆன்ம கிருத்தியம் | 158 |
| சிவன் ஆசாரிய மூர்த்தியை அதிட்டித்து நின்று அனுக்கிரகித்தல் | 159 |
| சத்திநிபாதானுகுண அத்துவ சோதனை | 160 - 161 |
| சத்தியோ நிருவாண தீட்சை | 162 |
| சாம்பவ தீட்சை, இருவகை நிருவாண தீட்சை | 163 - 164 |
| ஞானாசாரியன், போதகாசாரியன், சாதகாசாரியர், உபதேசக்கிரமம் | 165 |
| லோக தர்மிணி சிவ தர்மிணி தீக்கை | 169 |
| ஔத்திரீ தீக்கை ,மானத தீக்கைகள் | 167 |
| நாலுவருணத்தவரும் ஆசாரியராதல் | 168 |
| ஆசாரியர் பேதம் ஆசிரமாதிகம் தீக்ஷாக்கிரமங்கள் | 169 - 174 |
| சிவஞானாதிக்கத்தால் ஆசாரியனாதல் | 175 |
| சிஷ்யர் பரிபாகசோதனையும் தீக்ஷையும் | 176 - 177 |
| ஆறத்துவாக்கள் | 178 |
| மந்திராதிகள் லயித்தல் ,ஆன்மாவைச்சிவத்திலே யோசித்தல் | 179 - 183 |
| பின் பிராரத்த தேகத்தில் நிறுத்துதல் | |
| ஆசாரியனுக்கிரகம் பெற்றோர்நிலை | 184 |
| அநாதி நித்ததியமான ஆணவம் கெட்டும் கேடில்லாதிருத்தல் | 185 |
| ஆணவாதி பந்தம் நீங்கில் சர்வஞ்ஞத்துவாதி குணங்கள் விளங்காமைக்குக் காரணம் | 187 - 187 |
| சீவன் முத்தர் தேகாந்தத்தில் பரம முத்தியடைதல் முதலியன | 188 |
| சிவஞானமுடையராய்ச் சிவானுபவம் பெற்று நிற்றலே சிறப்பாம் | 189 |
| நின்மல சாக்கிராதி பஞ்சாவத்தா லக்ஷணம் | 190 |
| சைவரல்லாத சமயிகள் கூறும் பெத்த முத்தி இலக்கணம் | 194 - 199 |
| பாஞ்சராத்திரிகளின் பந்த முத்தி இலக்கணம் | 200 - 202 |
| சாங்கியனுடைய பெத்தமுத்திகள் | 203 |
| மாயாவாதியின் பெத்தமுத்திகள் | 204 - 205 |
| வாம தக்ஷிண மார்க்கத்தர் பிசாசபதம் அடைதல் | 206 |
| சமாவேசவாதி, சமுற்பத்திவாதி, சங்கிராந்தவாதி, அபிவியத்திவாதி, சிவாத்வைதிகள் முத்தி பரமுத்தி அல்ல | 207 |
| வைதிக சைவசித்தாந்தாத்வைத முத்தியிலக்கணம் | 208 - 210 |
| மோக்ஷோபாயங்களில் ஞானநெறி | 211 |
| பிரபத்தி நெறி | 212 - 213 |
| அந்தரங்கபக்தி வரும் முறை, பாஹ்ய பக்தி நிலை | 214 - 215 |

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சிவநெறிப்பிரகாசம்

## மூலமும் உரையும்

நூல்வரலாறு

பவநெறியை மாற்றியன்பர்க் கருளான் முத்தி
பாலிக்கப் புவிமீதில் வந்தபர குருவே
அவநெறியே செறிந்துநெடுங் காலமுழன் றதனா
லல்லலே நன்மையொன்று மான தில்லை
தவநெறியைச் சார்கிலே னேனு முன்றன்
றனுசையெனுங் கருணையினாற் சாற்ற வேண்டும்
சிவநெறியை நன்றாகச் சிறியேன் றேர்ந்தே
சேர்வரிதாஞ் சிவானுபவஞ் சேரு மாறே.

அன்புமகள் எனும் உரிமையால் உபதேசம் வேண்டல்

மீண்டும் மீண்டும் பிறப்பைக்கொடுக்கும் தீயநெறியிலிருந்து விடுவித்து அன்பர்களுக்குத் தன் அருளாற்றலால் வீடுபேற்றை வழங்க நிலவுலகில் அவதரித்துள்ள மேலான குருவே ! வீணான நெறியிலேயே தீவிரமாக நெடுங்காலம் ஈடுபட்டு அலைச்சலைப் பொருந்தியதால் எப்பொழுதும் துன்பத்தையே அடைந்துள்ளேன். நன்மை ஒரு சிறிதும் கிடைக்கவில்லை. தவநெறியை நான் அனுட்டிக்கவில்லை என்றாலும் அடியேன் தாங்களின் அன்புமகள் என்னும் உரிமையால் கருணைகூர்ந்து எனக்கு உபதேசித்து அருளவேண்டும். சிற்றறிவும் சிறுநிலையும் உடைய நான் சிவநெறியின் உயர்வை உள்ளவாறு அறிந்து, ஏனையோரால் அடைதற்கரிய சிவானந்த அனுபவப் பேற்றை நான் அடையும் வகையில் எனக்கு உபதேசித்து அருள்க

நன்றுநன்றிங் குன்மொழிதா னாசமிலா ஞானநெறி
ஒன்றுமன்றோ வென்று முறுதுணைதான்-மன்றுள்
உறைவான்சொல் லாகமத்தி னுண்மை தமிழால்
அறைவா முணர்ந்திடுவன் பால்.

குருவின் அருளுரை

" நீ கூறிய வார்த்தைகள் மிகவும் நல்லன. எப்பொழுதும் உறுதுணையாக இருப்பது, அழிவற்ற ஞானநெறியாகிய ஒன்றே அன்றோ! பொற்சபையில் ஆனந்தக் கூத்தாடும் சிவபெருமான் அருளிய ஆகமங்களின் சாரமாகிய நுட்பத்தை, மெய்ப்பொருளை, தமிழில் உனக்கு உபதேசிக்கிறேன். அன்பார்ந்த உள்ளத்தால் இதனை உணர்ந்து தெளிவு பெற்றுச் சிறப்பினை அடைவாயாக."

## கணபதி துதி

**அவதாரிகை:** மேல்இந்தச் சாத்திரம் இடையூறுகள் இன்றி நிறைவேறும் பொருட்டும் மாணவர்களுக்கு சொல்லாற்றல் நன்றாக விளங்குதல் பொருட்டும்இந்த நூல் உலகத்தில் பிரகாசித்தல் பொருட்டும் சிவாக்ரயோகீந்திர சிவாச்சார்யார் ஆதியிலே செய்த விநாயகர் துதி

1. சீராருஞ் செம்மேனித் திகழ்வு மானைத்
திருமுகமுங் கண்மூன்றுஞ் செய்ய தாளும்
ஏராரு மங்குசமும் நீள்பா சத்தோ
டிலட்டுகமு மெழுதுமெழிற் கொம்பு மென்றும்
நேராக வைத்ததிருக் கரங்க னான்கும்
நின்மலமா மும்மதமு முள்ள நித்தன்
காராருங் கண்டனுமை களிக்க வந்த
கணபதியி னிருபதங்கள் கருதல் செய்வாம்.

**பொழிப்புரை:** பல்வகைச் சிறப்புகளும் பொருந்தியுள்ள சிவந்த திருமேனிப்பொலிவு , யானைமுகம், மூன்றுகண்கள், சிவந்த திருவடிகள், எழுச்சிமிக்க அங்குசம், நீண்டபாசம், மோதகம், எழுதும் இயல்புடைய எழில்மிக்கதந்தம், ஆகிய நான்கையும் எப்பொழுதும் நேர்படத்தாங்கியுள்ள நான்கு திருக்கரங்கள், இயல்பாகவே மலமற்றுத் திகழும் இச்சை, அறிவு, செயலாகிய மூன்று மதம்- இவற்றைக் கொண்டுள்ள நித்திய வடிவினனும் , விடத்தால் நீலமான கழுத்துடைய ஸ்ரீகண்டசிவனும் உமையும் கூடிக்களிக்கத் திருஅவதாரம் செய்தவனுமாகிய கணபதியின் இரண்டு திருவடிகளையும் ஆழ்ந்து தியானிப்போமாக.

## சிவபெருமான் துதி

**அ.கை:** மேல் இச்சாத்திரத்தில் சொல்லப்படுகின்ற சிவபெருமானை ஸ்வரூப, தடத்த இலக்கணத்தால் துதிக்கின்றது.

2. சத்தியஞா னானந்த மயமாய் நின்ற
தற்பரனே சத்தனென வருவ னாகிப்
பத்தியினா னினைந்தேத்த வருவ ளுருபப்
பான்மையா யுத்தியுத்தப் பரீச தாகிப்
புத்தியா னதுவுமுத்தி தானு நல்கப்
பொருந்துபிர விருத்தகனா மியல்ப தாகி
நித்தியமாஞ் சத்தியுருத் தரித்து மன்று
ணின்றுநடஞ் செய்வோன்றா ணினைதல் செய்வாம்.

**பொழிப்புரை:** உண்மைமயமாகவும் ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் விளங்கி அனைத்திற்கும் அப்பாற்பட்டவனாய்த் தனக்குத்தானே பரமாகவுள்ளவனாய் ஆன்ம-பிரபஞ்சத்தொடர்பான செயல்களுக்குக் கர்த்தா எனும் நிலைக்கு அப்பாற்பட்டவனாய் விளங்குகின்றவன் தத்துவ அதீத பரமசிவன் (இதுவரை ஸ்வரூபநிலை)
இத்தகைய அதீதமான பரம்பொருளாக விளங்கினாலும் , ஞானசக்தியே தனது திருமேனியாக விளங்க, பிரபஞ்சத்தொடர்பான செயலற்றுள்ள சத்தியை உடைய சத்தன் எனவும் அடியார்கள் பக்தியுணர்வு கொண்டு தியானித்துப் போற்றுவதற்காக ஈசானம் முதலான ஐந்து மந்திரங்களையே திருமேனியாகக் கொள்வதால் அருவுருவ நிலைபெற்று (சகள நிஷ்கள வடிவம்), செயற்படமுயலும் சத்தியைக் கொண்டு உத்யுக்தர் எனும் சதாசிவமாகவும், போகப்பேற்றையும் வீடுபேற்றையும் வழங்க செயல்களைச்செய்யும் சக்தியைக்கொண்டு பிரவிருத்தர் என்னும் மகேசுவரனாகவும் வெளிப்பட்டு நித்தியமான சமவாயசக்தியையே திருமேனியாகக் கொண்டு , உயிர்களுக்கு அனுக்கிரஹம் புரிவதற்காகப் பொற்சபையில் ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபெருமானின் திருவடிகளை ஆழ்ந்து தியானிப்போமாக.

## சத்தி துதி

**அ.கை:** மேல் இந்தச்சிவபெருமானுக்கு அக்கினிக்கு உட்டிணம்போலப் பிரிவற்றிருக்கும் சத்தியைத் துதிக்கின்றது.

3. பரையாதி யிச்சையறி வியற்ற லென்னும்
பான்மையாய்ப் பரநாத விந்து வாகித்

தரையாதி யாக்கியளித் தழித்தல் செய்யுஞ்
சத்தியாய் மனோன்மனியாய் மகேசை யாகி
வரையான்செய் தவப்பயனா முமையா ளாகி
மன்றினடம் புரிவோன்றன் வாமங் கொண்டாள்
விரையாரு மலர்ப்பாதஞ் சென்னி மீதும்
விழிமீதும் வைத்துளத்தில் விரும்பு வாமே.

பொழிப்புரை: படைத்தல் முதலான ஐந்தொழில் நிமித்தமாகப் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை எனும் ஐந்து சக்திகளாக வெளிப்படும் இயல்பினளாகவும், அபரநாதம், அபரவிந்து என்பவற்றுக்கு ஆதாரமான பரநாதம் பரவிந்து எனும் சக்திகளாகவும், பிருதிவி முதலானவற்றை உண்டாக்கிக் காத்து ஒடுக்கும் ஜனனி, ரோதயித்ரி, ஹாரிணி எனும் மூன்று சக்திகளாகவும் பஞ்சசாதாக்கிய வடிவில் உள்ள சதாசிவனுக்குப் போகசக்தியாகிய மனோன்மனியாகவும், கன்ம சாதாக்கியத்திலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக வெளிப்படும் மகேஸ்வரனின் போகசக்தியாகிய கௌரியாகவும், மகேஸ்வரனிடமிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக வெளிப்படும் உருத்திரனின் போகசக்தியாகிய பார்வதியாகவும் வெளிப்பட்டு அருள்பவளும் பொற்சபையில் ஆனந்தக் கூத்தாடும் பரமசிவனின் இடதுபாகத்தைப் பெற்றுள்ளவளுமான சிவகாமசுந்தரித்தாயின் நறுமணம் கமழும் தாமரை போன்ற பாதங்களை சிரசின்மேலும் கண்களிலும் இதயத்திலும் தாங்கி வணங்குவோம்.

### குமாரர் துதி

அ.கை: மேல்தமது சந்தான குரவதெய்வமான குமாரவணக்கம் கூறுகின்றது.

4. வேதசிவா கமமங்க மாதி யான
மெய்ந்நூல்க ளனைத்தினையும் விரித்து நன்றா
ஓதியிட அகத்தியரை முதலா யுள்ள
வுயர்முனிவோர்க் கருள்புரிந்த வொருமை யாளன்
சீதமதி முடியோனு முமையு மீன்ற
திருமதலை யறுமுகனாஞ் செல்வன் பாதம்
ஏதமற வெஞ்சிரத்து முளத்தும் வைத்தே
யேத்திவினை யனைத்தினையு மிழித்து வாழ்வாம்.

பொழிப்புரை: வேதங்கள், சிவாகமங்கள் முதலாகஉள்ள, சத்தியநெறியை

விரித்துக்கூறும் அரிய பெரிய சாத்திரங்கள் அனைத்தையும் விரிவாக ஐயம் திரிபு அற உபதேசிப்பதற்காக, அகத்தியர் முதலான பரமமுனிவர்களுக்கு அனுக்கிரஹம் புரிந்த ஒருமைப்பாட்டை உடையவனும், குளிர்ந்த சந்திரனைச் சடைமுடியில் கொண்டுள்ள சிவனும் உமையும் ஈன்றெடுத்த குமரனும், பரம ஐசுவரியம் உடையவனும், ஆன ஆறுமுகப்பரமனின் திருவடிகளை, பாசமறைப்பாகிய குற்றம் நீங்கும் பொருட்டு எமது சிரத்திலும் இதயத்திலும் தியானித்துப்போற்றி, வினைப்பயன் நீங்கப்பெற்று, சிவானுபவம் பெற்று வாழ்வோம்.

## நந்திகேஸ்வரர் துதி

**அ.கை:** மேல் நந்திகேஸ்வர வணக்கம் கூறுகின்றது.

5. கரநான்குங் கறைமிடறு மூன்று கண்ணுங்
கங்கைமதிச் சடைமுடியுங் கரங்க டம்மில்
விரவாரை வெல்மழுவு மானு மிக்க
விறற்சுரிகை பொற்பிரம்பும் விளங்கி யோங்க
அரனார்தம் அருளதனாற் பெற்றே நாளு
மபரபர மேசுரனென் றறைய வுண்டாய்த்
திரமேவு திருநந்தி தேவன் பொற்றாள்
சிந்தையினுஞ் சிரத்தினிலுஞ் சேர்த்தல் செய்வாம்.

**பொழிப்புரை:** நான்கு திருக்கரங்கள், நீலநிறம் பொருந்திய கழுத்து, மூன்று கண்கள், கங்கையும் சந்திரனும் சூடப்பெற்ற ஜடாமகுடம்- இவற்றைக் கொண்டுள்ள உருவம் ஏற்று, பகைவரை வெல்லும் மழு, மான், வெற்றிச்சிறப்புமிக்க சுரிகை, பொலிவுமிக்க பிரம்பு-ஆகிய நான்கும் நான்கு திருக்கரங்களில் தத்தம் தொழில் நிமித்தம் சிறப்புற்று உயர்ந்து விளங்கும் வண்ணம் சிவபெருமானின் திருவருளால் பெற்று, எப்பொழுதும் இருக்கக்கூடிய சிவசாருப நிலையைப் பெற்று, அபரபரமேஸ்வரன் என பிரமன் முதலானோரால் சிறப்பித்துக்கூறப்படும் வண்ணம் மேன்மைபெற்று விளங்கி நித்தியப் பொருளாகத் திகழும் திருநந்திதேவரின் ஒளிபொருந்திய திருவடிகளை இதயத்திலும் சிரத்திலும் தரித்துக் கொள்வோமாக.

## வாமதேவர் துதி

**அ.கை:** இது வாமதேவமகரிஷியை துதிக்கின்றது.

6. அருளதனா னரகிலுள்ளோ ரனைத்து முய்ய
வஞ்செழுத்தை யறைந்தொருகா லவர்க ளெல்லாம்

இருணிரயந் தனினின்று மேறச் செய்தோ
னெந்தைசிவன் திருநாம வெழுத்தஞ் சுக்கும்
குருவெனவே பிரமாதி யோதப் பெற்ற
கோமானெஞ் சந்தான குரவ னான
திருமருவு முனிவாம தேவன் பாதஞ்
சிந்தையினுஞ் சிரமீதும் சேர்த்தல் செய்வாம்.

பொழிப்புரை: கொடும்துன்பம் கொடுக்கும் நரகபுவனங்களில் அவதிப்படும் ஆன்மாக்கள் அனைத்தும் உய்திபெறும் வகையில் தனது அருளாற்றலால் திருவைந்தெழுத்தை ஒருமுறை உணர்வுடன் ஓதி அந்த ஆன்மாக்கள் அனைத்தும் இருள்நிறைந்த நரகங்களிலிருந்து நீங்கி உயர்நிலையை அடையச் செய்தவரும், எந்தையாகிய சிவபெருமானின் திருவைந்தெழுத்து மந்திரத்துக்கு ஆதிகுரு எனப்பிரமன் முதலான தேவர்களால் புகழப்பட்ட பிரபுவும், எமது சதாசிவ சந்தானத்துக்கு ஆதிகுருவுமான ஞானவளம் பொருந்தப் பெற்ற வாமதேவமுனிவரின் திருப்பாதங்களை இதயத்திலும் சிரத்திலும் தரித்துக் கொள்வோமாக.

### சைவாசாரிய சமயாசாரிய வணக்கம்

அ.கை: மேல் சைவத்தில் நாலாச்சிரமத்தில் ஆசார்யர்களையும் சமயாசாரியர்களையும் தோத்திரம் செய்கிறது.

7. துருவாச ரகத்தியர்நற் கவுதமர்சொற் றதீசி
தூய்நெறியாஞ் சைவசம யக்குரவர் பதங்கள்
திரமாக வுளத்தினிலுஞ் சிறத்தினிலுந் தரித்தே
சிவனருள்சேர் மதலையாய்த் திருவவதா ரஞ்செய்
கரவாத திருஞான சம்பந்தர் பதமும்
கன்டமிதப்பாய் வந்தோர்தங் கழலிணையுங் கருதி
அரனாரைத் தூதேவு மவர்பதமு மற்று
மரனார்தம் மடியார்தம் மடிமலரு நினைவாம்.

பொழிப்புரை: தூய சைவநெறியில் துறவு முதலான நான்குஆசிரம நெறிகளுக்கும் முதன்மைக் குரவர்களாகக் கருதப்படும் துர்வாசர், அகத்தியர், கௌதமர், ததீசி- ஆகியோரின் திருப்பாதங்களை உறுதிபட உளத்திலும் சிரத்திலும் தாங்குவோமாக. சிவபெருமானின் பூரண அருளை ஞானப்பாலாகப் பெறச் சிறிய குமாரராகத் திருஅவதாரம் செய்தவரும், அருள்வழங்குவதில் வஞ்சனை அற்றவருமான திருஞானசம்பந்தர், கல்லே தெப்பமாக மிதக்கக் கரையேறி வந்தவராகிய திருநாவுக்கரசர்,

சிவபெருமானையே பரவைநாச்சியாரிடம் இருமுறை தூதாக அனுப்பிய சுந்தரர், மற்றுமுள்ள சிவனடியார்கள் -ஆகியோரின் திருப்பாதங்களை ஆழ்ந்து தியானிப்போமாக.

### குரு வணக்கம்

அ.கை: மேல் பரமேஷ்டிகுரு,பரமகுரு,ஸ்வகுரு வந்தனங்கூறுகின்றது.

8. உத்தமமா மாரியதே யத்து நல்ல
வுயுர்மறையோர் குலத்துதித்தே யுணர்ந்தி யாவும்
சத்தியமாஞ் சைவத்துட் சந்நி யாச
தாபதராஞ் சதாசிவதே சிகனார் தாளும்
சித்திதருஞ் சிவநெறித்தே சிகனார் தாளுஞ்
சிரத்திருத்திச் சிவக்கொழுந்தா யெம்மை யாண்டு
முத்திதர வெழுந்தருளுங் கோமான் பாத
முடிமேல்வைத் துளத்திலென்று முன்னு வாமே.

பொழிப்புரை: சிறப்பும் உயர்வும் உடைய ஆரியதேசத்தில் நன்மை விளைவிக்கும் உயர்ந்த அந்தணர் குலத்தில் தோன்றி, வேதஆகம கலைஞானங்கள் அனைத்தையும் உணர்ந்து, மெய்ந்நெறியாகிய வைதிக சைவ சந்நியாச நெறியில் சிறந்த தவச்சீலராக விளங்கிய சதாசிவதேசிகரின் திருவடிகளையும், சிவஞானசித்தியையும், அணிமாதி சித்திகளையும் தரும் சிவநெறித் தேசிகனாரின் திருவடிகளையும் சிரசில் இருத்திக்கொண்டு நிட்களபரசிவமே எம்மைக்காப்பது நிமித்தமாக உருக்கொண்டு வந்தது போன்று எமக்குப் பேறு கொடுக்க எழுந்தருளும் சிவக்கொழுந்து சிவாசாரியாரின் திருப்பாதங்களைச் சிரசில் தாங்கி எப்பொழுதும் இரண்டற்றநிலையில் ஒருமையுணர்வுடன் சிந்திப்போமாக.

### ஸ்வகுருவணக்கம்

அ.கை: மேல்ஸ்வகுருவை விசேஷித்து துதிக்கின்றது.

9. ஐயமறப் பதிபசுபா சத்தி னுண்மை
யடைவுணர்த்தி யடியேனைப் பொருள தாக
மையல்செயு மாயைவினை யாண வத்தின்
மயக்கறத்தன் பதமலரெஞ் சென்னி வைத்தே
துய்யையுனை யினிவினைகள் சூழா வென்றே
சுத்தமுத்தி யளித்தசிவக் கொழுந்தோன் றுய்ய

செய்யமலர்ப் பதமிரண்டுஞ் சென்னி மீதுஞ்
சிந்தையினும் வைத்துகந்து சிறந்து வாழ்வாம்.

பொழிப்புரை: ஐயம் அனைத்தும் நீங்க, பதி, பசு, பாசம், எனும் முப்பொருள் பற்றிய உண்மைகளை முறைப்படி உணர்த்தி, என்னையும் பொருட்படுத்தி, மயக்க உணர்வைத் தோற்றுவிக்கும் மாயை, கன்மம், ஆணவம், ஆகியவற்றால் நேரும் பந்தமானது நீங்கும் வகையில் தமது திருவடிகளை என் சிரசின்மேல் வைத்து "மலமற்ற நித்திய வியாபக சுத்த ஞானமே உனது வடிவம், ஆணவம் முதலானவை நீங்கப்பெற்றுள்ளாய் ஆதலால் உன்னை இனி பிராரப்த கர்ம நுகர்ச்சி காரணமாக நேரும் ஆகாமிய வினையும் உன்னை அனுகாது" என்றுகூறி சுத்தமான முத்திப்பேறு வழங்கிய சிவக்கொழுந்து சிவாசாரியாரின் தூய்மையான, செந்தாமரை மலர் போன்ற பாதங்களை, நின்மலஞானமயமான சக்திவடிவாகவும் சிவவடிவாகவும் சிரசிலும் இதயத்திலும் தரித்துக்கொண்டு சிவானந்தம் பெற்று "நாம் சிவமாக உள்ளோம்" எனும் உணர்வுச்சிறப்புடன் வாழ்வோமாக.

### அவையடக்கம்

அ.கை: மேல் அவையடக்கம் கூறுகின்றது..

10. தந்தைதாய் தஞ்சிறுவர் மழலைச் சொல்லைத்
தாமுகந்து கேட்டதனைப் பிறர்க்கு நன்றாச்
சிந்தையார் வுறும்படியாய்த் தெளியக் கூறுஞ்
செய்கைபோற் சிதானந்த மேனி யான
எந்தைதா ளிணைமறவா வியல்பி னோர்க
ளெம்முரையை யுகந்துபிறர்க் கிசைப்ப ரென்றே
பந்தமா திகளறியாச் சிறியே னாசைப்
பகுதியாற் சைவநெறி பகர லுற்றேன்.

பொழிப்புரை:இவ்வுலக நடைமுறையில் தந்தையும் தாயும் தம் சிறு குழந்தைகள் பேசும் மழலைச் சொற்களை மகிழ்வுடன் கேட்டு, அதனைப்பிறர்க்கும் அவர்கள் மகிழும்படியாக "இப்படிக் கூறினான்" என விளக்கமாக கூறி மகிழ்வது போன்று ஞான ஆனந்தத்தையே தமது திருமேனியாகக் கொண்டிருக்கும் எமதுபிரபுவாகிய பரமசிவனின் திருவடிகளை ஒரு கணமேனும் மறவாமல் இருக்கும் இயல்புடைய சிவஞானியர் இந்நூலை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு தகுதியுடைய ஏனோர்க்கும் உபதேசிப்பார்கள் எனக் கருதிக் கொண்டு இலக்கண-இலக்கிய-விதிமுறை அறியாத சிறியேன்,

ஆசைமிகுதியால் சைவநெறியைப் பற்றி விளக்க முற்படுகிறேன்.

**அ.கை: மேலதற்கொரு புறனடை.**

11. குருசரண ரருள்புரிந்த வாக்கு மெய்பாற்
கூடுமனு பவந்தானு மாக மத்தே
வருபொருளும் பேதமற்றோர் வகையே யாக
மதித்துரைத்த லாற்பொருட்பான் மருவா குற்றம்
தருவவுள வேற்குற்ற மெழுத்துடன்சொல் யாப்புத்
தக்கவலங் காரத்திற் றான்ஞான நிறைவாம்
பெருமையுடை யோரிதனை யாய்ந்துபிழை தீர்த்தே
பிறர்க்குரைப்பா ரருளினா லிதன்பொருளும் பெறவே.

**பொழிப்புரை:** தமது குருவின் பாதங்களை எப்பொழுதும் மனத்துள் தாங்கியுள்ள எமது குரு எனக்கு உபதேசித்து அருளிய மெய்ம்மொழிக்கும், எம்மிடம் வந்து பொருந்திய மெய்யனுபவமும், மூலநூல்களாகிய ஆகமங்களிலே வெளிப்படுத்தப்பட்டுள்ள மெய்ப்பொருளும் ஆகிய மூன்றும் தம்மில் பேதம் அற ஒரே கருத்துப்பட நிகழுமாறு சிந்தித்து இந்நூலை இயற்றியுள்ள காரணத்தால், இந்நூற்பொருளில் எந்த ஒரு குற்றமும் பொருந்த வழியில்லை. எழுத்து, சொல், யாப்பு, அலங்காரம் முதலானவற்றிலும் குற்றம் ஏதும் இல்லை. ஒருவேளை இருக்குமாயின் பூரணமான ஞானப்பேறு வாய்த்துள்ள உயர்வான ஞானியர், இதனை ஆராய்ந்து பார்த்துப் பிழையை நீக்கி, மெய்ப்பொருளை நாடும் அன்பர்க்கு அருளால் இதன் உட்பொருளை எடுத்துக்கூறுவார்கள்.

**அ.கை: மேல் இச்சாத்திரம் ஓதுதற்கு அதிகாரியைக் கூறுகின்றது.**

12. முன்னையருந் தவத்தினா லவ்வறிவு விடாதே
முளைத்ததோர் சாங்குசித்தர் பிராகிருத ராகித்
தன்னையுண ரார்க்கன்றி முத்தி யெய்தச்
சற்குருவை யடைந்தோதி யுணர்தல் செய்யும்
அன்னநெறி வைநயிகர்க் காக வுன்னி
யருட்குருவீ னருளதனா லறிந்த வாறிங்
குன்னலுறுஞ் சிவநெறிப்ர காச மென்றே
யுரைத்திடுவா மாகமத்தி னுட்பொருளி னூடே.

**பொழிப்புரை:** முற்பிறப்பில் செய்த அரிய தவத்தின் பயனாக, அந்த முற்பிறவியில் ஈட்டிய அறிவுடனேயே இப்பிறவியை எடுத்திருக்கும் ஸாமுசித்தர்களுக்கும், பிரகிருதி காரியமாகிய தேகமே ஆன்மா எனக் கொண்டுள்ள பிராகிருதர்களுக்கும் இந்நூல் உரைக்கப்படவில்லை. முத்திப் பேற்றை அடைவதற்காக ஞானகுருவின் திருமுன் நின்று மெய்நூல்களைப் பயின்று உணரும் ஆர்வமும் அடக்கமும் மிக்க வைநயிகர்களுக்காக, வீடுபேறு வாய்க்கும் பொருட்டு அருளே திருமேனியாகக் கொண்டுள்ள எமது குருப் பெருமானின் கருணையால், சிவாகம உட்பொருள் இழையோடி ஊடுருவி விளங்கும் வண்ணம் சிவநெறிப்பிரகாசம் எனும் பெயருடைய இந்நூலைக் கூற முற்படுவோம்.

(சிவானுபவ நெறியை விளக்கிக் கூறுவதால் சிவநெறிப்பிரகாசம்: அன்றியும் சிவநெறிப்பிரகாச சிவாசாரியார் எனும் பரம குருவின் திருப்பெயராலும் இந்நூல் கூறப்பட்டது.)

**அ.கை:** மேல் சாத்திரத்தின் முன்கூறவேண்டிய விஷயம், பிரயோஜனம், அதிகாரம், சம்பந்தம் என்னும் நால்வகையும் கூறுகின்றது.

13. விடயமிதற் காவதுதான் பதிபசுபா சத்தின்
விதியுணர்த்த லாகியிடு மேற்பயன்றான் முத்தி
அடைவதுவா மதிகாரி யாரென்னின் முன்னே
அறைந்தனம்வை நயிகரென வவரே யாகும்
தொடையுடைய சம்பந்த மேதிங் கென்னிற்
சொலற்குரிய பொருளுமதன் சொலவு மாகும்
மடையுடைநீர் போற்சிவன்பா லன்பு வைத்த
மதியுடையோர்க் கிவையுரைக்கும் வாய்மை தானே.

**பொழிப்புரை:** இந்நூலில் உணர்த்தப்படும் பொருள் யாது எனில், பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள்களின் செயற்பாட்டு ஒழுங்கை-நியதியை அறிவிப்பது: இந்நூலை ஓதுவதால் ஆகும் பயன் முக்திப் பேற்றை அடைதல். இந்நூலை ஓதுதற்கு அதிகாரி யார் எனில் முற்கூறப்பட்ட வைநயிகரேயாவர். தொடர்பினைப் புலப்படுத்தும் சம்பந்தம் யாது எனில் இந்நூலில் கூறப்பட உள்ள பதி பசு பாசம் எனும் முப்பொருளும் அவற்றைச் சொல்லும் சொல்லமைப்பும் ஆகும். மடை உடைந்ததால் விரைந்து பெருக்கெடுக்கும் நீர்போல் சிவனிடத்தில் அன்புப்பெருக்கு கொண்டுள்ள அருள்ஞானம் உடையோர்க்கு பொருள் முதலான நால்வகையையும் உணர்த்துவதாக இந்நூல் அமையும்.

**அ.கை:** மேல் தன்மார்த்த காம மோக்ஷம் என்ற நால்வகைப் புருஷார்த்தத்தில் மோக்ஷம் சொல்லுவதன் பொருட்டு தர்மம்முதலியவற்றை தொகுத்து கூறுகின்றது.

14. தருமமுடன் பொருள் காமமுத்தி யென்று
சதுவிதமாம் பயனுயிர்க டங்கட் கிங்கன்
மருவியிடு மதிற்றரும மறையி னீதி
வன்னத்தோர் நால்வோரும் வழுவி லாதே
பரிவினொடும் புரிந்துபர தருமஞ் செய்யாப்
பான்மையோர் பரகதியை யடைவர் நன்றாய்
ஓருவியுளோர் தமக்குரிய தருமந் தன்னை
யுற்றிடுவர் தீவினையென் றுரைக்கு நூலே.

**பொழிப்புரை:** உயிர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நால்வகை உறுதிப்பயன்கள் உள்ளன. இவற்றுள் அறம் (தருமம்) என்பது மெய்ந்நூல்களில் கூறப்பட்டுள்ளவாறு நால்வகை வருணத்தவரும் தத்தம் வர்ண-ஆசிரம விதிமுறைகளைக் கடைபிடித்து, ஒரு வருணஆசிரம நெறிக்குக் கூறப்பட்டுள்ள தர்மத்தை வேறொரு வருணஆசிரம நிலையில் உள்ளோர் பின்பற்றாமல் இருப்பது. இவ்வாறு தன்னெறி கடைபிடித்துப் புறநெறிவிலக்கி அறம் காப்போர் மேலான நன்னிலையை (துறக்க உலகை) அடைவர். தத்தமக்குரிய தர்மநெறியை நீங்கி நடப்போர் நரகங்களில் தீய பயனை அனுபவிப்பர் - என இவ்வாறு உறுதி நூல்கள் கூறும்.

**அ.கை:** பொருட்பால் காமப்பால் இவைகளைக் கூறுகின்றது.

15. பரபொருளுக் காசையுற லின்றித் தத்தம்
பான்மையினாற் பொருடேடிப் பகிர்ந்தா றாகக்
கரவறவே தென்புலத்தோ ராதி நாலு
கணத்தவர்க்குங் கொடுத்திருபால் கைக்கொண்
டேதன்
மரபிலுள்ளோ ருடனருந்தல் பொருளாங் காம
மகப்பெறுதற் பொருட்டாய்த்தன் வனிதை யோடு
புரைவறவே கூடிடுத லல்லா ரோடு
பொருந்திடுதல் பாவமாம் புகலுங் காலே.

**பொழிப்புரை:** ஏனையோரின் பொருள்களுக்கு ஆசைப்படாமல், தத்தம் வருண-ஆசிரம நெறிக்கு ஏற்ப வேதஆகமங்களாகிய உறுதிநூல்களில்

கூறப்பட்டுள்ளபடி பொருள்களைச் சேர்த்து, ஈட்டியபொருளை ஆறாகப்பகுத்துத் தென்புலத்தார் முதலாகிய நால்வகையினர்க்கும், வஞ்சனை இன்றி நான்கு பங்கு கொடுத்து எஞ்சிய இரண்டு பங்கு கொண்டு தமது சுற்றத்தைக் காப்பதும், தாம் துய்ப்பதும் பொருள் எனப்படும் உறுதிப்பயனாகும். மகப்பேறு நிமித்தம், அங்கியை வலம்வந்து மணம் செய்து கொண்ட தன் மனைவியுடன் இணைதலே இன்பம் (காமம்) எனும் உறுதிப்பயன் என்றும் பிறன்மனை விழைதல் பாவம் என்றும் நூல்கள் கூறும்.

அ.கை: மேல் நாலாம் புருஷார்த்தமான மோக்ஷங் கூறுகின்றது.

16. மாயையுட னிருவினையு நீங்கா ஞான
மறைப்பான வாணவமா மாசு தானும்
தூயையாம் பராசத்தி தன்னா னீங்கச்
சுத்தமாய் நித்தமாய்ச் சுகமாய் ஞான
ஞேயமாய்ப் பிரிவிலதா யேக மான
நிமலசிவத் துடனாதல் முத்தி முத்திக்
காயவேண் டிடும்பொருள்கள் மூன்றே யாகு
மவையுரைக்கிற் பதிபசுபா சங்க ளாமே.

பொழிப்புரை: சுத்தமாயை அசுத்தமாயை ஆகிய பந்தமும், நல்வினை தீவினைமயமான கன்ம பந்தமும், மறைப்பைச் செய்யும் அழுக்காகிய ஆணவமல பந்தமும் ஆகிய மூன்றும் இயல்பாகவே மிகத்தூய்மையாக உள்ள பராசக்தியால் நீங்க சுத்தமாகவும், நித்தியமாகவும், இன்பமே வடிவமாகவும், வேறற நின்று ஞானத்தால் அறியப்படுவதாகவும், பிரிவற்று ஒன்றாகவும் விளங்கும் நின்மலசிவத்துடன் வேறற விளங்கும் நிலையை அடைதலே வீடுபேறு. இத்தகைய வீடுபேற்றை அடைவதற்கு ஆராய்ந்து உணரப்பட வேண்டிய பொருள்கள் மூன்று ஆகும் . அவை பதி, பசு, பாசம் ஆகும்.

அ.கை: மேல் பிரமாணாதீனமாயிருக்கும் பிரமேயமென்பது கூறுகின்றது.

17. எப்பொருட்கு மிலக்கணங்கள் பிரமா ணங்க
ளில்லையே லிசையாதென் றியம்ப லாலே
முப்பொருட்கு மிலக்கணங்கள் பிரமா ணங்கள்
மொழிந்திடுவா முத்தேச மிலக்க ணம்பின்
தப்பறவே சோதித்த லென்று மூன்றாந்
தவறிலாப் பிரமாணந் தானு நன்றாய்

அப்பொருள்க ளனைத்தினுக்கும் பொதுச்சிறப்ப தென்றே
யாய்ப்பிரியு மிலக்கணங்க ளிருவகையா மவைதாம்.

பொழிப்புரை: உலகத்திலுள்ள எந்த ஒரு பொருளுக்கும் இலக்கணமும் பிரமாணங்களும் (அளவையும்) இல்லாது போனால் அந்தப்பொருளின் இருப்பே அறியவராது என உறுதி நூல்கள் கூறும் நியாயத்தால், மேற்கூறப்பட்ட பதிமுதலான மூன்று பொருள்களுக்கும் உரிய இலக்கணங்களையும் பிரமாணங்களையும் இனிக் கூறுவேன். உத்தேசம், இலக்கணம், குற்றமறச் சோதித்தல் என மூன்று உண்டு. குற்றமற்றுள்ள பிரமாணம் என்பதும் நன்றாக விளங்கும் ஒன்றாகும். இப்பொருள்களுக்குப் பொது எனவும் சிறப்பு எனவும் பிரிந்துள்ள இலக்கணங்கள் இரண்டாகும். (பொது இலக்கணம், சிறப்பு இலக்கணம் என்பன)

அ.கை: மேல்இலக்கணத்தின் சொரூபம் கூறுகின்றது.

18. தன்னியல்பும் பொதுவுமென விரண்ட தாகச்
சாற்றுமிலக் கணந்தான்றன் னியல்பைக் கூறில்
அன்னியமாஞ் சாதியையுந் தற்சாதி யதுவு
மகன்றதோர் குறியுளதா யறைத லாகும்
மன்னியீட வன்னியசா தியைத்தவிர்ந்த குறிகள்
மருவியீடுந் தற்சாதி யனைத்தினுக்கும் வாய்க்க
உன்னியுரைத் திடுவதுவே பொதுவ தாகு
முணரிலிவை யெப்பொருட்கு முள்ள வாமே.

பொழிப்புரை: இலக்கணம் என்பது தனக்கே இயல்பாக உரியதாகிய அசாதாரணம் எனவும் எல்லார்க்கும் பொதுவான இயல்யாக உரியதாகிய சாதாரணம் எனவும் இரண்டு வகைகளாகக் காணப்படும். இவற்றுள் அசாதாரணம் என்பது தனக்கு அன்னியமாக உள்ள சாதியையும் தன் சாதியையும் நீங்கிஉள்ள அடையாளத்தைக் கூறுதல் ஆகும். வேறொரு சாதிக்கு இல்லாத அடையாளங்கள் தன்சாதியிலே உள்ள அனைத்திற்கும் பொருந்தி இருப்பனவாக ஆய்ந்து உணர்ந்து கூறுவது பொது இலக்கணம் ஆகும். ஆழ்ந்து நோக்கும் இடத்து இவை உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் உள்ளன ஆகும்.

அ.கை: மேல் உத்தேச இலக்கண பரீசைகூகட்கு இலக்கணம் கூறுகின்றது

19. உத்தேசம் வத்துவின்பே ருரைத்த லாகு
மொன்றுகுறை யாதுரைத்த துள்ள தெல்லாம்
சித்தமுமா யன்னியத்தி லில்லை யாகத்
தெரிப்பதிலக் கணஞ்சோதித் திடுத றான்மேல்
வத்துவா மிலக்கியத்தே யிலக்க ணங்கள்
வாய்த்திடுதல் வாயாதல் மதித்த லாகும்
இத்தகையா லிவையுளவா மென்றே நன்றா
வேதுமுத லியம்பல்பிர மாண மீதே.

பொழிப்புரை: உத்தேசம் என்பது பொருளின் பெயரைச் சொல்வது. ஒன்றும் குறையாமல் சொல்லப்பட்ட குறிகள் எல்லாம் பொருந்தி விளங்குவதாய், வேறு எதனுக்கும் அந்தக் குறிகள் பொருந்தாமல் இருக்கும் வண்ணம் விளக்குவது இலக்கணம் ஆகும். தேர்வு (பரீக்ஷை) என்பது தான் ஒரு பொருளாக விளங்கும் இலக்கணம் உடைய நிலையிலே இந்த இலக்கணம் பொருந்துமா, பொருந்தாதா என ஆலோசித்து நிற்றல் ஆகும். இன்ன வகையால் இன்ன காரணத்தால் இந்தப் பொருள்கள் இருக்க வேண்டும் என நன்றாக, ஏது, பக்கம், சாத்தியம் முதலான தருக்க இலக்கணப்படிக் கூறுதல் பிரமாணம் என்பதாகும்.

அ.கை: மேல் சைவ சித்தாந்தத்துக்குப் பிரமாணம் சிற்சத்தி யென்பது கூறுகின்றது.

20. ஐயமுடன் றிரிவின்றி முன்னினைவு மின்றி
ஐம்பொறிபோ லொன்றொன்றே யறித லின்றி
மையலறு காட்சியனு மானமுறை மூன்றின்
வகையனைத்தும் வியாத்தியாய் மதிப்ப தாகிப்
பொய்யதுவாய் ஞேயமாம் பொருள்களின் றாகிப்
புந்திக்கு மேலான போத மாகிச்
செய்யசிவ சத்திதுணை யாய்விளங்குஞ் சீவ
சிற்சத்தி பிரமாண மெனத்தெரிப்பர் தெரிந்தோர்.

பொழிப்புரை: சந்தேகமும் விபரீதமும் இன்றி, முன் அனுபவ நினைவும் இன்றி, ஐம்பொறிகளுள் ஒவ்வொரு பொறியும் தனக்குரிய ஒன்றையே அறிதல் போன்று அல்லாமல், மயக்க உணர்வு நீங்கியதாய், பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் என்னும் மூவகைப் பிரமாணங்களிலும் வியாபித்து ஆலோசிப்பதாகிப், பொய் என அறியப்படும் வத்துக்களில் இல்லாததாகிப், புத்தி தத்துவத்திற்கு மேற்பட்ட அறிவாகித், தூய சிவசக்தி துணையாக

நிற்க, ஒளி வீசி நிற்கும் ஆன்ம சிற்சக்தியே பிரமாணம் என - சிவாகமம் அறிந்தோர் கூறுவர்.

அ.கை: மேல் சிற்சத்தி என்னும் பிரமாணத்துக்கு அபிவியத்தியைப்பண்ணும் கரணங்களை கூறுகின்றது.

21. கூறிடுமிப் பிரமாணந் தனக்கபிவெஞ் சகமாய்க்
குறித்திடுவர் காண்டலனு மானவுரை தன்னை
வேறுமுவ மானமுதற் பலவுரைப்ப ரவைகள்
வேறல்ல விம்மூன்றின் விரித்த லாகும்
மாறிலாக் காட்சிமுதன் மூவகைக்கு மிதனில்
வரும்பேத வகைகளுக்கு மருவுமிலக் கணங்கள்
தேறும்வகை சிவாகமத்தே யாங்கண்ட படியே
தெரித்திடுவாந் தொகையாகச் சிந்தை செய்தே.

பொழிப்புரை: பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் எனும் மூன்றையும், மேற்கூறப்பட்ட சிறசக்தி எனும் பிரமாணத்திற்கு அபிவியஞ்ஜகம் செய்யும் (விளக்கம் கொடுக்கும்) சாதனங்களாக, நூலோர் ஆய்ந்துணர்வர். பல சமயத்தவரும் இம் மூன்றுக்கும் வேறாக உபமானம், அருத்தாபத்தி, அபாவம் என அனேக பிரமாணங்களைக் கூறுவர். அவைகள் எல்லாம் பிரத்தியக்ஷம் முதலான மூன்றுக்கும் வேறல்ல. இம்மூன்றின் விரிவுகளே அவைகள். குற்றமற்றுள்ள பிரத்தியக்ஷம் முதலான மூன்று பிரமாணங்களுக்கும் இவை தொடர்பான பேதவகைகளுக்கும் உரிய இலக்கணங்களை நன்றாக உணர்ந்து கொள்ளும் வகையில், சிவாகம நூல்களில் யாம் கண்டறிந்தபடி நன்கு சிந்தித்து தொகுத்துக் கூறுவேன்.

அ.கை: மேல் பிரத்தியட்சம் மூன்றுவகை என்பது கூறுகின்றது.

22. பொறியைந்தால் மானதத்தா லவித்தை கூடாப்
போதத்தாற் காட்சியோர் மூன்றாகப் புகலும்
செறியுமதி லனுமானம் பொருளதனா லுரையாற்
செப்பியிடு மிருவகைத்தாந் திகழுமா கமந்தான்
அறியுங்காற் றந்திரமு மந்திரமு மதன்மே
லளிக்குமுப தேசமென மூவகைய தாகப்
பிறியுமிவை யனைத்தினையும் விரிக்கிலவை பெருகும்
பெற்றிமையாற் குவித்துரைப்பா மிதன்பொருளும்
பெறவே.

**பொழிப்புரை:** ஐம்பொறிகளாலும், மனத்தாலும், அஞ்ஞானம் சிறிதும் அணுகாத சிவஞானத்தாலும் காட்சிப்பிரமாணம் மூவகைப்படும் என ஆகமங்கள் கூறும். பிரமாணமாகப் பொருந்தும் அனுமானம், பொருள் பற்றி நிகழும் அனுமானம், சொல்பற்றி நிகழும் அனுமானம் எனவும் இருவகையாகக் கூறப்படும். மூன்று பிரமாணங்களிலும் சுதந்திரமாகத் திகழும் ஆகமம் என்பது தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என மூன்று நிலைகளில் உணருமாறு பிரிந்து நிற்கும். இவையனைத்தையும் விளக்கமாகக் கூற முற்பட்டால் மிகவும் விரிவு பட்டு நிற்கும். சொற்களைச் சுருக்கிப் பொருளை விரித்து, நூல்களில் கூறப்பட்டிருக்கும் பொருள்கள் எல்லாம் இச்சுருக்கத்தில் அடங்கி நிற்கும் வண்ணம் இங்கே கூறுவோம்.

**அ.கை:** முன்தொகுத்துக்கூறிய இந்திரியப் பிரத்தியட்சம் மானதப்பிரத்தியட்சம் சிற்பிரத்தியட்சமென்னும் மூன்றில் இந்திரிய பிரத்தியட்ச மானதப் பிரத்தியட்சங்களுடைய சொரூபம் கூறுகின்றது.

**23.** கலையாதி யால்விளங்கு ஞான மந்தக்
கரணத்தி னுடன்கூடக் காற்றுடனே மனந்தான்
நலமாரு நேத்திரத்தை யாதிபொறி யைந்தை
நண்ணவவை யுருவாதி யாகியே நண்ணும்
புலனாய பொருளடைந்தே யையமுடன் றிரிவும்
பொருந்தாம லறிதல்புறக் காட்சியாய்ப் புகல்வர்
அலமாரும் பொறிவழியால் வந்தவிட யத்தை
யகத்தினுள்ளே சிந்தித்த லாயிடுமா னதமே.

**பொழிப்புரை:** சிவசக்தியால் செலுத்தப்படும் கலை,வித்தை, அராகம் முதலான தத்துவங்களால் ஆன்மாவில் ஓரளவு விளக்கம் பெற்ற ஞானம், சித்தம் முதலான உட்கருவிகளுடன் கூடி, பிராணன் முதலான வாயுக்களோடும் பொருந்தி, மனத்தையும், பின்னர்க் கண் முதலான ஐம்பொறிகளையும் பொருந்தும். கண்முதலான பொறிகள் தமக்குரிய ரூபம் முதலாக உள்ள பொருள்களைப் பொருந்தி ஐயம் திரிபு அற அறிவது புறப்பொறிக் காட்சி (பாஹ்ய இந்திரிய பிரத்தியக்ஷம்) என ஆகமம் அறிந்தோர் கூறுவர். எப்பொழுதும் அலைச்சலைக் கொள்ளும் ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்பட்ட விடயத்தை உள்ளத்துள்ளே விசாரிப்பது மானதப் பிரத்தியக்ஷம் ஆகும்.

அ.கை: மேல் சிற்பிரத்தியட்சம் விஞ்ஞானப் பிரத்தியட்சமென்றும், சிவஞானப் பிரத்தியட்சமென்றும் இருவகைப்படுமென்பது கூறுகின்றது.

24. புறக்கருவி தனைநீங்கி யுட்கருவி யான
புத்திமன மாங்காரம் பொருந்த லின்றிச்
சிறப்புடைய யோகத்தா லாணவத்தை நீங்கித்
திரிகாலத் தியல்புணர்தல் விஞ்ஞானக் காட்சி
அறப்பெரிய ஞானத்தா லான்மாவுஞ் சிவனு
மனனியமாய் அனுபவத்தா லறிந்திடுத லதுவும்
துறப்பரிதாம் சிவஞானக் காட்சி யென்று
சொல்லிடுவர் சிவஞானத் தூய்மை யோரே.

பொழிப்புரை: புறத்தே இயங்கும் பொறிகளாகிய செவி முதலானவற்றினின்றும் நீங்கி, உட்கருவிகளான மனம்,புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றையும் பொருந்தாமல், சிறப்பான யோகப் பயிற்சியால் ஆணவ மலத்தினின்றும் நீங்கி, மூன்று காலங்களிலும் உள்ள பொருள்களையெல்லாம் ஒரே காலத்தில் அறிவது விஞ்ஞானக்காட்சி: மிகவும் பரிபூரணமாக விளங்கும் ஞானத்தால் ஆன்மசொருபமும் சிவசொருபமும் வேறற்று விளங்குவதை தன் அனுபவத்தால் காண்பது சிவஞானக்காட்சி. இக்காட்சி, புறக்கணித்துவிட இயலாத ஒன்று. இவ்வாறு சிவஞான அனுபவத்தால் தூய்மை அடைந்துள்ள மேலோர் கூறுவர்.

அ.கை: மேல் ஐயந்திரிவுகளுடைய சொருபம் கூறுகின்றது.

25. இருபொருட்குச் சமமான குறியையொரு பொருளி
லிசைந்திடக்கண் டிதுவெதுவோ வென்பதைய மாகும்
ஒருபொருளைக் கண்டதனை மற்றொன் றாக
வுன்னிடுத றிரிவாகு மொன்றிதெனக் காண்டல்
மருவியிடு நிருவிகற்பக் காட்சி யாகு
மற்றதனைப் பேராதி யால்மதித்தல் விகற்பந்
தருமுணர்வா மையமுடன் றிரிவு மின்றித்
தானறிதல் குற்றமிலாக் காட்சி தானே.

பொழிப்புரை: இரண்டு பொருள்களுக்குப் பொதுவாக உள்ள ஒரு தருமம் ஒரு பொருளிலே பொருந்தியிருப்பதைப் பார்த்து 'இதுவா, அதுவா- என நிகழ்வது ஐயம்: ஒரு பொருளைக்கண்டு, விசேடத்தோற்றம் இல்லாத

காரணத்தால் வேறொரு பொருளாகக் காண்பது விபரியயம். மழலையர் அறிவை ஒத்தும் ஊமையர் அறிவை ஒத்தும், ஒரு பொருள் இது எனப் பொதுப்பட நிகழ்வது நிருவிகற்பக் காட்சி. நிர்விகற்பமாக அறிந்த ஒன்றைப் பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் என்னும் ஐவகைகளால் ஆய்ந்து வேறுபடுத்திக் காண்பது சவிகற்பக்காட்சி. இவ்வாறு ஐயம் திரிபு அற அறிவதே, குற்றமற்ற, உன்னதமான பிரத்தியக்ஷம் ஆகும்.

அ.கை: மேல் அனுமானப் பிரமாண சொருபம் கூறுகின்றது.

26. குறைவிலா வியாத்தியால் மறைபொருளைக் காண்டல்
கூறியிடு மனுமான மிதன்பேதங் கூறில்
மறைவான தருமிதனைத் தருமத்தா லறிதல்
மதித்திடுதல் காரியத்தாற் காரணத்தை யங்ஙன்
திறனாகுங் காரணத்தாற் கபரியத்தைத் தெரிதல்
செப்பியிடு முவமானத் தாற்பொருளைத் தெரிதல்
முறைதேரிற் பக்கநிகர் பக்கமலாப் பக்க
மூன்றாகு மன்னுவய மாதியுமோர் மூன்றே.

பொழிப்புரை: குறைவற்ற தொடர்பு (சம்பந்தம்) எனும் வியாப்தியால், நேரே புலப்படாமல் மறைந்துள்ள பொருளை அறியும் முறையே, ஆகமநூல் கூறும் அனுமானம் என்பது. இதன் பேதங்களைக் கூறுமிடத்து, மறைந்துள்ள தருமியை, தருமத்தைக் கொண்டு அறிவதாகிய தருமி அனுமானம், தருமத்தால் தருமியை அறிவது போன்று காரியத்தால் காரணத்தை அறிவது கார்யாத்-காரண அனுமானம், சிறந்து விளங்கும் காரணத்தால் காரியத்தை அறிவது காரணாத்-கார்ய அனுமானம், கூறப்படும் உவமானத்தால் பொருளை உறுதி செய்வது உவமானானுமானம். இந்த அனுமான முறைமையை ஆராயுமிடத்து, பக்கம், சபக்கம், விபக்கம் என்னும் மூன்றையும் உடையதாய்க் கேவலான்வயி, கேவலவியதிரேகி, அன்னுவயவியதிரேகி என மூவகைப்பட்டு விளங்கும்.

அ.கை: இங்ஙனம் கூறுகின்ற அனுமானம் சுவார்த்தம், பரார்த்தம் என்று இருவகைப்படும் என்பதும் ஆகமப்பிரமாண இலக்கணமும் கூறுகின்றது.

27. சொல்லியிடு மனுமானந் தனக்கென்றும் பிறர்க்குச்
சொல்லுதலு மெனவிரண்டாந் தொகையிவைக
ளனைத்தும்
புல்லியிட வகையிவைக்குப் பொருள்விரித்துக் கொள்க

போற்றியிடு மாகமத்தி னிலக்கணந்தான் புகலில்
எல்லையிலா வறிவுதொழி லனுக்கிரக னாகி
யெவ்வுயிர்க்கு முயிராகி யிச்சைவெறுப் பின்றி
அல்லினுடன் பகலுமிலா வரனருள்வாக் கியங்க
ளவையறியில் வேதசிவா கமங்க ளாமே.

பொழிப்புரை: மேற்கூறப்பட்ட அனுமானமானது தான் அறியும்படி அனுமானிப்பதாகிய சுவார்த்த அனுமானம் எனவும், ஏது முதலான ஐந்து உறுப்புகளுடன் கூடிய சொல்முறையில் பிறர்க்கு அறிவிப்பதாகிய பரார்த்தானுமானம் எனவும் இருவகைப்படும். இவ்வாறு கூறப்பட்டவைகளுக்கு எல்லாம் முறையே பொருந்தத் தக்கனவாக ஒவ்வொரு வகைக்கும் பொருளை விரிவாக அறிந்து கொள்க. பிரமாணம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் ஆகமத்தின் இலக்கணத்தைக் கூறுமிடத்து-முற்றறிவு உடையவனாகவும் அனைத்தையும் இயற்றுவோனாகவும் அனைத்துயிர்க்கும் அனைத்தாலும் அருள் புரிவோனாகவும், அனைத்து ஆன்மாக்களுக்கும் உயிராகவும், விருப்பு வெறுப்பு முதலான இருமைகள் அற்றவனாகவும் கேவல சகல நிலைகள் அற்றவனாகவும் மேலான ஆப்தனாகவும் விளங்கும் சிவனின் அருள்பொருந்திய வாக்கியங்களே ஆகமம். அத்தகைய சிவவாக்கியங்கள் இன்னவை என அறியுமிடத்து வேதங்களும் சிவாகமங்களும் ஆகும்.

அ. கை: மேல் அனுமானத்தின் குற்றமான ஏத்துவாபாச சொரூபம் கூறுகின்றது.

28. அனுமானந் தனக்கடையுங் குற்ற முண்டிங்
கறையுங்கா லசித்துனுடன் விருத்தனனை காந்தன்
பினுமுரைக்கு மனத்தியவ சாய னென்றும்
பேசியிடில் வாதிதமாம் விடய னென்றும்
மனுமேலும் விபரீதந் திட்டாந்த விரோத
மறுதலையோன் பழிக்கத்தன் றோல்வியெனு மாறும்
எனுமிவற்றி னிலக்கணங்க ளுதாரணங்க ளெல்லா
மெணிவிரித்துப் பொருளுரைப்ப ரியல்பி னோரே.

பொழிப்புரை: அனுமான முறையில் நேரும் குற்றங்கள் அசித்தம், விருத்தம், அனைகாந்தம், அனத்தியவசாயம், பாதித விடயம், என ஐந்து வகைப்படும், மேலும் பொருந்த வரும் விபரியயச் சொல் என்றும் திருட்டாந்தாபாசம் என்றும், பிரதிவாதியாக உள்ளோன் நிந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திப் பழிக்கு

ஆளாகும் நிக்கிரகத்தானம் என்றும் உள்ளவை இந்த அனுமான முறையில் நேரும் குற்றங்களாகும். இவற்றின் இலக்கணப் பிரமாணங்களையெல்லாம் ஆய்ந்தறிந்து விரிவாகவும் விளக்கமாகவும் நல்லியல்புடைய சான்றோர் பொருள் உணர்ந்து உரைப்பார்கள்.

**அ.கை:** மேல் மோட்ச ஏதுவாகச்சொல்லப்பட்ட பதிபசு பாசங்களில் பதிக்கு ஸ்வரூபஇலக்கணமென்றும் தடத்த இலக்கணமென்றும் இருவகைப்படும். அவற்றுள் ஸ்வரூப இலக்கணம் கூறுகின்றது.

**29.** அறிவரிதாய்ச் சச்சிதா னந்த மாகி
யகண்டமாய் நித்தியமா யனாதி யாகிப்
பொறிகரணங் குறிகுணங்கள் விகார மின்றாய்ப்
பூரணமா யொப்பிலதா யமல மாகிச்
செறிவரிதாய் மிகச்சிறிதாய்ப் பெரிது மாகிச்
சித்தசித்தா யுள்ளதனைச் சேட்டித் தொன்றாய்ப்
பிறிவிலதாய்ப் பேரொளியாய்ப் பெண்ணலியா ணன்றாய்ப்
பெறும்பொருளாம் பதிசொரூபம் பேசுங் காலே.

**பொழிப்புரை:** பதியின் சொரூப இலக்கணத்தைக் கூறுமிடத்தே எப்பொழுதும் உள்ளதான சத்தும், நிர்விகல்ப ஞானவடிவான சித்தும் துக்கம் கலவாத தூயசுகமும் என சச்சிதானந்த மயமாக விளங்குவது, பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறியப்படாதது, காலத்தாலும் இடத்தாலும் கூறுபடுத்தப்படாதது, எப்பொழுதும் அழிவற்றது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றியது என்று கூற இயலாமல் அனாதியாகவே உள்ளது, பொறி என்னும் அனுபவ விஷயம், ஞான-கர்ம இந்திரியங்கள், உட்கருவிகள், குறிகள், முக்குணச்சேர்க்கை, மாறுபாடு ஆகிய இவைகள் இல்லாதது, எங்கும் பரிபூரணமாக நிறைந்திருப்பது, ஒப்பற்றது, இயல்பாகவே ஆணவம் முதலான பாசத்தொடர்பு அற்றது, உரிய பக்குவம் நேர்ந்தபோது பராசக்தி யோகத்தால் அன்றி வேறுவிதத்தால் பொருந்துவதற்கு (கூடுவதற்கு) அரியது, அனுவுக்கும் அனுவாய் நுண்மையாய் விளங்குவது, எங்கும் வியாபிப்பதால், பெரியனவற்றுக்கு எல்லாம் பெரியது, சித்தாகிய ஆன்மாவையும் அசித்தாகிய பிரபஞ்சத்தையும் தன் இருப்பு மாத்திரத்தால் இயக்கவல்ல தனித்த முதற்பொருளாக இருப்பது: அறிவில் பொருள்கள், அறிவுடைப் பொருள்கள் ஆகியவற்றுடன் பிரிப்பின்றி வேறற விளங்குவது, பேரொளி மயமானது, ஆண், பெண், அலி எனும் மூவகைப் பகுப்புகளுள் அடங்காதது, பரிபக்குவ காலத்தில் அடையத்தக்க பொருளாக இருப்பது,

அ.கை: இப்படிப்பட்ட அந்தப்பொருள் சத்தேயன்றி அசத்தன்று, சுவானுபவவேத்தியமென்பது கூறுகின்றது.

30. மோகமற்றிவ் வுரைவாக்கு மனவுணர்வுக் கெட்டா
முதல்வனுள னென்றலென மொழியாக் கொண்ணீ
யாகமத்தாற் பதியுளனென் றறிந்தோ மேலு
மனுமானத் தாலுமங்ங னுணர்ந்து முத்தித்
தாகமுற்றுச் சற்குருவை யடைந்து பாசந்
தனைநீங்கிச் சச்சிதா னந்த மான
போகமுற்றே யேகமிரண் டென்ன வொண்ணாப்
புணர்ச்சியும்பெற் றோமதனாற் பொய்யலவப் பொருளே.

பொழிப்புரை: "இவ்வாறு வாக்கிற்கும் மனத்துக்கும் எட்டாத ஒரு பொருள் உண்டு எனக் கூறுவது, வெறும் மோக மயக்கமே." - என்று நீ கூறாதே. வேத, சிவாகமங்களால் உலகமுதல்வன் உளன் என்று, தெளிவாக அறிந்து உள்ளோம். மேலும் காரிய ஏதுவால் கர்த்தா ஒருவன் உண்டு எனும் அனுமானத்தாலும் உணர்ந்தோம், இவ்வாறு உணர்ந்ததால் வீடுபேற்றில் வேட்கை கொண்டு, ஞான ஆசாரியரை அடைந்து ஆணவம் முதலான பாசங்களிலிருந்து நீங்கி, சச்சிதானந்த வடிவான மேலான போகத்தைப் பொருந்தி, ஒன்று எனவும் இரண்டு எனவும் கூற இடம் இல்லாத வகையில் இணைப்பையும் பெற்றோம். எனவே அந்தப் பொருள் பொய்யன்று.

அ.கை: மேல் தடத்த இலக்கணம் கூறுகின்றது.

31. மந்திரமே தனுவான சதாசி வேசர்
மகேசருருத் திரர்திருமால் மலரோன் மூர்த்தி
யைந்தினையு மதிட்டித்தே சிருட்டி யாதி
யைந்தொழிலு மவர்களைக்கொண் டாக்கி யென்றும்
பந்தமிலா மெய்ஞ்ஞான வடிவே யாகிப்
பரமநின் றிடல்தடத்தப் பரிச தாகும்
இந்தவிறை யேனுலக மியல்பே யென்னி
லேதுமுத லானவைமே லியம்பக் கேளே.

பொழிப்புரை: ஈசானம் முதலான ஐந்து மந்திரங்களையே திருமேனியாகக் கொண்டுள்ள சதாசிவப் பெருமான், மகேசுவரர், ருத்திரர், திருமால், பிரம்மா ஆகிய ஐந்து மூர்த்திகளையும் இடமாகக் கொண்டு படைத்தல், காத்தல்,

ஒடுக்கல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் அவர்கள் மூலம் நடத்தி, எப்பொழுதும் மறைப்பற்றுள்ள ஞானமே திருமேனியாகப் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டதாகவும் பற்றற்றும் விளங்குவது தடத்தமாக நிற்கும் பதிப்பொருளின் இயல்பாம். "இத்தகைய இந்த முதல்வன் (கர்த்தா) உண்டு என்பது எதற்காக? பிரபஞ்சம் என்றும் நித்தியமாக இயல்பாகவே உள்ளது." எனக்கூறினால், உண்மை அது அன்று. இனி ஏது முதலானவற்றால் கூற இருப்பதைக் கருத்துடன் கேட்க.

**அ.கை:** மேல் பிரபஞ்சம் காரியமாகையால் கருத்தாவையுடையதென்று கூறுகின்றது.

**32.** கடபடங்கள் முதலான வுருவுக் கெல்லாங்
காரியகர்த் தாத்தனைநாங் காண்கை யாலே
சடமதுவாய் உருவமுமாய்த் தரணி யோடுந்
தனுவாதி தோன்றிநின்றே யழிதல் தன்னால்
திடமுடைய மெய்ஞ்ஞானச் செயல்க ளுண்டாய்ச்
சித்தசித்தெல் லாத்தினையுஞ் சேட்டிப் பித்தே
உடனுதுவாய் நின்றுயிரின் தன்மை தன்பா
லுறாதொருவ னுலகாக்க வுளனென் றோரே.

**பொழிப்புரை:** பானை, ஆடை முதலானவற்றுக்கெல்லாம், அவற்றைச் செய்யும் கர்த்தாவாக முறையே குயவன், நெய்வோன் முதலானோரை நாம் கண்கூடாகக் காண்பதாலும், சடமாகவும் வடிவுடையதாகவும் தோன்றும் தனு, கரணம், புவனம், போகங்கள் ஆகிய இவை படைப்பு, நிலைபேறு, அழிவு ஆகியவற்றுக்கு உட்பட்டு அழிவதாலும் - உறுதிப்பாடுமிக்க முற்றறிவு முதலான குணங்கள் உடையவனாகவும், அறிவுடைப்பிரிவில் சேரும் ஆன்மாக்கள் அறிவிலாப்பிரிவில் சேரும் பிரபஞ்சங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்துபவனாகவும், எள்ளுக்குள் எண்ணெய் போன்று உடனாக நின்று ஆன்மாக்களின் இன்பம் துன்பம் மோகம் ஆகியவை தன்னிடத்துப் பொருந்தாத வகையில் விளங்குபவனாகவும் இருந்து பிரபஞ்சத்தை உண்டாக்க ஒரு முதல்வன் வேண்டும்.

**அ.கை:** மேல் தேக இந்திரிய குண நாமமில்லாதவனுக்குக் கர்த்திருத்துவம் கூடாதென்னக் காலாதிகளுக்குப் போலக் கர்த்திருத்துவங்கூடும் என்பது கூறுகின்றது.

33. உருவாதி குணங்கிரியை யொன்று மில்லா
னுலகாக்கு மாறெங்ங னெனினுரைப்போ முணர்நீ
தருவானோர் காயாதி காயவா னென்னிற்
றானவற்குத் தனுவாதி தருவான் வேண்டும்
வருமாறிவ் வாறவத்தை முடிவின் றாகும்
வாய்மையினாற் காலந்தான் வடிவின் றாகித்
திரிகாலத் துற்பத்தி திதிநா சத்தைத்
தெரிவித்தல் போலாகுஞ் சிவன்செயலுந் தேரே.

**பொழிப்புரை:** உடல், கருவிகள், கரணங்கள், குணம், பெயர் - இவற்றுள் ஒன்றும் இல்லாத பதி பிரபஞ்சத்தை உண்டாக்கும் முறை எப்படி என வினவின், அவன் உலகைப் படைக்கும் முறைமையைக் கூறுவோம், உணர்ந்துகொள். தனு, கரண, புவன, போகங்களைத் தரும் முதல்வன், தேகத்தை உடையவன் எனில், அவனுக்குத் தேகம், இந்திரியம் முதலானவற்றைக் கொடுக்க வேறு ஒரு தேகியாகிய முதல்வன் வேண்டும். இவ்வாறு நோக்கினால் எல்லை இல்லை என்பதாகிய அனவத்தை எனும் குற்றம் பொருந்தும். காலமானது உருவம் (தேகம்) அற்று இருந்தாலும் செல்காலம், நிகழ்காலம், வரும்காலம் எனும் மூன்று காலங்களில் இன்ன காலத்தில் இது தோன்றவேண்டும் இது நிலைக்கும், இது அழியும் எனச் செயல்களைச் செய்வது போன்று சிவனும், உருவமற்றவனாயினும் படைத்தல் முதலான செயல்களைச் செய்வார்.

**அ.கை:** மேல் சிவனுக்குச் சன்னிதிமாத்திர கர்த்திருத்துவம் கூறுகின்றது.

34. காலம்போல் வடிவிலதா யுருவாதி யாக்கிக்
காயவனல் போல்வினையின் கணங்கள் தம்மை
ஏலவே பாகமுறச் செய்து காயத்
தெழிற்கிரியை யான்மாக்க ளியற்றல் தன்னைப்
போலவே சராசரங்க டம்மு ணின்று
புரிந்திடுவன் பிரேரகத்தைப் புனிதன் றானுஞ்
சீலமோ திரிவில்லை கதிரோன் முன்னர்ச்
செய்திகம லாதிகள்போற் றெரிந்து கொள்ளே.

**பொழிப்புரை:** இந்தக் காலத்தைப் போன்று உருவம் அற்று உடல்முதலானவற்றை உண்டாக்கி, உதரத்தீ போன்று உருவம் அற்று புண்ணிய - பாவ மயமான கன்மத்திரட்சியை முறையே இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாகச் செய்து, உரிய ஆன்மாவைப் பொருந்தச்

செய்து, ஆன்மா உருவமற்று இருந்தாலும் தனது தேகத்தில் பொருத்தமான செயலாகிய கால்அசைவு, கை அசைவு முதலானவற்றைச் செய்வது போன்று இயங்காப்பொருள் - இயங்கும் பொருளாய், சித்து எனவும் அசித்து எனவுமாக உள்ள பிரபஞ்சத்தோடு பின்னமற இணைந்து நின்று தனது சமவாய சக்தியால் இயங்கச்செய்து, நின்மலனாகிய சிவன் ஐந்தொழிலைச் செய்வார். இவ்வாறு செய்வதால் அவன் விகாரியாக ஆவதில்லை. ஏனெனில் அவனது செயற்பாடு சன்னிதி மாத்திரச் செயற்பாடு. சூரியனின் சன்னிதி மாத்திரத்தில் தாமரை மலர்தல், ஆம்பல் குவிதல், சேறு இறுகுதல், வெண்ணெய் இளகுதல், சூரியகாந்தக்கல் அக்னியை உமிழ்தல் ஆகிய செயல்கள் நடைபெறுவது போல் சிவனின் சன்னிதி மாத்திரத்தில் ஐந்தொழில்களும் நடைபெறும்.

**அ.கை:** மேல் ஆதிசிருட்டியில் நின்மலனாகிய சிவன் அன்னியமாகி விந்து, மோகினி, மான் என்னும் உபாதானத்திரயங்களில் தனது சமவாய சத்தியால் தனுவாதியை உண்டாக்குவரென்பது கூறுகின்றது.

35. அன்னியமா யனைத்துயிர்க்கு மமலதையாற் சிவனன்றா
னனைத்தினையும் வியாபிக்கு மதனாற்றா றதுவாய்ப்
பின்னமற நின்றுயிரின் றன்மைதனக் கின்றாய்ப்
பெறுவிப்பன் வினைக்கீடாய்ப் பிறிவிலதாஞ் சத்தி
தன்னையோர் கரணமாய் மாயைதனி லுயிர்க்குத்
தனுவாதி நான்கினையுந் தானென்போ லென்னில்
மன்னியிடக் காற்றதுதான் விசையுடனே கடற்பால்
வந்துதிக்குந் திரையாதி யாறுபோல் மதியே.

**பொழிப்புரை:** ஆதிசிருஷ்டியாகிய முதல்படைப்பில், மலமறைப்புடைய அனைத்து உயிர்களுக்காகவும், நின்மலனாக இருப்பதால் அன்னியமாகவும் எள்ளுக்குள் எண்ணெய் போன்று வியாபித்து வேறு அற்றவனாகவும் விளங்கும் சிவன், வேறற நின்று, ஆன்மாவின் தன்மை இல்லாதவனாய், அவரவர்களின் கன்ம பக்குவத்துக்கு ஈடாக, விந்து, மோகினி, மான் எனும் முதற்காரணங்கள் மூன்றிலும்,ஒப்பற்ற தனது காரணமாகிய கிரியாசக்தி கலக்கிக் கூடிநின்ற அளவில் ஆன்மாக்களுக்கு உடல் முதலானவை உண்டாகும்படி சன்னிதி மாத்திரத்தால் செய்வர். இவ்வாறு செய்வது எதுபோலும் எனில், காற்று கடலில் வேகமாக மோதி நீரில் கூடிநின்ற அளவில் நுரை, திரை முதலானவை உண்டாவது போலும். ஆகையால் தேகம் முதலான சார்புகள் அற்றுள்ள சக்தனாகிய சிவனே ஆதிகர்த்தா என ஆய்ந்துணர்ந்து கொள்.

அ.கை: மேல் மாயாகன்மங்களுக்கு அன்னியோன்னியாசிரய தோஷம் என்னும் சங்காபரிகாரம் கூறுகின்றது.

36. இருவினைகட் கீடாகத் தனுவாதி யிறைவ
னீசைத்திடுவன் மாயையிலென் றீர்வினைக ளெல்லாம்
வருவதுவு மனமாதி மாயாகா ரியத்தான்
மற்றிவற்றுள் முன்னாக மருவியதே தென்னில்
ஒருவாத ஞானத்தே யிச்சைதொழி லொக்க
வுள்ளதா லனாதியா லுடன்டமாயை வினைகள்
கருவாகி யதனாலே சகச மாகிக்
காரியமும் பயன்களுமாங் கருதிக் காணே.

பொழிப்புரை: "மாயையில் புண்ணிய - பாப மயமான கன்மத்துக்கு ஈடாக உடல் முதலானவற்றை இறைவன் உண்டாக்குவன்" எனக் கூறினீர். இது எப்படிப்பொருந்தும்? கன்மங்கள் தோன்றுவதெல்லாம் மாயாகாரியமாகிய மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் அன்றோ? உடல், பொறிகள் ஆகியவை உண்டாக வினை காரணம். வினைப்பயன் உண்டாக உடல், பொறிகள் ஆகியவை காரணம் என ஒன்றையொன்று பற்றுதல் எனும் குற்றம் இங்கே பொருந்துகிறது அன்றோ? இவற்றுள், முதலில் தோன்றியது எது? இவ்வாறு கேட்டால், ஆன்ம சொருபத்தை நீங்காத ஞானத்தில், இச்சை, செயல் ஆகியவற்றில் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் அனாதிகாலம் தொட்டே கூடியுள்ளதால், மாயையுடன், புண்ணிய பாப மயமான காரணம் கருக்கொண்டு உடன்தோன்றியதாகவே விளங்கும். மூலகன்மத்தின் காரியமான புண்ணிய பாப ரூபமான காரிய கன்மத்தையும், பயன்களான மாயாகாரியமான மனம் முதலானவற்றையும் தொடர்புறச் சிந்தித்து அறி.

அ.கை: மேல் பசு விலக்கணம் கூறுகின்றது.

37. பசுக்களுக்குப் பொதுவென்றுந் தன்னியல்ப தென்றும்
பகருமீ ரிலக்கணமுண் டதிற்பொதுவைப் பகரில்
நசித்திடா ஞானத்தை யாணவத்தாற் றடுக்க
நலந்தீங்கை யுணராதே நானாகா ரதையாம்
புசிப்பின்றி நித்தமா யெண்ணிலதாய் விபுவாய்ப்
பொருந்தியது தானாகிப் புந்திமுத லின்றாய்
வசிப்பதுமாய் மாயையிலே கலைமுதல்க ளாகி
வந்ததுதா னாணவத்தின் மறைப்பொதுக்கச் சிறிதே.

**பொழிப்புரை:** ஆன்மாக்களுக்குரிய இலக்கணம் சாதாரணம் (பொது) எனவும் அசாதாரணம் எனவும் (தன்னியல்பு, சொரூபம்) எனவும் இரண்டுவகையாக உண்டு. இவற்றுள் பொது இலக்கணம் என்பது - அழிவற்றதாகிய விருத்தி ஞானத்தைச் சிவசக்தி ஆணவத்தால் தடுக்க, அனாதியாகவே அறியாமையால் சூழப்பட்டுள்ளதால் நன்மை தீமைகளை உணராமல், பற்பல வகைப்பட்ட போகநுகர்ச்சிகள் இல்லாமல், விளங்குவது, அழிவற்றது, எண்ணற்றது (ஆன்மாக்கள் அனேகம்), வியாபகத் தன்மை உடையது, எந்தப்பொருளுடன் கூடினாலும் அந்தப் பொருள் மயமாக விளங்குவது, புத்தி முதலான தத்துவங்களின் தொடர்பற்றது, அசுத்தமாயையில் இருப்பு உடையது, அசுத்தமாயையின் முதல்நிலை வெளிப்பாடுகளான கலை முதலான தத்துவங்கள் இணைந்து ஆணவமறைப்பைச் சிறிதே விலக்கும் போது ____

**அ.கை:** மேலும் அதற்கோர் புறனடை.

**38.** ஞானமுட னிச்சைதொழி னண்ணியிட வதனா
   னானாபோ கங்களையு நாடியே நானெனென்
மானமதா லிருவினையும் வளர்ந்நிடவே யதனால்
   வானமொடு பூமிகீழ் மருவிப் போந்தே
ஈனமுறத் திரிகாலத் திருவினையு மொக்க
   விறைசத்தி பதிந்தபோ திறைகுருவாய் வந்தே
தானவனாம் படிசெய்யத் தத்துவங்கள் வினைக
   டமோமயமு நீங்கியிடத் தற்சிவமாந் தானே.

**பொழிப்புரை:** ஞானத்துடன் இச்சையும் செயலும் பொருந்தப்பெற, அவ்வாறு பொருந்தியதால் பல விதமான போகப் பேறுகளையும் கருதி, யான், எனது எனும் அபிமானத்தால் நன்மை தீமை வடிவான புண்ணியமும் பாவமும் வளர்ச்சிபெற, அந்தப் புண்ணிய பாவங்களால் துறக்கம், பூமி, நரகம் என்பவைகளில் பொருந்தித் தோன்றி மேலும் மேலும் குற்றம் செறிய மேலும் கீழுமாகப் பிறவியெடுத்து அலைச்சல்கொள்ளும் அக்காலத்தே:
புண்ணிய பாவப்பயன்கள் சமப்பட்டு நிற்க சீவனின், திருவருட்சக்தி பதிந்தபோது இறைவனே குருவடிவாக எதிர்படவந்து பாசத்தை நீக்கித் தான் ஆகவே விளங்குமாறு செய்ய, சுத்தம் அசுத்தம், கலப்பு என உள்ள மூவகைத் தத்துவங்கள்மயமான மாயையும் புண்ணிய பாவ மயமான கன்மமும், அஞ்ஞான வடிவாகிய ஆணவமும் ஆகிய மும்மலங்களும் நீங்கி

நிற்க, 'தத்' எனும் சொல்லுக்குப் பொருளான சச்சிதானந்த சிவமயமாக விளங்கி நிற்பது ஆன்மா.

அ.கை: மேல் இந்த ஆன்மாக்களுக்கு அவத்தை மூன்றாமென்பது கூறுகின்றது.

39. அவத்தைகே வலசகல சுத்தமென மூன்றா
யடையுமா ணவமாயை யருட்சத்தி யதனால்
இவற்றுட்கே வலமுயிர்க்குச் சகச மாகு
மிறைவன்றான் மாயையினிற் கலாதிகளை யிசைக்கப்
பவத்துவக்காஞ் சகலமா மிருவினையு மொத்த
பருவத்தே பராசத்தி பதிந்தருளி னாலே
சிவத்துடனா மதுசுத்தஞ் செப்பியவிம் மூன்றுந்
தேருங்கா லைவைந்தாய் மூவைந்தாய்த் திகழும்.

பொழிப்புரை: ஆன்மாவின் நிலைகள் கேவலம், சகலம், சுத்தம் என மூன்றாகும். இவற்றுள் கேவல அவத்தை ஆணவத்தாலும், சகல அவத்தை மாயையாலும், சுத்த அவத்தை அருட்சக்தியாலும் ஆன்மாவுக்குப் பொருந்தும். இம்மூன்று அவத்தைகளுள் கேவல அவத்தை ஆன்மாக்களுக்கு உடன் தோன்றியதாய் (சகசமாய்) அனாதியாகவே பொருந்தியுள்ளதாகும். சிவன் தனது சக்தியால் மாயையில் உண்டாக்கிய கலை முதலான தத்துவங்களை ஆன்மாக்களுக்குக் கூட்டிய காலத்தில் பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாக சகல அவத்தை பொருந்தும். புண்ணிய - பாபங்கள் சமப்பட்டு நிற்க, அந்த நிலையில் சிவனின் திருவருட் சக்தி பதிந்த காலத்தில் அருளால் சிவத்துடன் இணைந்து இரண்டறநின்று சிவமாய் விளங்கும் நிலை சுத்த அவத்தை. இவ்வாறு சொல்லப்பட்ட மூன்று அவத்தைகளையும் நன்கு ஆராய்ந்து அறியும் பொழுது ஒவ்வொன்றும் ஐவகைப்பட்டு நிற்க, அவத்தைகள் பதினைந்து என பேதப்பட்டு விளங்கும்.

அ.கை: பசுக்களுக்கு சாதாரணவிலக்கணம் கூறி மேல் அசாதாரணஇலக்கணத்தில் சகலரிலக்கணம் கூறுகின்றது.

40. இனிச்சகல ரிலக்கணந்தா னாண வத்தோ
டிருவினைகள் மாயேய மிசைந்து போகம்
உனிப்பலவும் பிராகிருத தேகந் தன்னை
யுற்றவத்தை யைந்தினையும் உடைத்தாய் நாளும்
சனித்திறந்து தேவருடன் மனிதர் நாகர்

தானவாதி சராசரங்கள் யோனி பேத
மனைத்தினிலும் வினைக்கீடாய்ச் சுழன்று முத்தி
யடைவரிரு வினையொப்பி னருட்குருவி னாலே.

பொழிப்புரை: சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்பட்டு நிகழும் ஆன்மாக்களுள் சகலர் இலக்கணமாவது :- ஆணவத்தால் தடைப்பட்ட ஞானம், இச்சை, செயல் இவற்றை உடையவர்களாய், ஞானமும் செயலும் ஓரளவு விளக்கம் பெறும் பொருட்டாக மாயாகாரியமான கலை முதலான தத்துவப் பிணைப்பு உடையவர்களாய், இன்ப துன்ப நுகர்ச்சிக்காக வினைப்பயன் ஏற்றுள்ளவர்களாய், பற்பலவகையான போகப் பேறுகளை விரும்பி பிரகிருதிமயமான நுண்ணுடலுடனும் பரு உடலுடனும் கூடி விழிப்பு முதலான ஐந்து அவத்தைகளை உடையவர்களாய், எப்பொழுதும் பிறப்பையும் இறப்பையும் அடைபவர்களாய், வினைப்பயனுக்கு ஈடாகத் தேவர், மானிடர், நாகர், அசுரர் முதலானோர், விலங்கு, பறவை முதலான இயங்கியல் வகைகள், மரம் முதலான அசையா வகைகள் என உள்ள எண்பத்து நான்கு நூறாயிரம் பிறவிவகைகளிலும் சுழன்று, இறுதியில் இருவினை ஒப்பு ஏற்பட்ட காலத்தில் ஞானகுருவின் கருணையாலே வீடுபேற்றை அடைபவர்கள். இத்தகையோர் சகலர்.

அ.கை: மேல் பிரளயாகலர் இலக்கணம் கூறுகின்றது.

41. மண்ணாதி மானாந்தத் துள்ளவிரு வினைகள்
மாயும்வகை புசித்தாதல் மாதவத்தா லாதல்
புண்ணியமாந் தீர்த்தங்க ளாடியதா னூலிற்
புகன்றபடி பரிகாரம் புரிதலினாற் குருவால்
நண்ணுமிரு கலைசோதித் திடுதலினா லாத
னாசமுற முதற்கலைக ளிரண்டின்வினை நன்றாப்
பெண்ணொருபா கன்னருளாற் கலாதிகடம் வசமாய்ப்
பெற்றிருப்போர் பிரளயா கலரென்னப் பெறுமே.

பொழிப்புரை: பிருதிவி முதல் பிரகிருதி வரையில் ஆன அசுத்த அத்துவாவிலுள்ள இருவினைப் பயன்களை, அவை நீங்கும் வகையில் அனுபவித்தலினாலாவது, அரிய தவச் செயலாலாவது, புண்ணிய தீர்த்தங்களில் ஆடியதனாலாவது, நூல்களில் கூறப்பட்டுள்ள வண்ணம் பிராயச்சித்த செயல்களைச் செய்ததனாலாவது, ஆன்மாவைப் பிணித்துள்ள ஐங்கலைகளுள் முதற்கலைகளான நிவிர்த்தி, பிரதிட்டை எனும் இரண்டு கலைகளும் ஞான குருவால் தூய்மை செய்யப்பட்டதனாலாவது,

முதற்கலைகளாகிய நிவிர்த்தி, பிரதிட்டை எனும் இரண்டிலும் உள்ள கன்மங்கள் அடியோடு நீங்க, உமையொடு பாகனான சிவனின் அருளால் கலை முதலான தத்துவங்களைத் தம்வயப்படுத்தித் தம் ஆற்றலுக்குள் வைத்திருக்கப் பெற்றவர்கள் பிரளயாகலர் எனக் கூறப்படுவார்கள்.

அ.கை: மேல் விஞ்ஞான கேவலர் இலக்கணம் கூறுகின்றது.

42. சன்னியாசத் தால்யோக சாதனையாற் றவத்தால்
சற்குருவால் முக்கலையிற் சாரும்வினை யனைத்தும்
மன்னாது சோதனைசெய் திடுதலினா லாதல்
மாயவிரு வினையனைத்து மாயையு நீங் கிடவே
இன்னாத வாணவத்தாற் றடைப்பட்ட ஞான
வியல்பினரா யறிவின்றி யிருந்துமல பாகத்
தந்நாளி லரனருளால் முத்தியினை யடைவா
ரறியிலிது விஞ்ஞான கலரதிலக் கணமாம்.

பொழிப்புரை: துறவு நெறியினாலாவது, யோக சாதனங்களாலாவது, தவச்செயலாலாவது, ஞானகுருவால் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை எனும் மூன்று கலைகளில் பொருந்தும் கன்மங்கள் எல்லாம், மேன்மேலும் போகப்பேற்றுக்குக் காரணமாகாமல் தூய்மைசெய்யப்படுவதாலாவது, ஆகிய இவற்றுள் ஒன்றால் இருவினைப்பயன்கள் முழுவதுமாக நசிக்க, மாயைப்பிணிப்பும் அறவே நீங்கி நிற்க, மாயையும் கன்மமும் நீங்கினாலும் நீங்காததாகிய கொடிய ஆணவமலத்தால் தடைசெய்யப்பட்ட ஞான இயல்பை உடையவர்களாய், ஞானமற்று இருந்து, மலபரிபாகம் வந்த காலத்தில் சிவனால் அனுக்கிரகிக்கப்பட்டு தூய அத்துவாவை அடைந்து, அபர முக்தர்களாக இருந்து இறுதியில் வீடுபேற்றை அடைபவர்கள். விஞ்ஞானகலரின் இலக்கணம் இங்ஙனமாகும்.

அ.கை: மேல் சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கும் அன்னியமாக எண்ணிறந்த ஆன்மாக்கள் உண்டென்பது கூறுகின்றது.

43. ஈசனையு முலகினையு மன்றி வேறே
யெண்ணிலுயி ருண்டென்ப தெவ்வா றென்னில்
மாசதனாற் சிற்றறிவாய் வினைகள் செய்து
வரம்பிகந்த தேகங்கள் மன்னி வேறாய்
ஏசியே நீநானென் றியம்ப லாலு
மெய்துசுக துக்கத்தின் பேதத் தாலும்

தேசறிவுஞ் சிற்றறிவு மாத லாலுஞ்
சிற்றுயிர்க னேகமாந் தேரி லின்னும்.

**பொழிப்புரை:** சித்துப்பொருளாம் சிவத்தையும் அசித்துப் பொருளாம் பிரபஞ்சத்தையும் அல்லாமல், வேறாக எண்ணிறந்த ஆன்மாக்கள் உள்ளன என்பது எப்படி என்று வினவில், ஆணவம் முதலான தளைகளுடன் கூடியிருப்பதால் சிற்றறிவு உடையனவாகி நல்வினை தீவினைகளைச் செய்து எண்ணற்ற உடல்களில் பொருந்தி, வெவ்வேறாக நின்று பழித்துக் கூறி 'நீ' என்றும் 'நான்' என்றும் பேசுவதாலும், ஒருவனுக்கு இன்பமாகவும் வேறு ஒருவனுக்குத் துன்பமாகவும் பொருந்தும் இன்ப துன்ப விளைவுகள் வெவ்வேறுபட வருவதாலும் ஒருவனுக்கு அதிக அறிவும் மற்று ஒருவனுக்குச் சிற்றறிவும் என பேதப்பட்டு நிகழ்வதாலும், பிரபஞ்சத்துக்கும் சிவத்துக்கும் வேறாக எண்ணிறந்த ஆன்மாக்கள் உண்டு. மேலும் ஆய்ந்தால் நோக்கத் தக்கது ஒன்று உண்டு.

**அ.கை:** மேலும் அதற்கு ஒரு புறனடை.

**44.** மண்ணாதி யாக்கியதிங் காருக் காக
மற்றதற்கே யெனிற்சடமா மன்றியுமா நிலமேல்
உண்ணாது தன்னைத்தா னொருபொருளு மிறைக்கே
யுறுமென்னிற் பூரணனா லுண்டிடவேண் டுவதில்
நண்ணாதிங் கெவர்க்குமரன் விளையாட்டே யென்னின்
ஞானவுரு வோன்பயனை நாடாது புரியான்
எண்ணாது நீயுரைத்தாய் பரிசேடத் தாலே
யெண்ணிலுயி ரிருவினையா லிறைபுரிவா னென்னே.

**பொழிப்புரை:** சிவன், பிருதிவி முதலான பிரபஞ்சத்தை உண்டாக்கியது யாருக்காக? பிரபஞ்சத்துக்காகவே எனில், அந்தப் பிரபஞ்சம் சடப்பொருள் ஆகையாலும், பிரபஞ்சத்தில் ஒருபொருளும் தன்னைத் தானே புசித்துக் கொள்ளாது ஆகையாலும் பிரபஞ்சத்துக்காக அன்று. தனது புசிப்பிற்காகச் சிவன் பிரபஞ்சத்தைப் படைத்துக்கொண்டான் எனில், பரிபூரணனாய் நித்திய நிறைவு (திருப்தி) உடையவனாய் விளங்கும் சிவனுக்குப் 'புசிப்பு' என்பது இல்லை. எனவே சிவன் தனக்காகப் படைத்துக் கொண்டது என்பதும் பொருந்தாது. சிவன் விளையாட்டு (லீலை) நிமித்தமாக எவர்க்கும் உதவாது உள்ள உலகைப் படைத்தான் எனில், முற்றறிவே வடிவான அவன், ஆய்ந்து நோக்காமல் செயலைச் செய்யமாட்டான். ஆகையால் நீ

இவ்வாறு ஆராய்ந்து பார்க்காமல் கூறிவிட்டாய். எனவே பாரிசேட அனுமானப் பிரமாணத்தால் சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கும் அன்னியமாக எண்ணிறந்த ஆன்மாக்கள் உள்ளன என்பது உறுதியாகிறது. ஆன்மாக்களின் கன்மத்துக்கு ஈடாக சிவன் பிரபஞ்சத்தை ஆன்மாக்களின் நிமித்தம் உண்டாக்குவான் என நுனித்து அறிக.

45. ஆதலினா லகினுக்குஞ் சிவனுக்கும் வேறா
யனேகமுயி ருளதென்றே யனுமானத் தாலும்
ஓதியிடு மாகமத்தி னாலுமுயிர் சித்த
முலகினையுஞ் சிவன்றனையு முணர்வதுமவ் வுயிரே
பேதமற நின்றசிவன் றன்னையறி யாது
பேதமைசெய் பாசங்கள் பேதமுமே லுரைப்பாம்
போதமுற வுணர்ந்திருளைப் போக்கியருள் புணர்ந்து
பொருவிலனு பூதியினைப் பொருந்திடுதற் பொருட்டே.

பொழிப்புரை: ஆகையால் பிரபஞ்சத்துக்கும் சிவத்துக்கும் வேறாக அனுமானப் பிரமாணத்தாலும் ஆகமப் பிரமாணத்தாலும் அனேக ஆன்மாக்கள் உள்ளன என்பது உறுதியாகிறது. இவ்வாறு உள்ளனவாக அறுதியிடப்பட்ட ஆன்மாக்களே சகல அவத்தையில் பிரபஞ்சத்தை அனுபவித்து, சுத்த அவத்தையில் சிவனோடு அணைபவராவர். இவ்வாறு ஆன்ம இலக்கணம் அறிந்து கொள்க. இனி சிவஞானம் பொருந்த, பாச இயல்பு உணர்ந்து, பாசத்தை நீக்கி அருளொடு கூடி, ஒப்பற்ற சிவானந்த அனுபவம் பெறுதற் பொருட்டாக, ஆன்மாவுடன் சிவன் வேறற இருந்தாலும் சிவனைத் தெரியவொட்டாமல் ஆன்மாவை மறைத்திருக்கும் பாச வகைகளுக்குரிய இலக்கணத்தை இனிக் கூறுவோம்.

அ.கை: பாச இலக்கணம் பொதுவென்றும் சிறப்பென்றும் இருவகைத்தாகும், அவற்றுள் பொதுவிலக்கணம் மிகவும் சடமாய் ஆன்மஞான திரோதாயிகமாயிருக்கை, இந்தப்பாசம் ஆணவம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை, கன்மம் என்று ஐவகைப்படும். இவ்வகையில் மேல் ஆணவத்திற்கும் திரோதாயிக்கும் இலக்கணம் கூறுகின்றது.

46. ஏகமா யனேகமாஞ் சத்தியுள தாகி
யெண்ணிலுயிர் ஞானத்தைத் தடுப்ப தாகி
மோகமுத லேழ்குணங்க ளுடைய தாகி
முடிவிலாதா யனாதியுமாய் முத்தியுயிர்க் காகப்
பாகமாம் படியாதி சத்தியது பண்ணப்
படுவதுமாய்ப் பக்குவத்தை யடையுயிர்கள் பாலில்

ஆகமா திகள்யாவு மடையாது முத்தி
யடைவதற்குத் தானீங்கு மாணவமென் றறியே.

பொழிப்புரை: ஆன்மாக்கள் எண்ணிறந்தன எனினும் தான் ஒன்றேயாகி, எண்ணற்ற ஆன்மாக்களின் எண்ணற்ற ஞானசக்திகளையும் கிரியா சக்திகளையும் முறையே அறிவது, செய்வது ஆகியவற்றைச் செய்யாதபடி தடுக்கும் எண்ணற்ற சக்திகளை தனக்கு உடையதாகி, மோகம், மதம், ராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், ஹர்ஷம் எனும் ஏழு குணங்களை உடையதாகி, அழிவற்றதாய், அனாதியாகவே உள்ளதாய், ஆன்மாக்களுக்கு வீடுபேறு வாய்ப்பதற்காக ஆதிசக்தியால் பரிபாகம் அடையச் செய்யப்படுவதும் ஆகி, பக்குவத்தைப் பொருந்திய ஆன்மாக்களிடத்தில், உடல் முதலான உபாதிகள் சேராதபடி, அந்த ஆன்மாக்கள் வீடுபேறு அடையும் நிமித்தம்தான் நீங்கி நிற்பது ஆணவமலம் என அறிக. ஆணவத்துக்கு பிரவிருத்தியும் நிவிருத்தியும் உண்டாகும் படி அதனைச் செலுத்தி இயக்கும் ஆதிசக்தியே திரோதான சக்தி எனப் பாசவகையுள் வைத்து எண்ணப்படும்.

அ.கை: மேல் எண்ணிறந்த ஆன்மாக்கள் ஞானேச்சாக்கிரியைகளைத் தடுக்க ஆணவம் என்ற ஒன்று அங்கீகரிப்பானேனென்ன, வேண்டும் என்பது கூறுகின்றது.

47. ஏதுக்கா வாணவமுண் டென்ன வேண்டு
மெனிலுயிர்கள் ஞானத்தைத் தடுப்பதொன்றிங்
கிலையேல்
மாதுக்க முறாவுயிர்க ளெவ்வறிவு மெல்லா
வல்லமையுஞ் சுதந்திரமு மருவியிடும் பிறப்பாந்
தீதுற்று வருந்தாது ஞானவுரு வாமாற்
சிவன்போல வேறிற்குஞ் சிற்றறிவு மாகா
கோதற்ற முத்தியென்ப தேதுவிடி லென்றே
குறித்திடிலிவ் வாணவமாங் கூறுங் காலே.

பொழிப்புரை: எதற்காக இப்படியொரு ஆணவமலம் உண்டு எனக் கூறவேண்டும் எனக் கேட்டால், ஆன்மாக்களின் எண்ணிறந்த ஞானகிரியா சக்திகளைத் தடுப்பதாக ஆணவம் என ஒன்று இல்லாது போனால், ஆன்மாக்கள் ஞானமே வடிவமாக நின்று சிவனைப் போலவே விளங்கும்: பிறப்பு இறப்பு ஆகிய துக்கங்களை அடைந்து வருந்தா, மிகவும் பெரிய துக்கங்களைப் பொருந்தா, சிற்றறிவு உடையனவாகவும் ஆகா:

அனைத்தையும் அறிய வல்ல முற்றறிவுடைமை, அனைத்தையும் செய்யவல்ல ஆற்றல் உடைமை, சர்வ சுதந்திரம் முதலான சிவகுணங்களைப் பொருந்துவன ஆகும். (ஆனால் ஆன்மாக்கள் அவ்வாறு விளங்குவதில்லை. எனவே ஆன்ம சக்தியைத் தடுக்கும் ஆணவமலம் உண்டு.) அன்றியும், ஒன்றிலிருந்து விடுபட்டு நீங்குவதுதான் வீடுபேறு (மோட்சம்). எந்தப் பொருளிலிருந்து விடுபட்டு ஆன்மா உபாதியற்ற வீடுபேறு அடைகிறது என ஆய்ந்தால் அந்தப்பொருள் ஆணவமலமே ஆகும்.

**அ.கை:** மேல் ஆதிசத்தியாகிய திரோதானசத்தி ஆன்மஞானத்தைத் தடாதாகையால் ஆணவம் தடுக்குமென்பது கூறுகின்றது.

**48.** சாற்றியிடுந் திரோதான சத்தி தானே
தடுத்திடுமான் மாவறிவை யென்னச் சாலும்
போற்றுவதெ னாணவந்தான் றடுக்கு மென்றே
புகன்றிடினீ யவ்வாறு பொருந்தா தாகும்
மாற்றலிலா மெய்ஞ்ஞான வடிவாஞ் சத்தி
மறைத்தல்செயா தறிவறிவுக் காகா வாதை
ஊற்றமிகு முணர்வதனை யுணர்வுதடா தென்று
முணர்வினுக்குச் சடம்வாதை யாகுமென வுணரே.

**பொழிப்புரை:** "ஆன்மசக்தியை ஆணவம்தான் தடுக்கும் எனக் கூறுவது ஏன்? கூறப்படும் திரோதான சக்தியே ஆன்ம ஞானத்தைத் தடுத்துநிற்கும் என்பது பொருந்துமே" என நீ கூறினால், அது பொருந்தாது. மாறுபாடு அடையாத சத்திய ஞான சொரூபமாகிய சக்தி, மறைத்தல் எனும் செயலைச் செய்யாது ஞானத்துக்கு ஞானம் பகை ஆகாது. ஆகையால் மிகவும் வளர்ச்சி பெறும் ஞானத்தை ஞானம் தடுத்து நிற்காது. ஞானவிரோதியாகிய, சடப்பொருளாகிய ஆணவமலமே ஆகும் என அறிவாயாக.

**அ.கை:** புண்ணிய பாபாத்மகமான கன்மமும் ஆன்மஞானத்தைத் தடாதென்பது கூறுகின்றது.

**49.** பாவமே யிருள்வடிவாய் மறைக்குமுயி ரறிவைப்
பண்ணியிடும் புண்ணியந்தான் வெளியுருவாய் விளக்கும்
ஆவதனா லிருவினையே யுயிரறிவை மறைத்து
மறியாமை தனைநீத்து மடைந்துநிற்கு மென்னில்
மேவலுறு மிருவினையு மருவியற்ற லாலே

விளைந்திடுமவ் வினைப்பயனும் வினவிலறி வாலே
ஏவமுற வேபுசிக்கு மாதலினா லென்று
மிருவினைக டடையாகா வுயிரறிவுக் கென்னே.

**பொழிப்புரை:** நல்வினை தீவினை மயமானது கன்மம். தீவினை அஞ்ஞான வடிவாகி ஆன்ம ஞானத்தை மறைக்கும். நல்வினை ஒளிவிளக்கம் உடையதாகி ஆன்ம ஞானத்தை விளக்கும். ஆகையால் பாவ புண்ணிய மயமான கன்மமே ஆன்ம ஞானத்தை மறைத்தும் அஞ்ஞானத்தை நீக்கியும் நிற்கும். ஆணவம் என வேறு ஒன்று தேவை இல்லை எனக் கூறில், அது பொருந்தாது. ஆன்ம ஞானத்தை மறைப்பது காரணமாகப் பொருந்தும் நல்வினை தீவினைகள் ஆன்ம ஞானக் கிரியைகளால் தோன்றுபவை. மேலும், ஆய்ந்து நோக்கினால், போகப்பேறுகளுக்குக் காரணமாக உள்ள நல்வினை தீவினைப் பயன்களை ஞானத்தால், துன்பம் பொருந்த அனுபவிக்கும். ஆகையால் எந்தக் காலத்திலும் இருவினைகள் ஆன்ம ஞானம் விளக்கம் பெறத் துணைநிற்குமே அல்லாமல் ஆன்ம ஞானத்தை மறைத்து நிற்கா.

**அ.கை:** மேல் ஆன்மாக்கள்குணம் அறியாமை அல்ல ஞான ஸ்வரூபி, ஆன்ம ஞானத்தை ஆணவமே மறைக்குமென்பது கூறுகின்றது.

50. அறியாமை யான்மாக்கள் குணமே யென்னி
லறிவுதொழி லாற்போக மருந்து மாற்றால்
செறியாது நீசொன்ன குணமென்கை யுயிர்பாற்
சித்தினுக்குக் குணமென்றுஞ் சித்தே யாகும்
குறியாக்கொள் ஆன்மாவைச் சடம தாகக்
கூறியவவ் வாணவத்தின் குணமறியா மையதாம்
நெறியாலே யாணவந்தா னான்மாக்க ளறிவை
நிகழாத வகைதடுக்கு மென்றுநீ தெளியே.

**பொழிப்புரை:** அறியாமை என்பது ஆன்மாக்களின் குணம் ஆகையால் அறியாதபடி ஆன்மாவை மறைப்பதாக ஒரு பொருள் உண்டு எனக் கூறத் தேவை இல்லை எனில், அதுபொருந்தாது. ஆன்மா ஒன்றனை விரும்பி, அறிந்து, செய்து போகங்களை நுகரும் தன்மையுடையது. ஆகையால், அறியாமை ஆன்மாக்களுக்குக் குணம் என நீ கூறியது, ஆன்மாவுக்குப் பொருந்தாது. அறியாமை அதன் குணம் அன்று என்பதால், ஞானமே வடிவாக உள்ள ஆன்மாவுக்கு ஞானமே குணமாக இருக்குமே தவிர, சடமாக உள்ள அஞ்ஞானம் குணமாக இருக்காது. ஆன்மாவைச்

சடப்பொருளாகக் கருதாதே. ஆன்மா ஞான சொருபி. மேற் கூறப்பட்ட ஆணவமலத்தின் குணமே அஞ்ஞானம். திரோதான சக்தியின் செயற்பாட்டால் இந்த ஆணவமலமே ஆன்மாக்களின் ஞானம் விளக்கம் பெறாதவகையில் அதனைத் தடுத்து நிற்கும் என நீ அறிக.

**அ.கை:** மேல் ஒளியாய் விளங்கும் கலாதிகளுக்குக் காரணமாகிய மாயை ஆன்ம ஞானத்தை விளக்குவதொழிந்து மறையாதென்பது கூறுகின்றது.

**51.** இருள்வடிவாய் மூலகா ரணமான மாயை
யெண்ணிலான் மாக்களறி விச்சையினை மறைக்கும்
மருவியிடு மாயையினிற் காரியங்க ளொளியாய்
மன்னுமுணர் விச்சைதொழில் வளர்க்கு மென்னில்
ஒருபொருடா னொளியுமிரு ளுருவு மாகா
வுணர்ந்திடுநீ தீபகா ரணமான வன்னி
கருமையல வொளியாகு மதுபோல மாயை
காண்மறைத்த லாணவமாய்க் கருதி டாயே.

**பொழிப்புரை:** பிரபஞ்ச உபதான காரணமான மாயை, அஞ்ஞான வடிவாகி எண்ணிறந்த ஆன்மாக்களின் ஞானத்தையும் இச்சையையும் மறைக்கும். மாயையில் பொருந்திநிற்கும் அதன் காரியமாகிய கலை முதலானவைகள், ஒளியாக நின்று பொருந்தும் ஆன்மாவின் ஞானம், இச்சை, கிரியை ஆகியவற்றை வளர்ச்சி பெறச்செய்யும். ஆணவமலம் என ஒன்று வேண்டாம் என்று கூறினால் அதுவும் பொருந்தாது. ஒருபொருளே, ஒளி வடிவாகவும் இருள் வடிவாகவும் விளங்காது. ஒளிமயமாக இருக்கும் விளக்கிற்குக் காரணமாகிய தீ, இருளாக இருக்காது, ஒளியாகவே இருக்கும் என நீ அறிக. அந்தத் தீயைப் போன்றே ஒளியாக விளக்கும் கலை முதலானவற்றிற்குக் காரணமாகிய மாயையும் ஞானத்தையும் செயலையும் விளக்கிநிற்குமே தவிர மறைக்காது என அறி. எனவே ஆன்மாவின் அறிவுசெயலை மறைப்பது ஆணவமே எனத் தெளிவாக உணர்ந்திடு.

**அ.கை:** மேல் ஞானசொருபியாகிய ஆன்மாவுக்கு அஞ்ஞானம் ஞானத்தினுடைய இல்லாமை என்பது குற்றம் என்பது கூறுகின்றது.

**52.** அஞ்ஞான மென்பதோர் பொருளே யில்லை
அறைகின்ற ஞானத்தி னபாவ மென்னில்
எஞ்ஞான்று மபாவமோ முன்னோ பின்னோ
வியம்பியிடு மத்தியந்தா பாவமெனிற் சடமாம்

மெய்ஞ்ஞானா பாவந்தான் முன்னென்னிற் பின்னர்
மேவுவதா மெய்ஞ்ஞானா பாவம்பின் னென்னி
லுஞ்ஞானம் பின்னொருகா லுண்டாகா ஞான
வுருவுயிருக் கிவ்வாறிங் கோதல்பழு துணரே.

**பொழிப்புரை:** அஞ்ஞானம் என உள்பொருளாக (வத்துவாக) ஒன்றும் இல்லை. கூறப்பட்ட ஞானத்தின் இல்லாமையே அஞ்ஞானம் என்பதாகும் எனில், அந்த ஞானத்தின் இல்லாமை என்பது, எப்பொழுதுமே இல்லாதிருத்தலா, முன்னர் இல்லாததோ (பிராகபாவமோ?), பின்னர் இல்லாததோ - இவ்வாறு உள்ள மூவகைப்பட்ட அபாவம் (இல்லாமை) என்பதில் முதலில் கூறப்பட்ட எப்பொழுதும் இல்லாமை எனில், அதுபொருந்தாது. எப்பொழுதுமே ஆன்மாவுக்கு ஞானம் இல்லையாயின், அது சடப்பொருளாகும். (மேலும் இத்தகைய அபாவம் ஒருதொழிலையும் செய்யாது) ஞானத்தின் முன்னின்மை (பிராகபாவம்) எனில், அஞ்ஞானமே ஞானத்தை உண்டாக்குவதாக ஆகிவிடும் (குடத்தின் இல்லாமை, மண்குடத்தை உண்டாக்குவது போன்று). ஞானத்தின் பின்னின்மை அஞ்ஞானம் எனில் குடம் உடைந்தால் அந்தக் குடம் மீண்டும் உண்டாகாதது போன்று, ஆன்மாவுக்கு ஞானமே உண்டாகாமல் அற்றுப் போகும். எனவே ஞானமே வடிவான ஆன்மாவுக்கு அஞ்ஞானம் ஞானத்தின் இன்மை என இங்கே கூறுதல் குற்றமாகும் என அறிக.

**அ.கை:** ஆன்மாவுக்கு சிற்றறிவு இயல்பல்ல, சருவஞ்ஞதையே இயல்பு, இதனைத் தடுப்பதாக ஆணவமலம் என்ற ஒரு பொருள் உண்டு என்பது கூறுகின்றது.

53. சிற்றறிவே யான்மாக்க ளியல்ப தென்னிற்
றேசத்தி லெவ்வுயிர்க்குஞ் செறியுமறி வொன்றாம்
பெற்றறிவைப் பெரிதாக முத்திபெற மறைதான்
பேசியிடு மாதலினாற் பேரறிவே யியல்பாம்
மற்றறிவை யாணவந்தான் றடுக்கவத னாலே
மறைப்புண்டு மாயையினாற் சிற்றறிவா யருளால்
உற்றறிவு சிவன்போல முத்த னாகு
முயிரதுவா லாணவமென் றோர்பொருளுண் டுணரே.

**பொழிப்புரை:** ஆன்மாக்களின் இயல்பு சிற்றறிவு உடையனவாக இருப்பதே, அனைத்தையும் அறிவதாகிய முற்றறிவு அன்று, அனைத்தையும் அறிய இயலாதபடி மறைக்கும் ஆணவமலம் என ஒன்று இல்லை எனில்,

அதுபொருந்தாது. ஆன்மாவுக்கு அற்ப அறிவு இயல்பாயின் இவ்வுலகில் எல்லா ஆன்மாக்களுக்கும் ஏற்றக் குறைவு இன்றி ஒரே விதமாக அறியும்தன்மை உண்டாகி இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒருவன் அற்ப அறிவும் வேறொருவன் மிகுதியான அறிவும் பெற்றவனாகக் காணப்படுகிறான். ஆகமம், மேலான வீடுபேற்றைப் பெறும் நிலையானது எல்லாவற்றையும் அறியும் ஞானப்பேறு எனக் கூறும். எனவே ஆன்மாவின் இயல்பு பேரறிவே. அனைத்தையும் அறியக்கூடிய பேரறிவை ஆணவமலம் தடுக்க, அதனால் மறைக்கப்பட்டு, அறிவற்று இருந்து, மாயையின் காரியமாகிய கலை முதலானவற்றால் சிறிதாக அறிகின்றவனாகி, அருளைப்பெற்று வீடுபேற்று நிலையில் சிவனைப் போன்றே பாசம் இல்லாதவனாகி அனைத்தையும் அறிகின்றவனாகிறது ஆன்மா. எனவே மறைப்பதாகிய அது ஆணவமலமே என, ஒருபொருள் உண்டு எனச் சிந்தித்து உணர்க.

**அ.கை:** மேல் ஆணவம் ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளைத் தடுக்கும் என்பது கூறுகின்றது.

54. அறைந்தவிந்த ஆணவந்தா னான்மாவை முழுது
மாவரிக்கு மோஞான வுருவொளியா யென்றும்
உறைந்ததனை யொழிக்குமோ வென்னிலொளி யுருவா
லொளியழியி லுயிருமழிந் திடுவதா மெங்கும்
நிறைந்துளவான் மாவதனை யாவரித்தல் கூடா
நிகழ்த்தியிடிற் சொரூபத்தின் விருத்தியாய் நிகழ்ந்தே
சிறந்துளதா ஞானேச்சாக் கிரியையினைத் தடுக்குந்
தீவெம்மை தடுத்திடுமந் திரசத்தி செயலில்.

**பொழிப்புரை:** இவ்வாறு கூறப்பட்ட ஆணவம் ஆன்மாவை முழுவதுமாகச் சூழ்ந்து மறைத்து நிற்குமா? ஆன்மாவின் ஞானசொருபமாகி எங்கும் ஒளியாய் ஒளிர்ந்து விளங்குவதைத் தடுத்து நிற்குமோ எனில், ஞானசொருபமாகிய ஆன்மாவுக்கு ஞானத்தின் ஒளிநிலை அழிந்துபட்டால் ஆன்மாவும் அழிந்துபடும். எனவே இரண்டாவதாகக் கூறப்பட்டது பொருந்தாது. எங்கும் நிறைந்துள்ள ஆன்மாவைச் சூழ்ந்து மறைத்து நிற்பது என முதலில் கூறப்பட்டதும் பொருந்தாது. பின் ஆணவம் எவ்வாறு செயற்படும் எனக்கூறினால், சொருபமான ஞானத்தின் விருத்திகளாக வெளிப்பட்டு நிகழும் ஞானம், இச்சை, கிரியை ஆகியவற்றை நெருப்பினது சுடும் சக்தியைத் தடுக்கும் மந்திரத்தின் சக்திக்குரிய செயல்போன்று, ஆணவமானது அறியவும், விழைவுறவும் செய்யவும் ஒட்டாமல் தடுத்துநிற்கும்.

**அ.கை: மேல் சுத்தமாயா லக்ஷணம் கூறுகின்றது.**

**55.** அறிவிலதாய்ச் சுத்தமா யனாதியாய் நாத
மாதியாந் தத்துவங்க ளக்கரங்கள் பதங்கள்
பிறிவிலாச் சூக்குமையை முதல்வாக்கு யாவும்
பிறப்பிடமாய் விஞ்ஞான கலர்க்குருவ மாதி
நெறியுளதாய்ப் பரமான முத்தியினிற் றானு
நீங்குவதாய் நித்தமாய் வியாபியா யெங்கும்
செறிசிவற்குப் பரிக்கிரக சத்தி யாகிச்
சேர்ந்துளது விந்துவெனத் தெரிக்கு நூலே.

**பொழிப்புரை:** அறிவற்றது: அனைத்து ஆன்மாக்களுக்கும் ஞானத்தை விளக்குவதால் தூய்மையானது: அனாதியாகவே உள்ளது: நாதம் முதலாகிய சுத்த தத்துவங்கள் ஐந்தனுக்கும், ஒலிவடிவாகிய நாதம், பிந்து, அகரம் முதலான எழுத்துக்கள் ஐம்பத்தொன்றுக்கும், வியோமவியாபி முதலான பதங்கள் எண்பத்தொன்றுக்கும், ஈசானம் முதலான மந்திரங்கள் பதினொன்றுக்கும், பந்தமாகிய சூக்குமை (பரை) முதலான வாக்குகள் நான்கனுக்கும், நிவிர்த்தி முதலான பஞ்சகலைகளுக்கும் பிறப்பிடமாக விளங்குவது: சுத்த அத்துவாவில் உள்ள விஞ்ஞானகலர்க்குத் தனு (உடல்) முதலானவற்றுக்கு வழிமுறையாக விளங்குவது: அபர முத்தர்க்கு விஞ்ஞான - ஆனந்த கோசரூபமான பந்தமாக விளங்குவது: நித்தியமாக இருப்பது: தனது காரியங்களையும் அசுத்த மாயையின் காரியங்களையும் வியாபிப்பது: எங்கும் வியாபித்து விளங்கும் சக்தராகிய சிவனுக்கு பரிக்கிரக சக்தியாக விளங்குவது: சிவதரிசன நிகழ்வில் ஆன்மாவிலிருந்து ஆணவமலத்துடன் ஒக்க முழுவதுமாக நீங்குவது. இவ்வாறு விளங்குவதாகிய யாதொன்று நீங்கினால் மேலான வீடுபேறு, யாதொன்று ஆன்மாவுக்கு மேலான தளை, அது விந்து எனப்படும் மகாமாயை எனச் சிவாகமங்கள் கூறும்.

**அ.கை: மேல் சிவனுடைய கிரியாசத்தியும் அசுத்தமாயையுமே நாதம்முதலான சர்வப்பிரபஞ்சத்துக்கும் காரணமென்ன ,அதை மறுத்துச் சுத்தமாயை உண்டென்று அங்கீகரிக்க வேண்டுமென்பது கூறுகின்றது.**

**56.** விந்துவென் சிவசத்தி தானே யெல்லா
விசுவமுமா மெனிற்சித்திங் கசித்தாகி விளையா

பந்தமுமா காதுயிர்க்கு ஞானவுரு வாமாற்
பரிக்கிரக மேசிவற்குப் பானைகட்கு மண்போல்
மந்திரங்கள் மந்திரே சுரர்கள்சதா சிவர்கள்
மற்றுமுள்ள சத்திகட்கு வடிவாதி நான்கும்
தந்திடுமவ் விந்துவென வறிய வேண்டுஞ்
சாற்றுவமே லதோமாயை தனதியல்புங் கேளே.

பொழிப்புரை: இவ்வாறு சுத்தமாயை (விந்து) என ஒன்றைக் கூறுவது எதற்கு? சிவனுடைய கிரியா சக்தியே நாதம் முதலான அனைத்துப் பிரபஞ்சமுமாக ஆகிறது எனக் கூறில், அது பொருந்தாது. சடப்பொருளுக்குச் சித்துப் பொருள் காரணமாக ஆகாது. சடத்துக்குச் சடமே காரணமாக இருக்கும். ஆனால் அசுத்த மாயையே அவற்றுக்குக் காரணம் எனில், அது மயக்குறுத்தும் இயல்புடையது ஆகையால் ஞானவொளி ரூபமான சுத்த அத்துவ ஆன்மாக்களுக்குரிய தனு, கரணம் முதலான பந்தங்களுக்குக் காரணமாகாது. ஆகையால் ஞானமே திருமேனியாக உள்ள சத்தராகிய சிவனுக்குப் பரிக்கிரக சக்தியாகிய சுத்தமாயை பானைக்கு மண்போல் உபாதான காரணமாகும். ஏழுகோடி மகா மந்திரங்கள், மந்திர மகேசுவரர்கள், அனுசதாசிவர்கள், மற்றும் உள்ள சத்திகள் - ஆகியவர்களுக்கெல்லாம் தனு, கரணம், புவனம், போகம் ஆகிய நான்கையும் உபாதான காரணமாகிய சுத்தமாயையே கொடுக்கும் என அறியற்பாலது. இனி அசுத்தமாயையின் இலட்சணத்தைக் கூறுவோம். அதன் இயல்பையும் கேட்க.

அ.கை: மேல் அசுத்தமாயா லக்ஷணம் கூறுகின்றது.

57. இருவினைசேர் சகலருடன் பிரளயா கலர்க
ளிருவகைக்கும் தனுவாதி யீரிரண்டா யரனால்
வருவதற்குப் பிறப்பிடமாய்ச் சடமாகி யுயிர்க்கு
மயக்கறிவைப் பண்ணுவதாய் மலம தாகி
அருவமுமா யனாதியாய் வியாபி யாகி
யமலனுக்கோர் சத்தியா யாதிநடு முடிவில்
திரிவிதமா முயிர்களெலா மருவிடமாய் நித்தத்
திறமதுவா மதோமாயை தேருங் காலே.

பொழிப்புரை: நல்வினை, தீவினைப் பயன்களைப் பொருந்தும் சகலர், பிரளயாகலர் எனும் இருவகை ஆன்மாக்களுக்கும் அனந்தேசுவரரால் உண்டாக்கப்படும் தனு, கரண, புவன போகங்களாக உள்ள கலை முதல்

மண் ஈறான தத்துவ தாத்துவிகங்களுக்கு முதற்காரணமாக இருப்பது: சடப்பொருளாக விளங்குவது: ஆன்மாக்களுக்கு மயக்க அறிவைத் தோற்றுவிப்பது: தளைப்படுத்தும் மலமாக இருப்பது: அருவமாக உள்ளது: அனாதியாகவே இருப்பது: தனது கலை முதலான காரியங்களை வியாபித்து இருப்பது: நித்தியமான ஆற்றல் உடையது: நின்மலனான சிவனுக்கு ஒப்பற்ற பரிக்கிரக சக்தியாக இருப்பது: தனது அடியிலும் நடுவிலும் முடிவிலும் முறையே சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனும் மூவகை ஆன்மாக்களும் பொருந்தியிருக்க விளங்குவது: பிரளயத்தில் கன்மத்துக்கு இருப்பிடமாக இருப்பது. ஆய்ந்து நோக்கும் இடத்து அசுத்தமாயை இத்தகைய இயல்புகளை உடைய ஒரு வத்துவாக இருப்பதாகும்.

அ.கை: மேல் கன்ம லக்ஷணம் கூறுகின்றது.

58. அனாதியே யாணவத்தின் குணங்கள் கூடு
மான்மாக்க ளறிவிச்சை தொழில்க ளாலே
மனாதியாற் புரிவதனாற் கன்ம மென்று
மருவாகட் காகையினா லதிட்ட மென்றும்
உனாதுபுரி யாதிருக்கிற் பரிகா ரத்தை
யுண்ணாம லொழியாம லுறுவ தாகித்
தனாதியந்தம் புரிதலினாற் புசிப்பினா லாகித்
தானிற்குங் கன்மமின்னுஞ் சாற்றக் கேளே.

பொழிப்புரை: அனாதிகாலம் தொட்டே ஆணவத்தின் குணங்கள் பொருந்தப் பெற்றுள்ள ஆன்மாக்களின் அறிவு, இச்சை, செயல்களால் மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் செய்யப்படுவதால் கன்மம் எனப்பெயர் பெறுவது: கண் ஆகிய இந்திரியத்துக்குப் புலப்படாத படியால் அதிருட்டம் எனப்படுவது: கண்டு ஆராய்ந்து பார்த்துக் கழுவாய் ஆகிய பிராயச்சித்தம் செய்யாமல் இருந்தால், அனுபவித்துத் தீர்த்தாலன்றி அழியாதது. மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் தோன்றுவதால் ஆதியும், பலன்களை அனுபவித்துத் தீர்ப்பதனால் அந்தமும் உடையதாகி, இவ்வாறு கன்மம் என்பது விளங்கும். மேலும் இதனைப்பற்றி உரைக்க உளதைக் கேள்.

அ.கை: மேல் புண்ணிய பாப ஸ்வருபமாயிருக்கிற கன்மங்கள் பந்தமாக ஏறும்வகை கூறுகின்றது.

59. மந்திரங்கள் பதங்களுடன் வன்னங்க ளன்றாய்
மதித்துரைத்தல் மதியாத வாசகத்தி னாலும்

சுந்தரமாம் புவனேசர் பூசாபூ சையினாற்
சுருதிவழித் தருமத்தாற் றவறுசெய்த லாலும்
சிந்தனைசெய் மனமாதி தத்துவங்க ளாலே
சீவர்களுக் கிதமகிதஞ் செய்தமையி னாலும்
பந்தமுறு மிருவினைக ளொன்றொன்றா லழியாப்
பான்மையுமாய்ப் பரிகாரப் படுநெறியு முளதே.

**பொழிப்புரை:** மந்திரங்கள், பதங்கள், எழுத்துக்கள் ஆகியவற்றை முறைப்படி ஒலித்தலால் புண்ணியமும், முறைதவறி ஒலிப்பதால் பாவமும் என வினைப்பயன் அமையும். அழகுமிகுந்த பல்வேறு புவனங்களுக்குரிய அதிபதிகளாகிய தெய்வங்களை முறைப்படி பூசித்தலால் புண்ணியமும் அத்தெய்வங்களுக்குரியவற்றை அபகரித்தல், அவர்களை நிந்தித்தல் முதலான செயல்களால் பாவமும் அமையும்:, மெய்ந்நூல்களில் விதிக்கப்பட்டுள்ளபடி நடந்து கொள்வதால் புண்ணியமும், அந்த விதிகளை மீறித் தவறுகள் செய்வதால் பாவமும் அமையும். சிந்தித்தல் முதலான செயல்களைச் செய்யும் உட்கருவிகள், கன்ம இந்திரியங்கள், ஞான இந்திரியங்கள் ஆகியவற்றால் மற்றவர்க்குச் செய்யும் உதவிகளாலும் தானங்களாலும், விதிக்கப்பட்டுள்ள முறையான போகப்பேற்றாலும் புண்ணியமும், மற்றவர்க்குத் தீமைசெய்வதாலும், தீயதென விலக்கப்பட்டனவற்றை அனுபவிப்பதாலும் பாவமும் அமையும். இவ்வாறு நல்வினை தீவினைமயமாக அமைவது கன்மம். புண்ணியத்தால் பாவமும் பாவத்தால் புண்ணியமும் அழியாத நியதியில் கன்மம் பந்தமாக அமையும். மெய்ந்நூல்களில் கூறப்பட்டுள்ள வண்ணம் கழுவாய் செய்வதனால் தீவினைப்பயன் நீங்குதற்குரிய வழியும் உள்ளது.

**அ.கை:** மேல் இந்த கன்மபலன்கள் இம்மையிலும் மறுமையிலும் பொருந்தும் என்பது கூறுகின்றது.

60. இம்மையிலே சிலவினைக்குப் பயன்க ளிங்கே
யெய்தலுமாம் பரத்திலே யிசைந்திடலு மாகுஞ்
செம்மைசெயு நல்வினைதீ வினைகளெலா மிங்கே
சிதைந்ததிலே யதிட்டமெனச் சிவனருளா லுண்டாய்ப்
பொய்ம்மையிலாப் பயனெந்தப் புவனத்தே யங்கே
பொருந்திடும் வாதனையும் புந்தியினிற் பொருந்து
மம்மையுட னப்பனுயிர்க் காமிறைவன் றானே
யந்தந்தப் பயனுயிர்கட் காக்கிடுவ னறிந்தே.

**பொழிப்புரை:** ஆயுட்பேற்றுக்காகச் செய்யப்படும் யாகம், பிள்ளைப்பேற்றுக்காகச் செய்யப்படும் யாகம் என, வினைகளுள் சிலவற்றுக்குப்பயன் இந்தப் பிறவியிலேயே பொருந்தும் வகையில் உண்டாகும்: வேறுசில வினைப்பயன்கள் துறக்கத்திலோ, நரகத்திலோ, மறுபிறவியிலோ, தேக முடிவிலோ வாய்க்கும். செவ்விய முறைப்படிச் செய்யப்படும் நல்வினைகள், மாறுபடச் செய்வனவாகிய தீயவினைகள் ஆகியவை, செய்யப்பட்ட இடத்தில் தூலகன்மம் என்பது அழிய, அதிருட்டம் என வினைப்பயனானது சிவனது ஆணையால் தோன்றி இன்ன கன்மத்துக்கு இன்ன உலகப்பேறு என நியதிப்படிக் கூறப்படும் முறையில் எந்தப் புவனம் உரிய முறைப்படி வாய்க்க உள்ளதோ, அந்தப் புவனத்தே பொருந்த உண்டாகும். அந்தநிலையில் வாசனாகன்மம் எனப்படும் ஒன்றும் புத்தி தத்துவத்தில் பொருந்தும். ஆன்மக் கூட்டங்களுக்கு அம்மை - அப்பனாக வாய்த்துள்ள சிவபெருமானே அந்த அந்த வினைப்பயனை, உரியன முறைப்படி, அந்த அந்த ஆன்மாக்களுக்குப் பொருந்தும்படித் தன் ஆற்றலால் அறிந்து செய்வான்.

**அ.கை:** மேல் இந்த சனனத்திலே புசிக்கும்பொழுது இதாகிதமாக ஏறின கன்மம் மேல் வரும் சனனத் தொடர்ச்சிக்குப் புத்தியிலேவித்தாய் நின்று பரிபாகமான பொழுது புசிப்பிக்கும்,அப்படி புசிக்கையிலே இருவினையொப்பு வந்த காலத்தில் புசியாமற் கெடும் என்பது கூறுகின்றது.

61. அருந்தியிடப் பலமாகி மேலைக்கு வித்து
மாகியிடுந் தேமாவை யாதி போலப்
பொருந்தியிடும் புண்ணியபா வப்பயன்க ணன்றாய்ப்
புசிப்பதற்குச் சுகதுக்க மாகிப் போந்தே
திருந்தவிரு வினைமேலுஞ் செய்வ தாக
செய்தவினை வாதனைகள் சேர்ந்து புந்தி
வருந்தொடர்ச்சி யாகவே யிருவினையு மொக்கில்
மாய்வதுவாம் புசியாமல் மறித்துதியா வாறே.

**பொழிப்புரை:** சுவைமிக்க மாங்கனி அப்பொழுது உண்பதற்கு ஏற்ற கனியாகி பிற்காலத்தில் பழத்தை உண்டாக்க விதையுமாகி விளங்குதல் போன்று புண்ணியப்பனும் பாவப்பயனும் இன்பம் எனவும் துன்பம் எனவும் புசிக்கப்படுவனவாய், அவ்வாறு துய்க்கும்போது, பின்னர் நேரக்கூடிய இன்ப துன்பங்களுக்குக் காரணமாக ஏறுவினையாக அமையும். செய்த கன்ம வாசனைகள் புத்தி தத்துவத்தில் பொருந்தி இருந்து மேலும் மிகுதியாகப் புண்ணிய பாவங்களைச் செய்யவைக்கும். இவ்வாறு தொன்றுதொட்டே,

ஆற்றுநீரின் ஓட்டம் போன்று, (பிரவாக அனாதி நியாயமாக) ஆன்மாவைப் பந்தித்து இருக்கும் புண்ணியப்பயனும் பாவப்பயனும் ஒருசேரப் பக்குவமாகில், ஆன்மாவுக்கு இனி ஏதும் பிறவிக்குக் காரணம் ஆகாமல் புசிக்கப்படாமலேயே அழிந்து போகும்.

அ.கை: மேல் பஞ்சமலங்களின் தொகை கூறுகின்றது.

62. அறிவுதொழி லிச்சையினைத் தடுக்குமா ணவமொன்
றதைச்செலுத்தி யான்மாவி னிடத்தருளி னாலே
பிறிவறவே பாகஞ்செய் யாதிசத்தி யொன்று
பெறுவிக்கும் பெரும்போக விந்து வொன்று
செறிவுற்றுப் புண்ணியபா வத்திரட்சி யாகச்
சிந்தைமனக் காயத்தின் செயலான தொன்று
குறியுற்ற காயாதிக் காமாயை யொன்று
கூறியிடி லைந்தாகும் பாசத்தின் குலமே.

பொழிப்புரை: ஆன்மாவின் விழைவு, அறிவு, செயல் ஆகியவற்றைத் தடுக்கும் ஆணவமலம் எனும் ஒன்று, ஆன்மாவில் அந்த மலத்தைக் கொண்டு பக்குவம் வரும் வரையிலும் மறைத்துச் செலுத்தி, அருளால் பக்குவம் வந்தபோது அனுக்கிரகம் செய்யும் திரோதான சக்தி என ஒன்று: நாதம் முதலான தத்துவங்களுக்குக் காரணமாகி, முற்றறிவு முதலானவற்றை உண்டாக்கி, துன்பம் கலவாத சுகமயமான போகத்தை உண்டாக்கும் சுத்தமாயை என ஒன்று, ஆன்மவர்க்கத்தைக் குறிக்கொண்ட தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ள அசுத்தமாயை என ஒன்று, மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் உண்டாகும் நல்வினை தீவினைகளின் திரட்சிக்கு மூலகாரணமான ஆதிகன்மம் என ஒன்று. பாசங்களைப் பற்றிக்கூறின் இத்தகைய பாசத்தின் வகைகள் ஐந்தாகும்.

அ.கை: மேல்இந்தப் பஞ்சபாசங்கள் ஆன்மாவைப் பந்திக்கும், ஆன்மாக்களிடத்தில் எள்ளுக்குள் எண்ணெய் போலச் சர்வ வியாபியாகிய சிவனை வாதியா என்பது கூறுகின்றது.

63. போற்றியிடும் பதிவிபுவா யான்மாவு மதனைப்
பொருந்தியென்றும் பிரியாமை புகன்று பின்னுஞ்
சாற்றுவதெ னாணவந்தா னனாதி பாசஞ்
சாருமுயிர் தனைச்சிவனை சாரா தென்னிற்
காற்றதுதான் வானத்தைப் பிரியா தேனுங்

கந்தமுடன் வெம்மைதட்பஞ் சலன மெய்து
மேற்றிகழா காசத்தி லிவைபொருந்தா வாறா
மேலுமோ ருவமானம் விளம்பக் கேளே.

**பொழிப்புரை:** ஆன்மாக்களால் போற்றப்படும் பதி, எங்கும் வியாபித்து இருப்பவன், ஆன்மாவும், ஆணவம் முதலான பாசங்களைப் பொருந்தி எந்நேரமும் பிரியாமல் இருக்கும் என்று கூறி, மேலும் அனாதி பாசமாகிய ஆணவமலம் ஆன்மாக்களையே பந்திக்கும், சீவனோடு கூடியுள்ள சிவனைப் பந்திக்காது எனக் கூறுவது எப்படி- எனக் கேட்பின், காற்றானது ஆகாயத்தை விட்டு நீங்காமல் கூடி இருந்தாலும் காற்றினிடத்து உள்ள வெம்மை, குளிர்ச்சி, சலனம் முதலானவைகள் காற்றுடன் பிரிவற்று விளங்கும் ஆகாயத்தில் எவ்வாறு பொருந்தவில்லையோ அவ்வாறே ஆன்மாவுடன் இரண்டற விளங்கும் ஆணவம் சிவனைச் சாராது. இதற்கு மேலும் ஓர் உவமானம் கூறுகிறோம். கேட்க:

**அ.கை:** மேலும் அதற்கு ஒரு புறனடை.

**64.** அலைகடனீ ருப்பதுதா னகல நீள
வாழமா யந்நீருக் கவகாசங் கொடுத்த
நிலையதுவா முவர்க்கடலுக் கின்றாமந் நீர்மை
நீடுயிரின் மலமாயை நிமலன்பா லடையா
தொலைவில்மிகு மெய்ஞ்ஞானச் சுடரொளியாஞ் சிவன்றான்
றுணையிலா வஞ்ஞான விருளினுக்குப் பகையா
யுலைவறவவ் விருபொருளு மோரிடத்தே நிற்ப
துரையுமெமக் கெனிலுரைப்பா முள்ளபடி யுணரே.

**பொழிப்புரை:** அகலம், நீலம், ஆழம், அலைகள் - இவற்றை உடைய உப்புநீர்க்கு இடம் கொடுத்துள்ள உவர்க்கடலுக்கு, அந்த நீரில் இருக்கும் உப்பானது எப்படி இல்லையோ, அப்படியே அனாதியாகவே உள்ள ஆன்மாவின் ஆணவம், மாயை, கன்மம் ஆகியவை சிவனைச் சாரா: அழிவற்றவனாய், வியாபியாய் சத்திய ஞானப்பேரொளி வடிவாய் உள்ள சிவபெருமான், ஒப்பற்ற இருள்வடிவாகிய அஞ்ஞானத்துக்குப் பகையாக இருக்க, அந்தச் சிவனும் பாசமும் அழிவற்ற ஆன்மாக்களிடம் எவ்வாறு பொருந்தியிருக்கும் என்பதைக் கூறவேண்டும் எனில், சிவனும் பாசமும் ஆன்மாக்களிடத்தில் பொருந்தி விளங்கும் பான்மையைக் கூறுகிறோம். நீ உள்ளவாறு அறிந்துகொள்.

அ.கை: மேலும் அதற்கு ஒரு புறனடை.

65. நிருவிடமும் விடமுமொரு முதலாய் நின்றும்
நிருவிடந்தா னவ்விடத்தை நீக்கா முன்னம்
மருவிடத்தை யொருவருந் திடவதற்கு மாற்றா
யளித்திடவந் நிருவிடந்தா னவ்விடத்தை நீக்குங்
கருவிடந்தா னுண்டமணி கண்டனர னுயிரின்
கண்ணடைந்த வஞ்ஞானங் கழிப்பனரு ளாலே
பெருவிடந்தா னரவிடத்தி லிருந்துமதை வருத்தா
பெருங்கடவு ளிடத்திலிரு ளிருந்துமந்தப் பேறே.

பொழிப்புரை: நிருவிடம் என்னும் செடியும் பச்சைநாபி என்னும் நச்சுச்செடியும் ஒரே மரத்தில் இருந்தாலும் நிர்விடமானது பச்சைநாபி விதையின் நஞ்சினைப் போக்காது. ஆனால் அந்தப்பச்சைநாபியை ஒருவன் தின்றுவிட அவனுக்கு நிருவிடத்தை மாற்றுமருந்தாகக் கொடுத்தால் அது பச்சைநாபியின் நஞ்சு, உண்டவனைக் கொல்லாதவண்ணம் நஞ்சினைப் போக்கிவிடும். அவ்வாறே சிவனும் ஆன்மாவில் பந்தித்துப் பக்குவமான பாசங்களைத் தமது சக்தியால் போக்கி அருள்வார். மேலும் கொடிய நஞ்சு பாம்பின் இடத்தில் இருந்தாலும் அது அப்பாம்பை வருத்தாமல் பாம்பால் கடியுண்டவனை வருத்துதல் போன்று பெரிய இறைநாயகமாக விளங்கும் சிவனிடத்தில் பாசங்கள் இருந்தாலும், கட்டுப்படும் இயல்புடைய ஆன்மாவையே பந்தித்து நிற்குமே தவிர, சிவனைப் பாதிக்கா.

அ.கை: மேலும் இந்தப் பாசங்கள் சிவனை வருத்தாது பெத்தான்மாவையே வருத்தும் என்பது கூறுகின்றது.

66. இன்னமுங்கே ளிங்குமற்றோர் தருவினிட விறக்கு
மிறவாதவ் விங்குவிளை தருமதுமவ் வியல்பே
முன்னமுரைத் திடுமாயை மலமாதிக் கெல்லா
முதல்வனிடத் தவகாச மாயினுமம் முறையே
மன்னுசிவன் சத்தியிவை யனைத்தினையும் விரித்தும்
மற்றதனை யொடுக்கியுந்தன் வசமாகச் செயலாற்
றுன்னுமுயிர் தனைத்தொடக்கு மன்றி யந்தச்
சுதந்திரனாஞ் சோதிபாற் றொடக்கறியா சடமே.

பொழிப்புரை: மேலும் கேட்பாயாக: பெருங்காயத்தை மற்றொரு மரத்தில்

இட்டால் அது அம்மரத்தை அழிந்துபடச்செய்யும். அதுதவிர்த்து தான் உண்டாவதற்கு ஏதுவாக இருக்கும் பெருங்காயத்தைத் தான் அதிலிருந்து அழிந்துபடச் செய்யாதவாறு போன்று முன்னர் கூறப்பட்ட ஆணவம், கன்மம், மாயை ஆகியவை சிவனிடத்தில் இருந்தாலும் அவ்வாறே சிவனைப் பாதிக்கா. நெருப்புக்கு வெம்மை போன்று பிரிவற்று இருக்கும் சிவசக்தி இந்த ஆணவம் முதலானவை மறைத்தல் முதலான தத்தம் தொழில்களைச் செய்யுமாறு செய்தும், அந்த தொழில்களைச் செய்யாதவாறு ஒடுக்கியும் தன் வயப்படுத்திக் கொள்ளும். அதனால் தனக்கெனச் செயலற்று வியாபியாக இருக்கும் ஆன்மாவையே சிவசக்தியின் செலுத்துதலால் பந்தித்து நிற்கும். மேலும் ஆணவம் சடவத்து ஆகையால் தன்வயத்தனாகவும் ஞானசொரூபியாகவும் விளங்கும் சிவனை ஆணவம் முதலானவை பந்திக்கா.

**அ.கை:** மேல்சத்தி சிவர்களுக்குச் சமவாயம் என்றும், ஆன்மா சிவர்களுக்குத் தாதான்மியம் என்றும், ஆன்மா பாசங்களுக்கு அனாதிசையோகம் என்றும், ஆன்மா பிரபஞ்சத்துக்கு சையுத்த சமவாயம் என்றும் சம்பந்தம் கூறுகின்றது.

67. சாற்றியிடுஞ் சம்பந்த மானதுதான் பதிக்குஞ்
சத்திக்குஞ் சமவாயம் பதிக்குமுயிர் தனக்கும்
போற்றியிட வேறெனவே பொறுப்பதுமாய்ப் பிரியாப்
புணர்ச்சியினா லேதாதான் மியமாகப் புகலும்
மாற்றியிடச் சிவனருளாற் பசுக்கள்பாற் பாச
மாறுவதா லனாதியாஞ் சையோக மாகும்
மேற்றிகழு முலகுக்கு முயிர்க்குஞ்சம் பந்த
மேவியிடுஞ் சையுத்த சமவாய மெனவே.

**பொழிப்புரை:** பதி, பசு, பாசம் எனக் கூறப்பட்ட முப்பொருள்களுக்குள்ளே பதியாகிய சிவனுக்கும் சிவசக்திக்கும் இடையுள்ள சம்பந்தமானது சமவாய சம்பந்தம் ஆகும். ஆன்மாவுக்கும் சிவனுக்கும் இடையுள்ள சம்பந்தம், பேதம் சொல்லக்கூடிய நிலை பொருந்துவதாகவும், இரண்டறக் கலந்து ஞான சொருபமாகவே திகழ்வதால் அபேதம் கூறக்கூடிய நிலை பொருந்துவதாகவும் உள்ள தாதான்மிய சம்பந்தம். இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்த காலத்தில் குருவின் அருள்வலத்தால் ஆன்மாவினின்று பாசங்கள் நீங்கி நிற்பதால் பாசத்துக்கும் ஆன்மாவுக்கும் இடையுள்ளது அனாதிசையோக சம்பந்தம். மாயாகாரிய மயமாக விளங்கும் பிரபஞ்சத்துக்கும் ஆன்மாவுக்கும் இடையுள்ள சம்பந்தம் சையுத்த சமவாய சம்பந்தம் ஆகும்.

**அ.கை:** மேல் மாயாகன்மங்கள் சடமாகையாலும் ஆன்மாக்கள் தடைப்பட்ட ஞானக்கிரியை உடையவர்களாகையினாலும் சிவனே சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களை பண்ணுவரென்பது கூறுகின்றது.

**68.** சடமாக மாயைவினை யிருத்த லானுஞ்
சாற்றுமுயிர் சிற்சத்தி தடையி னாலே
திடமாகச் சுதந்திரமா மறிவுதொழி லின்றாற்
சிவனுடைய சிற்சத்தி கலாதியிவற் றொன்றி
னிடமாக அறிவுதொழில் விளக்கு மாற்றா
லெவ்வுயிர்க்குந் தனுவாதி யிறைவன்வினைக் கீடாய்க்
கடனாக மாயையிலே முறைபிறழா தாக்கிக்
காத்துமறைத் தழிப்பனிவை கருணை காணே.

**பொழிப்புரை:** பிரபஞ்சத்துக்கு உபாதான காரணமான மாயையும், துணைக்காரணமான கன்மமும் சடமாக இருப்பவை ஆதலாலும், ஆன்மாவின் ஞானம், இச்சை, கிரியை ஆகியவை ஆணவத்தால் தகைக்கப்பட்டு அறியவும், விழையவும் செய்யவும் தனக்கென ஓர் உரிமையற்று இருப்பதாலும் இவைகளால் ஐந்தொழில் செய்ய இயலா. சிவனுடைய ஞானசக்தியால் கலைமுதலான தத்துவங்கள் ஆன்மாவில் பொருந்தப்பெறுவதால் அதற்கு ஞானம், இச்சை, கிரியை ஆகியவை விளக்கம் பெற்றுத்திகழும் என்பதால் இவ்வாறு எல்லா ஆன்மாக்களுக்கும் இறைவன் கன்மத்தை அனுசரித்து தனது கடமையாக மாயையினின்று தனு, கரணம் முதலானவற்றை முறைமை வழுவாமல் உண்டாக்கல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருள்புரிதல் எனும் ஐந்தொழில்களையும் செய்வான். ஐந்தொழில் செய்வதற்கு அவனது கருணையே காரணம் என உணர்வாயாக.

**அ.கை:** ஆன்மா சிவர்களுடைய ஞானேச்சாகிரியைகளுக்குப் பேதமுண்டு என்பது கூறுகின்றது.

**69.** எண்போதி லறிவிச்சை தொழில்க ளெல்லா
மீசனைப்போ லுயிர்க்குளதே யென்று செப்பில்
கண்போலக் காணுமொளி யுயிர்களறி வாகுங்
கதிர்போலக் காட்டுமொளி கடவுண் ஞானம்
உண்போமென் றிடலுயிர்க ளிச்சை யாகு
மூட்டுவோ முயிர்க்கென்கை யுயரீச னிச்சை

பண்புறவே பலதொழில்கள் பண்ணுமுயிர்க் கிரியை
பண்ணுவிக்கை சிவன்கிரியைப் பரிச தாமே.

**பொழிப்புரை:** ஆராய்ந்து பார்க்கில் ஆன்மாவும் ஞானம், இச்சை, கிரியை ஆகியவற்றை உடையது: சிவனும் இவற்றை உடையவனாக உள்ளான் எனவே ஆன்மாவும் சிவனும் சமமோ - என்று கேட்டால், சமம் அல்ல பேதம் உண்டு. ஆன்மாவின் ஞானம் கண்போலக் காணும் தன்மை உடையது: சிவனின் ஞானம் சூரியனைப் போன்று காட்டும் தன்மை உடையது: ஆன்மாவின் இச்சை அனுபவிக்க வேண்டும் என்பது: சிவனின் இச்சை, ஆன்மாவுக்குப் பரிபாகம் வருவதற்காக வினைப்பயனை ஊட்ட வேண்டும் என்பது: ஆன்மாவின் செயல், நன்மை தீமையாகிய பண்புபொருந்தப் பல தொழில்களையும் செய்வது: சிவனது தொழில், செய்யுமாறு செய்விப்பது.

**அ.கை:** மேல் ஆன்மாக்களுக்கு ஈசுவரன் தன்மை முன்னிலை படர்க்கையால் உணர்த்தும் முறைமை கூறுகின்றது.

**70.** தன்மைமுன் னிலைபடர்க்கை மூன்றுவிதத் தாலே
சாருமுயிர்க் கறிவிப்ப னிறைவனதிற் றன்மை
தொன்மையவா ஞானத்தைத் தடுத்திடுமா ணவத்தைத்
துரந்தெவையு முள்ளபடி தோற்றுவித்த லுளத்தே
நன்மையுடன் றீமையினை யவரவையா லறிய
நல்குவது முன்னிலையா நரகசொர்க்க மாதி
பன்மையதாம் பரலோக பாவபுண் ணியத்தின்
பலமதனை நூலினா லுணர்த்திடுதல் படர்க்கை.

**பொழிப்புரை:** தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூன்று விதங்களால் சிவன் ஆன்மாக்களுக்கு அறிவிப்பான். தன்மை நெறியில் உணர்த்துவதாவது, ஆன்மாவில் அனாதிகாலம் தொட்டே நின்று ஞானத்தைத் தடுக்கும் ஆணவத்தை நீக்கித் தளைக்கு உட்பட்டிருக்கும் காலத்தில் நுகர் பொருள்களையும் முத்தி நிலையில் தன்னையும் அறிவிப்பது. முன்னிலை விதத்தில் உணர்த்துதலாவது அவன், அவள், அது எனும் முக்கூற்று முன்னிலையாகத் தளைக்குட்பட்ட நிலையிலும் முத்திநிலையிலும் தீமைகளையும் நன்மைகளையும் அறிவிப்பது: படர்க்கையில் அறிவிப்பதாவது, நரகம் துறக்கம் முதலான வேறு உலகங்களில் பாவத்தாலும் புண்ணியத்தாலும் வரும் துன்பமயமான பயன்களையும் இன்பமயமான பயன்களையும் வேத, ஆகம, புராண நூல்களால் அறிவிப்பது.

**அ.கை:** மேல் சிருட்டி வரும்படி பரையாதி பஞ்சசத்திகள் தோற்றமும் தந்தம் தொழிலும் மூன்று விருத்தங்களாற் கூறுகின்றது.

71. இறந்துபிறந் துழலுயிர்க ளிளைப்பாற விறைவ
னிலயஞ்செய் துலகனைத்து மேகனென நின்றே
பிறந்துவினைப் பலம்புசிக்கி லல்லால் முத்தி
பெற்றிடா வுயிர்களுக்குப் பேறளிப்ப மென்றே
சிறந்தவருள் முகிழ்த்ததுவே பராசத்தி மலத்தைச்
செலுத்தல்செய லாதிசத்தி சிருட்டி யாதி
யறந்திகழ வுன்னியதே யிச்சா சத்தி
யனைத்தினையு நோக்கிடுதல் ஞானசத்தி யாமால்.

பொழிப்புரை: பிறந்தும் இறந்தும் துன்பப்படும் ஆன்மாக்கள் இளைப்பாறும் வண்ணம் இறைவன் உலகங்கள் அனைத்தையும் ஒடுக்கி எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு தான் ஒருவனே ஆகவிளங்குவார். "இந்த ஆன்மாக்கள் மீண்டும் பிறந்து கன்மபலன்களை அனுபவித்தால் அன்றி வீடுபேறு அடையார். இவர்களுக்கு முத்திப்பேற்றை எப்படியும் அருள்வோம்" என இறைவனிடம் முளைத்து எழும் அருளே பராசக்தி: ஆணவ மலத்தைப் பரிபாகம் வரவேண்டி மறைத்துச் செலுத்திக் கொண்டிருப்பது திரோதான சக்தி எனும் பெயருடைய ஆதிசக்தி: படைத்தல் முதலான தொழில்களைச் செய்யவேண்டும் என விழைவு கொண்டநிலையே இச்சாசக்தி: அனைத்தையும் பார்ப்பது ஞானசக்தி.

72. நினைத்தபடி செய்வதற்குப் பிரவிருத்தி யாக
நிகழ்த்தல்கிரி யாசத்தி நிமலனுக்கிவ் வைந்தும்
தனைப்பிரிவி லாச்சத்தி யொன்றே யைந்தாய்ச்
சாற்றியது கருமபே தத்தினாற் றானாம்
முனைப்பொருவில் பராசத்தி முத்தியுயிர்க் களிக்கு
மூலமலந் தனில்மோக மாதிகுணஞ் சத்தி
அனைத்தினையும் விரித்துயிர்ப்பா லனேகவித மாக
வணைத்தாக்கும் பாகத்தை யாதிசத்தி அருளால்.

பொழிப்புரை: நினைத்தபடியே செய்யத்தக்கதாகப் பிரவிருத்தியாய் விளங்குவது கிரியாசக்தி. நின்மலனாக விளங்கும் சிவனுக்கு இந்த ஐந்து சக்திகளும் நெருப்புக்கு வெம்மை போன்று பிரிவற்று விளங்கும் ஒரு சக்தியே தொழில் வேறுபாட்டால் ஐந்து பேதங்களாகக் கூறப்பட்டது. இவ்வைந்து

சக்திகளுக்கும் உரிய தொழிலைக் கூறுமிடத்து பரமசிவத்தில் ஆயிரத்தில் ஒரு கூறாகத் தோன்றிய பராசத்தி ஆன்மாக்களுக்கு அருள் செய்யும்: பராசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறாகத் தோன்றிய ஆதிசக்தி மூலமாகிய ஆணவத்திற்குரிய மோகம் முதலான குணங்களையும் அவற்றின் சக்திகள் அனைத்தையும் விரித்து ஆன்மாவினிடத்தே பலவிதங்களாகக் கட்டுவித்துத் தனது அருளால் மலபரிபாகத்தை வருவிப்பாள்.

73. உலகனைத்து மாக்கியளித் தொழிப்ப தாக
வுன்னல்செயு முயரிச்சா சத்தி தான்மேல்
இலகுபுகழ் விஞ்ஞான கலர்மலபா கத்துக்
கேற்றவுரு வாதியா மீரரண்டா மவையும்
அலகில்வினை புரிசகலர் பிரளயா கலர்கட்
கவ்வினைக ளதற்கேற்ற வாக்கை யாதி
நிலவுவகை யுங்காணு ஞான சத்தி
நிச்சயித்த படிசெய்யுங் கிரியை நேரே.

பொழிப்புரை: ஆதிசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறாகத் தோன்றும் இச்சாசக்தி உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து ஒடுக்கம் செய்யும் வகையில் ஆலோசித்துக் காணும்: இச்சாசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறாகத் தோன்றும் ஞானசக்தி விந்து, மோகினி, மான் எனப்படும் மூவகை உபாதானங்களிலிருந்து, மூவகை ஆன்மாக்களுள் புகழ்பொருந்திய விஞ்ஞானகலர்க்கு மலபரிபாகத்துக்கு ஈடாகத் தனு கரண புவன போகங்களையும், அளவற்ற கன்மங்களைச் செய்யும் சகலர்க்கும் பிரளயாகலர்க்கும் கன்மத்துக்கு ஈடாகத் தனுகரண புவன போகங்களையும் உண்டாக்கத் தக்கவகையில் அறியும்: ஞானசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறாகத் தோன்றும் கிரியாசக்தி "இதற்கு இது உபாதானம்" என முறைப்படி அறிந்த வகையில் தேகம் முதலியவற்றை உண்டாக்கும்.

அ.கை: மேல் 'சத்தியின்றன் பேதத்தால்' என்னும் விருத்தந் தொடங்கிப் பத்து விருத்தங்களால் சத்தியினிலக்கணமும் அவர் செய்யும் கிருத்தியமும் கூறுகின்றது.

74. சத்தியின்றன் பேதத்தாற் சிவனு மங்ஙன்
சத்தனோ டுத்தியுத்தன் றானாகி மேலும்
புத்திமுத்தி யுதவுபிர விருத்த னென்றும்
பொருந்தியிடு மிலயமொடு போகமதி காரம்
இத்தகைய மூவரிலே சத்தரரு வாகி

யெழின்ஞான மேவடிவா யிச்சைதொழி லிசைந்து
சுத்தமாங் காலாதி தோற்றுமுன மிலயத்
தொலைவதனிற் புரிவரருட் சூக்குமவைந் தொழிலே.

**பொழிப்புரை:** பரை முதலான சக்தியின் பேதங்களால் சிவனும் அவ்வாறே சக்தன் எனவும் உத்யுக்தன் எனவும் போகப்பேற்றையும் வீடு பேற்றையும் வழங்கும் பிரவிருத்தன் எனவும் தாமே யாகி மூன்று பேதங்களை அடைவார். சக்தர்க்கு இலயசிவம் என்றும் சாந்தர் என்றும் பெயர். உத்யுக்தற்கு போகசிவம் என்றும் சதாசிவர் என்றும் பெயர். பிரவிருத்தற்கு அதிகாரசிவம் என்றும் ஈசுவரர் என்றும் பெயர். இவ்வாறு உள்ள சக்தர் முதலான மூவருள் முயல்வது செய்வது ஆகியவற்றை நீத்துள்ள சக்திகளை உடையவர் என்பதால் சக்தர் எனப்படும் பதி நிட்களன் (அருவன்) எனத் திகழ்ந்து உயர்ந்த ஞானசக்தியே திருமேனியாக உடையவராகி, முயற்சி அற்றுள்ள இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்திகளோடு இணைந்தவராகி சுத்தமாயா காரியமான சுத்த காலம் முதலான தத்துவங்களைத் தோற்றுவிப்பதற்கு முன் தன் அருளால் மகா சங்கார காலம் எனும் பேரொடுக்கத்தின் முடிவில் சூக்குமமான ஐந்தொழில்களையும் செய்வார்.

**அ.கை:** மேல் தாம் பண்ணும் சூக்கும பஞ்சகிருத்தியம் கூறுகின்றது.

75. பக்குவான் மாக்களுக்குப் பரமுத்தி யருளிப்
பருவமிலார் தமைமறைத்துப் பலவுயிர்செய் வினையால்
தொக்குளது பருவமுறச் செய்து மாயா
தூலசூக் குமசத்தி தோன்றும்வகை நோக்கி
மிக்கதோர் விந்துவினிற் றமதுதோழிற் சத்தி
மேவியதைக் கலங்கல்செய்து வேறறநின் றேதான்
அக்கரங்க ணாதாதி யனைத்தினையுண் டாக்கு
மடைவுதனை யாகமத்தே யறிந்தபடி யறைவாம்.

**பொழிப்புரை:** விஞ்ஞான கலருள் மலபரிபாகத்தை உடையவர்க்கு மேலானதும் உயர்வானதுமான முத்திப்பேற்றை வழங்கி, மலபரிபாகம் வாய்க்காதாரை மறைத்து, பல ஆன்மாக்களும் செய்த கன்மங்களைத் தேகம் முதலானவற்றுக்கும் இன்பதுன்பங்களுக்கும் காரணமாகுமாறு பரிபாகம் செய்து தூலமாகவும் சூக்குமமாகவும் உள்ள மாயாசக்திகள் புவனங்களுக்கு ஆதாரமாகவும் ஆன்மாக்களின் ஞானத்தையும் செயலையும் விளக்குவனவாகவும், மாயையிலிருந்து வெளிப்பட்டு விளங்கத் தகுதி வாய்ந்தனவாகச் செய்து, சுத்த அசுத்த பிரபஞ்சத்துக்குள் எது எது

எவ்வாறு இருக்கவேண்டுமோ அது அது அவ்வாறு இருக்கும்படித் திருவுளத்தில் நினைந்து மேம்பட்டதாகிய தனது கிரியாசக்தி, பிரபஞ்சப்படைப்புக்குக் காரணமாக உள்ள விந்துவை அதிட்டித்து நிற்க, அந்த விந்துவைப் படைப்புச்செயல் நிமித்தம் செயல்படுமாறு செய்து தான் வேறற நின்று சப்தபிரபஞ்சம், நாத தத்துவம் முதலானவை ஆகிய அனைத்தையும் தோற்றுவிக்கும் முறைமைப்பாட்டை, சிவாகமங்களிலே நாம் அறிந்தவண்ணம் கூறுவோம்.

அ.கை: மேல் சத்தருடைய சமவாய சத்தி பிரபஞ்சத்துக்கு யோனியென்றும், விந்து உபாதானமென்றும், சிவன் நிமித்தமென்றும் கூறுகின்றது.

76. சத்தருடைச் சமவாய சத்திதான் விந்துத்
தனையடைந்து கலங்கல்செய்து தானிற்கும் போதில்
அத்தகைய சிற்சத்தி யோக மாயை
யாம்பெயரும் புனைந்தெவைக்கு மாகியிடும் யோனி
தித்தனுந்தான் சொற்பொருள்க ளுதிப்பிக்கு மாறு
நிமித்தனா குவன்விந்து நேருமுபா தானம்
இத்தகையாற் சுத்தமா யையினாத விந்து
விசைவதனைச் சிவன்சத்தி யிருவரதிட் டிப்பார்.

பொழிப்புரை: சக்தரிடம் சமவாயசம்பந்தத்தில் இருக்கும் சக்தி சுத்தமாயையை அதிட்டித்துச் செயற்பாட்டுக்குரிய நிலையிலே வைத்துக் கலக்கி நிற்கும் போது, அவ்வாறு அதிட்டித்து நிற்கும் சிற்சக்தி "யோகமாயை" என்னும் பெயரை ஏற்று பிரபஞ்சங்கள் அனைத்திற்கும் யோனியாக விளங்கி நிற்கும் - நித்திய வத்துவாகிய சிவனும் சப்தபிரபஞ்சம் அர்த்த பிரபஞ்சம் ஆகியவற்றை உண்டாக்கும்பொழுது நிமித்த காரணன் என விளங்குவான்: சுத்தமாயை உபாதான காரணமாகப் பொருந்தி விளங்கும். இந்த முறைமையில் சுத்தமாயையில் தோன்றிய நாதம் விந்து ஆகியவற்றை சிவனும் சக்தியும் அதிட்டித்துச் செயற்படுத்துவார்கள்.

அ.கை: மேல் சத்தப் பிரபஞ்சத்துக்கும் காரணமாயிருக்கிற அம்பிகாதி சத்தி உதிக்கும்முறை கூறுகின்றது.

77. விந்துவதோ பாகத்தே யம்பிகைதன் னுதயம்
விளங்குமவர் பால்வாமை சேட்டைரவுத் திரிதான்
தந்திடுமேற் சயையாதி நாலு சத்தி

தருநிவிர்த்தி சத்திமுத லீராறு தனையும்
இந்தவகை சயையாதி யீரெட்டாஞ் சத்தி
யெவற்றினையும் வியாபிக்கு மிவராலாம் வன்னம்
முந்தவுதித் திடுநாதம் விஞ்ஞான வொளியாய்
மொழியெவைக்கு முதலாகிச் சூக்குமையா முன்னில்.

பொழிப்புரை: சுத்தமாயையின் கீழ்ப்பகுதியிலே அம்பிகா சக்தி உதித்துத் தோன்றும், அம்பிகா சக்தியிடம் வாமை, சியேட்டை, ரௌத்திரி என்னும் சக்திகள் தோன்றி விளங்குவர், மேலும் ஜயை, விஜயை, அஜிதை, பராஜிதை எனும் நான்கு சக்திகளும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோமரூபை, அனந்தை, அநாதை, அநாசிருதை எனும் சக்திகளும் ஆகப் பதினாறு சக்திகளும் தோன்றுவர். இவ்வாறு வெளிப்பட்ட ஜயை முதலான பதினாறு சக்திகளும் எல்லா உலகங்களையும் வியாபிக்கும்: அகரம் முதலான எழுத்துக்களும் இந்தச் சக்திகளால் உண்டாகும் படைப்பில் முதலில் தோன்றிய நாதம், விஞ்ஞானத்து ஒளிமயமாகிப் பைசந்தி முதலான வாக்குகளுக்குக் காரணமாகி சூக்குமை எனப் பெயர் பெறும். ஆழ்ந்து நோக்குமிடத்து இவ்வுண்மை விளங்கும்.

அ.கை: மேல் பைசந்தி,மத்திமை, வைகரி என்னும் வாக்குக்கள் உதிக்கும் முறைமை கூறுகின்றது.

78. சூக்குமமே பைசந்தி யெனவிருத்தி யாகுஞ்
சொல்லிலது விந்துவாந் தொனியாகி மேலே
ஆக்கியிடும் பலவன்ன மயிலண்ட நீர்தா
னவையெவையுந் தோன்றாதோர் நிறமேயா மதுபோல்
நீக்கமிலா வன்னங்க ளனைத்தினையு மடக்கி
நிற்குமணி யோசைபோல் மேலிதனி னிகழும்
வாக்கதுதான் மத்திமையாம் வன்னங்கள் வேறாய்
வருமவைகள் வருமாறும் வகுத்துரைப்பா மதியே.

பொழிப்புரை: சூக்குமை வாக்கே பைசந்தி என விருத்திப்பட்டு நிற்கும். பைசந்தி என்பதன் இயல்பைக் கூறுமிடத்து அது விந்து என ஆகும். இனித்தோன்ற உள்ள வாக்கு பல்வேறு நிறங்களையுடைய மயில்முட்டையின் உள்ளே உள்ள நீரானது, அந்த நிறங்களைப் பேதப்படுத்தி வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டு ஒரே நிறம் உடையதாகத் தோன்றுவது போன்று தொனி மாத்திரமாக விளங்கி, பிரிக்கப்படாமல்

ஒலிக்கப்படும் எழுத்துக்கள் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு மணியோசை போன்று திகழும் இந்தப் பைசந்தி வாக்கிலிருந்து விருத்திபெற்று நிகழும் வாக்கே மத்திமை என்பதாகும். மத்திமையில் எழுத்துக்கள் பிரிவுபட்டு வெவ்வேறாக விளங்கும். அவைகள் தோன்றும் முறையை வகைப்படுத்திக் கூறுவோம். சிந்தித்து உணர்க.

அ.கை: மேலும் அதற்கு ஒரு புறனடை.

79. அகரமுத லேவாமை சேட்டைரவுத் திரியை
யாகமாய்க் கொண்டுதிக்கு மதைப்பிரம மெனவும்
பகருவர் வேதாதிக் குபாதான மான
பரிசதனால் விரிந்துமேற் பதினைந் தாகிக்
ககரமுதன் முப்பதுமோ ரைந்து மாகிக்
காண்பதுவா மீரெட்டுச் சத்திகளாற் கருதில்
தகவதுவே மத்திமையாஞ் சத்தமுட னத்தந்
தான்விளங்கச் சாற்றிடுதல் வைகரியாந் தானே.

பொழிப்புரை: எழுத்துக்களுள் முதலாவதான அகரம், உறங்கும் பாம்பு போன்று குண்டல வடிவமாக உள்ள வாமையாலும் தண்ட ரூபமாக உள்ள ஜியேஷ்டையாலும் இரண்டு கலைக்கொம்பு போன்ற வடிவுடைய ரௌத்திரியாலும் தோன்றும். அந்த அகர எழுத்தையே பிரம்மம் எனக் கூறுவர். அகரம், வேத ஆகமங்களுக்கு உபாதான காரணமாகும் இயல்பால் விரிந்து விருத்தி பெற்று "ஆ" எழுத்து முதலான பதினைந்து உயிரெழுத்துகளாகவும் ககாரம் முதலான முப்பத்தைந்து எழுத்துக்களாகவும் பரிணமிக்கும். இவ்வாறு முற்கூறப்பட்ட ஐயை முதலான பதினாறு சக்திகளால் வெளிப்படும் தன்மையாக இருப்பது மத்திமை வாக்காகும், சப்தத்துடன் அர்த்தமானது விளங்கப் பிறர் செவிக்குக் கேட்கக் கூறுதல் வைகரி வாக்காகும்.

அ.கை: மேல் அகாராதி அக்ஷரங்களுக்குத் தேவதைகள் கூறுகின்றது.

80. ஏற்றியிடு மீரெட்டா யகாராதி யுயிரை
யீறில்சிவ னதிட்டிப்ப னிவ்வுயிர்கட் குடலாய்ப்
போற்றியிடுங் ககாராதி முப்பத் தைந்தைப்
பொருந்தியதிட் டித்திடுவர் சத்தியிவர் புணரத்
தோற்றியிடும் வாக்காதி யனைத்து மாமாற்

றாயோன்பேர் வாகீச ரென்று சொல்வர்
சாற்றிடுவா கீசுரியாம் பேரு மந்தச்
சத்திக்கா மைங்கலைக டனிலுமுள தானே.

பொழிப்புரை: அகரம் முதலான பதினாறு உயிரெழுத்துக்களையும் நித்தியமாக உள்ள சிவன் அதிட்டித்து விளங்குவான். இந்த உயிரெழுத்துக்களுக்கு உடலாகச் சொல்லப்படும் ககாரம் முதலான முப்பத்தைந்து எழுத்துகளையும் சிவசக்தியானவர் அதிட்டித்து நிற்பார். சக்தியும் சிவனும் இணைந்து அதிட்டிக்க சூக்குமை வாக்கு முதலான அனைத்து பிரபஞ்சங்களும் தோன்றும். ஆகையால் நின்மலமாக உள்ள சிவனுக்குப் பெயர் வாகீசர் எனப் பெரியோர் கூறுவர். வாகீசுவரன் எனக் கூறப்பட்ட சிவனின் சக்திக்கு, வாகீசுவரி எனப்படும் பெயரும் பொருந்த விளங்கும். இந்த வாக்குகள் நிவிர்த்தி முதலான ஐந்து கலைகளிலும் உள்ளனவாகும்.

அ.கை: மேல் இந்த வாக்குக்கள் ஆன்மாக்களைப் பந்தித்து நின்று நீங்கும் முறை கூறுகின்றது.

81. உரைசெய்த வாக்குகடா நாலுநிவிர்த் தாதி
யோரைந்து கலைகளுள வுயிர்கடமக் குணர்வாய்த்
திரையுந்தண் கடலதுவாம் போலுளத்தே யுதித்துச்
சித்தாதி யிற்றிகழ்தல் செய்யுமிது பந்தம்
கரையின்றி விளங்குசிவ ஞானமுயிர்ப் பேறாங்
காலமுறி லாணவத்தின் களிம்புடனே தானும்
பரையின்றன் பேரறிவா மொளியதனா னீங்கும்
பரிதிமுன ருடுவொளியு மிருளுமறும் பரிசே.

பொழிப்புரை: கூறப்பட்ட வாக்குகள் நான்கும் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யை, சாந்தி, சாந்தியதீதை என்னும் ஐந்து கலைகளிலும் தூலதரம், தூலம், மத்திமை, பைசந்தி, சூக்குமை என ஐந்தாக விளங்கி இடம்பெறும். ஆன்மாக்களுக்கு அறிவுமயமாகி, குளிர்ந்த கடலில் அலைகள் உண்டாவது போன்று விருத்தி ஞானம் விளங்குவதற்கு இடமாகி, சித்தம் முதலான தத்துவங்களில் விளங்கும். இவ்வாறு விளங்கும் வாக்கே முதன்மையான பந்தம் என நிற்கும். எல்லையற்று விளங்கும் சிவஞானம் உயர்ந்த ஆன்மப் பேறாக விளங்கும் காலம் வந்தபொழுது ஆணவமலத்துடனே இந்த வாக்கும் பராசக்தியிடம் உண்டாகிச் சிவனுடைய வியாபகமாக உள்ள ஞானம் என்பதனால் நீங்கி நிற்கும். இவ்வாறு ஆணவமும் பிரகாசருபமான

வாக்கும் ஞானவொளியால் நீங்குவது எது போலும் எனில் சூரியனின் தோற்றத்தில் நட்சத்திர ஒளியும் இருளும் நீங்கி நிற்பது போன்று ஆகும்.

அ.கை: மேல் சுத்த தத்துவங்களுடைய உற்பத்திக்கிரமம் கூறுகின்றது.

82. சிவன்சத்தி நாதவிந்துத் தனையதிட்டித் திடவே
சேருமதன் பெயர்தமக்குந் தம்பெயரு மதற்காய்ப்
பவன்சுத்த காலமுட னியதிகலை யாதி
பலவாக்கிப் புவனங்கள் பதினைந் தாக்கித்
தவம்பெற்றுச் சிவசமனா மபர முத்தி
தனையடைவோர்க் கவ்விடத்திற் றனுவாதி யாக்கி
யவம்பற்றி லனுசதா சிவர்களுறை வாக
வாக்குவர்சா தாக்கியத்தை விந்துவினி லருளால்.

பொழிப்புரை: சிவனின் சக்தி நாதத்தையும் விந்தையும் அதிட்டித்துச் செலுத்த, நாதம் விந்து எனும் பெயர் முறை சிவனுக்கும் சக்திக்கும் உரியதாகி, சிவம் சக்தி எனும் பெயர்வழக்கு நாத விந்துக்களுக்குப் பொருந்தும். பவன் எனும் சிறப்புப்பெயருடைய சிவன், அருட்பெருக்கால் சுத்தமாயையில் சுத்தகாலம் எனும் தத்துவத்துடன் நியதி கலை முதலான சுத்த தத்துவங்களையும் தாத்துவிக வடிவமான திவ்ய போகம் முதலான பலவற்றையும் உண்டாக்கிப் பதினைந்து புவனங்களைத் தோற்றுவித்து தவத்தைச் செய்து அபரமுத்தித் தானமாகிய சிவதத்துவம் சக்திதத்துவம் ஆகியவற்றில் சிவசமமாக உள்ள ஆன்மாக்களுக்கு வேண்டிய தனு, கரணம் முதலானவற்றை உண்டாக்கி, துக்கமற்ற அனுசதாசிவர்கள் என்னும் ஆன்மாக்களுக்குரிய இருப்பிடமாகச் சாதாக்கிய தத்துவத்தையும் உண்டாக்குவார்.

அ.கை: மேல் சிவன் சடத்துவ வியாபியாய் நிற்பரென்பது கூறுகின்றது.

83. இந்தவகை தத்துவங்க ளனைத்தினிலுஞ் சிவன்றா
னிசைந்தந்தத் தொழில்களெலாஞ் சத்தியா லியற்றும்
அந்தவகை யாலதன்பேர் சத்திக் காக
வப்பெயருந் தனக்காக வடைவன்றன் னருளால்
சுந்தரமாஞ் சத்தியோர் தத்துவத்தே யதிகத்
தோற்றரவாற் சத்தியென்றே சொல்வர்சிவன் றானும்
மந்திரங்கள் பதங்களுடன் வன்னபுவ னாதி
மற்றெவற்றும் பிரிவறவே மருவிநிற்பன் றானே.

பொழிப்புரை:இவ்வாறு கூறப்பட்ட தத்துவங்கள் அனைத்திலும் சிவன் பொருந்தி அந்தந்தத் தத்துவத்திற்குரிய செயல்கள் அனைத்தையும் சக்தியால் இயற்றுவார். சக்தியின் வாயிலாகச் செய்வதால் அந்தந்தத் தத்துவத்தின் பெயர் சக்திக்காகவும் சத்தியின் பெயர் சக்திமானாகிய தமக்காகவும் அருளால் அடையும் முறை உண்டு. மனோகரமாக விளங்கும் சிவசக்தி ஒவ்வொரு தத்துவத்திலும் ஆதிக்கம் செலுத்துவதாக விளங்குவதால் அந்த அந்த தத்துவத்துக்கும் சக்தியே தேவதை என அறிவுடையோர் கூறுவர். அங்ஙனமாயின் சிவனுக்கு ஆதிக்கம் இல்லையோ எனில் சிவன் மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை ஆகிய அத்துவப் பிரபஞ்சத்தில் என்றும் நீங்காமல் பொருந்தி விளங்குவார்.

அ.கை: மேல் சதாசிவத்துக்கு நாயகராகக் கன்மசாதாக்கியர் உற்பத்தி கூறுகின்றது.

84. பஞ்சசத்தி விந்துவினிற் பதியுங் காலைப்
பரிதியொளி காந்தத்தே பதிந்த போழ்தில்
வீஞ்சுசுட ருதித்ததுபோற் கலாசத்தி யைந்தை
வேறறவே யீசானி யாதி யைந்தாம்
எஞ்சலிலாப் பஞ்சமந் திரசத்தி யுதிக்கு
மிவைதனுவாக் கருமசா தாக்கியந்தா மிசைந்தே
தஞ்சமா யனைத்துயிர்க்கும் கருணை செய்யந்
சதாசிவதத் துவத்திறையாய்த் தரிப்பர் தாமே.

பொழிப்புரை: பரை முதலான ஐந்து சக்திகளும் சுத்தமாயையில் பதிந்து செயற்படுத்தும் போது சூரியகாந்தக் கல்லில் சூரிய ஒளிக்கதிர் பதிந்தபொழுது மிகுதியான அளவில் நெருப்பு உண்டாவது போல் சாந்தியதீதை முதலான கலாசக்திகள் ஐந்தையும் பின்னமறப் பொருந்தியுள்ள ஈசானி முதலாக உள்ள ஐந்து சக்திகள் வடிவாகக் குறைவில்லாத ஐந்து மந்திர சக்திகள் உதிக்கும். இந்த மந்திர சக்திகள் ஐந்தையும் திருமேனியாகக் கொண்டு கன்ம சாதாக்கியராக வெளிப்பட்டு எல்லா ஆன்மாக்களுக்கும் தஞ்சமாய் நின்று கருணை செய்வதற்காகச் சதாசிவ தத்துவத்திற்கு நாயகராகப் பொருந்துவார்.

அ.கை: மேல் சதாசிவர் ரூபாரூபமாய் நிற்கும் முறைமை கூறுகின்றது.

85. உருவுளதாம் விந்துவிலே யுருவ தில்லா
உயர்சத்தி யோரைந்து முற்றுண் டாக்க
வருவதனால் மந்திரங்க ளருவா ருவாய்
மதித்திடுவ ரவைதனுவா மன்ன லாலே
திருமருவு சதாசிவர்தா முருவா ருபஞ்
சிவனவரை வேறறவே திகழ்ந்து நின்று
பொருவிலருள் புரிந்திடுவ ருத்தி யுத்தர்
போகத்த ரெனும்பெயரும் பொருந்தி நின்றே.

**பொழிப்புரை:** உருவங்களை உண்டாக்கும் சுத்தமாயையில், உருவற்று விளங்கும் உயர்வான பரை முதலான ஐந்துசக்திகளும் பொருந்தித் தோற்றுவிக்க. ஐந்து மந்திரங்கள் வெளிப்படுதலால் அவற்றை அரு உருவாகவே (சகல நிட்களமாகவே) ஆய்ந்து உணர்ந்திடுவர். அந்த மந்திரங்களையே திருமேனியாகக் கொள்வதால் சிவச்சீர் பொருந்தியுள்ள சதாசிவப்பெருமானும் அருவுருத் தோற்றம் வாய்ந்தவராவர். நின்மலசிவன் சதாசிவரோடு பின்னமற விளங்கிநின்று ஆன்மாக்களுக்கு ஒப்பில்லா வகையில் அனுக்கிரகம் புரிவார். சதாசிவரே உத்யுக்தர் என்றும் போகத்தர் என்றும் வேறு பெயர்களையும் பொருந்தி நிற்பார்.

**அ.கை:** மேல் சதாசிவர் தனுவாதிகளுடன் கூடிநின்று ஆன்மாக்களுக்குப் பஞ்சகிருத்தியம் பண்ணுவரென்பது கூறுகின்றது.

86. ஈசானி யாதியைந்தும் தனுவ தாக
இச்சையறி வியற்றிடலுட் கரண மாகத்
தேசான வாரணியை முதலா மூன்று
திகழ்சத்தி முக்குணமாத் திருந்தக் கொண்டே
வாசாம கோசரமாஞ் சிவன்றான் றூய
வாமாதி நவசத்தி மருங்கே சூழ
ஆசான வாணவத்தின் பருவ நோக்கி
ஐந்தொழில்கள் புரிபவனான் மாக்கட் காயே.

**பொழிப்புரை:** ஈசானி முதலான ஐந்து சக்திகளும் திருமேனியாக, இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்திகள் அந்தக் கரணங்களாக, ஒளிமிக்க ஹாரிணி, ஜனனி, ரோதயித்ரி என விளங்கும் மூன்று சக்திகளும் சாத்துவிகம், ராஜஸம், தாமஸம் எனும் குணங்களாக ஏற்புடைய வகையில் கொண்டு வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத சிவன், தூய்மைமிக்க வாமை முதலான சக்திகள் ஒன்பதின்மரும் பக்கங்களில் சூழ்ந்திருக்க

ஆன்மக்குற்றமாக விளங்கும் ஆணவம் பக்குவமடைவதற்காகத் திருநோக்கு அளித்து அனைத்து ஆன்மாக்களுக்காகவும் ஐந்தொழில்களைச் செய்தருள்வார்.

**அ. கை:** மேல் ஐந்து விருத்தங்களால் சதாசிவருடைய கிருத்தியம் கூறுகின்றது.

87. மருவுசா தாக்கியத்தே யீசுரதத் துவத்தை
வருவித்து மற்றதனிற் சுத்த வித்தை
தருவதுஞ்செய் திம்மூன்று தத்துவங்க டமிலே
தருபுவன மூவாறு தானு மாக்கி
இருவினைக டாமாய்ந்து மாயையுநீங் கிடவே
யிசைந்திடுமா ணவமொக்றே யியல்ப தாகி
உருவமுடன் குணங்கிரியை யாதி யின்றி
யுற்றுடைய விஞ்ஞான கேவலர்தம் பாலே.

பொழிப்புரை: சதாசிவர் பொருந்தியுள்ள சாதாக்கிய தத்துவத்தில் ஈசுவர தத்துவத்தைத் தோற்றுவித்து, ஈசுவர தத்துவத்தில் சுத்தவித்யா தத்துவத்தைத் தோன்றும்படிச்செய்து சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்யை ஆகிய மூன்று தத்துவங்களில் முறையாகப் பதினெட்டு புவனங்களை உண்டாக்கி, நல்வினைப்பயன் தீவினைப்பயன் வடிவாக உள்ள கன்மங்கள் நீங்குவதால் மாயையும் நீங்கி நிற்க எஞ்சியுள்ள ஆணவமலம் ஒன்றையே இயல்பாகக் கொண்டு தேகம், இந்திரியம், அந்தக்கரணம், சாத்துவிகம் முதலான குணங்கள், கை கால் முதலான உறுப்புகளின் தொழிற்பாடு ஆகியவையெல்லாம் இல்லாமல் விளங்குகின்ற விஞ்ஞான கேவலர்க்காக மேற்கூறப்பட்ட சதாசிவப் பெருமான் ஐந்தொழில் செய்து நிற்பார்.

88. சேர்ந்திடிற்றீ விரதரமாஞ் சத்தி பாதம்
சிவமாகப் பரமுத்தி சேர்ப்பனவர்க் கன்றே
சார்ந்தவர்கள் தீவிரமாம் சத்தி பாதம்
தானைந்து பேதமா மதிலுயர்ந்தோர் தம்மைப்
போந்திடவே யபரமுத்தித் தானத்தே பொருத்திப்
புனிதமா ஞானமுடன் முதன்மையெலாம் பொருந்தி
வாய்ந்திடவச் சிவசமமா மன்ன வைப்பன்
மற்றவருக் கிளம்பருவ மன்னி னோர்க்கே.

**பொழிப்புரை:** விஞ்ஞான கலருள்ளே சிலருக்கு தீவிரதரம் எனும் சத்திநிபாதம் பொருந்தினால் அவர்கள் உடனே சிவமாகும்படி மேலான முத்திப்பேற்றைச் சதாசிவர் வழங்குவார்: தீவிரமான சக்திநிபாதம் விஞ்ஞானகலர்க்கு ஐந்து விதங்களாக நிகழும் (குறைவு, அதிகம், மிக அதிகம், மிகவும் அதிகம், உயர்வானது என) இவற்றுள் மிகவும் உயர்ந்த சத்திநிபாதம் வாய்த்துள்ள ஆன்மாக்களை அபரமுத்தித்தானமான சிவதத்துவத்திலே இருத்தி அருள்வார் சதாசிவர் .அவர்களுக்கு மிகவும் தூய்மையனவான சர்வக்ஞதை, திருப்தி, அனாதிபோதம், சுவதந்திரதை, அலுப்த சக்தி, அனந்த சக்தி எனும் ஆறுகுணங்களும் விளக்கம் பெற்று ஒளிருமாறு செய்து அவர்கள் சிவத்துக்குச் சமமாகத் திகழ்ந்திருக்குமாறு செய்தருள்வார், மற்றும் இந்த வகை ஆன்மாக்களுக்குக் குறைவான நிலையில் மலபரிபாகத்தைப் பொருந்தியுள்ள விஞ்ஞான கலர்களும் அங்கே உண்டு.

89. இருளொழித்திட் டெவ்வறிவு முதலா வுள்ள
 இருமூன்று குணம்விளங்கி யெங்கு மாக
அருள்புரிந்து விந்துவாந் தத்து வத்தே
 யமர்விப்ப ரளவிறந்த போக மாரப்
பருவத்தே யவர்க்கீன மாகப் பெற்ற
 பான்மையோர் மூவகையோர் நீக்கி
உருவத்தை யுடைத்தாய கதாசி வேச
 ருருத்திரர்க ளாகவறி வோங்கச் செய்தே.

**பொழிப்புரை:** இவ்வாறு அடுத்த நிலையில் உள்ள விஞ்ஞானகலர்க்கு ஆணவமல சக்தியை நீக்கி சர்வக்ஞத்துவம் முதலான ஆறு குணங்களும் அவர்களிடம் விளங்குமாறு செய்து, வியாபக நிலையில் விளங்க அருள்புரிந்து அளவற்ற திவ்விய போகம் துய்க்கும் வகையாக அவர்களை விந்து எனும் தத்துவத்தில் இருத்தி வைப்பார். சக்தி தத்துவத்து விஞ்ஞானகலர்க்கு சதாசிவ தத்துவத்தில் இருக்கும் விஞ்ஞானகலர் குறைவான மலபரிபாகம் உடையோராவர். இவ்வாறே சதாசிவ தத்துவத்தில் இருப்பவர்களுக்கு ஈசுவர தத்துவத்தில் இருப்போரின் பரிபாகம் குறைவு: ஈசுவர தத்துவத்தில் இருப்போர்க்கு சுத்தவித்யா தத்துவத்தில் இருப்போரின் மலபரிபாகம் குறைவு. இவ்வாறு பரிபாக பேதத்தால் மூன்று நிலைகளில் உள்ள விஞ்ஞானகலர்களுக்கு மலப்பற்றாகிய மாசினை நீக்கி தேகம் இந்திரியம் கரணம் ஆகியவற்றை உடைய அனுசதாசிவர், ஈசுவரர், உருத்திரர் எனும் பெயர்களை முறையே உடைய ஆன்மாக்களுக்கு ஞானப்பேறு மிகுந்து விளங்கச் செய்வார்.

90. விஞ்ஞான கலர்தமக்கு வினைக ளின்றால்
மேவுமல பரிபாக விதத்துக் கீடாய்
அஞ்ஞான மல்லாத காய மாதி
யாக்கிடுவ ரவரவர்கட் காகு மாறே
எஞ்ஞான்று மின்பமே துன்ப மின்றி
யிசைந்திருக்கச் சுத்தவித்தை யீசர்சதா சிவத்தே
மெய்ஞ்ஞானம் பெற்றிருந்து பிரளயகா லத்தே
மேவீடுவர் பரமுத்தி யிவரெனவே விளம்பும்.

பொழிப்புரை: விஞ்ஞானகலர்களுக்குப் பந்திக்கும் வினைப்பயன்கள் இல்லை. எனவே அவர்களின் மலபரிபாகத்தன்மைக்கு ஏற்றவாறு அந்த அந்த ஆன்மாக்களுக்கு எத்தகைய தனு கரணம் வாய்க்க வேண்டுமோ அத்தகைய தனுகரணங்களை அவர்களுக்கு ஞானமயமாக ஆக்கிக் கொடுப்பார் சதாசிவர். எப்பொழுதுமே துக்கம் என்பது இல்லாமல் சுகமே விளைந்திருக்க, சுத்தவித்தை, ஈசுவரம், சதாசிவம் எனும் தத்துவங்களிலே அவர்கள் இருக்கை கொண்டு சிவஞானப்பேறு வாய்க்கப்பெற்றவர்களாகத் திகழ்ந்து பிரளய கால முடிவில் மேலான முத்திநிலையை அடைந்து விளங்குவார்கள்.

91. அஞ்சுமுகத் தால்வேத மாக மாதி
அருள்புரிந்திட் டனைவோர்க்கு மவர்க டம்முள்
விஞ்சுதொழின் ஞானவனந் தேசர் தம்மை
மேவுவித்து மகேசுரதத் துவத்ததிப ராக
எஞ்சலிலா வதிகார சத்தியவர் பாலி
லிருத்தித்தா னிரண்டறவே யிசைந்து நின்று
நஞ்சனைய வதோமாயா காரியத்தைப் புரிய
நண்ணிடுவர் பிரவிருத்த ரெனவருளா னாமம்.

பொழிப்புரை: தமக்கு வாய்த்துள்ள சத்தியோ ஜாதம் முதலான ஐந்து திருமுகங்களாலும் வேதங்களையும் சிவாகமங்களையும் முறையாக வெளிப்படுத்தி எல்லா ஆன்மாக்களுக்கும் பிரதிசம்மிதை முறையிலும் மகௌக முறையிலும் உபதேசித்து அருள்புரிவார். மகௌக முறையில் உபதேசம் பெற்று, அஷ்டவித்யேசுவரர்களுக்குள் மிகுதியான ஞான, இச்சை, கிரியா சக்திகளை உடையவராய் உயர்ந்துள்ள அனந்தேசுவரரை அவர் மகேசுவர தத்துவத்துக்கு அதிபதியாக நியமித்து, குறைவுபடாத அதிகார சக்தியை அவரிடத்திலே நிலை நிறுத்தித் தாம் இரண்டறப் பொருந்தி நின்று விளங்குவார். அனந்தேசுவரரும் நஞ்சு மயமாகக் காணும்

அதோமாயை (மிசிரமாயை, அசுத்தமாயை) தொடர்பான காரியங்களை அருளால் முறைப்படிச் செய்துகொண்டிருப்பார். அந்த நிலையில் அவர் பிரவிருத்தர் எனும் சிறப்புப்பெயரையும் பொருந்தி விளங்குவார்.

**அ.கை:** மேல் இந்தப் பதி சகலராகிய ஆன்மாக்களுக்குத் தியான பூசாநிமித்தம் ரூபமாகவும் ரூபாரூபமாகவும் அரூபமாகவும் திருமேனி கொண்டாரென்பது கூறுகின்றது.

**92.** ஞானமே வடிவாமாற் சத்தரரு வாகும்
ஞானமுடன் கிரியையொத்து நண்ணியிடும் வடிவ
மானதா லுத்தியுத்தர் ரூபா ரூப
மாயிடுவர் கிரியைதா னதிக மாகி
ஊனமா ஞானமுட னுதித்த வாற்றா
லுருவமாம் பிரவிருத்த ருணரின் மூன்றும்
ஈனமா நம்பாச மொழிக்கப் பாவித்
திடப்பூசித் திடவணங்கி யேத்த வென்றே.

**பொழிப்புரை:** ஞானசக்தியையே வடிவாகக் கொண்டிருப்பதால் சத்தர் எனும் பதி அருவநிலையில் (நிட்களம்) விளங்குவார். ஞானசக்தி, கிரியாசக்தி இரண்டும் சமமாக விளங்கும் திருமேனியைக் கொண்டுள்ள காரணத்தால் உத்யுக்தர் எனும் பதி அரு-உருவ (சகளநிட்கள) நிலையில் விளங்குவார்: ஞானசக்தி குறைந்தும் கிரியாசக்தி மிகுந்தும் உள்ள திருமேனியைக் கொண்டுள்ளதால் பிரவிருத்தர் எனும் பதி உருவநிலையில் (சகளம்) விளங்குவார். பதியின் இந்த மூன்று நிலைகளையும் ஆய்ந்து உணர்ந்தால் இவை முறையே நம்முடைய பொல்லாத பாசம் நீங்கும் வகையில் தியானம் செய்வதற்காகவும், தியானமும் வழிபாடும் செய்வதற்காகவும் தோத்திரமும் வணக்கமும் செய்வதற்காகவும் எனப் புலனாகும். (தியானம் செய்வதற்கு உரியது நிட்களம்: தியானமும் பூசையும் செய்வதற்குரியது சகளநிட்களம்: தோத்திரமும் வணக்கமும் செய்வதற்கு உரியது சகளம்).

**அ.கை:** மேல் இந்த மூன்றுவிதமாக நின்ற பதி பிரபஞ்சத்தில் நிற்கும் முறைமை கூறுகின்றது.

**93.** ஈசருல கனைத்தினையு முருவ மாக
விசைந்துலகுக் குயிருமா யிருப்பர்சதா சிவராம்
தேசருல கனைத்தினுக்கும் பரமகா ரணமாய்ச்
சிந்திக்கப் படுமவராந் திகழுஞ்சிற் றுயிர்கள்

நெசவருட் சத்தருல கனைத்தினுக்கு மதீத
நிலையாக நின்றிடுவர் நினைப்பவரி தாயே
மாசரிதை யறியாமற் றேவரிலே யொருவன்
மாதேவ னென்றுரைக்கும் வாய்மைபழு தாமால்.

**பொழிப்புரை:** பிரவருத்தர் எனப்படும் ஈசராகிய பதி அனைத்து உலகங்களையும் திருமேனியாகப் பொருந்தி அவைகளுக்குப் பிராணனாகவும் விளங்குவார்: ஒளிமயமாக விளங்கும் உத்யுக்தராகிய சதாசிவர் எனும் பதி அனைத்து உலகங்களுக்கும் மூலமான, மேலான காரணம் என நின்று, ஞானசொரூபமான ஆன்மாக்களால் தியானம் செய்யப்படுபவராய் விளங்குவார். இயல்பாகவே கிளர்ந்தெழும் அருள்மயமாக இருக்கும் சத்தர் எனும் பதி, எல்லா உலகங்களையும் கடந்த அதீத நிலையில் நின்று, ஆன்மாக்களால் தியானம் செய்வதற்கு அரியவராக விளங்குவார். இவ்வாறு மூன்று நிலைகளில் உலகுயிர் நிமித்தம் விளங்கும் பதியின் இயல்பை அறிந்துகொள்ளாமல் அஞ்ஞானிகள் மகாதேவனாகிய சிவபெருமானை பிரமன் முதலான தேவர்களுக்குள்ளே ஒருவன் எனக்கூறும் முறைமை மிகவும் குற்றமாகும்.

**அ.கை:** மேல் கன்ம சாதாக்கியரிடத்திலே நின்றும் மகேசுவரர் உற்பத்தியும் அவரிடத்திலேநின்றும் பிரமாதி தேவர்கள் உற்பத்தியும் இரண்டு விருத்தங்களால் கூறுகின்றது.

94. கருமசா தாக்கியத்தே யிருபத் தைந்தாய்க்
கருதுமகே சுரருதிப்ப ரவர்தங் கண்ணே
வருவருத் திரனயன்மா லிதயந் தன்னில்
வலமதனில் வாமத்தில் மருவியிட வடைவே
உருவொளியா மருக்கன்மதி வன்னி தானு
முதிப்பரவர் நேத்திரங்க ளொருமூன்றி னிடத்தே
சுருதிசிவா கமமுதலா மபர ஞானந்
தோன்றுமவர் வாக்கிடத்தே சுவாசத்தே காற்றும்.

**பொழிப்புரை:** கன்மசாதாக்கியரிடமிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு அம்சமாக இருபத்தைந்து மகேசுவர மூர்த்தங்கள் வெளிப்படும். மகேசுவரரின் இருதயத்தில் உருத்திரனும், வலது பாகத்தில் பிரம்மாவும், இடது பாகத்தில் விஷ்ணுவும் தோன்றுவர். ஒளிமயமாக விளங்கும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியோர் மகேசுவரரின் வலக்கண், இடக்கண், நெற்றிக்கண் ஆகியவற்றிடமிருந்து முறையே தோன்றுவார்கள். அவரது வாக்குத்

தானத்திலிருந்து வேதம் சிவாகமம் ஆகிய அபரஞான சாதனங்கள் வெளிப்படும். மூச்சிலிருந்து வாயுதேவன் தோன்றுவான்.

95. களமதனி லுதித்திடுவர் கணேசரறு முகராங்
கந்தரித யத்துதிப்பர் கன்னந் தன்னில்
உளவதுவாங் கீலகந்தான் முனிவர் கோடி
யுதித்திடுவ ருரோமங்க டம்மி லோங்க
வளநிலவு தேவர்களைம் பதுவாங் கோடி
வந்திடுவ ருதரத்தே மற்றி வற்றால்
அளவிறந்த வுலகுடல்க ளாதிக் கீச
னபின்னமா னிமித்தவுபா தான மாவன்.

பொழிப்புரை: மகேசுவரரின் கழுத்திலிருந்து கணபதி தோன்றுவார், இதயத்தானத்திலிருந்து அறுமுகப் பெருமான் எனும் கந்தர் தோன்றுவார். கபோலங்களிலிருந்து கீலகமந்திரங்கள் தோன்றும்: மயிர்க்கால்களிலிருந்து முனிகணங்கள் கோடிக்கணக்கில் ஒளிமிக்கவர்களாய் வெளிப்படுவர். வயிற்றுத் தானத்திலிருந்து ஒளியும் ஆற்றலும் மிக்க ஐம்பது கோடி தேவர்கள் வெளிப்படுவர். மேலும் இவ்வாறு கூறப்பட்டடுள்ள முறையால் அளவற்ற பிரபஞ்சங்களுக்கும் தனு கரணம் முதலானவைகளுக்கும் தான் வேறற விளங்குவதால், மகேசுவரன் நிமித்த உபாதான காரணன் என விளங்குவான்.

அ.கை: மேல் ஸ்ரீகண்ட பரமேசுவரன் உற்பத்தியும் அவர் பண்ணும் கிருத்தியமும் கூறுகின்றது.

96. சேர்ந்திடவே சுத்தவித்தைக் கிறைவ ராகச்
சிறீகண்ட வுருத்திரரைத் திகழ நோக்கி
வாய்ந்திடவே யவராலே கலையதனில் வித்தை
மற்றுமதி லவ்வியத்தங் குணங்க ளெல்லாம்
ஆய்ந்தவரால் வேதமுட னாக மாதி
யயன்திருமால் முதலோர்க ளவுனி மீதே
போந்துலகி லுள்ளோர்கட் குரைக்க வன்னோர்
புனிதமாம் போதத்தைப் பொருந்தத் தானே.

பொழிப்புரை: சுத்தவித்யா தத்துவத்துக்கு அதிபராக ஸ்ரீகண்ட ருத்திரரை மகேசுவரர் நற்பயன் விளங்கத் தோற்றுவிப்பார். ஸ்ரீகண்ட ருத்திரரால்

கலை எனும் தத்துவத்திலிருந்து வித்யா தத்துவத்தையும் பிரகிருதியையும் சாத்விகம் முதலான குணவிகற்பங்களையும் பொருத்தமான முறையில் தோற்றுவிக்கப்படும். மேலும் ஸ்ரீகண்ட ருத்திரரே வேத சிவாகமங்களை “இன்னார்க்கு இது” எனப் பக்குவமறிந்து பிரமன், திருமால் முதலானவர்களுக்கு உபதேசித்து அருள்வார். உலகில் உடலெடுத்துத் தோன்றியுள்ள ஆன்மக் கூட்டங்களுக்குத் தூய சிவஞானம் பிரகாசித்து நிற்கும் வகையில் அனுக்கிரகம் புரிவதற்காக விளங்குபவரே ஸ்ரீகண்ட பரமேசுவரர்.

அ.கை: மேலே இந்த ஸ்ரீகண்ட உருத்திரரே சகலாராகிய ஆன்மாக்களுக்குப் பரதத்துவர் என்பது கூறுகின்றது.

97. இந்தவருட் சீகண்ட உருத்திரரே சகலர்க்
கீறில்பர தத்துவமென் றியம்புவது மிவரே
வந்தருளி யெவ்விடத்து மவரவர்செய் பூசை
வகையனைத்து நோக்கியே மாசிலரு ளாலே
தந்திடுவர் புத்தியுடன் சித்தி முத்தி
சாலோக சாமீப சாரு பங்கள்
சிந்தைசெயி லிவரிடத்தே யாகு மிக்க
தேவர்முனி வோர்க்கருள்செய் தேசிகனித் தேவே.

பொழிப்புரை: அருள் நோக்கம் கொண்டுள்ள ஸ்ரீகண்ட ருத்திரரே சகலவர்க்கத்து ஆன்மாக்களுக்கு நித்தியமாக உள்ள பரதத்துவ நிலையினர் என நூல்களில் கூறப்பட்டிருப்பதும் ஆகும். இந்த ஸ்ரீகண்ட ருத்திரரே அந்த அந்த ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டு வகைகளை எல்லாம் கண்டு மகிழ்ந்து பாரபட்சமற்ற அருள்திறத்தால் போகப் பேறுகளையும் அணிமா முதலான சித்திகளையும் வீடுபேற்றையும் கொடுப்பவர். ஆழ்ந்து நோக்குமிடத்து சாலோகம், சாமீபம், சாரூபம் என உள்ள பதமுத்திகள் எல்லாம் இவராலே வழங்கப்படுவனவாகும் எனத் தெளியலாம். இவரே எண்ணிறந்த தேவர்களுக்கும் முனிகணங்களுக்கும் அனுக்கிரகம் செய்யும் குருமூர்த்தியுமாவர்.

அ.கை: மேல் மகேச்சுவரர் பிரளயாகலர்க்கு மல கன்மங்களை நீக்கிப் பரமமோக்ஷத்தைக் கொடுப்பரென்றும், இருவினையொப்பு மலபரிபாகம் அற்பம் பொருந்தினவர்களுக்கு வினையை ஒழித்து உருத்திரர் அணுக்களாகப் பண்ணுவரென்பதும் கூறுகின்றது.

98. மிக்கதோர் பக்குவத்திற் பிரளயா கலர்க்கும்
வினையொழித்துப் பரமுத்தி மேவு வித்தே
ஒக்கவிரு வினையனைத்து மலபாக மிகவு
முறாதற்ப முற்றவர்கட் கொழித்துவினை யனைத்தும்
தக்கவதி காரமல மாத்திரமே நிறுத்தித்
தாவிலுருத் திரராகத் தானருளைப் புரிந்தே
துக்கமிலாப் புவனேச ராகச் செய்வர்
தொலைகால முலகமெலாஞ் சுத்தமுத்தி யிவர்க்கே.

**பொழிப்புரை:** சகலரினும் உயர்ந்துள்ள பிரளயாகலர்க்குத் தீவிரதர சத்திநிபாதம் பொருந்தும்போது மாயையையும், கன்மத்தையும் நீக்கி மேலான முத்திப்பேற்றை மகேசுவரர் வழங்கி அருள்வார்: இருவினை சமப்பட்டும் மலபரிபாகம் குறைவாகவே பொருந்தப் பெற்றுள்ளவர்களுக்கு நல்வினைப்பயனும் தீவினைப்பயனும் அழிந்து போகும்படிச்செய்து மலபரிபாகத்துக்குத் தக்கவகையில் அதிகாரமலத்தை மட்டுமே நிலைநிறுத்தி சுத்தவித்யா தத்துவத்தில் ருத்திரவர்க்க ஆன்மாக்களாக இருக்கும் வகையில் மேலான அனுக்கிரகம் செய்து துக்கம் என்பதற்றுச் சுகம் மட்டுமே துய்க்க வாய்ப்புள்ள புவனங்களுக்கு அதிபர்களாக அவர்களை நியமிப்பர். பிரபஞ்சங்கள் ஒடுங்குகின்ற இலய காலத்தில் இந்த ருத்திர ஆன்மாக்களுக்கு மேலான முத்திப்பேற்றைக் கொடுப்பர்.

**அ.கை:** மேல் ஈசுரசத்தி அதோமாயையைப் பொருந்தி ஆன்மாக்களுக்குத் தனுவாதியைப் பண்ணாநின்ற மாயை காலமாதியான அசாதாரண தத்துவங்களையும் சாதாரண தத்துவங்களையும் தாத்துவிகங்களையும் உண்டாக்கிப் பிரபஞ்சகிருத்தியம் நடத்தும் முறைமை கூறுகின்றது.

99. எண்ணிலுயி ரிருவினைகட் கீட தாக
வீசசத்தி யதோமாயை யிசைந்துதனு முதல்கள்
பண்ணியிடு மாயையுடன் கால மாதி
பரவுயிர்க்கும் வெவ்வேறாம் படியுமிது வன்றி
நண்ணியிடும் புவனங்கட் காதார மாக
நலந்திகழ்சா தாரணமாந் தத்துவங்க டமையும்
தண்ணியதாந் தாத்திகங்க டமையு மாக்கிச்
சகமதனை நடத்தியிட றனையுமினி யுரைப்பாம்.

**பொழிப்புரை:** ஈசுவரசக்தி, எண்ணிறந்த ஆன்மாக்களின் புண்ணிய பாவங்களுக்கு ஈடாக அதோமாயை (மிசிரமாயையும் அசுத்த மாயையும்)

அதிட்டித்து தேகம் கரணம் முதலானவற்றை விளைவிக்கும் மாயையுடன் காலம் முதலான தத்துவங்கள் எல்லா ஆன்மாக்களுக்கும் அசாதாரணமாகத் தனித்தனியே பொருந்துமாறு உண்டாக்கியும் இவையல்லாமலும் புவனங்களுக்கு ஆதாரமாக விளங்க நன்மை மிகும் சாதாரணமான தத்துவங்களையும் தத்துவங்களின் காரியமாக அமைவுபெற உள்ள தாத்துவிகங்களையும் உண்டாக்கியும் பிரபஞ்சத் தொடர்பான செயல்களைச் செய்யும் முறைமைப்பாட்டை இனிக்கூறுவோம்.

**அ.கை:** மேல் மகேசுரருடைய பிரபஞ்சகிருத்தியமும் ஸ்ரீகண்ட பகவானுடைய பிரபஞ்ச கிருத்தியமும் கூறுகின்றது.

**100.** ஈசர்சத்தி யால்மாயை கலங்கல் செய்த
விடமாயா தத்துவமா மிதிற்கால நியதி
தேசுருவாங் கலையுதிக்கு முற்பிற்பா டின்றிச்
சேர்ப்பரிதிற் புவனங்க டமையருளாற் சிறக்க
ஆசிலருட் சீகண்ட வுருத்திரர்தாங் கலையி
லவ்வியத்தம் பிரதானம் பிரகிருதி யாகப்
பேசியிடும் பரியாய நாமமுறு மானைப்
பிறப்பிப்பர் வித்தையையும் பினைராகந் தனையும்.

**பொழிப்புரை:** மகேசுவரர் தமது சக்தியால் மாயையை ஓரளவு அசைத்துக் காரியப்பாட்டிற்கு ஏற்றவாறு செய்த நிலையே மாயை எனும் தத்துவமாகும். இந்த மாயா தத்துவத்திலிருந்து ஒரே சமயத்தில் (இது முற்பாடு, இது பிற்பாடு என இல்லாமல்) காலம், நியதி, ஒளி வடிவமான கலை எனப்படும் தத்துவங்கள் உண்டாகும். இந்தத் தத்துவங்களில் அவர் அழகுற, அருளாலே உயிர்களின் நிமித்தம் புவனங்களைத் தோற்றுவிப்பார். பாரபட்சமற்ற அருள்நலம் உடைய ஸ்ரீகண்ட பகவான் கலை எனும் தத்துவத்திலிருந்து அவ்வியக்தம் எனவும் பிரதானம் எனவும் பிரகிருதி எனவும் பல்வேறு பரியாயப் பெயர்களைப் பொருந்தியுள்ள "மான்" எனும் அசுத்தமாயையை உண்டாக்குவார். பின்னர் அதே கலை எனும் தத்துவத்திலிருந்து வித்யா தத்துவத்தையும் அராக தத்துவத்தையும் தோற்றுவிப்பார்.

**அ.கை:** மேல் கலாதி பஞ்ச தத்துவங்களுடைய கிருத்தியம் கூறுகின்றது.

**101.** காலந்தான் வியாபியா யருவ மாகிக்
கழிகால நிகழ்காலம் வருங்கால மென்றே

ஏலுந்தான் பரவுயிர்க ளியற்றுமிரு வினையா
லிசைந்தபல மவரவர்கட் கேயிசைக்கு நியதி
மேலுந்துங் கலையாண வத்தைச் சற்றே
விடநீக்கி யான்மாவி னறிவுதொழில் விளக்கும்
மாலுந்தும் புலனறிவை யாக்கும் வித்தை
மாசதனி லாசையது ராகத்தால் வருமே.

**பொழிப்புரை:** காலதத்துவம் வியாபகமாகவும் அருவமாகவும் இருந்து, இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என இயங்குவது: நியதி தத்துவம் சகல வர்க்கத்து ஆன்மாக்கள் செய்யும் நல்வினை,தீவினைகளால் பொருந்தும் இன்ப-துன்ப விளைவுகளை அந்த அந்த ஆன்மாக்களுக்கு முறை தவறாமல், அரச ஆணை போன்று பொருந்தச் செய்யும்: அடுத்துப் பொருந்தும் கலை என்னும் தத்துவம் ஆணவமலத்தால் நேர்ந்துள்ள மறைப்பைச் சிறிதே நீக்கி ஆன்மாவின் ஞானத்தையும், இச்சையையும், கிரியையும் ஓரளவு மலர்ச்சி பெறச் செய்யும். வித்தியா தத்துவம் ஆன்ம ஞானத்துக்கு மயக்கம் உறுவிக்கும் சப்தம் முதலான விடயங்களை காணச் செய்யும். அராக தத்துவம் ஆன்ம ஞானத்துக்கு அஞ்ஞான வடிவாக உள்ள விடயத்தில் ஆசையைத் தோற்றுவிக்கும்.

**அ.கை:** மேல் புருட தத்துவோற்பத்தியும் அதனுடைய தொழிலும் கூறுகின்றது.

**102.** எண்ணெயுடன் றிரியங்கி யிசைந்த போதங்
கெரிசுடராம் விளக்கான தென்ன வேதான்
பண்ணமருங் காலாதி யவித்தை கூடப்
பஞ்சகஞ் சுகமென்னும் பரிசதனை யுடைத்தாய்
நண்ணியிடும் புருடனாந் தத்துவமே லதனா
னவின்றிடுவ ரான்மாவைப் புருடனென நாளும்
உண்ணவரும் வினைப்பயனுக் கீடாகக் கால
வுருத்திரர்தம் புவனமள வுயிரினைக்கொண் டுழலும்.

**பொழிப்புரை:** எண்ணையும் திரியும் நெருப்பும் கூடினபோது ஒளி வீசும் விளக்காகத் தோன்றியது போன்று, முறைமைபடித் தோன்றிப் பொருந்தும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், எனும் ஐந்து தத்துவங்களும் ஒருசேர இணைவதால் அமையும் பஞ்ச கஞ்சுகம் எனும் சட்டையுடையதாய் புருடன் எனும் தத்துவம் பொருந்தும். அந்தப் புருட தத்துவ பிணைப்பினால் ஆன்மாவை எப்பொழுதும் புருடன் என்று கூறுவார்கள். அந்தப் புருட

தத்துவம், அனுபவத்துக்கு வர உள்ள புண்ணிய-பாப, சுக-துக்க பலன்களுக்கு ஈடாக இறுதிக்கண் உள்ள காலாக்னி ருத்திர புவனம் வரை ஆன்மாவைச் செலுத்திக் கொண்டு உழன்று நிற்கும்.

அ.கை: மேல் ஸ்ரீகண்ட பரமேசுவரன் பிரகிருதியிற் குணங்களை உண்டாக்கிப் பிரம விஷ்ணு ருத்திரர்களைக் குணவதிஷ்டிதராகச் செய்ய அவர் சிருட்டி திதி சங்காரங்களைப் பண்ணுவர் என்பது கூறுகின்றது.

103. பிரகிருதி தனின்மூன்று குணங்களையும் விரித்தே
பிரமன்மா னீலவுருத் திரர்க்களிப்பன் பினாகி
தரையிறுதி யாதியுள தத்துவங்க ளனைத்துந்
தாழ்வறவே யாக்கியளித் தழியுமெனச் சாற்ற
நிரைநிரையே யிராசதத்தைச் சாத்திகதா மதத்தை
நித்தலுந்தா னதிட்டித்து நின்று கொண்டே
உரமுறவே யுலகனைத்து மாக்கியளித் தழிப்ப
ருண்டாகும் படியுமினி மேற்றெரிய வுரைப்பாம்.

பொழிப்புரை: ஸ்ரீகண்ட ருத்திரர் பிரகிருதி மாயையிலிருந்து சாத்விகம் முதலான மூன்று குணங்களையும் விரிவாகத் தோற்றுவித்து அவற்றை முறையே பிரமன், திருமால், நீலருத்திரர், ஆகியோரிடம் பொருத்துவித்து " சித்தம் முதல் மண் ஈறாக உள்ள தத்துவங்கள் அனைத்தையும் குறைவறப் படைத்தும், காப்பாற்றியும், ஒடுக்கியும் செயற்படுங்கள்" என அருளும் நெறியும் தந்து நிற்பர். முறையாக, ராஜஸ குணத்தைப் பிரம்மாவும், சாத்துவிக குணத்தைத் திருமாலும், தாமஸ குணத்தை நீல ருத்திரரும் எப்பொழுதும் அதிட்டித்துக் கொண்டு நின்று, திடம் பொருந்த எல்லா உலகங்களையும் உண்டாக்கிக் காப்பாற்றி ஒடுக்கி வருவார்கள். இனி பிரகிருதி மாயையிலிருந்து தத்துவங்களும் அவற்றின் செயற்பாடுகளும் உண்டாகும் முறையை இனி விளக்கம் பெறக் கூறுவோம்

அ.கை: மேல் சித்தம் புத்தி என்னும் தத்துவங்களுடைய உற்பத்தியும் கிருத்தியமும் கூறுகின்றது.

104. மானதனி லதோபாகஞ் சித்த மாகி
மன்னியிடுஞ் சிந்தனையை மற்றதனிற் குணங்கள்
தானிரண்டைச் சாத்துவிக மடக்கி நிற்கத்
தனிலுதிக்கும் புத்தியாந் தத்துவந்தா னதுவும்

ஊனமற நிச்சயஞ்செய் யுருவ மென்று
முயிர்வினையின் வாதனைக ளுறுவ தென்றும்
ஆனவிவை யிரண்டாகுங் குணங்க ளாலே
யைம்பதாம் பாவங்க ளடையுந் தானே.

**பொழிப்புரை:** முக்குணங்கள் பிரிக்கப்படாமல் கூடி நிற்கும் நிலையில் மான் எனப்படும் பிரகிருதியின் கீழ்ப்பகுதி ஸ்ரீகண்ட ருத்திரரின் சக்தியால் கலக்கப்படும் போது, முக்குணங்கள் பிரிவுபட்டு ஏற்றத் தாழ்வு இன்றி நிற்கும் நிலையே குணதத்துவம் ஆகும். அதுவே சித்தம் என்னும் பெயருடையதாகி ஆன்மாக்களுக்குப் போக சிந்தனையைத் தோற்றுவிக்கும். சாத்துவிக, தாமஸ, ராஜஸ மயமாய் நின்ற கீழ்ப் பகுதி பிரகிருதியில் தாமஸமும் ராஜஸமும் அடங்கி சாத்துவிகம் மேம்பட்டு நிற்கும் பொழுது புத்தி தத்துவம் உண்டாகும். அந்தப் புத்திதத்துவமும் ஆன்மாக்கள் நிச்சயிக்கும்படிச் செய்து நிற்கும். நிச்சயத்தைச் செய்கையால் நிச்சயான்மா என்றும், கன்மம் வாசனை மயமாக இதில் இடம்கொண்டிருப்பதால் வாசனான்மா என்றும் புத்திதத்துவம் இருவகைப்பட்டு நிற்கும். புத்தி தத்துவம் குணபேதங்களால் அடையும் பாவங்கள் ஐம்பதாகும்.

**அ.கை:** மேல் இரண்டு விருத்தங்களால் புத்தி பாவாஷ்டக சொரூபமாய் ஐம்பது பேதமாய் நிற்கும் என்பது கூறுகின்றது.

105. சாத்திகத்தா லேதரும ஞானமுடன் விடயந்
தனில்வயிராக் கியமாகுஞ் சாற்றுமிரா சதத்தால்
மாத்திரமில் லாச்செல்வத் திச்சையுட னியற்றல்
வந்தனையுந் தாமதத்தால் மருவிபிடு மதன்மம்
காத்திரந்தா னென்றல்முத லஞ்ஞான விடயக்
கண்ணியினிற் பட்டுழன்று கவற்சி கொள்ளும்
சோத்திரத்தை யாதிவழி துறத்த லின்மை
தொகுசெல்வ மின்மையுமாஞ் சொல்லிற் றானே.

**பொழிப்புரை:** சாத்துவிக குணத்தால் தருமம், ஞானம், சப்தம் முதலான விடயங்களில் செல்லும் வைராக்கியம் எனும் மூன்றும் உண்டாகும். முற்பிறப்புகளில் செய்யப்பட்ட தீவினையின் பயன்கள் பந்தமாகக் கூடியிருக்கும் தாமச குணத்தால் அதர்மம், தேகம், இந்திரியம், கரணம் ஆகியவற்றையே ஆன்மா எனக் கருத வைக்கும் அக்ஞானம், சப்தம் முதலான விடயங்களாகும் வலையிற்பட்டு உழன்று திரிந்து விடயப்பற்றில் அழுத்துவிக்கும் செவிமுதலான இந்திரியங்கள் வழியாக அடையப்பெறும்

விடயங்களைத் துறக்க இயலாமையான அவைராக்கியம் என்னும் பாவங்கள் தோன்றும்.

106. தருமமிரு விதத்தாகு ஞானமோ ரைந்தாஞ்
சாற்றும்வயி ராக்கியமு மீரைந் தாகும்
மருவியிடு செல்வமிரு நான்க தாகு
மற்றதன்ம மோரிரண்டா மாச தாகத்
துரிசதுறு மஞ்ஞான மோரைந் தாகும்
துறப்பிலதோர் பத்தாகச் சொல்லுஞ் செல்வம்
கருதலிலா தோரெட்டா மாகவிவை யெல்லாங்
கணக்கிடுங்கா லைம்பதாய்க் கழறு நூலே.

பொழிப்புரை: தருமம் என்பது இயமம் எனவும் நியமம் எனவும் இருவிதங்களாகும். ஞானமானது லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்த்ரம் என ஐந்தாகிப் புத்தியின் விகல்பத்தால் மேலும் பத்துவிதமாகும். பொருந்தும் ஐசுவரிம் என்பது எட்டுவிதமாகும். அதர்மம் அயமம், அநியமம் என இரண்டு விதம். மாசு பொருந்திய அஞ்ஞானம் ஐந்து வகை. விஷயங்களைத் துறத்தல் என்பது இல்லாத அவைராக்கியம் பத்துவகை. செல்வப்பேறு என்பதை நினைப்பதற்கு இடம் கொடாத அனைசுவரியம் என்பது எட்டுவகை. புத்திபேதமாய் விளங்கும் இவைகளைக் கணக்கிட்டால் ஐம்பது பேதம் எனச் சிவாகமங்கள் கூறும்.

அ.கை: மேல் இரண்டு விருத்தங்களினாலே ஆன்மாக்களினுடைய கன்மானுகுணமாகக் குணங்களின் ஏற்றக்குறைச்சலினால் ஆறு குணமுண்டாமென்பது கூறுகின்றது.

107. முக்குணங்க டம்மிலொரு குணமொருத்தர் பாலே
முழுவதுநின் றிடாவினையின் முறைமை யாலே
அக்குணங்க ளிரண்டையொன் றடக்கவத னாலே
யாறுகுண முதிக்குமுணர் மூன்றுகுண மதனில்
இக்குணங்கள் கூட்டத்தா லெண்ணில்குண முளவா
மியம்பிலது பெருகுமினி யிருமூன்று குணங்கள்
புக்கபடி யுரைத்திடுவா மிவற்றி னுள்ளே
பொல்லாத செயற்குணங்கள் பொருந்தா வாறே.

பொழிப்புரை: ஆன்மாக்கள் செய்த கன்மத்தை அனுசரித்து மூன்று குணங்களிலே தனித்த ஒரு குணம் மட்டும் ஆன்மாவில் முழுமையாக

விளங்காது: மூன்று குணங்களும் ஏற்றத் தாழ்வுடன் விளங்கும். குணங்கள் மூன்றனுள் இரண்டு குணங்களை ஒரு குணம் அடக்கி மேம்பட்டு விளங்க ஆறு குணங்கள் உண்டாகும். மூன்று குணங்களில் இந்த ஆறு குணங்களின் சேர்க்கையால் எண்ணற்ற குணங்கள் உண்டாகும். இவற்றை ஆகமநூல்களில் கண்டுணர்க. இங்கே விவரிக்கில் பெருகி நிற்கும். இனி இந்தக் குணபேதங்களுக்குள்ளே பொல்லாத ஆற்றல் வாய்ந்த குணங்களை ஆன்மாக்கள் அடையாத வகையில் ஆறு குணங்கள் தோன்றும் முறையைக் கூறுவோம்.

108. தருமநெறி சாத்துவிகந் தாமதரா சதத்தைத்
தானடக்கத் தோன்றியிடும் பிரகாசம் லகுதை
வரும்வகைரா சதமதுதான் சாத்திகதா மதத்தை
மறைத்தொளிர வுவட்டம்பஞ் சலனமிவை வருமால்
பொருவிலொளி சாத்துவிக ராசதந்தான் புதையப்
பொருந்தியீடிற் றாமதந்தான் புந்தி தன்னில்
குருவென்னுங் குணத்துடனே வரணகமுத் தோற்றுங்
கூறிலிவை யாறாகுங் குணங்க டாமே.

பொழிப்புரை: அறநெறிக்குப் பொருந்தியதான சாத்துவிகம், இராசதத்தையும், தாமதத்தையும் அடக்கி மேம்பட்டிருக்கும் பொழுது பிரகாசம் எனும் குணமும், லகுதை எனும் குணமும் உண்டாகும். அடுத்து முறையே தோன்றும் ராஜஸகுணம் சாத்துவிகத்தையும் தாமசத்தையும் அடக்கி மேம்பட்டிருக்கும்பொழுது உபஷ்டம்பம் எனும் குணமும், சலனம் எனும் குணமும் உண்டாகும். ஒப்பற்ற ராஜஸமும் சாத்துவிகமும் அடங்கிநிற்கத் தாமசகுணம் ஆதிக்கம் பெற்று விளங்கும்போது குரு எனும் குணமும், வரணகம் எனும் குணமும் உண்டாகும். கூறுமிடத்து இவையே ஆறு குணங்களாகும்.

அ.கை: மேல் புத்திதத்துவத்திலே அகங்காரம் தோன்றிக் குணவிகற்பத்தால் மூன்றுபேதமாம் தன்மை கூறுகின்றது.

109. புந்திதனி லகங்காரந் தோன்றியே மனந்தான்
பொறியதனாற் பற்றுபொருள் கைக்கொள்வ தாகிப்
பந்தமுற யானெனதென் றேயபிமா னத்தைப்
பண்ணுவதாய் வாயுக்கள் பலவினையு மியீற்றிச்
சந்தமுறுங் குணமூன்றால் மூன்ற தாகுந்

தைசதவை காரியுடன் பூதாதி தானென்
றிந்தவகங் காரங்கள் மூன்றினிட மாயே
யினியுதிக்குந் தத்துவங்க ளியல்பினையு முரைப்பாம்.

பொழிப்புரை: புத்தி தத்துவத்திலிருந்து அகங்கார தத்துவம் தோன்றி, மனம் இந்திரியங்கள் வழியாகப் பற்றிய பொருள்களைச் சூழ்வதாகி, பந்தம் பொருந்த 'யான்' 'எனது' எனும் அபிமானத்தைச் செய்வதாகி பிராணன் முதலான வாயுக்களுக்குரிய பற்பல செயல்பாடுகளையும் செலுத்திநிற்பதாகி விளங்கும். எப்பொழுதும் செயற்படும் மூன்று குணங்கள் காரணமாக, தைஜஸ அகங்காரம், எனவும் வைகாரி அகங்காரம் எனவும் பூதாதி அகங்காரம் எனவும் மூவகைப்பட்டு நிற்கும். இந்த மூவகை அகங்காரங்களிலிருந்து இனி உண்டாகும் தத்துவங்களின் இயல்பையும் இனிக்கூறுவோம்.

அ.கை: மேல் தைசத வகங்காரத்திலே மனமும் ஞானேந்திரியமும் உற்பத்தியாவதும் அவற்றின் கிருத்தியமும் கூறுகின்றது.

110. முந்தமனம் தைசதத்தே முளைக்கும் பின்னர்
முளைப்பதாஞ் சோத்திரத்தை முதலா வைந்தும்
அந்தமனங் காகத்தின் விழியே போல
அகத்தினிலும் புறத்தினிலு மடைந்துபொறிக் கெதிராய்
வந்தவிட யங்கடமைப் பற்றி யுள்ளு
மன்னியதைப் பாவிக்கும் வகைய தாகும்
சிந்தைசெயிற் செவிதோல்க ணாக்கு மூக்குச்
சேர்சத்த மாதியைந்தைத் தெரிவிக்கு முயிர்க்கே.

பொழிப்புரை: தைஜஸ அகங்காரத்திலிருந்து முற்படத் தோன்றுவது மனம்: பின்னர் செவி, தோல், கண், நா, மூக்கு எனும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் உண்டாகும். முற்படத் தோன்றிய மனமானது காக்கையின் கண்ணானது உள்ளும் புறமும் தடையறச் சஞ்சரிப்பது போன்று, இந்திரியங்களுக்கு முன்னாக வந்து நின்று சப்தம் முதலான விடயங்களைப் பற்றி, அவ்வாறு பற்றப்பட்ட விடயங்களை உள்ளேயும் பாவித்து நிற்கும் இயல்புடையதாய் விளங்கும். செவி, தோல், கண், நா, மூக்கு, எனத் தோன்றும் ஐந்து இந்திரியங்களும், ஆன்மாவின் நலத்துக்காகப் பொருந்தியுள்ள சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், எனப்படும் விடயங்கள் ஐந்தையும் ஆன்மாவுக்கு அறிவிக்கும்.

**அ. கை:** மேல் ஞானேந்திரியங்கள் ஐந்தும் பஞ்ச பூதங்களிலே தோன்றுமென்று சொல்ல, நீர் அகங்காரத்திலே தோன்றுமென்று சொல்லுவானேன் என்னும் சங்கையும் அதற்கு உத்தரமும் கூறுகின்றது.

111. பொறியைந்தும் பூதங்க டம்மிற் றோன்றிப்
பூதங்கள் குணமான புலன்க டம்மை
நெறியொன்றப் புணருமகங் காரந் தன்னி
னீர்பொறிக ளுதிக்குமென்று நிகழ்த்தா தென்னில்
குறியனலி னயனங்க ளுதிக்கு மாகிற்
குளிர்புனலுட் பொருள்கவர்தல் கூடு மெங்ஙன்
செறிபொழுதி னீரினுள்ளே சாந்த மாமாற்
றேர்ந்திடுமற் றவைகளுமிச் செய்கை யென்றே.

**பொழிப்புரை:** செவி முதலான இந்திரியங்கள் ஐந்தும் ஆகாசம் முதலான ஐந்து பூதங்களிலிருந்து முறையே தோன்றி, அந்தப் பூதங்களின் குணமான சப்தம் முதலான விடயங்களுள் ஒவ்வோர் இந்திரியமும் தனக்குரிய விடயத்தைக் கிரகிக்கும் செயலைப் பொருந்தும்: அகங்கார தத்துவத்திலிருந்து செவி முதலான ஐந்து இந்திரியங்கள் தோன்றும் என நீர் கூறுவது பொருந்தாது எனக் கூறினால் ரூபம் எனும் குறியுடைய அக்னியில் கண் ஆகிய இந்திரியம் தோன்றுமானால், குளிர்ச்சிபொருந்திய நீருக்குள் இருக்கின்ற பொருளை அந்தக் கண்ணால் எவ்வாறு கிரகிக்கமுடியும்? அக்னியின் காரியமான கண், நீருக்குள்ளே பொருந்தும் பொழுது நெருப்புக்கும் நீருக்கும் பகையாதலின் அழிந்துபடும். எனவே பூதங்களிலிருந்து இந்திரியங்கள் தோன்றுவதில்லை. ஏனைய நான்கு இந்திரியங்களும் இவ்வாறே என ஆய்ந்துணர்க.

**அ. கை:** மேல் வைகரியகங்காரத்தில் கன்மேந்திரியங்களுற்பத்தியும், பூதாதியகங்காரத்தில் தன்மாத்திரைகளுற்பத்தியும் ,அவற்றின் கிரியைகளும் கூறுகின்றது.

112. தொழில்செய்யு மிந்திரியம் வாக்காதி யைந்துந்
தோன்றியே வைகரியிற் சொலவாதி புரியும்
இழிவிலாச் சத்துடன் பரிச ரூப
விரதகந் தங்களென வியம்பியவிவ் வைந்தும்
கழிவிலாக் காரணதன் மாத்திரைக ளிதற்குக்
காரணமாம் பூதாதி கருதிலிவை யைந்தும்
வழிமுறையே மனம்புத்தி யகங்காரங் கூட

மருவுபுரி யட்டகமாய் மன்னியிடு முயிர்க்கே.

**பொழிப்புரை:** வைகாரி அகங்காரத்திலிருந்து, தொழில் செய்யும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் எனும் ஐந்து இந்திரியங்கள் தோன்றி முறையே வசனம், கமனம் (இயக்கம்), தானம், விசர்க்கம், ஆனந்தம் எனும் ஐந்து தொழில்களையும் செய்யும். காரணமாக விளங்கும் பூதாதி அகங்காரத்திலிருந்து, இழிதகைமை அற்ற சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனக் கூறப்படும் ஐந்தும், நீங்காமல் நிற்கும் தன்மாத்திரைகள் எனத் தோன்றும். இவ்வாறு உள்ள சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும் முறைப்படி விளங்கும் மனம், புத்தி, அகங்காரம் எனும் மூன்றும் கூடப் புரியட்டக தேகம் என ஆகி, ஆன்மாக்களுக்கு சூக்கும உடலாகப் பொருந்தும்.

**அ.கை:** மேல் ஆன்மாக்கள் வினைக்கீடாகப் புரியட்டக தேகத்தாற் போக்குவரவைச் செய்யுமென்றும், இதிலே நின்றுந் தூலதேக முண்டாகு மென்றுங் கூறுகின்றது.

**113.** பொருந்தியிடும் புரியட்ட சூக்குமரூ பத்தாற்
போக்குவர வனைத்தினையும் புரியுமுயிர் வினையால்
அருந்தியிடுஞ் சுவர்க்கநர காதிகளை யடைந்தே
யறம்பாவத் தாலின்ப துன்பங்க ளவற்றைத்
தெரிந்திடவே தூலமாந் தேகந் தானுஞ்
சேருமிந்தச் சூக்குமதே கத்திலெனத் தேர்க
வருந்தனியே வானாதி சத்தாதி தன்னில்
வருமுறைமே லாகமத்தின் வழிமுறையே யுரைப்பாம்.

**பொழிப்புரை:** ஆன்மாக்கள் செய்யும் கன்மத்துக்கு ஈடாகப் பொருந்தும் புரியட்டகமாகிய சூக்கும தேகத்தால், ஆன்மா மேலுலகிலும் கீழுலகிலும் போக்குவரவு செய்யும்: செய்யப்பட்ட புண்ணிய பாவங்களால் முறையே சுறக்க உலகிற்கும் நரக உலகிற்கும் ஆன்மா சென்று சுகத்தையும் துன்பத்தையும் முறையே அனுபவிக்கும். சூக்கும தேகத்திலிருந்து தூல தேகமானது சுக துக்கங்களை அனுபவிப்பதற்காக ஆன்மாவுக்கு உண்டாகும். வேறுபட விளங்கும் ஆகாசம் முதலான பூதங்கள் சப்தம் முதலான காரண தன்மாத்திரைகளிலிருந்து தோன்றும் முறைமையை ஆகமங்களில் கூறப்பட்டுள்ளவாறு நிரலே கூறுவோம்.

**114.** வானதுதா னுற்பூத சத்தத்திற் றோன்றும்
வாயுவனுற் பூதசத்த வுற்பூத பரிச
மானவற்றிற் றோன்றுமனுற் பூதசத்தப் பரிச
மாகியிடு முற்பூத ரூபத்தே யனலும்
ஊனமதாஞ் சத்தமுடன் பரிச ரூப
வுற்பூத விரதத்தி லப்புதிக்கு மேல்மண்
தானதுவு மனுற்பூத சத்தாதி நான்காய்த்
தளர்விலா வுற்பூத கந்தத்தாந் தானே.

**பொழிப்புரை:** உத்பூத சப்த தன்மாத்திரையிலிருந்து ஆகாசம் தோன்றும்: 'அனுத்பூத சப்தம் உத்பூத பரிசம்' என உள்ள பரிச தன்மாத்திரையிலிருந்து வாயு தோன்றும்: 'அனுத்பூத சப்தம், அனுத்பூத பரிசம், உத்பூத ரூபம்' என உள்ள ரூப தன்மாத்திரையிலிருந்து தேயு (நெருப்பு) தோன்றும்: 'அனுத்பூத சப்தம், அனுத்பூத பரிசம், அனுத்பூத ரூபம், உத்பூத ரசம்' என உள்ள ரச தன்மாத்திரையிலிருந்து நீர் தோன்றும்: 'அனுத்பூத சப்தம், அனுத்பூத பரிசம், அனுத்பூத ரூபம், அனுத்பூத ரஸம், உத்பூத கந்தம்' என உள்ள கந்த தன்மாத்திரையிலிருந்து மண் தோன்றும்.

**அ.கை:** மேல் வேதத்திலே ஆன்மாவினிடத்திலே நின்றும் ஆகாசாதிகள் ஒன்றில் ஒன்று தோன்றுமென்னுஞ் சங்கைக்கு உத்தரங் கூறுகின்றது.

**115.** சாற்றியிட வேதத்தே யான்மாவில் வானந்
தானதனிற் கால்தீநீர் தரணி தானும்
தோற்றியிடு மொன்றிலொன்றா யென்றே நீர்தாஞ்
சொல்லியதிங் கென்னையெனிற் சொல்லு வாங்கேள்
மாற்றரிய காரணத்தின் குணங்க டாமே
வந்திடுமேற் காரியத்தே யெனும்வழக்கி னாலே
காற்றனனீர் மட்குணங்கள் வானந் தன்னிற்
கண்டதிலை யால்வானங் காரணமன் றென்னே.

**பொழிப்புரை:** "ஆன்மாவிலிருந்து ஆகாசமும் ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து நீரும் நீரிலிருந்து மண்ணும் உண்டாகும் என வேதத்திலே கூறப்பட்டிருக்க, இங்கே பூதாதி அகங்காரத்திலிருந்து தன்மாத்திரைகள் ஐந்து தோன்ற, தன்மாத்திரைகளாலே பஞ்சபூதங்கள் உண்டாகும் என்று நீவீர் கூறுவது

ஏன்?" எனக் கேட்பின், கூறுகிறோம், கேட்க: மாற்றம் அடையாத காரணத்தின் குணங்கள் காரியத்திலே வரவேண்டும் எனும் நியதியால், வாயுமுதலான நான்கு பூதங்களின் பரிச, ரூப, ரச, கந்த குணங்கள் நான்கும் ஆகாயத்தில் காணப்படவில்லை ஆதலால் ஆகாயம் காரணமாக இருக்க இயலாது.

அ.கை: மேல் வேதத்திலே ஆன்மாவிலேநின்றும் ஆகாசாதிகள் ஒன்றிலே ஒன்றாகத் தோன்றுமென்ற வசனத்துக்கு உத்தரங் கூறுகின்றது.

116. ஆங்கார நானானென் றறைவ தாக
வனைத்துயிர்க்கு மண்ணியதா யடைந்து கொண்டே
ஓங்காநின் றுள்ளதா லான்மா வென்றே
யுரைத்ததா மிலக்கணையா வுதித்தனின் பாலே
பாங்கார்தன் மாத்திரையி லாவ தாகும்
பாராதி யசித்துதிக்குஞ் சித்திலென்கை பழுதாம்
நீங்காது வானதனை வாயு வாதி
நின்றுகுணஞ் சார்தலினா னிகழ்த்தியதா நினையே.

பொழிப்புரை: எல்லா ஆன்மாக்களிலும் அகங்காரம் உட்கருவியாய் நெருங்கிப் பொருந்திக்கொண்டு நிற்பதால் "நான், நான்" என்று சொல்வதாகச் செயற்பட்டு ஓங்குவது ஆன்மா என ஆதார இலக்கணத்தால் இவ்வாறு சொல்லப்படுகிறது. அந்த அகங்காரத்திலிருந்து முறையாகத் தோன்றிய பஞ்ச தன்மாத்திரைகளால் மண் முதலான ஐம்பெரும் பூதங்கள் உண்டாகும். இவ்வாறன்றி, சித்துருபமாக உள்ள ஆன்மாவிலிருந்து ஜடரூபமாக இருக்கும் ஐந்து பூதங்களும் தோன்றும் எனில் ஆன்மாவும் ஆகாசம் போன்று சடப்பொருளாகவும் விகாரப்படுவதாகவும் ஆகிவிடும். வாயு முதலான நான்கு பூதங்களும் ஆகாச பூதத்தை விடாமல் நின்று வாயு சப்தம், பரிசம் இரண்டு குணங்களையும், தேயு சப்த, பரிச, ரூபம் எனும் மூன்று குணங்களையும் நீர், சப்த, பரிச, ரூப, ரசமான நான்கு குணங்களையும் மண் இவற்றுடன் கந்தமும் சேர்ந்த ஐந்து குணங்களையும் பொருந்தி விளங்குவதால் வேதத்திலே இவ்வாறு ஒன்றில் ஒன்று தோன்றும் எனக் கூறப்பட்டது.

அ.கை: மேல் இரண்டு விருத்தங்களால் பிருதிவியாதி பஞ்சபூதங்களுக்குக் கிரியைகளுங் குணங்களுங் கூறுகின்றது.

**117.** வானருவாய் வியாபியாய்ச் சத்தகுண மாகி
மற்றுளநாற் பூதங்கட் கவகாச மாகும்
தானதனிற் சலிப்பதா யுருவா ரூபத்
தன்மையாய் நீலமுமாய்ச் சத்தமுடன் பரிச
மானகுண முடைத்தாகி வாயு நிற்கும்
அனலதுதான் சத்தமுடன் பரிச ரூபம்
ஊனமற வுடைத்தாகிச் செம்மை யாகி
யுறும்பொருளைச் சுடுவதா யோங்குந் தானே.

**பொழிப்புரை:** ஆகாயம் அருவமாகவும் வியாபகம் உடையதாகவும் ஒலியைக் குணமாக உடையதாகவும், மற்றும் உள்ள காற்று முதலான நான்கு பூதங்களுக்கும் இடம் கொடுப்பதாகவும் விளங்குவதாகும். காற்று, ஆகாயத்தில் சஞ்சரிப்பதாகவும், உரு-அருவாகவும், நீலநிறம் வாய்ந்ததாகவும் ஒலி, பரிசம் ஆகிய இரண்டு குணங்களை உடையதாகவும் விளங்கும்: நெருப்பு- சப்தம், பரிசம், ரூபம் எனும் குணங்களைக் குறைவறக் கொண்டதாகி, சிவந்தநிறம் உடையதாய்த் தன்னொடு பொருந்தும் பொருளைச் சுடுவதாகிச் சிறந்து நிற்கும்.

**118.** இரதமுரு வப்பரிச சத்தமெனு மிந்த
விரண்டு குணமுடைத்தா யெல்லாத் திக்கும்
பரவுவதாய் வெண்மையாய் நெகிழ்ச்சி யாகும்
பான்மையா மப்பதுதான் பார்க்கிற் பாரும்
உரமதுவாய்த் தாரகமாய்க் கந்த மாதி
யோரைந்து குணமுடைத்தாய்ப் பொன்மை யாகித்
திரமதுவாம் பாகத்தா னானா வன்னஞ்
சேர்வதுமா யறுசுவையாய்த் திகழுந் தானே.

**பொழிப்புரை:** நீர் எனும் பூதமானது ரசம், ரூபம், பரிசம், ஒலி ஆகிய நான்கு குணங்களை உடையதாய், எல்லா திசைகளிலும் பரவிநிற்கும் தன்மையுடையதாய் வெண்மை நிறம் வாய்ந்ததாய், நெகிழ்ச்சி பெற்றிருப்பதாய் விளங்கும். பிருதிவி எனும் பூதம் கடினத் தன்மை உடையதாய், இயங்கு பொருள் இயங்காப் பொருள் ஆகிய அனைத்தையும் தாங்குவதாய், ஒலி, பரிசம், ரூபம், ரசம், மணம் எனும் ஐந்து குணங்கள் உடையதாய் பொன்மை நிறம் வாய்ந்ததாய் உறுதிப்பட்டுள்ள பக்குவ பேதங்களால் பலவகைப்பட்ட வண்ணங்கள் பொருந்தப் பெற்றுள்ளதாய், ஆறு சுவைகள் கொண்டுள்ளதாய் விளக்கத்துடன் திகழும்.

**அ.கை:** மேல் இந்தப் பஞ்ச பூதங்கள் பஞ்சீகரணமாய் நின்று தேகங்கள் பேதமானதும், அந்த பிரகாரம் அண்டாங்களுமா மென்னு முறைமையுங் கூறுகின்றது.

**119.** கருதியிடும் பூதங்க ளைந்தும் பஞ்சீ
கரணமா யொன்றையொன்று கலந்து நின்றே
மருவியிடுங் காயங்க ளாயே மற்று
மன்னியிடு மண்டங்க டாமுமிந்த வகையே
தருவதுதா னரகர்க்குப் பூத காயஞ்
சடுதியிலாஞ் சூக்குமத்தே பரிணாம நரர்க்குத்
திருமருவு மிமையோர்க்குப் பூத சார
தேகமா மக்கணமே திருந்தியசூக் குமத்தே.

**பொழிப்புரை:** இவ்வாறு கருதப்படும் பூதங்கள் ஐந்தும், பஞ்சீகரணம் எனப்படும் விசேடமான, முறையான கலப்பு முறையில் ஒன்றோடொன்று கலக்கப் பெற்று, பல்வகைப்பட்ட தேகங்களாகப் பரிணமிக்கும்: அல்லாமலும் பல்வேறு அண்டங்களும் பஞ்சீகரண முறையிலேயே தோன்றி விளங்கும். தேகங்கள் மூவகைப்படும். பொருந்தியுள்ள சூக்கும தேகத்திலிருந்து நரகலோக வாசிகளுக்காகக் குறுகிய காலத்தில் பூத தேகம் உண்டாகும்: பூலோகவாசிகளாகிய மனிதர்க்கு, சூக்கும தேகத்திலிருந்து பரிணாம சரீரம் உண்டாகும். திவ்விய ஐசுவரியம் பொருந்தியுள்ள தேவலோகத்தில் வசிப்பவர்க்கு, திருந்திய நல்லமைப்பு வாய்ந்துள்ள சூக்கும தேகத்திலிருந்து, அந்தக் கணத்திலேயே பூதசார சரீரம் உண்டாகும்.

**120.** மண்ணதுநாற் கோணமாம் பிறைபோலு மப்பு
வன்னியோர் முக்கோணம் வாயுவறு கோணம்
விண்ணதுதான் வட்டமாம் லவரயஹவ் வாக
மேவியிடும் பீசங்கள் குறிக டாமும்
நண்ணியிடும் வச்சிரமு நளினசுவத் திகமு
நாடுமறு புள்ளியுடன் விந்துவாய் நவிலும்
எண்ணியிடி லிந்திரனும் வருணனெரி வாயு
விசைவியோம ரூபியுமா மிதற்கபிமா னிகளே.

**பொழிப்புரை:** பிருதிவியானது நாற்கோண வடிவம்: லகார பீஜ எழுத்து: அடையாளம் வச்சிரம்: அபிமான தேவதை இந்திரன் - என விளங்குவது. நீர் எனும் பூதம் அரைநிலவு வடிவம்: வகாரம் பீஜ எழுத்து: அடையாளம் தாமரை: அபிமான தேவதை வருணன் - என விளங்குவது: நெருப்பு எனும்

பூதமானது முக்கோண வடிவம்: ரகார பீஜ எழுத்து: அடையாளம் ஸ்வஸ்திகம்: அபிமான தேவதை அக்னி தேவன் - என விளங்குவது. வாயு எனும் பூதமானது அறுகோண வடிவம்: யகார பீஜ எழுத்து: அடையாளம் ஆறுபுள்ளிகள்: அபிமான தேவதை வாயுதேவன் - என விளங்குவது. ஆகாசம் எனும் பூதம் வட்டவடிவம்: ஹகார பீஜ எழுத்து: அடையாளம் பிந்து: அபிமான தேவதை வியோமரூபி - என விளங்குவது.

**அ.கை:** மேல் இரண்டு விருத்தங்களால் பஞ்சபூதங்கள் வியாபித்து நிற்கும் முறைமையும் அவற்றிற்கு அதிதேவதைகளும் பஞ்ச கலைகளும் இவ்வாறு நிற்குமென்பதும் ஆன்மாக்கள் செய்யுங் கன்மத்துக்கீடாகப் பலத்தைக் கொடுப்பார்களென்பதுங் கூறுகின்றது.

121. மண்ணதுதான் சூக்குமமாய் வானளவு மாகி
மருவுமதிற் புவனங்கட் காதார மாகும்
தண்ணெனுநீர் சூக்குமமாய் மானளவு மாகுந்
தழலதுதான் சுத்தவித்தை தன்னளவு மாகும்
நண்ணியிடுஞ் சதாசிவத்தே விமல வாயு
நவில்சத்த குணமுடைய வாகாய நாடில்
புண்ணியமாம் விந்துவள வுள்ள தாகும்
பூதமிவை யைந்துக்குந் தேவதைமேற் புகல்வாம்.

**பொழிப்புரை:** பிருதிவி தத்துவம் சூக்கும வடிவுடையதாய் ஆகாசம் அளவும் வியாபித்து விளங்குவதாய், இந்தத் தத்துவத்தில் பொருந்தியிருக்கும் புவனங்களுக்கு ஆதாரமாக விளங்கும்: குளிர்ச்சி பொருந்திய நீர்த் தத்துவம் சூக்கும ரூபமாய்ப் பிரகிருதி வரையிலும் வியாபித்து நிற்கும்: அக்கினி தத்துவம் சூக்கும ரூபமாய்ச் சுத்தவித்யா தத்துவம் வரையிலும் வியாபித்து விளங்கும்: தூய்மை மிக்கதான வாயு தத்துவம் சதாசிவ தத்துவம் வரையிலும் வியாபித்து நிற்கும். சப்தத்தைக் குணமாக உடைய ஆகாயம், மிகவும் தூய்மையாக உள்ள பிந்து தத்துவம் வரையிலும் வியாபித்து நிற்கும். இனி, இந்த ஐந்து பூதங்களுக்கும் பொருந்தியுள்ள அதிதேவதைகளைப் பற்றிக் கூறுவோம்.

122. போற்றியிடுஞ் சூக்குமமாம் பூதங்கட் கடைவே
பூமிக்குப் பூமகனும் புனலதற்கு மாலும்
சாற்றுமெரிக் குருத்திரரும் வாயுவுக்கீ சுரருஞ்
சதாசிவர்மேல் வானினுக்குந் தானதிதே வதையாய்
வீற்றிருந்து நிவர்த்தாதி கலைகளிலிவ் வாறே

மேவுமுயிர் புரிதல்செயும் வினையனைத்துங் கண்டே
மாற்றிடவவ் வினைகடமைச் சுகதுக்க போக
மருந்துகளை யருந்துவிப்ப ரருள்சேரு மாறே.

பொழிப்புரை: பிருதிவிக்கு பிரம்மா: நீர்க்கு விஷ்னு: தேயுவுக்கு உருத்திரர்: வாயுவுக்கு மகேசுவரர்: ஆகாயத்திற்கு சதாசிவர் - என இவர்கள் அதிதேவதைகளாக விளங்குவர். இவர்களே நிவீர்த்தி முதலான ஐந்து கலைகளிலும் முறையே அதிட்டான தேவர்களாக விளங்குவர். ஐந்துகலைகளிலும் பொருந்தி இருக்கின்ற ஆன்மாக்கள் செய்யும் எல்லாக் கன்மங்களையும் கண்டு அந்தக் கன்ம பந்தத்தை நீக்குவதற்காக, சுகதுக்க மயமான போகங்கள் எனும் ஔடதங்களை இந்தக் காரணேசுவரர்கள் மூலமாக சிவன் அதிட்டித்துநின்று அருட்பேறு வழங்கும் நிமித்தமாக ஊட்டுவிப்பார்.

அ.கை: மேல் சத்தி சிவர்கள் தத்துவங்களிலே அனுப்பிரவிஷ்டராய் நின்றுமூன்று பேதமாகப் பிரேரிப்பரென்று கூறுகின்றது.

123. தத்துவங்கள் சடமாகி யறிவுதொழி லின்றாற்
சத்திசிவ னனுப்பிரவே சித்திடுவர் சாற்றில்
சுத்ததத் துவமதனிற் சுயமேதோய்ந் திடுவர்
சொலுஞ்சுத்தா சுத்தத்திற் றோய்வரவற் றிடமாய்ச்
சித்தமுத லானவற்றிற் றேவர்கள்பாற் சோந்தே
செறிந்திடுவ் ரீவ்வாறு மூவகையாயாச் சிவன்றான்
ஒத்துறுதல் செய்தருளாற் றத்து வத்துக்
குணர்வுதொழி லாக்கியிட லுணர்த்திடுவா முணரே.

பொழிப்புரை: தத்துவங்கள் சடரூபமாகி ஞானமும் கிரியையும் அற்று இருப்பன ஆதலால் சக்தியும் சிவனும் அந்தத் தத்துவங்களில் ஊடுருவி நின்று அவ்வவற்றைச் செலுத்திநிற்பர். அவர்கள் செலுத்தும் முறையைக் கூறில், சுத்த தத்துவங்கள் ஐந்திலும் தாமே நின்று இயக்குவார்கள். அடுத்துக் கூறப்படும் சுத்த - அசுத்தமான ஏழு தத்துவங்களையும் அவர்கள் சுத்ததத்துவத்தில் இருந்தநிலையிலேயே செலுத்தி வைப்பார்கள். சித்தம் முதலான இருபத்துநான்கு தத்துவங்களையும் இனிக் கூறப்பட உள்ள தேவதைகள் இடமாகப் பொருந்தி நின்று செலுத்துவார்கள். இவ்வாறு மூன்று நெறிகளிலே சிவன் அருளால் தத்துவங்களுக்கு அறிவையும் தொழிலையும் தோற்றுவிக்கும் முறையை உணர்த்துகிறோம். கேட்டு உணர்க.

அ.கை: மேல் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைத் தேவதைகள் பொருந்திநின்று விஷயங்களில் செலுத்தும் முறைமை கூறுகின்றது.

124. வன்னியுட னிந்திரனு முபேந்திரனு மறலி
மாமலரோன் றானுமிவர் வாக்காதி யைந்தைத்
துன்னியிருந் தேவசன கமன தானஞ்
சொல்விசர்க்கா னந்தமைந்தாந் தொழில்புரிவித் திடுவர்
உன்னியிடிற் செவிதோல்கண் ணாக்கு மூக்கி
லுற்றிருந்தெண் டிசைத்தேவர் வாயுவினன் வருணன்
அன்னியமி லாவிருவ ரசுவினிதே வதைக
ளடைந்தறிவிப் பார்சத்த மாதியைந்து மடைவே.

பொழிப்புரை: வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் எனும் கன்ம இந்திரியங்கள் ஐந்தையும் முறையே அக்னி, இந்திரன், விஷ்ணு, யமன், பிரம்மா எனும் தேவர்கள் பொருந்திநின்று வசனம், கமனம் (இயக்கம்), தானம், விசர்க்கம், ஆனந்தம் எனும் ஐந்து செயல்களும் முறைப்படி நடைபெறுமாறு செய்விப்பார்கள். செவி, தோல், கண், நாக்கு, மூக்கு எனும் ஞான இந்திரியங்கள் ஐந்தையும் முறையே திக்குப் பாலகர், வாயு, சூரியன், வருணன், அச்வினி தேவராகிய இரட்டையர் - ஆகியோர் பொருந்தி நின்று சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனும் ஐந்து விடயங்களையும் முறையே அறிவித்து நிற்பார்கள்.

அ.கை மேல் மனம் முதலான அந்தக்கரணங்களிலும் குணங்களிலும் தேவதைகள் பொருந்தி நின்று கிரியைகளை பண்ணுவிப்பார்களென்பது கூறுகின்றது.

125. மனமதனிற் சந்திரனு மகங்கார மதனின்
மன்னியே வீமேசர் புந்தியினிற் புத்தி
யெனவுரைக்குஞ் சத்தியாங் குணங்களொரு மூன்றி
லிசைந்துமல ரோன்மாலு நீலவுருத் திரரும்
உனல்பற்றல் கைக்கொண்டே யகங்கரித்தே யோங்க
லுற்றதனைப் பகுத்தறித லுயர்தன்மா திகளாய்ப்
பனவுளதாம் பஞ்சாசத் பாவகந்தர னாகப்
பண்ணிடுவ ரிப்பரிசே மேலுளதும் பகர்வாம்.

**பொழிப்புரை:** மனத்துக்குச் சந்திரனும், அகங்கார தத்துவத்திற்கு பீமேசரும், புத்தி தத்துவத்துக்குப் புத்திஎனும் சக்தியும், சாத்வீக குணத்துக்கு விஷ்ணுவும், இராஜச குணத்துக்கு பிரம்மாவும், தாமச குணத்துக்கு நீலருத்திரரும் அதிதேவதைகளாக அதிட்டித்து நின்று முறையே சிந்தித்தல், சங்கற்ப விகல்பமாகப் பற்றுதல், எனது யான் எனும் பாவனைகளால் ஓங்குதல், பொருந்திய விடயத்தை நிச்சயித்தல், உயர்ந்த தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம் எனப்படும் எண்வகை பாவங்கள் (எண்ண வடிவங்கள்) ஐம்பது பாவங்களாக விரிந்து தோன்றுமாறு செய்தல் என இவ்வாறு உள்ள தத்துவங்களைப் பற்றிக் கூறுவோம்.

**அ.கை:** மேல் இராக தத்துவமுதல் ஆறு தத்துவங்களையும் தேவதைகள் பிரேரித்து நின்று கிருத்தியங்களைப் பண்ணுவிப்பார்களென்பது கூறுகின்றது.

**126.** எண்ணரிதா மிராகத்தி லிராகேச ரிசைந்தே
யியற்றிடுவர் புருடனையு மிச்சையையு முணர
நண்ணியிட விடயத்தே செய்யும் வித்தை
நண்ணிடுவர் வித்தியா தேவிநல மாரப்
பண்ணியிட வறிவுதொழில் விளங்கியிடக் கலைக்கே
பதிந்திடுவர் கலாதேவி யெனப்பகர்வர் காலத்
தண்ணல்கா லேசரணைந் தாக்கியளித் தழித்த
லாவனவுந் தோற்றுவித்தே நியமனமாக் கிடுவர்.

**பொழிப்புரை:** நினைப்பதற்கு அரிய ராகேசர் புருடதத்துவத்தையும் அராக தத்துவத்தையும் அதிட்டித்துநின்று, ஆன்மா பொருள்களை நுகர்வதில் ஒருமித்து ஐக்கியப்பட்டு நிற்பதையும், பொருள்களை நுகர்வதற்கான இச்சையை ஆன்மாவில் எழுப்புதலையும் செய்வார். வித்யாதேவி, நலம் மிகப்பொருந்த வித்யா தத்துவத்தை அதிட்டித்து நின்று ஆன்மா விடயத்திலே பொருந்தி விளங்குமாறு செயற்படுத்துவாள்: கலாதேவி, கலை எனும் தத்துவத்தை அதிட்டித்து நின்று ஆன்மாக்களின் அறிவு, இச்சை, தொழில் விளக்கம் பெறும்வகையில் அத்தத்துவத்தைச் செயற்படுத்துவாள். நியதிதத்துவத்தையும் கால தத்துவத்தையும் காலேசுவரர் அதிட்டித்து நின்று, படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய செயல்கள் நிகழுமாறு செய்யும் கன்மானு குணமாக வரும் சுகதுக்கப் பலன்களுள் சுகம் என்பதை அதிகமாகப் புசிக்க வொட்டாமலும் துக்கம் என்பதை வெறுத்து ஒதுக்காமலும் ஆன்மாவை அரச ஆணைபோன்று நியமனம் செய்யும் செயற்படுவார்.

**அ.கை:** மேல் காரியமாயையை ஈசுவர சத்தி அதிட்டித்து நின்று பிரபஞ்ச கிருத்தியத்தைப்பண்ணுவிக்கும் என்பது கூறுகின்றது.

**127.** கரையிறந்த சத்தியுடன் காரியரு பாகிக்
கலங்கியே நின்றுள்ள காரியமா யையின்கண்
புரைவறவே யீசர்சத்தி புணர்ந்ததனை வடிவாய்ப்
போற்றிடமா யாதேவி யெனும்பெயரும் புனைந்தே
திரைநுரைக டிவலைகடாங் கடற்பா லாகுஞ்
செய்கைபோற் றனுவாதி சிறக்கச் செய்தும்
தரையிறுதி கலையாதி தத்துவத்தா ருயிர்க
டாமயங்கச் செய்யுமெனச் சாற்றிடுமா கமமே.

**பொழிப்புரை:** எண்ணிறந்த சக்திகளுடன் கூடியதாய்க் காரிய வடிவாகிப் படைப்பின் பொருட்டு அசைந்து நின்ற காரியமாயையில் மகேசுவரரின் சக்தி வேறற அதிட்டித்துநின்று, மாயாசக்தியே திருமேனி எனக் கூறத்தக்கதாக மாயாதேவி என்னும் பெயரையும் பெற்று, காற்று மோதி அலைகடலில் திரை, நுரை, குமிழிகள் நீர்த்திவலைகள் முதலானவை தோன்றும் முறைமை போன்று, ஆன்மாக்களுக்காகத் தனு, கரண, புவன போகங்களை மாயைப்பரப்பிலிருந்து தோற்றுவித்து, கலை முதல் பிருதிவி ஈறான தத்துவங்களில் இருக்கும் ஆன்மாக்களைப் பொய்யை மெய்யெனக் கருதுமாறு மயக்குவிக்கும் என ஆகமநூல்கள் கூறும்.

**அ.கை:** மேல் சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியம் என்னும் தத்துவங்களில் தேவர்கள் அதிட்டித்து நின்று கிருத்தியம் பண்ணுங்கிரமம் கூறுகின்றது.

**128.** சுத்தவித்தை தனைவிமல வித்தியா தேவி
சொல்லீசர் தத்துவத்தை மகேசர்சதா சிவத்தை
அத்தர்சதா சிவர்பொருந்தி யவ்வவற்றா லனைத்து
மாக்குவர்க ளந்தந்தத் தத்துவத்தி னடைவும்
இத்தகைய தத்துவங்கட் கீசுரர்தம் வடிவு
மிசைந்திடுசத் திகள்வடிவு மியம்வில்விரி வாகும்
நித்தனுயிர்க் குயிராகிச் சராசரங்க ளவற்றி
னின்றனைத்துஞ் சேட்டிக்கு நிலைமையுணர் வரிதே.

**பொழிப்புரை:** நின்மல வடிவாக உள்ள வித்யா தேவி சுத்த வித்யா தத்துவத்தையும் மகேசுவரர் ஈசுவர தத்துவத்தையும் தலைவராகிய சதாசிவர் சாதாக்கிய தத்துவத்தையும் அதிட்டித்துநின்று அந்த அந்தத்

தத்துவப் பகுதியில் அங்கேயுள்ள ஆன்மாக்களுக்கு ஏற்ற தனு, கரணம், புவனம் போகம் முதலானவற்றைத் தோற்றுவிப்பார்கள். இந்த முறைப்பாட்டில் விளங்கும் தத்துவ நாயகர், அவர்தம் சக்தியர் ஆகியோரின் சொரூபங்களைக் கூறப்புகில் மிகவும் விரிவுபட்டு நிற்கும். ஆகையால் நித்தியமாக உள்ள சிவன் ஆன்மாக்களுக்கு உயிராக நின்று சட-சித்து மயமான பிரபஞ்சத்தில் அந்தர்யாமியாக விளங்கி எல்லா உலகங்களையும் செயற்படுத்தும் தன்மை அறிவதற்கு அரியது.

அ.கை: மேல் ஆன்மாக்கள் தத்துவங்களைத் தேராகநின்று சுகதுக்கங்களைப் புசித்து மீண்டுந்துரியத்தை யடைவரென்பது கூறுகின்றது.

**129.** இந்திரியம் பரியாநாற் கரணங்கள் சகடா
விசைந்திடுமுக் குணங்கடா மிரத மாக
முந்துகா லாதியிலாம் புருடன்சா ரதியா
மோகாதி யேழ்குணமுஞ் சூழவதோ முகமாய்
உந்தியிடான் மாவுணர்வே யரச னாக
வோதியிடும் வானாதி யைந்துநிலம் பொருந்தச்
சுந்தரமாம் பவனிவந்தே சத்தாதி யான
சுகதுக்கங் கொண்டுமீண் டடையுமுளத் துரியம்.

பொழிப்புரை: ஞான இந்திரியங்களையும் கன்ம இந்திரியங்களையும் குதிரைகளாகவும் நான்கு அந்தக் கரணங்களையும் சக்கரங்களாகவும், பொருந்தியுள்ள தாமச, ராஜச, சாத்துவிக குணங்களே தேரின் அமைப்பாகவும், முற்படத் தோன்றிய காலம் முதலான தத்துவங்களாலான புருடதத்துவமே தேர்ப்பாகனாகவும், மோகம், மதம், ராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், ஹர்ஷம் எனும் ஏழு குணங்களும் பரிசனங்களாகவும், எப்பொழுதும் விடயத்தை நோக்கியே செயற்படும் ஆன்ம அறிவே அரசன் ஆகவும் விளங்க, நிலம் முதல் ஆகாயம் ஈறான ஐந்து தத்துவங்களும் தேர் ஓடுதற்கு ஏற்ற பூமியாகப் பொருந்த, நன்கு சுற்றித் திரிந்து ஆன்மவிருத்தி ஞானமானது சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பனவற்றின் சொரூபமாக விளங்கும் சுக-துக்க போகங்களை அனுபவித்து, சுக-துக்க பாவனையால் மீண்டும் துரிய நிலையை அடையும்.

அ.கை: மேல் தத்துவங்கள் சாதாரணமாகவும் அசாதாரணமாகவும் நிற்குமென்பது கூறுகின்றது.

130. நாதமுதற் றரையந்த முப்பத்தாறா
நவின்றுடைய தத்துவங்க ணாடிக் காணில்
பேதமா யவரவர்கட் குறுவ தாகும்
பெரிதாகி யுயிர்களெல்லாம் பெறும்பதங்க ளாக
ஓதலுறும் புவனங்கட் காதார மாகி
யுறுஞ்சுத்த மோரைந்து மாயை யிலோ ரைந்தும்
போதமுறுங் குணம்புத்தி யகங்கார மூன்றும்
பூதங்க ளோரைந்தும் பொதுவாயும் புகலும்.

பொழிப்புரை: சிவதத்துவம் முதல் நிலதத்துவம் ஈறாகக் கூறப்படும் முப்பத்தாறு தத்துவங்களையும் ஆய்ந்து நோக்கினால், அவை வேறுபட்டு அந்த அந்த ஆன்மாக்களுக்கும் சாதாரணமாகப் பொருந்தி நிற்கும்: வியாபகமாகி நின்று, ஆன்மாக்கள் எல்லாம் உடலெடுத்து உழலும் தானங்களாகக் கூறப்படும் புவனங்களுக்கு ஆதாரமாகப் பொருந்தும்: சுத்த தத்துவங்கள் ஐந்தும், அசுத்த மாயா தத்துவங்கள் ஐந்தும், ஒளி சான்ற சித்தம், புத்தி, அகங்காரம் எனும் தத்துவங்கள் மூன்றும், நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி எனும் தத்துவங்கள் ஐந்தும் என உள்ள பதினெட்டுத் தத்துவங்களும் அசாதாரணம் எனவும் வகைப்படுத்தப்படும்.

அ.கை: மேல் இரண்டு விருத்தங்களால் தாத்துவிக பேதங்கூறுகின்றது.

131. மண்முதல் மலைம ரங்கள் மழைகட லாதி நீர்கள்
விண்முதற் பூத மைந்தில் விளைதொனி மின்கள் மேகம்
ஒண்முக வடவை யாதி யுருவெரி யோரெண் டிக்குக்
கண்முதல் வீசுங் காற்றும் கனகமோ டிரும்புஞ் செம்பும்.

பொழிப்புரை: நிலம், மலை, மரங்கள் முதலானவைகளும், மழைநீர், கடல்நீர் முதலான நீர்வகைகளும், ஆகாயம் முதலான ஐந்து பூதங்களிலும் தோன்றும் ஒலியும், மின்னலும், மேகங்களும், ஒளிமிக்க வடவைத் தீ முதலாக வடிவுடன் காணப்படும் நெருப்பு வகைகளும் எண்ணப்படும் திசைகளும், கண் முதலான அங்கங்களின் பொலிவும் வீசும் காற்றும், பொன்னும், இரும்பும் (தாத்துவிகங்கள் எனப்படும்)

132. நவமணி தாதோ ரேழு நரர்சுரர் நாக ராதி
அவயவம் வாயுப் பத்து மறிந்திடிற் றாத்தி கங்கள்
உவமமில் கதிரோ னாதி யொளிபதி யுருவே யாகும்
தவமிலா ருள்ளம் போலத் தாவிருள் பாசந்தானே.

**பொழிப்புரை:** நவரத்தினங்களும், ஏழு தாதுக்களும், மனிதர் தேவர் நாகர் முதலானோரின் உடல்வகைகளும் உறுப்பு வகைகளும், பிராணன் முதலான பத்து வாயுக்களும், நெறிப்படி நோக்குமிடத்து தாத்துவிகங்கள் எனப்படும். ஒப்பில்லாத சூரியன் முதலானவற்றின் ஒளிகளும் சிவனுடைய ஒளியே ஆகும். அஞ்ஞானிகளின் இதயம் எனக் கூறுமாறு பொருந்தும் இருளானது பாசத்தால் நிகழும் பந்தநிலை ஆகும்.

**அ.கை:** மேல் சுத்த தத்துவங்களைச் சிவசத்திகள் அதிட்டித்து நிற்கையால் சித்தென்று சொல்லப்பெறுமென்பது கூறுகின்றது.

**133.** தத்துவ முப்பத் தாறிற் சத்திக டாமோ ரைந்தும்
சுத்தமாந் தத்து வங்க ளைந்தையுந் தோய்ந்து நின்றே
நித்தமும் பிரேரிக் கின்ற நிலைமையாற் சித்த தாகும்
வித்தக விஞ்ஞா னர்க்குத் தனுவாதி யாகி மேவும்.

**பொழிப்புரை:** சிவம் முதல் மண் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களுக்குள்ளே தூய்மையுடன் திகழும் நாதம் முதலான ஐந்து தத்துவங்களையும் சிவனுடைய பரை முதலான ஐந்து சக்திகளும் பொருந்திநின்று எப்பொழுதும் முறையாகச் செலுத்திச் செயற்படும் காரணத்தாலே சுத்ததத்துவங்களைச் சித்து எனவும் கூறலாம். மேலும் அவை ஞான ஆற்றல் மிக்க விஞ்ஞானகலர்க்குத் தனு, கரணம், புவன போகம் எனவும் தோற்றம் கொண்டு விளங்கும்.

**அ.கை:** மேல் அசுத்த மாயா தத்துவங்கள் ஏழையும் சிவசத்திகள் சுத்த தத்துவங்களைக்கொண்டு பிரேரிக்கையாற் சுத்தாசுத்தமாம் என்பது கூறுகின்றது.

**134.** நாதாதி காய மாக நண்ணுசத் திகடம் மாலே
தீதான மாயா தோற்ற மேழையுஞ் சேட்டிப் பிக்கை
ஓதாநின் றுள்ள தாலே யுறுஞ்சுத்தா சுத்தப் பேரை
ஈதாகுங் காய மாதி யிலயமாங் கலையி னோர்க்கே.

**பொழிப்புரை:** சிவசக்திகள் நாதம் முதலான ஐந்து தத்துவங்களைத் தமது திருமேனியாகக் கொண்டு விளங்க அந்த அந்தத் தத்துவத்தாலே அசுத்த மாயையில் தோன்றிய ஏழுதத்துவங்களையும் சிவசக்திகள் செலுத்தி

நிற்கின்றன எனச் சிவாகமங்கள் கூறுவதுண்டு. ஆகையாலே ஏழுதத்துவப் பகுதி சுத்தாசுத்தம் என்ற பெயரைப் பொருந்தும். ஒடுங்க உள்ள கலை முதலானவற்றை உடைய பிரளயாகலர்க்கு இந்த ஏழு தத்துவங்களும் தனு, கரண, புவன போகங்களாகத் தோன்றி நிற்கும்.

அ.கை: மேல் ஆன்ம தத்துவம் இருபத்துநாலையும் அசுத்தமாயாகாரியமான தேகத்தையுடைய தேவதைகள் பிரேரிக்கையால் அசுத்தமென்பது கூறுகின்றது.

135. இவ்வாறிங் கசுத்த மாயா தோற்றமாங் காயத் தோரே
முவ்வாறு மாறு மாக முளைத்ததத் துவங்க டம்மை
அவ்வாறே சேட்டிப் பிப்பா ராகையா லசுத்த மேயாம்
ஒவ்வாறு செய்திம் மூன்றி னுறுதொழிற் பெயரு
முண்டோர்.

பொழிப்புரை: இவ்வாறு அசுத்த மாயையிலே உண்டாகிய தேகத்தை உடைய தேவதைகள் ஆன்மதத்துவம் இருபத்து நான்கு தத்துவங்கள் என உள்ளனவற்றை சிவசக்திகளால் அதிட்டிக்கப்பட்டு நின்று முறைப்படிச் செலுத்துவார்கள். ஆகையால் இந்த இருபத்துநான்கும் அசுத்த தத்துவம் எனவே ஆகும். ஒத்துத் திகழும் செயற்பாட்டால் இவ்வாறு மூன்று பெயர்கள் உடையனவாய்த் திகழும் தத்துவங்களுக்குத் தொழில்நிலையில் பொருந்தும் பெயரும் உண்டு என அறிக.

அ.கை: மேல் சகலராகிய ஆன்மாக்களுக்குத் தத்துவங்கள் பிரேரககாண்டமென்றும், போகசயித்திருகாண்டமென்றும், போகபோக்கியகாண்டமென்றும் பெயராமென்பது கூறுகின்றது.

136. சாற்றிய சுத்த மைந்துஞ் சகலர்க்குப் பிரேர காண்டம்
தோற்றிடுஞ் சுத்தா சுத்தஞ் சொலிற்புசிப் பிக்குங்
காண்டம்
மெற்றிகழ் கரண நான்கும் வினைவிளைத் திடுநா லைந்தும்
போற்றிடும் போக போக்ய காண்டமாப் புகலு நூலே.

பொழிப்புரை: மேலே கூறப்பட்ட சுத்த தத்துவங்கள் ஐந்தும் சகலவர்க்கத்து ஆன்மாக்களுக்காக உள்ள பிரேரக காண்டம் என்றும், சுத்தாசுத்தம் என்ற நிலையில் உண்டாகிய தத்துவங்கள் போகசயித்ரு காண்டம் என்றும், அடுத்து விளக்கமுறத் தோன்றுவனவான அந்தக்

கரணங்கள் நான்கும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், தன்மாத்திரைகள் ஐந்தும், பூதங்கள் ஐந்தும் ஆன இருபத்துநான்கு தத்துவங்களும் போகபோக்கிய காண்டம் என்றும் சிவாகமங்கள் கூறும்.

**அ.கை:** மேல் சத்தியும் சிவனும் ஆன்மாக்களுக்குச் மாதா பிதாவென்பது கூறுகின்றது.

**137.** காயாதிக் குபாதா னங்க ளாகியே கருதுஞ் சுத்த
மாயாதி தன்னி லீசர் சத்திதான் மருவி நிற்கத்
தோயாது மாயை யீசன் றோய்ந்துரு வாக்கு மாற்றால்
தாயாகுஞ் சத்தி யீசன் றந்தையா முயிர்கட் கன்றே.

**பொழிப்புரை:** ஆன்மாக்களுக்கு அளிக்கப்படும் தனு, கரண, புவன போகங்களுக்கு உபாதானமாகக் கருதப்படும் சுத்த மாயை முதலானவற்றில் சிவசக்தி அதிட்டித்து நிற்கச் சிவன் மாயை தொடர்பு இன்றி வேறற நின்று தனு, கரணம் முதலானவற்றைத் தோற்றுவிப்பதால் ஆன்மாக்களுக்கு அனாதியாகவே சிவசக்தி தாயாகிறாள்: சிவன் தந்தையாகிறான்.

**அ.கை:** மேல் சிவன் சர்வான்மாக்களுக்கும் பஞ்ச கோசங்களைச் சுத்த மாயாதிகளிலே உண்டாக்குவர் என்பது கூறுகின்றது.

**138.** எவ்வுயிர்க்கு மானந்தம் விஞ்ஞான மென்றே
யிருகோச மிறைசுத்த மாயையினி லிசைப்பன்
அவ்வுயிர்க்கு மேலுமதோ மாயையினிற் கலாதி
யானதோர் மனோமயமு மாக்குவன்பின் னாகச்
செவ்விதினிற் பிராணமய கோசமுமுண் டாக்கிச்
சேர்த்திடுவ ரன்னமய கோசத்தைத் திகழ
வெவ்வுயிர்க ளைங்கோச பந்தத்தை யுற்றே
வினைவிளைக்கு மன்னமயம் வருமாறு விரிப்பாம்.

**பொழிப்புரை:** சிவன் அனைத்துயிர்களுக்கும் சுத்தமாயையிலிருந்து விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் எனும் இரண்டையும் தோற்றுவிப்பார், அவ்வுயிர்களுக்காக மேலும் அசுத்த மாயையிலிருந்து கலை முதலான தத்துவ மயமான மனோமய கோசத்தை அவர் உண்டாக்குவார். செம்மை பொருந்த நின்ற இந்த மாயையிலிருந்து அடுத்துப் பிராணமய கோசத்தைத் தோற்றுவித்துப் பின்னர் அன்னமய கோசத்தையும்

உண்டாக்குவார். ஆகையால் அனைத்து ஆன்மாக்களும் அன்னமயம் முதலான ஐந்து கோசங்களால் கட்டப்பட்டவர்களாக விளங்கிக் கன்மங்களைச் செய்வர். அன்னமய கோசம் அமையும் முறைமையை இனி விவரிப்போம்.

**139.** முன்னைவினைக் கீடாகச் சூக்குமரூ பத்தால்
முதற்றந்தை யிடம்புகுந்து மோகமிக வாகி
அன்னைவயிற் றிற்றந்தை சுக்கிலத்தோ டணைந்திட்
டவ்விடத்துச் சுரொணிதத்தோ டாகி நிற்கப்
பின்னையதைப் பிரியாது சூக்குமகா யத்தே
பிறப்பதுவாந் தூலவுடல் பிரமனரு ளாலே
தன்னைவிரித் துரைக்கிலது பெருக்கு முன்னஞ்
சாற்றியசூக் குமபூதத் தாக்கியிடுந் தனுவே.

**பொழிப்புரை:** முற்பிறவிகளில் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளுக்கு ஈடாகச் சூக்கும தேகம் பொருந்தப்பெற்று, தந்தையின் உதரத்துள் நுழைந்து மோகம்மிகப் பெற்றுத் தந்தையின் வீரியத்துடன் கூடித் தாயின் வயிற்றிலே விழுந்து தாயின் சுரோணிதத்துடன் கூடிப் பின்னர் அந்தச் சுக்கில-சுரோணிதக் கலப்பிலிருந்து பிரியாமல் நிற்க, பிரம்மனின் அருட்செயலால் சூக்கும தேகத்திலே தூல சரீரம் உண்டாகும். சூக்கும தேகத்திலிருந்து தூலதேகம் பரிணமிக்கும் முறைப்பாட்டை விளக்கமாகக் கூறமுற்படில், மிகவும் விரிவுபட்டு நிற்கும். எனவே சுருங்கக் கூறின் முற்கூறிய சூக்கும தேகத்திலிருந்தே தூலதேகம் உண்டாகும்.

**அ.கை:** மேல் இரண்டு விருத்தங்களால் சூக்கும பஞ்சபூத காரியமான தாத்துவிகங்களைக் கூறுகின்றது.

**140.** என்புதோ னரம்புமயிர் தசைக ளெல்லா
மிசைந்திடுத றரணியின்ற னிடத்தே யாகும்
புன்புலா னாறுநீர் செந்நீர் மற்றும்
புல்கின்ற நெகிழ்ச்சியெலா மப்பி னாகும்
அன்புசெயுந் தீபனபா சனங்க ளாதி
யானவைதாஞ் சூக்குமமா மனலி னாகும்
வன்புடைய பிராணாதி வாயுப் பத்தும்
வருவதுவுஞ் சூக்குமமாம் வாயுவிட மாயே.

**பொழிப்புரை:** எலும்பு, தோல், நரம்பு, மயிர், தசை - இவைகளெல்லாம் பொருத்தமுறச் சூக்கும பிருதிவியிலிருந்து தோன்றும். பொல்லாததாகிய புலால், தீநாற்றம் உடைய நீர், இரத்தம், மற்றும் நெகிழ்ச்சியுடன் பொருந்தியுள்ளவை-இவையெல்லாம் சூக்கும நீரிலிருந்து பரிணமிக்கும்: அன்புணர்வுடன் செயற்பட உள்ள வெம்மை, பொருள்களைப் பக்குவம் செய்தல் இவை முதலானவை சூக்குமத் தேயுவிலிருந்து பரிணமிக்கும். பலம் செறிந்துள்ள பிராணன் முதலான பத்து வாயுக்கள் சூக்கும வாயு பூதத்திலிருந்து தோன்றும்.

**141.** உடம்பினி னாடி யுள்ளு முதரத்தி னுள்ளு மெங்கும்
இடம்பெற வாயு வாதிக் கிசைதல்செய் தேயு றம்புந்
திடம்பெற நவத்து வாரஞ் சேர்வதாம் வானந் தன்னில்
மடம்படுந் தூல காயம் வளர்ந்திடு மிந்த வாறே.

**பொழிப்புரை:** சூக்கும பூத வெளியிலிருந்து உடலிலுள்ள நாடிகளின் உள்வெளியும், வயிற்றினுள் உள்ள உள்வெளியும், பிராணன் முதலான வாயுக்களின் சஞ்சாரத்துக்கு இடம் கொடுக்கும் உள்வெளியும் பொருத்தமுறத் தோன்றி இயைந்துநிற்கும். தேகத்துக்குப் புறத்திலும் உறுதிபட அமைந்துள்ள நவத்துவார வெளி உண்டாகிநிற்கும். இவ்வாறு ஜடமயமான தூல ஆகாயம் வளர்ந்து (வியாபித்து) விளங்கும்.

**அ.கை:** மேல் அஞ்ஞானிகள் நிற்கும் தன்மை கூறுகின்றது.

**142.** காயமே தாமென் றெண்ணிக் கருமங்கள் பலவுஞ் செய்து
மாயமே யான போகம் வாய்த்திடும் வழியே யுன்னித்
தோயமே போன்ற கான றோய்ந்திடச் செல்வார் போலப்
பேயைநேர் போத ராகிப் பெற்றிடார் பிறப்பில் பேறே.

**பொழிப்புரை:** தூல உடலே தமது சொரூபம் எனக் கருதிப் பலவிதமான தொழில்களைச் செய்து, மாயா காரிய மயமான போகத்தை மேன்மேலும் நுகரக்கூடிய வழியைச் சிந்தித்துக் கானல்நீரை ஆற்றுநீர் என மயங்க எண்ணிக் கொண்டு தண்ணீரில் குளிக்கச் செல்கின்றவர்களைப் போன்று, எப்பொழுதும் அலைச்சலைக் கொண்டிருக்கும் பேயை ஒத்த அறிவுடையவர்களாக பிறப்பும் இறப்பும் அற்றநிலையான முக்திப்பேற்றை அடையமாட்டார்கள்.

**அ.கை:** மேல் கேவலாவத்தை கூறுகின்றது.

143. அறிவிச்சை செயல்க ளின்றா யலர்விழி யிருளின் கண்போல்
குறியற்றுக் குணங்க ளின்றிக் குறைவிலா நிறைவு மாகிச்
செறிவுற்ற போக மின்றிச் சேர்புலன் கரண மின்றிப்
பிறிவற்றா ணவத்தி னோடே நிற்பது கேவ லம்பின்.

பொழிப்புரை: அறிவு, இச்சை, செயல்கள் இல்லாமல் இருளுக்குள் விழித்திருக்கின்ற கண்போன்று, குறைவின்றி வியாபகமாக உள்ள ஆன்மா, அடையாளமாக நிற்கும் சரீரமும் இன்றி, சாத்துவிகம் முதலான முக்குண வாய்ப்பும் இன்றி, வினைக்கு ஈடாகத் திரண்டு பொருந்தும் போகம் இல்லாமல், பொருத்தமுற அமையஉள்ள விடயங்களும் கரணங்களும் இல்லாமல் வேறறநின்று ஆணவத்துடன் அனாதியாகவே கூடி நிற்கும்நிலையே கேவல அவத்தையாகும். இனி சகல அவத்தைபற்றிக் கூறுவோம்.

அ.கை: மேல் சகலாவத்தை கூறுகின்றது.

144. ஈசனார் சத்தி யான திசைத்திடக் கலாதி தன்னைக்
காசமா மாண வத்தின் கனவிருள் சற்று நீங்கி
மாசதாங் காய மாதி வந்திட வினைகள் மன்னி
ஊசலாம் பிறப்பி றப்பை யுற்றிடல் சகல மென்றோர்.

பொழிப்புரை: அனந்தேசரின் சக்தி கலை முதலான தத்துவங்களைக் கூட்டுவிக்க, உருவம் எனும் விடயத்தை உடைய கண்ணுக்கு மறைத்தலைச் செய்வதாக நின்ற படலம் போன்ற ஆணவத்தின் சேர்க்கையால் திரண்டு பொருந்தியுள்ள மிகுதியான இருள் சற்றே நீங்கப்பெற்று தூய்மையற்றுள்ள தனு. கரணம், புவனம் முதலானவை பொருந்த நல்வினை தீவினை மயமான வினைப்பயன்களைப் பொருந்தி, ஊஞ்சல் என அலையும் பிறப்பு இறப்புக்களை ஆன்மா பொருந்தி நிற்கும் நிலையே சகல அவத்தை.

அ.கை: மேல் சுத்தாவத்தை வருமாறு கூறுகின்றது.

145. வினையனைத்துந் துலையொப்ப மலபரிபா கந்தான்
மேவியிடச் சத்திபதிந் திடுமவ் வேளை
தனையொருத்த ரிணையில்லாச் சிவன்குருவாய் வந்தே
தாரணியி லருள்புரியத் தமோரு பங்கள்

பினைவருத்தா தேயொழியப் பேரின்பந் தானே
பெற்றிடுதல் சுத்தமெனப் பேசு நூல்கள்
முனமுரைத்த விருவகைக்கு மிதற்கும் பேத
மொழிந்திடிலை வைந்தாகி மூவைந்தா முறையே.

**பொழிப்புரை:** அனைத்து நல்வினை தீவினைகளின் பயன்கள், சமமான பலம்கொண்டு ஒரேகாலத்தில் சம்பவிக்கும்பொழுது ஒரேசமயத்திலேயே சுவர்க்கத்திலும் நரகிலும் பயனை அனுபவிக்கும் சூழ்நிலையும், அனைத்துக் கன்மங்களின் பக்குவமும் ஆணவமலம் நீங்குவதற்கான பரிபாகம் அடைந்திருக்கும் நிலையும் நேரும்போழுது, அதுவரை மலத்தைச் செலுத்திவந்த திரோதான சக்தி, ஒரேகாலத்தில் சமமாக இவ்வாறு விரோதப்பட்டுள்ள பயன்களை அனுபவிக்க இயலாதாகலின், சிவன் அருளால் அனுக்கிரக சத்தியாக ஆன்மாவிடம் பொருந்தும். அந்தச் சமயத்தில் தமக்கு ஒருவரும் ஒப்பில்லாத சிவன் தன் அளவற்ற அருளால் நிலவுலகில் ஆசாரிய மூர்த்தமாக (குருவடிவாக) எழுந்தருளிவந்து அனுக்கிரகம் செய்ய, மலமும் மாயையும் கன்மமும் அப்பொழுது பந்திக்காமல் நீங்க, சிற்றுணர்வும் ஏகதேசப்படுதலும் நீங்கிநிற்க, முற்றறிவு முதலான சிவகுணங்கள் வாய்க்கப்பெற்று சிவனுடன் இரண்டற்று நின்று பேரின்ப சிவானுபவத்தில் திளைப்பது சுத்த அவத்தை எனச் சிவாகமங்கள் கூறும். முற்கூறப்பட்ட கேவல அவத்தை, சகல அவத்தை ஆகிய இரண்டிற்கும், இந்தச் சுத்தாவத்தைக்கும் ஒவ்வொன்றுக்கும் ஐந்து பேதம் எனப் பதினைந்து அவத்தைகள் முறைப்பட நிகழும்.

**அ.கை:** மேல் மூன்று விருத்தங்களாலே கேவலசாக்கிராதி வருமாறு கூறுகின்றது.

**146.** தத்துவங்க ளாறாறுந் தாத்திகமு வைந்துந்
தளர்வின்றி நின்றிடவே சாற்றுமுள மவையோ
டொத்துமுகத் தேநின்றே யுணர்ந்திடுதல் சகல
முயிர்தனக்குப் போகத்துக் குறுவினையி னொழிவால்
சுத்ததத் துவமைந்து மாயாதி யேழுந்
தொகுபூத மோரைந்துந் தொழில்களொழிந் திடவே
நித்தமா முளநின்ற முப்பதுநா லுடனே
நின்றிடறான் கேவலசாக் கிரமாக நிகழ்த்தும்.

**பொழிப்புரை:** முப்பத்தாறு தத்துவங்கள், பிராணன் முதலான வாயுக்கள் பத்தும், வசனம் தானம் முதலான ஐந்தும் ஆகிய தாத்துவிகங்கள்

பதினைந்து- இவை உறுதிப்பாட்டுடன் செயற்பட, ஆன்ம ஞானமும் தத்துவ தாத்துவிகங்களுடன் கூடி முகத்தானத்தில் நின்று சப்தம் முதலான விஷயங்களை அறிவது சகல அவத்தை: ஆன்மாக்கள் போகம் நுகர்வதற்காகப் பொருந்த உள்ள கன்மம் இல்லாததால் சுத்த தத்துவங்கள் ஐந்து, மாயை முதலான ஏழு தத்துவங்கள், பூதங்கள் ஐந்து எனும் பதினேழு தத்துவங்கள் தத்தம் செயற்பாடு இழந்து நிற்க, நித்தியமாய் உள்ள ஆன்மவிருத்தி ஞானம், ஞான இந்திரியம் ஐந்து, கன்ம இந்திரியம் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கு, பிராணன் முதலான வாயுக்கள் பத்து, வசனம் தானம் முதலான ஐந்து எனும் முப்பத்து நான்கு தத்துவ-தாத்விகங்களுடன் கூடிதான் முப்பத்து ஐந்தாவதாக முகத்தானத்திலே நிற்றல் கேவல சாக்கிரம் எனச் சிவாகமம் கூறும்.

147. அறிவிக்கும் தத்துவங்கள் செயல்களொழிந் திடவே
ஆணவமே லிடுதலினா லறிவுவிளங் காதாம்
நெறியுற்றங் கறிகருவி தொழிற்கருவி பத்து
நீங்கியிட விருபத்தைந் தாய்க்களத்தே முன்னே
செறிவுற்ற விடயங்க ணினைவையுந்தற் காலஞ்
சேர்விடயந் தனையுமனு பவித்திடுஞ்சொற் பனத்தே
பிறிவற்ற சித்தமுடன் பிராண னுள்ளம்
பெறும்போக மிலாதுளத்தே யுறல்சுழுத்தி பின்னே.

பொழிப்புரை: பிரேரகமாய் நின்று அறிவிக்கின்ற தத்துவங்களின் தொழில்கள்நீங்க, ஆணவம் மேலிட்டு விளங்குவதால் அறிவு, இச்சை, செயல்கள் விளங்காமல் நிற்கும் நிலையில், செம்மையாக அமைந்து செயற்பட உள்ள ஞான இந்திரியம் ஐந்தும் கன்ம இந்திரியம் ஐந்தும் நீங்க தன்மாத்திரைகள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு, பிராணன் முதலான வாயுக்கள் பத்து, வசனம் தானம் முதலான ஐந்து எனும் இருபத்து நான்கு தத்துவ-தாத்விகங்களுடன் கூடி ஆன்மஞானம் இருபத்து ஐந்தாவதாக விளங்கக் கழுத்துத்தானத்தில் நின்று, சகல சாக்கிர அவத்தையில் விடயங்களை அனுபவித்த நினைவையும் அப்பொழுது சூக்கும தேகத்தில் பொருந்தின விடயங்களையும் அனுபவிப்பது சொப்பன அவத்தை நீங்கிநில்லாத சித்த தத்துவத்துடன் பிராணவாயுவும் ஆன்ம விருத்தி ஞானமும் ஆகிய மூன்றும் இதயத் தானத்தில் சூக்கும தேக போகமும் இல்லாமல் நிற்பது சுழுத்தி அவத்தை. இனி எஞ்சியுள்ளதைக் கூறுவோம்.

148. விழித்தினிது துயின்றோமென் றுணர்வ தாகு
மேற்றுரியஞ் சித்தமுநீங் கிடவுந்தி மேவி
யழித்தொழியா தேயுடலைப் பிராணனொன்றே யுயிர்ப்ப
வவ்விடத்தே யுறங்குவதா மறிவேது மின்றா
யொழித்துமூ லாதாரத் துற்றிடுத லதீத
முணரிலிது நித்தகே வலமாக வுரைப்பர்
இழித்தபடி யேமேலே யேற்றியிடும் வினையா
லிறைவரருட் சத்தியென்றே யியம்பு நூலே.

பொழிப்புரை: சுழுத்தியினின்று விழித்த பின்பு 'நன்றாக உறங்கினோம்' என அறியும் இயல்புடையது ஆன்மா. அடுத்து, சித்தமும் நீங்கிநிற்க, நாபித்தானத்தை அடைந்து பிராணவாயுவுடன், தேகம் நீங்காமல், வெளிமூச்சு, உள்மூச்சு நீங்காமல் ஆன்மவிருத்தி ஞானத்துடன்தான் உறங்கி நிற்கும் நிலை துரிய அவத்தை ஆகும். விடயத்தொடர்பான அறிவு சிறிதும் இன்றி, தத்துவ தாத்விகங்கள் அனைத்தும் நீங்க, ஆணவமலத்துடன் ஆன்மவிருத்தி ஞானம் மூலாதாரத்திலே பொருந்தி நிற்பது துரியாதீத அவத்தை-எனக் கற்றுணர்ந்த பெரியோர் கூறுவர். சிவனின் அருட்சக்தி கன்மானுகுணமாக ஆன்மாவின் அறிவைக் கீழ்நோக்கிச் செலுத்திய முறையிலேயே, மேல்நோக்கி நிகழும்படியும் செலுத்தி நிற்கும் என ஆகமம் கூறும்.

அ.கை: மேல் சகலத்தில் துரியாதீதாதி பஞ்சாவத்தை கூறுகின்றது.

149. திடுக்கிடவோ ருரைகேட்டுப் பிராண வாயுச்
சீவியா துணராது திகைத்தலதீ தம்பின்
நடுக்குறுத றுரியமாங் கேதந் தன்னை
நண்ணுமனு பவஞ்சுழுத்தி நாடியதை வியந்தே
அடுத்ததுவே யாகிநிற்றல் கனவ தாகும்
அடைந்தவிந்த விதமனைத்து மறுத்து நன்றாய்
விடுத்துநல்ல வுணர்வாகி நிற்ற றானே
மேவியிடுஞ் சாக்கிரமா விளம்பு நூலே.

பொழிப்புரை: ஆன்மா முகத்தானத்தில் முப்பத்தாறு தத்துவ-தாத்துவிகங்களுடன் கூடி விடய அனுபவத்தில் இருக்கும்பொது, உள்ளம் திடுக்கிட செய்தி கேட்பதாலோ, அடிபடுதல் முதலானவற்றாலோ மூர்ச்சை வந்து பிராணவாயு செயற்படாமல், ஒரு பொருளையும் அறியாமல் ஆன்மா முகத்தானத்தில் நிற்பது துரியாதீதம்: அதன்பிறகு பிராணவாயு சற்றே

செயற்பட உடலானது அசைவு பெற்று விளங்கல் துரியம்: பிராணவாயுவும் சித்தமும் கூடித் துன்பம் என ஒன்றன் அளவிலேயே பொருந்தும் அனுபவம் சுழுத்தி: பிராணன் முதலான வாயுக்கள் பத்தும், வசனம் தானம் முதலான ஐந்தும், அந்தக் கரணங்கள் நான்கும், சப்தம் முதலான ஐந்தும் எனும் இருபத்துநாலும் ஒன்றுகூடி அந்தத் துக்கத்தை ஆய்ந்து துக்கமயமாக ஆகி நிற்பது சொப்பனம்: முப்பத்தாறு தத்துவங்களுடனும் தாத்துவிகங்களுடனும் கூடி, மேல்விவரித்த துக்கம் அனைத்தையும் நீங்கி, நல்ல ஞானஉணர்வாகி நிற்பது சாக்கிர அவத்தை-என இவ்வாறு ஆகமம் கூறும்.

அ.கை: மேல் ஐந்து விருத்தங்களால் ஆன்மாக் கேவல சகலங்களைப் பொருந்திச் சனன மரணப்பட்டுத் துக்கத்தையடைந்து நிற்கிற காலத்திலே மலாநுகுணமாக அன்னிய சமயத்தை யடைந்து ,அதிலே பண்ணின புண்ணிய விசேஷங்களினாலே சைவசமயத்தை யடைந்து சரியை கிரியை யோகங்களை குறைவற அனுட்டித்து முத்தியை அடைவனென்பது கூறுகின்றது.

150. இப்படி யவத்தை யீரைந் தெய்தியே பிறப்பி றப்பாம்
வெப்புறுங் காலந் தன்னில் வேதத்தின் வழிய தன்றிப்
பொய்ப்பொருட் சமயந் தன்னிற் புரிந்திடுந் தவத்தினாலே
தப்பிலா வேதஞ் சொன்ன சமயத்தைச் சார்ந்து நின்றே.

பொழிப்புரை:இவ்வாறு ஆன்மாக்கள் கேவல அவத்தை ஐந்தையும் சகல அவத்தை ஐந்தையும் பொருந்திப் பிறப்பும் இறப்பும் கொண்டு கொடிய துன்பத்தை நுகர்ந்திருக்கும் காலத்தில் வேதநூல் வழியில்லாமல் பொய்ப்பொருள் கூறும் சமயநெறிகளில் தலைப்பட்டு ஒரோவொருகால் செய்யும் தவத்தின் பலத்தால், குற்றநெறி அறிவிக்காத மெய்ந்நூல்கள் அறிவுறுத்தியுள்ள சமயநெறியைப் பொருந்தி நிற்கும்.

151. வன்னமோர் நான்கி னுக்கு மாசிலாச் சிரமங் கட்கும்
சொன்னவா றிடரி லாதே செய்தவர் சுவர்க்கந் துய்த்துப்
பின்னைமா நிலத்தின் வந்து சிவதன்மம் பெரிதென் றெண்ணி
முன்னையா கமங்கள் சொன்ன படிதவ முயல்வ மென்றே.

**பொழிப்புரை:** முன்செய்த நல்வினைப் பயனால் ஆன்மா சைவநெறி கடைப்பிடித்தல் அந்தணர் முதலான நான்கு வருணத்தார்க்கும், குற்றமற்ற பிரம்மசரியம் முதலான நான்கு ஆசிரம நிலைகளுக்கும் மெய்ந்நூல்களில் விதிக்கப் பட்டுள்ள வண்ணம் தவறு ஏதும் இல்லாமல் நல்வினைகளைச் செய்தவர்கள் துறக்க உலக இன்பங்களைத் துய்த்துப் பின்னர் நிலவுலகில் வந்து பிறந்து முன்பிறவியில் செய்த சிறப்புமிக்க நல்வினைப் பயனாலே சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள அறநெறி உயர்வுடையது என்று அறிந்து, "அனாதிகாலத்தேயே சிவன் அருளிய ஆகமங்களில் உணர்த்தப்பட்டுள்ளதான சைவசமயத்தை ஏற்றுத் தவம் செய்ய முயல்வோம்" என எண்ணம் கொள்ளும்.

152. எண்ணியோர் குருவைச் சேர்ந்தே யெழில்பெறு சமய தீக்கை
நண்ணியே சரியை தன்னை நவையற வியற்றி யத்தால்
புண்ணிய சிவலோ கத்தைப் பொருந்தியங் குள்ள போகம்
அண்ணலா ரருளப் பெற்றங் கருந்திமே லவனி மீதே.

**பொழிப்புரை:** அவ்வாறு எண்ணி, நன்கு ஆய்ந்து, ஞான குருமூர்த்தியை அடைந்து உயர்வுடைய சமய தீக்கையைப் பெற்று, அத் தீக்கைக்கு உரியனவான சிவாலயப்பணி, சிவவழிபாட்டுக்குரியனவற்றைச் செய்தல், திருநீற்றை முறைப்படி அணிதல் முதலான சரியைப் பணிகளைக் குற்றமறச் செய்து, இப்பணிகளைச் செய்ததால் உண்டான சிவ புண்ணியத்தால் சிவலோகத்தை அடைந்து, அங்குள்ள போகப் பேறுகளைச் சிவபெருமான் அருள்வதால் நன்கு துய்த்துப் பின்னர் மீண்டும் நிலவுலகில் பிறக்கும்.

153. உதித்தருள்சேர் குருவாலே விசேட தீக்கை
யுற்றுணர்ந்து சிவபூசை யூனமறச் செய்தே
துதித்திடுநற் சாமீபஞ் சிவன்பாற் பெற்றுத்
துய்த்திடுவர் பெரும்போகந் தொலைந்த காலை
நதிச்சடையா னருளாலே புவியி னண்ணி
நாடரிய சிவயோக மியற்றி நன்றாத்
திதிக்கொழிவாங் காலமுறு மளவு மந்தச்
சிவனுடைய சாரூபஞ் செறிந்து நின்றே.

**பொழிப்புரை:** அவ்வாறு நிலவுலகில் பிறந்து ஞான ஆசாரியரால்

விசேடதீக்கையைப் பெற்று, இந்தத் தீக்கைக்குரியனவான ஆகமப் பயிற்சி, சிவவழிபாடு முதலானவற்றைக் குருவின் மூலம் நன்றாக அறிந்து, அதிகமாகவோ குறைவாகவோ இல்லாமல் முறைப்படி செய்யும் கிரியை விசேடங்களால் போற்றுதற்குரிய சிவ சாமீப முத்திப் பேற்றைச் சிவன் அருளப்பெற்று, கிரியை நெறி வந்த புண்ணியப்பயனாக அங்கே பெரும் போகங்களை அனுபவிக்கும்: பின்னர் கங்கையைச் சடைமுடியில் கொண்டுள்ள சிவன் அருளாலே மீண்டும் பூமியில் பிறந்து, வேறு நெறிகளால் உணர்தற்கரிய சிவயோக நுட்பங்களைக் குருமுகமாக அறிந்து சிவயோக நெறிக்குரியவற்றைக் கடைப்பிடித்து, அதன் பயனாக, காத்தல் தொழிலுக்குரிய கால எல்லை கழியும் வரையிலும் சிவ சாருப முத்திப் பேற்றை அடைந்து நின்று, அந்தப் பேற்றுக்குரிய போகங்களைத் துய்த்து நிற்கும்.

154. ஆகத்தி லாசையில ராகிச் சற்று
மளவிறந்து மேன்மேலு மடைவ தான
போகத்திற் பற்றிலரே யாகிலுல கெல்லாம்
பொன்றிடுங்கா லிவர்தாமும் பொருந்திடுவர் முத்தி
மோகத்தைத் தவிராதோர் பினைச்சிருட்டி கால
முளைத்துலவிற் குருவாலே முத்திபெற மலத்தின்
பாகத்தை யடைந்ததனாற் சத்திபதிந் திடவே
பரஞானத் தால்முத்தி பலிக்குமவர் பாலே.

**பொழிப்புரை:** தேக அபிமானம் ஆகிய ஆசையற்று, அளவற்று மேன்மேலும் வரும் போகங்களில் சற்றும் இச்சை இல்லாதவர்களாயின், புவனங்கள் தத்தம் காரணத்துள் ஒடுங்கும் சம்மார காலத்தில், விஞ்ஞானகலர் பிரளயாகலர் போன்று இவர்களும் வீடுபேற்றை அடைவார்கள். போகங்களில் மயக்கத்தை விடாதவர்கள் சங்கார காலத்துக்கு அடுத்து வரும் படைப்புக் காலத்தில் நிலவுலகில் பிறந்து குருவின் அருளால் வீடுபேறு அடைவர். அவ்வாறு வீடுபேறு அடைவதற்காக அவர்கள் மலபரிபாகத்தைப் பொருந்தியதால் சக்திநிபாதம் நிகழ, உத்தமமாகிய சிவஞானப் பேற்றால் அவர்களுக்கு வீடுபேறு வாய்க்கும்.

**அ.கை:** மேல் சரியை கிரியை யோகங்களை யனுட்டித்த தவத்தினாலே, இருவினையொப்பும், மலபரிபாகமும்,சத்தி நிபாதமுமா மென்பதும் அந்தச் சத்தி நிபாதம் நாலுவிதமாமென்பதுங் கூறுகின்றது.

155. இப்படியே விசேடமாஞ் சிவதருமச் சரிதை
யெழிற்கிரியை யோகமிவை யியற்றியிடுந் தவத்தால்
தப்பறவே யோன்றையொன்றங் கொழிப்ப தாகத்
தகும்பாவ புண்ணியங்கள் சமனாகப் பொருந்த
அப்பொழுதே வினையனைத்தும் பருவ மாகி
யாணவமும் பக்குவத்தை யடைதல் செய்ய
ஒப்புயர்வொன் றில்லாத சிவன்சத்தி பதியு
முணரிலிது மந்தாதி நால்விதமா யுரைப்பார்.

பொழிப்புரை:இவ்வாறு உயர்ச்சி பெற்று விசேடமாக உள்ள சிவபுண்ணிய மயமான சரியை, சிவவழிபாடு முதலான கிரியை, சிவயோகம் ஆகியவற்றை முறைப்படிச் செய்வதாகிய சிறந்த தவத்தால் உறுதிப்பட ஒன்றை ஒன்று நீக்கிக் கொள்ளும் வகையில் நல்வினையும் தீவினையும் சமமாகப் பொருந்த (இருவினையொப்பு நிகழ), அப்பொழுது ஏனைய கன்மங்கள் அனைத்தும் பரிபக்குவம் பெற்றுநிற்க, ஆணவமலமும் நீங்குதற்குரிய பரிபாகத்தைப் பொருந்த, ஒப்பும் தனக்கு மிக்காரும் இல்லாத சிவனின் சக்தி, ஆன்மாவிடம் பதியும்: இவ்வாறு நிகழும் சக்திநிபாதம் என்பது, ஆழ்ந்துநோக்கில், மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு விதமாகும் எனச் சிவஞானியர் கூறுவர்.

அ.கை: மேல் சத்திநிபாதம் வருதற்கு உபாயம் கூறுகின்றது.

156. சத்திதா னிவிர்த்திபதிந் திட்ட போது
தகும்விரத்தி பொய்வாழ்விற் சாற்றிலதே மந்தம்
முத்திதனை யிச்சித்து விரத்திநிலை செய்யு
மொழிபதிட்டா சத்தியது முனின்மந்த தரமாம்
சுத்தமாம் விஞ்ஞானம் விளக்கும் வித்தை
தோய்ந்ததனாற் சத்திபெயர் தீவிரமாச் சொல்வார்
சித்திக்க வுபசாந்தி செறிசத்தி சாந்தி
சேர்ந்திடிற்றீ விரதரமாச் செப்புமிதன் பெயரே.

பொழிப்புரை: நிவிர்த்தி சக்தி ஆன்மாவில் பிரகாசிக்கும் பொழுது, பொய்ப்பொருளான உடல், கரணம், புவனம் முதலானவற்றில் வைராக்கிய உணர்வு தோன்றுகின்ற நிலையைச் சொல்லுமிடத்து, அதுவே மந்த சத்திநிபாதம்: பிரதிட்டா சக்தியானது, வீடுபேற்றை நிமித்தமாகக் கொண்டு ஏற்பட்ட வைராக்கிய உணர்வை உறுதிப்படுத்தும்: இதுவே மந்ததர சத்திநிபாதம். வித்யா சக்தி ஆன்ம ஞானத்திலே பதிந்து தூய்மையான

விஞ்ஞானத்தை ஒளிபெற்றிடச் செய்யும் ஆகையால், இந்தநிலையே தீவிர சத்தி நிபாதம். சாந்தி சக்தி ஆன்மஞானத்திலே பதிந்தால் உபசாந்தி என்பது உண்டாகும். இந்த நிலைக்குப் பொருந்திய பெயர் தீவிரதர சக்திநிபாதம் என ஆகமம் கூறும்.

**அ.கை:** மேல் ஆன்மஞானத்தைத் தாரதம்மியமாக உதிப்பிக்கையால் அந்தச் சிவசத்திக்கு மந்தாதியான நாலு பெயர் உண்டாமென்பது கூறுகின்றது.

**157.** மந்தமாய் மெய்ஞ்ஞான முதிப்பிக்கு மதனால்
மந்தசத்தி யெனப்பெயரா மற்றதனி னதிகம்
உந்திடமெய்ஞ் ஞானத்தை யுதிப்பிக்கு மதனா
லுரைத்திடுவர் மந்ததர சத்தியென வுணர்ந்தோர்
சிந்தையார் விஞ்ஞானஞ் சடுதியுதிப் பிக்குஞ்
செயலதனாற் றீவிரமாஞ் சத்தியெனத் தெரிப்பார்
அந்தமா திகளில்லாச் சிவஞான மிகவு
மாக்கறீ விரதரமாஞ் சத்தியென வறைவார்.

**பொழிப்புரை:** ஆன்மஞானத்தில் சிறிதளவே சிவஞானத்தைத் தோற்றுவிக்கின்ற காரணத்தால் மந்தசக்தி எனப்பெயர் பெறும்: மந்தநிலையைக் காட்டிலும் சற்று அதிகமான அளவில் சிவஞானத்தை ஆன்மாவுக்கு உண்டாக்குவதால் மந்ததரசக்தி எனச் சிவஞானியர் கூறுவர். சிந்திக்கும் தன்மை வாய்ந்த ஆன்ம ஞானத்தில் சிவஞானத்தை விரைவாகவும் ஆற்றல்மிக்கதாகவும் தோற்றுவித்தலால் தீவிரசக்தியாகும் என ஞானியர் உணர்ந்து கூறுவர்: ஆதி, அந்தம், நடு (முதல், அடி, இடை) இல்லாத வியாபக பரிபூரண சிவஞானத்தை மிகவும் ஆற்றல்வாய்ந்ததாகவும் அதிகமாகவும் தோற்றுவித்தலால் தீவிரதர சக்தி எனச் சிவஞானம் வாய்க்கப் பெற்றுள்ள பெரியோர் கூறுவர்.

**அ.கை:** மேல் சத்திநிபாதமுடைய ஆன்மாக்களிடத்திலே நிகழுங்கிருத்தியங் கூறுகின்றது.

**158.** சத்திநிபா தம்பிறந்த தேசிசிவன் பாலுந்
தற்பத்தர் பாலுமிகத் தளர்வொன் றில்லாப்
பத்திசெய்தே சத்தாதி விடயந் தன்னைப்
பகையாக நோக்கிமுனம் புரியு மெட்டுச்
சித்திமுத லனைத்துலகில் வாழ்வு மெத்தச்
சிறிதாக நினைந்தருளே சிந்தை யாய்நல்

முத்திநெறி யேதெமக்குப் பாசந் தன்னை
மோசிப்பா ராரென்று முயலுங் காலே.

**பொழிப்புரை:** இவ்வாறு கூறப்பட்ட சத்திநிபாதம் உடைய பக்குவ ஆன்மா ஆனவன் சிவபெருமானிடத்தும் சிவ அடியார்களிடத்திலும் தளர்ச்சி அடையாத உறுதியான பக்தி கொண்டு, சப்தம் முதலான விடயங்கள் பிறப்பையும் இறப்பையும் தொடர்ந்து தருவன ஆதலின் அவற்றைப் பகை என உணர்ந்து, முன்னர் யோகியர்பால் காணப்பட்ட அணிமா முதலான எண்வகைச் சித்திகளும், மற்றும் அனைத்துவிதமான உலகியல் வாழ்வும் சிறுமை உடையனவாகவே கண்டு, இவற்றால் சிவநலன் விளையாது என ஆலோசித்து, சிவனின் திருவருள் எப்போது கிடைக்கும்? என எப்போழுதும் சிந்தித்தல் மயனாய் இருந்து, நல்ல முத்தி பெறுதற்கு வழி ஏது? பாச பந்தங்களை விடுவிப்பார் யார்? என இவ்வாறெல்லாம் நெடுக நினைந்திருப்பான்.

**அ.கை:** மேல் சிவன் கிருபையினாலே ஆசாரிய மூர்த்தியை அதிட்டித்துநின்று சத்திநிபாதமுடைய ஆன்மாக்களுக்கு அனுக்கிரகித்து மோக்ஷத்தைக் கொடுப்பரென்பது கூறுகின்றது.

**159.** அனைத்துயிர்க்கு முயிராகி நின்றே யென்று
மாறாறு தத்துவத்துக் கதீத னாகி
நினைப்பரிய னாயசிவன் கருணை யாலே
நீடுலகிற் சற்குருவா நிமலன் றேகம்
தனைப்பொருந்தி யவன்றானே யாகி நின்று
சத்திநிபா தத்தையுள்ளோர் தங்கள் பாச
வினைத்தொகுதி யொழிந்திடவே நோக்கித் தீண்டி
விளம்பவுத் திரியாதி யாலளிப்பன் வீடே.

**பொழிப்புரை:** எல்லா ஆன்மாக்களுக்கும் உயிராக விளங்கி, அனாதியாகவே முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவராகி, வாக்கிற்கும் மனத்துக்கும் எட்டாதவராகி உள்ள சிவன் தனது கருணைப் பெருக்கால், இந்நிலவுலகில் சிறந்த இலக்கணங்கள் செறிந்துள்ளவராய் ஆணவமல அழுக்கற்றுள்ள குருவின் திருமேனியை அதிட்டித்து அவரே தானாகி நின்று சத்திநிபாதத்தை உடைய ஆன்மாக்களுக்கு ஆணவம், கன்மம், மாயை ஆகியவை நீங்கும் படியாகப் பார்த்தும், தீண்டியும் (தொட்டும்). மந்திரத்தை உபதேசித்தும், ஓமத்துடன் (வேள்வியுடன்) கூடிய ஔத்திரி முதலான தீக்ஷைகளைச் செய்து, சிவஞானத்தைத் தோற்றுவித்து வீடுபேற்றை அளிப்பான்.

**அ.கை:** மேல் இரண்டு விருத்தங்ககளால் நாலு சத்திநிபாதநுகுணமாக அத்துவா சோதனை பண்ணுங் கிரமங் கூறுகின்றது.

**160.** மந்தமாஞ் சத்திநிபா தர்க்கருளாற் குருவு
மாய்த்தருளி யிருகலையின் மருவுவினை யனைத்தும்
சுந்தரமாம் பிரகிருதி தனக்கு மேலாய்ச்
சொல்லுபுவ னங்கடமிற் றொக்கிருக்க வளிப்பன்
சிந்தையார் மந்ததர சத்திபதி போதிற்
சிதைந்திடமுக் கலையின்வினை யனைத்து மாயா
பந்தமா னதுமறவே சுத்த மான
பந்தானத் தேசுத்த வித்தைதனிற் பதிப்பன்.

**பொழிப்புரை:** சிவமே தாமாக விளங்கும் குரு, தமது கருணையாலே மந்தசக்தி பதிந்த ஆன்மாக்களுக்கு நிவிருத்தி, பிரதிட்டை எனும் இரண்டு கலைகளில் பொருந்தியுள்ள கன்மங்கள் கெட்டொழிய அத்துவத் தூய்மை செய்வார்: அழகிய பிரகிருதிக்கு மேலாக உள்ள புவனங்களிலே, உரிய தனு கரணங்களுடன் கூடியிருக்குமாறு செய்வார்: ஆன்மாக்களிடம் மந்ததர சக்திநிபாதம் பொருந்திய காலத்தில் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை எனும் மூன்று கலைகளில் பொருந்தி இருக்கும் கன்மங்கள் எல்லாம் கெட்டொழிய, மாயைத் தளையும் நீங்கி நிற்க, அத்துவத் தூய்மை செய்வார்: சுத்த அத்துவாவில் சுத்த வித்யா தத்துவ புவனங்களில் உரிய தனு கரணங்களுடன் இருக்கை கொள்ளுமாறு செய்வார்.

**161.** பெற்றிடிற்றீ விரமாகுஞ் சத்தி பாதம்
பேசியிடுஞ் சாந்திகலைப் பாச நீக்கி
உற்றிடவே சிவசமமா முத்தி யென்றே
யுரைசெய்யு மபரமுத்தித் தானமுற வளிப்பன்
பற்றிடுமிப் பதமுத்தி மூவகையோர் தமக்குப்
பரமுத்தி பிரளயத்தே பரமனளித் திடுவான்
சற்றுமோபற் றில்லாத்தீ விரதரமாஞ் சத்தி
தான்பதியிற் சத்தியோ நிருவாணந் தானே.

**பொழிப்புரை:** ஆன்மாக்களுக்கு தீவிர சக்திநிபாதம் உண்டாயின், குரு மூர்த்தி சாந்திகலையில் பொருந்தியுள்ள ஆணவமல பந்தத்தை நீங்குமாறு தூய்மை செய்து அபரமுத்தித் தானமாகிய சக்தி தத்துவத்திலும் சிவதத்துவத்திலும் சேர்த்துச் சிவசமானமாக விளங்குமாறு செய்வார்.

இவ்வாறு திகழும் பதமுத்தியிலே இருக்கும் மூவகை ஆன்மாக்களுக்கும் திதிகால முடிவிலாவது, பிரளய காலத்திலாவது அருள்வலத்தால் மேலான பரமோட்சத்தை அனுக்கிரகிப்பார். ஒரு விடயத்திலும் சிறிதளவும் பற்றில்லாத தீவிரதர சக்தி ஆன்மாக்களிடம் பதிந்தால், அவர்களுக்கு ஞானகுரு சத்யோ நிருவாண தீக்ஷை செய்து அருள்வார்.

**அ.கை:** மேல் சத்தியோ நிருவாண தீட்சை பண்ணுங் கிரமங் கூறுகின்றது.

**162.** சத்தியோ நிருவாணஞ் சஞ்சிதமாம் வினைக
டம்முடனே பிராரத்த வினைகடனு வாதி
யத்தனையு மொழித்தருளி யகண்டாகா ரதையா
யளவிறந்த வானந்த மாகிச் சுத்த
சித்துருவாய் நித்தமாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழுமொளி யாய்மனத்தாற் சிந்திக் கொண்ணா
நித்தனுடன் வேறறவே நிறுத்த லென்றே
நிகழ்த்தியிடுஞ் சித்தாந்த முத்தியிந்த நிலையே.

**பொழிப்புரை:** சத்யோ நிர்வாண தீக்ஷை என்பது பல பிறவிகளுக்கும் காரணமாக நிற்கும் சஞ்சித கன்மம், அனுபவித்துத் தீர்த்தாலன்றி நீங்காததாகிய பிராரப்த கன்மம் ஆகியவைகளுக்கு ஈடாக வரவுள்ள தனு கரண புவன போகங்கள் அனைத்தையும் நீக்கி அனுக்கிரகித்து காலத்தாலும் இடத்தாலும் பகுக்கப்படாததாய், மதிப்பீடு செய்ய முடியாத பேரானந்த மயமாகித் தூயதாய், ஞானவடிவாகி, நித்தியமாகி, சூக்கும நிலைக்கும் சூக்குமமாகி, அண்டங்களுக்கெல்லாம் பெரிதுபட்ட வியாபகமாகி, மேலான மூல ஒளியாகி, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததாகித் திகழும் நித்திய வத்துவாகிய சிவனுடன் இரண்டறக் கலந்து விளங்குமாறு இணைத்துவைப்பது. சிவாகமங்கள் சித்தாந்த முக்தி இத்தகைய பேரானந்தப் பேறே என விளக்கி நிற்கும்.

**அ.கை:** மேல் இரண்டு விருத்தங்களாலே சாம்பவ தீட்சைபண்ணும் கிரமமும், நிருவாண தீட்சை இரண்டுவிதமாகப் பண்ணும் கிரமமும் கூறுகின்றது.

**163.** மந்திரங்கள் மருந்துகளோர் தொழில்க ளின்றி
வாய்த்திடவே கருடபா வனைமனத்தி னாலே
சிந்தவிட மானதுதான் றீர்க்கும் பார்வைச்
செயலெனவே சிவஞானத் தேசி கன்றான்

பந்தமறுத் தாணவத்தின் பாச நீங்கப்
பார்த்தருளிப் பரிசத்தால் மாயையறப் பார்த்தே
முந்துவினை கலைகள்சோ தனையாற் போக
முளைக்கும்வினை யொழித்தற்கு மூலமனு மொழிவான்.

பொழிப்புரை: மந்திரங்கள், மருந்துகள், இவற்றைப் பிரயோகிக்கும் செயல் முறைகள் ஆகியவைகளுள் ஏதும் இல்லாமல் மனத்தில் கருடபாவனை கூடப்பெற்றவன் விடத்தால் தீண்டப்பட்டவனின் உடலிலிருந்து விடத்தை அறவே நீக்குவதற்காகப் பார்க்கும் செய்கை போன்று சிவமயமாய் நின்ற ஞான ஆசாரியர் ஆணவபந்தம் அறவே நீங்கப் பார்த்து அருளி, சிவமயமாக்கப்பட்ட திருக்கரத்தால் பரிசித்து மாயாபந்தமும் அறுமாறு செய்து, கன்மங்கள் பொருந்தியுள்ள கலைகளைத் தூய்மை செய்வதன் மூலம் போகத்தை உண்டாக்க உள்ள கன்மங்கள் அறவே நீங்கிநிற்பதற்காக மூல மந்திர உபதேசமாகிய வாசதீக்ஷையையும் செய்தருள்வார்.

164. சாம்பவமா மித்தீக்கை நிருவாண தீக்கை
தான்கிரியை ஞானமென வீரண்டாகு மவைதாம்
ஆம்படிதான் மண்டபமுங் குண்டத் தோடே
யழகுபெற நூன்முறையே யமைத்துச் சற்றும்
சோம்பலிலாக் கிரியையுடன் மந்திரங்க ளுரைத்துச்
சுத்தமாம் பொருளானூல் சொன்னபடி யழறா
னோம்புவதாங் கிரியையிவை மனத்தி னாலே
யுறச்செய்தல் ஞானமேன வுரைக்கு நூலே.

பொழிப்புரை:இவ்வாறு செய்யப்படும் தீட்சை சாம்பவ தீட்சையாகும். நிருவாண தீக்ஷை என்பது கிரியாவதி எனவும் ஞானவதி எனவும் இரண்டு வகைப்படும். அவை செய்யப்படும் முறையாவது, சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள விதிகளின்படியே வேள்வி மண்டபத்தையும், அக்னி குண்டத்தையும் அளவில் மிகாமலும் குறையாமலும் அழகுபெற அமைத்து, சிறிதளவேனும் கிரியை தொடர்பான குறைவு வராமல், ஆகமத்தில் கூறப்பட்டுள்ளபடி ஓமச் செயல்களையும் பாவனைகளையும் செய்து, மந்திரங்களை விதிமுறைப்படி ஒலித்து, தூய்மையவான ஓமத்திற்குத் தகுதி பெற்றவையான திரவியங்களால் சிவாக்கினியில் ஆகமநூல் கூறும் வண்ணம் ஆகுதி செய்வது கிரியாவதி எனும் தீக்கை. கூறப்பட்ட இவை அனைத்தையும் மனத்தால் பாவித்துச் செய்தல் ஞானதீக்கை என ஆகம நூல்கள் கூறும்.

**அ.கை:** மேல் ஞானாசாரியன், போதகாசாரியன், சாதகாசாரியன் இவர்கள் உபதேசிக்கும் கிரமம் கூறுகின்றது.

**165.** ஏதமிலாச் சாம்பவமாந் தீக்கை செய்வோ
னெழின்ஞான குருவாகு மிவ்வா றில்லாப்
போதகன்றா னவுத்திரியால் வினைக ணீக்கிப்
போதிப்ப னாகமத்தின் பொருள்க டம்மைச்
சாதகன்றான் கருமதீக் கையினைப் பண்ணிச்
சாற்றிடுவன் தந்திரமந் திரங்க டம்மைப்
பேதமின்றிச் சிவானுபவம் பெற்று வாழ்வார்
பெறற்கரிய சற்குருவைப் பெற்ற பேரே.

**பொழிப்புரை:** முழுமை பெற்றுள்ள தன் சிற்சக்தி மாத்திரத்தால் குற்றமில்லாத சாம்பவ தீக்கையைச் செய்துவைப்பவர், உயர்வு பொருந்திய ஞானசாரியர் ஆவர். இவ்வாறு அன்றி ஞான சாதகனாய்ச் செயல்படும் ஆசிரியர் (போதகன்) ஔத்திரி தீக்கையால் கன்ம வகைகளையெல்லாம் நீக்கி ஆகமங்களின் உட்பொருளையும் சாரத்தையும் உபதேசிப்பார். சாதகாசாரியர் அனைத்து விதமான செயல்வகைகளாலும் கன்ம தீக்ஷையைச் செய்து ஆகமங்களையும் மந்திரங்களையும் உபதேசிப்பார். ஆகையால் பெறுதற்கு அரிய ஞான ஆசாரியரைப் புகலாக அடைந்தவர்கள், பேதங்கள் யாவும் நீங்கப்பெற்று, வேறாக ஒன்று இல்லாமல் முழுவதும் அடைந்து வாழ்வார்கள்.

**அ.கை:** மேல் இந்த நிருவாண தீக்கை லோகதர்மிணி என்றும் சிவதர்மிணி என்றும் இரண்டு விதமாமென்பது கூறுகின்றது.

**166.** நிருவாண முலகசிவ தருமிணிக ளென்று
நிர்ப்பீசம் பீசங்க ளெனவுநிகழ்த் திடுநூல்
மருவாது பொய்ப்போகத் தாசைதனைத் துறவே
மன்னினர்க்குச் சிவதரும தீக்கை யாகும்
ஒருவாது பொய்வாழ்வை முத்தியினு மிச்சை
யுண்டானோர் தமக்குலக தருமிணியா யுரைக்கும்
பெருநோயர் விருத்தர்மட வார்பாலர் தமக்குப்
பெறுவிக்கை நிர்ப்பீச தீக்கையெனப் பேசும்.

**பொழிப்புரை:** நிருவாண தீக்கை என்பது லோகதர்மிணி எனவும் சிவதர்மிணி

எனவும் இரண்டு வகையாகும். இவற்றுள் லோகதர்மிணியானது நிர்பீஜ லோகதர்மிணி எனவும் ஸபீஜ லோகதர்மிணி எனவும் இரண்டு வகையாகும். சிவதர்மிணியானது நிர்பீஜ சிவதர்தமிணி எனவும் ஸபீஜ சிவதர்மிணி எனவும் இரண்டுவகையாகும். இவ்வாறு உள்ள பேதங்களை ஆகமநூல்கள் கூறும். பொய்யென நிலையற்றுள்ள போகங்களில் ஆசை கொள்ளாமல் வைராக்கியம் பொருந்தி நின்றவர்களுக்கு சிவதர்மிணி தீக்ஷை உரியது: பொய்யாகிய உலகியல் வாழ்வை விடாமல் போகப் பேற்றிலும் வீடுபேற்றிலும் ஒருசேர வேட்கை உடையவர்களாய் இருப்பவர்களுக்கு லோகதர்மிணி தீக்ஷை பொருந்துவதாகும். தீர்த்தற்கரிய நோயால் வருந்துவோர், எழுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட விருத்தர், பெண்கள், பத்துவயது அளவுள்ள பாலகர் ஆகியோர்க்கு நிர்பீஜ தீக்ஷை பொருந்துவது, ஏனையோர்க்கு ஸபீஜ தீக்ஷை செய்யலாம் - இவ்வாறு சிவாகமங்கள் வகைப்படுத்திக்கூறும்.

**அ.கை:** மேல் பிராமணர் முதலான நான்கு வருணத்தவர்க்கும் அனுலோமர்க்கும் ஔத்திரி முதலான தீக்கையாம், சங்கர சாதியர்க்கு மானத தீக்கையும், மானத பூசையும், பாஷா சாஸ்திரத்திலே ஞானமுமாம் என்பது கூறுகின்றது.

**167.** அந்தணரே முதலான நால்வ ருக்கு
மனுலோமர்க் குந்தீக்கை யௌத்திரியா திகளாம்
செந்தழலை யோம்பிடுதல் சிவபூசை புரிதல்
சிவாகமத்தாற் சிவஞானம் தெரிதலுமா மிவர்க்கே
வந்தடைந்த சங்கரசா தியர்தமக்குத் தீக்கை
மானதமே சிவபூசை தானுமந்த வாறே
இந்தவகை யோர்க்குரைக்கு மந்திரமைந் தெழுத்தே
யெழின்ஞானம் பாடாசாத் திரத்தாத லியல்பே.

**பொழிப்புரை:** அந்தணர் முதலான நான்கு வருணத்தவர்க்கும், சவர்ணன் முதலான ஆறு அனுலோமர்க்கும் ஔத்திரி முதலான தீக்ஷை வகைகள் பொருந்தும். செந்நிறம் வாய்ந்த சிவாக்னியில் ஆகமத்தில் விளக்கப்பட்டுள்ள வண்ணம் ஓமம் செய்தல், சிவபூசை செய்தல், சிவாகமங்களை முறையாகப் பயின்று பதி, பசு, பாச முப்பொருள் உணர்வால் சிவஞானத்தின் பூரண இயல்பை அறிதல் ஆகிய அனைத்தும் அந்தணர் முதலான பதின்மருக்கும் ஏற்றவையாகும். ஆசிரியப் பெருமானிடம் தஞ்சம் என வந்துள்ள சங்கர இனத்தவர்க்குப் பொருந்துவதான தீக்ஷை மானச தீக்ஷையே: சிவபூசையும் அவ்வாறு மானச பூஜையே. இந்த இனத்தவர்க்கு உபதேசிக்கப்பட உரிய மந்திரமும் திருவைந்தெழுத்தே. உயர்வு பொருந்திய ஞான நூற் பயிற்சியும்

அவர்க்குத் தெரிந்த மொழியில் உள்ள நூல்களையும் போதிப்பது இயல்பாகவே அமையும்.

அ.கை: மேல் பிராமணர் முதலான நாலு வருணத்தவரும் ஆசாரியராய் இருந்து அனுக்கிரகிக்கும் முறைமை கூறுகின்றது.

168. சாற்றியிடுஞ் சைவநெறி குரவ ராவார்
தாமறையோ ரரையருடன் வணிகரவர் தம்பின்
றோற்றியிடுஞ் சுத்தசூத் திரர்நால்வ ரிவரிற்
சொலுமறையோர் நால்வர்க்கா மூவர்க்கா மரையர்
மேற்றிகழும் வணிகரிரு வர்க்காகுங் குரவர்
விளம்பியிடுஞ் சூத்திரர்தாஞ் சூத்திரர்க்கு மேலும்
ஏற்றியிடுஞ் சங்கரசா தியர்க்கு மாகு
மியம்பியிடுஞ் சங்கரர்தா மெவர்க்குமலர் குருவே.

பொழிப்புரை: உயர்வுடையதாகக் கூறப்படும் சைவசமய நெறியில் ஆசாரியராக (குருவாக) விளங்கக் கூடியவர்கள் அந்தணர், அரசர், வணிகர், பின்னர்க் கூறப்படும் முறையில் வரும் தூய்மை வாய்ந்த சற்சூத்திரர் எனும் நால்வருமாவர். கூறப்பட்ட நால் வருணத்தவர்களுள் அந்தணர், அந்தணர் முதலான நால் வருணத்தவர்க்கும் குரவராகுவர்: க்ஷத்திரியர், க்ஷத்திரியர் முதலான மூன்று வருணத்தவர்க்கும் குரு: வணிகர், வணிகர் முதலான இரண்டு வருணத்தவர்க்கும் குரு: கூறப்படும் சூத்திரர், சூத்திரர்க்கும் அடுத்துக் கூறப்படும் சங்கர சாதியினர்க்கும் குரு. சங்கர சாதியினர் எவர்க்கும் குரவராக ஆவதில்லை.

அ.கை: மேல் ஆசாரியர் பேதமும், ஆசிரமங்களில் ஒன்றுக்கொன்று அதிகமென்பதும், அவர்கள் பண்ணுந் தீக்ஷைக்கிரமங்களும் இரண்டு விருத்தங்களினாலே கூறுகின்றது.

169. குரவரிரு வகையினராம் விரத்தருடன் குடும்பி
கூறுமிரு வரில்விரத்தன் விசேடமாங் குரவன்
திரமுறுநல் லாசென்மப் பிரம சாரி
செப்பியவவ் விரத்தனினுஞ் சிறந்தோ னாகும்
வரமுடையன் குடும்பியினும் வனத்த னாவான்
மற்றிவரிற் குடும்பிதான் குருவாம் வாய்மை
விரதம்விடு பிரமசா ரிக்கும் போக
மேவியிடும் குடும்பிக்குந் தானாக விளம்பும்.

**பொழிப்புரை:** விரக்தி நெறியில் உள்ள ஆசாரியர் எனவும் இல்லற நெறியில் உள்ள ஆசாரியர் எனவும் குரவர் இருவகையினர். இவ்விருவகையினருள் விரக்தி நெறியில் நிற்கும் குரவர் சிறப்புடையவராவர். பிறப்பு எடுத்தது முதல் தொடர்ந்து நன்கு உறுதிப்பட்டுள்ள பிரம்மசரிய நெறியில் இருக்கும் குரவர், விரக்திநெறிக் குரவரைக் காட்டிலும் அதிகமான மேம்பாடு உடையவராவர். இல்லற நெறியில் இருக்கும் குரவரைக் காட்டிலும் வானப்பிரத்த நெறியில் இருக்கும் குரவர் மிகவும் சிறப்புடையோராவர். இவர்களுக்குள் இல்லற நெறியில் இருக்கும் ஆசாரியர், விரத நிறைவைச் செய்ய உள்ள பிரம்மசாரிக்கும் போகப்பேறுகள் வாய்க்கப் பெறும் இல்லறத்தானுக்கும் ஆசாரியராக விளங்கும் தகுதி பெற்றவராவர்.

**170.** வனத்துறைவன் னாச்சிரமி மூவர்க்கும் குரவன்
மாசற்ற துரியவாச் சிரமியிவர் குருவே
எனத்தகுவ னால்வர்க்கு மியம்பியவிவ் வெவர்க்கு
மேசில்குரு வதிவன்னாச் சிரமியென வியம்பும்
தனைப்பொருவி லதிவன்னாச் சிரமிசெயுந் தீக்கை
சாம்பவமாஞ் சன்னியாசி மனத்தியற்ற றானாம்
முனைப்புகன்ற கிருகத்த னவுத்திரியாந் தீக்கை
மொழிந்தனம்வன் னாச்சிரமங் குணங்களுமேல்
மொழிவாம்.

**பொழிப்புரை:** வானப்பிரத்த நெறியில் நிற்கும் ஆசாரியன், வானப்பிரத்தன், இல்லறத்தான், பிரம்மசாரி ஆகிய மூவர்க்கும் ஆசாரியனாவான்: தூய்மை வாய்ந்த துறவற நெறியில் நிற்கும் ஆசாரியன், துறவி, வானப்பிரத்தன், இல்லறத்தான், பிரம்மசாரி ஆகிய நால்வருக்கும் சிறப்புமிக்க ஆசாரியன் என விளங்கும் தகைமை உண்டு. இங்கே கூறப்பட்ட துறவி முதலான அனைவர்க்கும் அதிவருணாசிரமி குற்றமில்லாத ஆசாரியன் என விளங்கலாம் என்று சிவாகமம் கூறும். தனக்கு ஒப்புவமை இல்லாத அதிவருணாசிரமி செய்யும் தீக்ஷை சாம்பவ தீக்ஷை : துறவி செய்யும் தீக்ஷை மனோபாவனையால் செய்யப்பட உள்ள மானத தீக்ஷை : இல்லற நெறிப்பட்ட ஆசாரியன் ஔத்திரி தீக்ஷை செய்ய உள்ளவன். இவ்வாறு வருண - ஆசிரம மரபுக்கு ஏற்ப தீக்ஷை வகைகளைக் கூறினோம். இனி இலக்கணங்களையும் குணங்களையும் பற்றிக் கூறுவோம்.

171. எண்ணியிடு நாலெட்டா மிலக்கணங்க ளிசைந்தே
யெழிலினனா யீனாங்க மதிகாங்க மிலனாய்
நண்ணியிடும் பெருநோய்க ளில்லா னாகி
நகந்தந்தஞ் சொத்தையில்லா நலமு முண்டாய்த்
திண்ணியநெஞ் சுடையனாய்த் தவங்கள் செய்யத்
திடம்பெற்ற தேகியாய்ச் சிறந்தே யோங்கும்
புண்ணியமாந் தேசத்தே தருமஞ் செய்யும்
புனிதர்குலத் துதித்தோங்கிய புகழுண் டாயே.

பொழிப்புரை: நன்கு ஆய்ந்துணர்ந்து கூறப்பட்ட முப்பத்து இரண்டு அங்க இலக்கணங்கள் வாய்க்கப் பெற்ற நல்ல அழகு பொருந்தியவனாய் குறைந்த அங்கங்கள் அதிகமான அங்கங்கள் எனும் குற்றம் பொருந்தாதவனாகி, வினைப்பயனால் பொருந்தவரும் கொடிய நோய்கள் இல்லாதவனாகி, நகங்களிலும் பற்களிலும் சொத்தை இல்லாமல், கூறப்பட்டுள்ள இலக்கணத்திற்குப் பொருந்த உள்ளவனாகி உறுதிப்பாடு மிக்க மனம் வாய்ந்தவனாய், பல்வகைத் தவங்களும் வேள்விகளும் செய்வதற்கேற்ற திடமான உடற்கட்டு உடையவனாய் பழிக்கும் இழிப்புரைக்கும் இடம் கொடுக்காமல் சிறப்புடன் விளங்கும் ஆரியாவர்த்தம் முதலான புண்ணிய தேசங்களில், வேதங்களிலும் ஆகமங்களிலும் விதிக்கப்பட்டுள்ள அறங்களைச் செய்துவரும் தூய நற்குலத்தில் பிறந்த மேன்மேல் பெருகும் புகழ் வாய்க்கப் பெற்றோனாய் (விளங்குபவன் உத்தமத்திலும் உத்தமமான உயர்ந்த ஆசாரியன்).

172. கொல்லாமை பொய்யுரைகள் கூறாமை பொறுமை
கூறுமுயி ரனைத்தினுக்குந் தயைநலமே கூறல்
புல்லாமை பொய்ப்புலனைப் புசியாமை தீதைப்
பொருந்தாமற் சிறியருடன் பத்தருடன் பொருந்தல்
செல்லாமை தீநெறியாங் கருமத்திற் சிந்தை
சிவபத்தி குருபத்தி திடம தாகை
கல்லாமை பசுநூலை சிவநூலே கருதிக்
கற்றுணர்த லவ்வாறே கருமஞ்செய் திடலே.

பொழிப்புரை: கொல்லாமை, பொய்கூறாமை, பொறுமை, வகைப்படுத்திக் கூறப்படும் அனைத்து உயிர்க்கூட்டங்களிடத்திலும் தயை ஆகிய உயர்ந்த சாத்துவிக குணங்களை உடையவனாய், நன்னெறியை உபதேசிப்பவனாய், பொய்யான விடயங்களில் பொருந்தாமலும் நூல்களிலே ஒதுக்கப்பட்டுள்ள

பண்டங்களை உண்ணாமலும், அஞ்ஞானிகளுடன் கூடாமலும் இருப்பவனாகி, எப்பொழுதும் சிவனடியார்களுடன் கூடி இருப்பவனாகி, தீயநெறிக்குரிய செயல்களிலே சிந்தையைச் செலுத்தாதவனாகி, சிவனிடத்திலும் குருவினிடத்திலும் திடமான பக்தி வாய்க்கப் பெற்றவனாகி, உலகியல்பைப் போதிக்கும் இழி நூல்களைப் பயிலாமல் சிவாகமங்களை முறைப்படிப் பயின்று உணர்வதில் கருத்து உடையவனாகி, அவைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தத்துவங்களையும் கிரியைகளையும் நன்குணர்ந்து செய்யக்கூடியவனாகி, ஆகமத்தில் விதிக்கப்பட்டுள்ள ஆசாரங்களைக் கடைப்பிடிப்பவனாகி விளங்குபவன் உத்தம ஆசாரியன்.

**173.** காமமுத லறுபகையுஞ் செற்றே யந்தக்
கரயமுந்தன் வசத்தாகுங் கருத்த னாகிச்
சேமநிதி தவமேயென் றெண்ணி நித்தஞ்
செய்கின்ற தவமுடைய செல்வ னாகிப்
பூமகனைத் திருமாலை நிந்தி யாத
புந்தியுள னாய்ப்புறம்பாஞ் சமயத்தோர்கள்
தாமருவு பெத்தமுடன் முத்தி மார்க்குஞ்
சாற்றிடுநூ லுண்மையெல்லா முணர்ந்து தானே.

**பொழிப்புரை:** காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் எனும் ஆறுபகையும் இல்லாதவனாய், ஞான இந்திரியங்களையும் அந்தக் கரணங்களையும் சப்தம் முதலான தத்தம் விடயங்களில் செல்லவொட்டாமல் தன் வயத்தில் வைத்துக் கொள்ளும் நோக்கு உடையவனாகி மங்களகரமான ஐசுவரியம் தவமே எனும் கொள்கை கொண்டு நாள்தோறும் செய்யும் தவத்தையே ஐசுவரியமாக உடையவனாகி, பிரம்மனையும் திருமாலையும் நிந்தித்துக் கூறாத அறிவுடையோனாகி, புறச்சமயநெறிகளில் இருப்பவர்கள் பொருந்தும் பந்தநிலை, முத்திநிலை ஆகியவற்றின் இலக்கணங்களை முறைப்படிக் கூறும் நூல்கள் உணர்த்தும் கருத்துக்கள் அனைத்தையும் ஐயமற உணர்ந்துள்ளவனாய் விளங்குபவன் உத்தம ஆசாரியன்.

**174.** முப்பொருளுஞ் சரிதாதி பாத நான்கின்
முறைமையயு முழுதுணர்ந்து முதல்வன் றன்னை
எப்பொழுது நீங்காத ஞான நிட்டை
யெய்தித்தன் பாலடைந்தார் பருவந் தன்னைத்
தப்பறவே யுணர்தற்குச் சதுர னாகித்
தாமதமாங் குணஞ்சற்றுந் தாக்கா னாகி

ஒப்பிலுயர் குணமுளனா யாக மத்தே
யோரிலக்க முணர்ந்தவனைக் குருவென்ப ருயர்ந்தோர்.

**பொழிப்புரை:** பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்கள் ஆகியவற்றின் இயல்புகளையும் நெறிமுறைகளையும் மாறுபாடும் ஐயமும் அகல எல்லாவற்றையும் நன்கு உணர்ந்து, முழுமுதல் இறைவனாம் சிவபெருமனை எப்பொழுதும் பிரியாது இருக்கும் பாவனைக்குரிய சிவஞான நிட்டையைப் பொருந்தியவனாய், தன்னை அடைந்த மாணவர்களின் பரிபக்குவ நிலையை நன்கு அறியவல்ல திறமை உடையவனாகி, தாமச குணத்தின் விகற்பமான அதர்ம குணங்கள் சிறிதளவேனும் தன்னைத் தீண்டிநிற்காத நிலையில் இருப்பவனாகி, இவ்வாறு ஒப்பற்ற, உயர்ந்த சாத்துவிக குணங்கள் நிரம்பப் பெற்றவனாய், ஆகமங்களில் இடம்பெற்றுள்ள சுலோகங்களுள் ஒரு இலட்சம் அளவாவது முறையாகப்பயின்று, ஐயமும் திரிபும் அற, உள்ளது உள்ளவாறு உணர்ந்து இருப்பவனையே 'ஆசாரியன்' எனப் பெரியோர் கூறுவர்.

**அ.கை:** மேல் முன் சொன்ன இலக்கணங்க ளொன்று மில்லா தவனானாலும் சிவஞானாதிக்க மிருந்தால் ஆசாரியனாவ னென்பது கூறுகின்றது.

175. கூறிடுமிக் குணமொன்று மில்லை யேனுங்
கூறரிய சிவஞானக் கொள்கை யாலே
வீறிடுந்தன் னருணோக்கான் மாண வன்றன்
வினையனைத்து மாணவமும் விட்டு நீங்க
மாறுவமை யில்லாத ஞானா னந்த
மருவியிடச் செய்யவல்ல னாகில் மண்மேல்
ஈறில்பர ஞானகுரு வவனே யார்க்கு
மிவனவனென் றெண்ணியிடு மியல்பின் றாமே.

**பொழிப்புரை:** மேலே கூறப்பட்டுள்ள குணங்கள் சிறிதும் இல்லையெனினும் மதிப்பிட்டுக் கூறுதற்கரிய சிவஞானம் பொருந்தப்பெற்றிருப்பானாயின் அவன் எங்கும் சிவப்பொலிவே கண்டு சிவமாகவே நிற்கும் தன்மை கைவரப் பெற்றுள்ளதால் சிவதரிசனமே காணும் தனது பார்வையால் ஆணவம் முதலான பாசங்கள் நீங்கும் வகைசெய்யவல்லோனாவன். தனது பார்வையால் மாணவனின் அனைத்து வினைப்பயன்களும் மாயையும் ஆணவமலமும் அவனை விட்டு நீங்கும் படியாகப் பார்த்து ஒப்புவமை அற்ற சிவஞான ஆனந்த அனுபவம் அவனுக்கு வாய்க்குமாறு செய்யவல்லனாகில் இந்நிலவுலகில் பரிபக்குவம் பெற்றுள்ள எல்லா ஆன்மாக்களுக்கும் அவனே

ஈறில்லாத பெருஞ்சிறப்புள்ள ஞான ஆசாரியன் ஆவன். எனவே அவனது சாதி, குணம் முதலானவை பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை.

அ.கை: மேல் இரண்டு விருத்தங்களினாலே ஆசாரியர் தம்மையடைந்த சிஷ்யர்களுக்குப் பரிபாகத்தைச் சோதித்து அவர்களிடத்தில் நிகழும் பரிபாகாநுகுணமாகத் தீட்சை பண்ணுவரென்பதும் பரீக்ஷிக்கும் படியுங் கூறுகின்றது.

176. தேசிகரு மாணவர்கள் செய்தியுணர்ந் திடவே
சிறியோரைப் பெரியோர்செய் தொழிலதனிற் செறித்தும்
ஏசிலராம் பெரியோரை யீனமாந் தொழிற்கே
யிசைத்துமடித் தும்வைது மிவ்வாறு செயவும்
கூசியிடா த்ட்டபணி செய்துகுரு பத்தி
குறைவிலனாய் நம்பினனாய்த் துரோக மின்றி
மாசிலனாய் மனவாக்குக் காயத்தாற் குருவின்
வாக்கியபா லனஞ்செய்யு மதிமா னாகி.

பொழிப்புரை: ஞான ஆசாரியர், மாணவருடைய குணங்களையும் செயல்திறத்தையும் அறிந்துகொள்ளும் வகையில், சிறியவர்களாயின் பெரியோர் செய்யும் செயல்களில் ஈடுபடுத்தியும், பழிப்பற்ற பெரியோரை அவர்தம் தகுதிக்குக் கீழ்ப்பட்ட செயல்களில் ஈடுபடுத்தியும், சில சமயங்களில் அடித்தும், மற்றும் சில நேரங்களில் நிந்தித்தும், இவ்வாறு பல நெறிகளிலும் சோதிக்க வேண்டும். குருவின் கட்டளையை அப்படியே ஏற்று மனம் கூசாமல் அவர் ஏவின பணிவிடைகளை நன்கு செய்து குருவினிடம் பக்தி குறையாமல் 'இவரே நம்மை ஈடேற்றிக் காப்பாற்ற உள்ளவர்' எனும் திடமான கோட்பாடு உடையவனாய்க் குரு பணித்த செயல்களில் கபடமில்லாமல் ஒரு குற்றமும் இல்லாதவனாய்த் தன் மனம், வாக்கு, உடல்களால் குரு கூறியருளிய வாக்கியத்தைப் பரிபாலனம் செய்து நிற்கும் எண்ணம் வாய்க்கப் பெற்றவனாய் நற்குணங்கள் உடையவனாக சீடன் திகழ வேண்டும்.

177. ஆதரவுஞ் சாந்தியுநற் பொறுமை தானு
மசத்தியமில் லாவுரையு மாசாரந் தவமும்
தீதான செயல்மறந்து நன்றியறிந் திடலும்
சிவாகமத்தைக் கேட்டதனைத் தெளித றானும்
போதலறப் பொறிவழியி னிற்ற லாதி
புகன்றுள்ள நற்குணங்கள் பொருந்தி மேலும்

ஓதலுறுங் குணங்குற்றஞ் சோதித்தோர் வருட
முறுங்குணத்தி னளவாகத் தீக்கைசெய்வ ருயர்ந்தோர்.

**பொழிப்புரை:** அனைத்து உயிர்களிடத்தும் கருணைகாட்டல், உபசாந்தி, நன்மைக்குரிய பொறுமை, பொய்த்தன்மை அற்றுள்ள உறுதிப் பேச்சு, நூல்களில் விதிக்கப்பட்டுள்ள ஆசாரங்களைக் கடைப்பிடித்தல், தவம், தனக்கு ஒருவன் நன்மையும் தீமையும் செய்தால் தீமையை மறந்து நன்மையை மறவாமல் உணர்ந்து பாராட்டுதல், குரு மூலமாகச் சிவாகம வசனங்களைக் கேட்டு அவற்றின் உட்பொருளை ஆழ்ந்து சிந்தித்துத் தெளிவுபெறுதல், ஐந்து இந்திரியங்கள் வழியாகவரும் விடய ஞானம் முதலானவை நீங்கி நிற்க நன்னெறியில் தன்னை நிறுத்திக் கொள்ளல் என்பன முதலாகச் சொல்லப்படும் நற்குணங்கள் வாய்க்கப்பெற்று சீடன் இருப்பான்ஆயின், மேலும் கூறப்பட்டுள்ள குணங்களையும் குற்றங்களையும் ஒரு வருடகாலம் வரையிலும் ஆய்ந்து பார்த்துப் பின் அவனிடம் காணப்படும் குணங்களை அனுசரித்து அதற்கு ஏற்ப ஞான ஆசாரியர் தீக்கை செய்ய வேண்டும்.

**அ.கை:** மேல் மந்திரம் முதலான ஆறுக்கும் அத்துவாவென்று பெயராம் என்பது கூறுகின்றது.

**178.** மந்திரமும் பதவன்ன புவனதத் துவமு
மருவியிடும் கலையைந்து மத்துவா வாகும்
தந்திடுமேல் வினைகளுக்கு மார்க்க மாத
றானாலும் விபுவாகிச் சாற்றுநிறை வறிவாய்
அந்தமிலா வான்மாவை யன்னமய முதலா
மைங்கோச மாவரிக்கு மாதலினா லந்தப்
பந்தலொ மொன்றொன்றா நீங்கிமே லேகிப்
பரானந்த பூரணமாம் பரிசி னாலும்.

**பொழிப்புரை:** மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலைஐந்து என உள்ள ஆறும் அத்துவா எனப்படும். முறைப்படிச் செய்தல், முறையற்றுச் செய்தல் காரணமாக, இனி வர இருப்பதாகிய கன்மபந்தத்துக்குரிய நல்வினை தீவினைகளுக்கு வழிவகுக்கின்றவைகளாகத் திகழ்வதாலும், எங்கும் வியாபித்திருப்பதாகியும், பூரண நிறைவு உடையதாகவும் ஞானமயமாகவும் விளங்கி, நித்தியமாக உள்ள ஆன்மாவை அன்னமயம் முதலான ஐந்து கோசங்களும் மறைத்துச் சூழ்ந்திருக்கும் ஆகையாலும், அந்தப் பந்தங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக நீங்கி மேன்முகப்பட்டு

உயர்ந்து தத்துவ எல்லையைக் கடந்து சத்து-சித்து-ஆனந்தமயமான பரிபூரண சிவமாக விளங்கும் இயல்பினாலும் மந்திரம் முதலான ஆறனுக்கும் அத்துவா எனும் பெயர் பொருந்தியது.

அ.கை: மேல் ஐந்து விருத்தங்களினாலே மந்திராதிகள் ஒன்றிலே ஒன்று லயிக்க ஆன்மாவைச் சிவத்திலே யோசித்துப் பின்னும் பிராரத்த தேகத்திலே நிறுத்தும் முறைமையையும் பஞ்சகலைகளிலும் மந்திர பத வன்ன புவன தத்துவங்கள் நிற்கும் முறைமையையும் கூறுகின்றது.

179. உன்னியிடு நிவிர்த்திகலை தத்துவமண் ணதனி
லுறும்புவன நூற்றெட்டக் கரமொன்ற தாகும்
மன்னியிடும் பதங்கடா மிருபத் தெட்டா
மந்திரங்க ளோரிரண்டா மாமலரோன் றேவன்
இந்நிலையே பதிட்டையினி லறையுந்தத் துவங்க
ளெழுமூன்று மிரண்டுமிதிற் புவனங்க ளெண்ணேழ்
தன்னிலுறு மந்திரங்க ளிரண்டுபத மூவேழ்
தான்வன்ன நாலாறு சாற்றிடுமா லதிபன்.

பொழிப்புரை: நிவிருத்தி முதலான ஐந்து கலைகளிலும் மந்திரம் முதல் தத்துவம் ஈறான ஐந்தும் பொருந்தி இருக்கும் முறைமையைச் சிந்தித்தால் - நிவிருத்தி கலையில் பிருதிவி தத்துவம் ஒன்று: அந்தத் தத்துவத்தில் பத்ரகாளி புவனம் முதல் காலாக்னி ருத்ர புவனம் ஈறாக உள்ள புவனங்கள் நூற்றெட்டு: 'க்ஷ' எனும் எழுத்து ஒன்று: 'பவபவ' என்பது முதல் 'நமோ நம, ஓம்' என்பது ஈறாக உள்ள பதங்கள் இருபத்து எட்டு: மந்திரங்கள் இரண்டு என அமைந்திருக்கும்: இதற்கு அதிதேவன் பிரம்மா. இவ்வாறே பிரதிட்டாகலையில் நீர் முதல் சித்தம் வரையில் உள்ள தத்துவங்கள் இருபத்து மூன்று: தத்துவங்களில் ஸ்ரீகண்டபுவனம் முதல் ஓங்கார புவனம் ஈறாக உள்ள புவனங்கள் ஐம்பத்து ஆறு: மந்திரம் இரண்டு: வியாபின் வியாபின் முதலாக சர்வ சர்வ ஈறாக உள்ள பதங்கள் இருபத்து ஒன்று: ட காரம் முதல் ள காரம் வரை உள்ள எழுத்துக்கள் இருபத்து நான்கு - என அமைந்திருக்கும். இதற்கு அதி தேவதை திருமால்.

180. மேவியிடும் வித்தையினிற் றத்துவங்க ளேழாம்
விரவுமதிற் புவனங்க ளிருபத் தேழு
பாவுமோர் மந்திரங்க ளிரண்டுநா லைந்தாம்
பதங்களாம் வன்னங்க ளேழாகப் பகரும்

தாவிலுருத் திரதேவர் சாந்தி தன்னிற்
றத்துவங்க ளொருமூன்று புரங்கள்பதி னெட்டாம்
கோவிதற்கு மகேசுவரர் மந்திரங்க ளிரண்டு
கூறுபதம் பதினொன்று வன்னமொரு மூன்றே.

**பொழிப்புரை:** வித்யா கலையில் புருஷ தத்துவம் முதல் மாயை வரையில் உள்ள தத்துவங்கள் ஏழு: தத்துவங்களில் கோப முதல் குரோதேசன் ஈறாக உள்ள புவனங்கள் இருபத்தேழு: மந்திரங்கள் இரண்டு: ஓம் நம: சிவாய என்பது முதல் வ்யோமின் வியோமின் என்பது ஈறாக உள்ள பதங்கள் இருபது: நான்காவது ககாரம் முதல் ஞகாரம் ஈறாக உள்ள எழுத்துக்கள் ஏழு - என அமைந்திருக்கும். இதற்கு அதிதேவதை உருத்திரன். சாந்திகலையில் சுத்தவித்யை முதல் சாதாக்கியம் வரை உள்ள தத்துவங்கள் மூன்று: தத்துவங்களில் வாமை முதல் சதாசிவ புவனம் வரை உள்ள புவனங்கள் பதினெட்டு: மந்திரங்கள் இரண்டு: வ்யோம வ்யாபினே என்பது முதல் த்யானா ஹாராய என்பது வரை உள்ள பதங்கள் பதினொன்று. ககார வர்க்க எழுத்துக்கள் மூன்று - என அமைந்திருக்கும். இதற்கு அதிதேவதை மகேசுவரர்.

181. தத்துவங்க ளிரண்டாகும் புரங்கள்பதி னைந்து
சாற்றுமனு மூன்றுபத மொன்றெழுத்தீ ரெட்டாம்
சுத்தகலை சாந்தியா தீதமதி தேவன்
சொல்லியிடிற் சதாசிவராந் தொகையினதென வறிக
இத்தகைய கலைகளிலே நிவிர்த்தாதி மூன்றி
லிசைபுவனத் திருவினைக ளெவற்றினையு மொழித்தே
புத்தியினில் வித்தாகிச் செறிவினைவா தனைமேற்
பொருந்தாத வகையொழித்துப் புகன்றிடுமைங்
கலைக்கே.

**பொழிப்புரை:** நின்மலமாகத் திகழும் சாந்தியதீத கலையில் சக்தி தத்துவம் சிவதத்துவம் எனத் தத்துவங்கள் இரண்டு: இத் தத்துவங்களில் நிவிருத்தி புவனம் முதல் அனாசிருதை வரை உள்ள புவனங்கள் பதினைந்து: மந்திரங்கள் மூன்று: ஓங்கார பதம் ஒன்று. அகாரம் முதலான உயிர் எழுத்துக்கள் பதினாறு - என அமைந்திருக்கும். இதன் அதிதேவர் சதாசிவர். ஆக, இந்த ஐந்து கலைகளிலும் பதினொன்று மந்திரங்களும், எண்பத்தொன்று பதங்களும், ஐம்பத்தொன்று எழுத்துக்களும் இருநூற்று இருபத்து நான்கு புவனங்களும், முப்பத்தாறு தத்துவங்களும் தொக்கு நிற்கும். இவ்வாறு உள்ள ஐந்து கலைகளுள் நிவிருத்தி, பிரதிட்டை,

வித்யை என்னும் மூன்றுகலைகளிலும் உள்ள புவனங்களில் பொருந்தியிருக்கும் விரிவான கன்மங்கள் அனைத்தையும் நீக்குதல், புத்தி தத்துவத்தில் விதையாகப் பொருந்தியிருக்கும் கன்ம வாசனைக்குக் காரணமான மலவாசனையை நீக்கல், எஞ்சியுள்ள சாந்திகலை, சாந்தியதீதகலை ஆகிய இரண்டில் உள்ளனவற்றையும் இனி பிறப்பாகவும் இறப்பாகவும் பந்திக்காதபடி நீக்கல் - ஆகிய இவையெல்லாம் தீக்கையின் போது நிகழும். இவ்வாறு உள்ள ஐந்துகலைகளில் ஏனையவை ஒடுங்கும் முறையைக் கூறுவோம்.

182. மருவியிடு மந்திரங்கள் பதங்களிலே பதங்கள்
வன்னங்க டமில்வன்னம் புவனங்க டமிலே
உருவொளிரும் புவனங்க டத்துவங்க டமிலே
யோதியிடுந் தத்துவங்கள் கலைகளிலு முறவே
தருகலைகள் சத்திகளிற் சத்திகடாஞ் சிவத்தே
தானுறவே யோசித்துச் சாற்றிடும்பே ரின்றிப்
பொருவிலதாய்ப் பற்றிலதாய் நிராதார மாகிப்
போற்றுபிர மாணங்கள் பொருந்தி டாதாய்.

பொழிப்புரை: கலைகளில் பொருந்தியுள்ளனவாகக் கூறப்படும் அவைகளுள் மந்திரங்கள் பதங்களிலும், பதங்கள் வன்னங்களிலும், வன்னங்கள் புவனங்களிலும், புவனங்கள் தத்துவங்களிலும் தத்துவங்கள் கலைகளிலும் முறையே ஒடுங்கி நிற்கும். நிவிருத்தி முதலான கலைகள் சக்திகளிலும் சக்திகள் சிவத்திலும் ஒடுங்கும். இவ்வாறு திகழ்வதால் ஒன்றிலே ஒன்று ஒடுங்கி நிற்குமாறு செய்து குணம், பெயர், செயல்கள் எவையும் இல்லாததாகி, ஒப்பற்றதாகி, தன்னால் பற்றப்படும் பொருள் எதுவும் இல்லாததாகி, ஆதாரமாகச் செயல்பட்ட தனு, கரணம் முதலானவை இல்லாததாகி, பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டதாகி விளங்கும் சிவத்துடன் ஆன்மா கலந்து விளங்குமாறு ஆசாரியர் தீக்கையின்போது செய்தருள்வார்.

183. ஓதலுறுந் தத்துவங்க ளொன்று மின்றி
யொன்றாகி யுயர்பரா னந்த மாகிப்
போதமய மாயகண்ட பூரணத்தே யாற்றின்
புனல்கடலுட் புகுந்ததுவாம் பொற்ப தென்னப்
பேதமற யோசித்துச் சமரசமாய்ப் பெற்றுப்
பின்னாகக் கடனீரவ் வாறெதிர்த்த பேறாய்த்
தீதகலச் சிவபத்தர்க் கனுக்கிரகஞ் செய்யத்
திரும்பவுமப் பிராரத்த தேகத்துஞ் செறிப்பான்.

**பொழிப்புரை:** நிரலாகக் கூறப்படும் தத்துவங்களின் தொடர்பு சிறிதும் இல்லாததாகி, ஏகவத்துவாய், மேலான சிவானந்த மயமாகி, சிவஞான சொரூபமாகி, காலத்தாலும் இடத்தாலும் பகுக்கப்படாததாகிப் பரிபூரணநிறைவாக உள்ள சிவத்திலே, ஆற்றுநீர் கடல்நீருடன் கூடிக் கலந்து கடல்நீராகவே நிற்பது போன்று ஆன்மா இரண்டறக் கலந்து நிற்குமாறு சிவத்துடன் ஐக்கியப்படுத்தி எங்கும் சமரச மயமாக விளங்குமாறு செய்து கடல்நீரில் இரண்டறக் கலந்து சமரசமாகி நின்ற ஆற்றுநீர், பின்னோக்கிப் பெயர்ந்து நதி மார்க்கத்தில் எதிர்த்து நின்றது போன்று, சிவனடியார்க்கு ஆணவம் முதலான பாசங்கள் நீங்குவதற்காக அருள்புரியும் நிமித்தம் மீளவும் பிராரத்த நுகர்வுக்காக நின்ற தேகத்திலே ஆசாரியர் ஆன்மாவை நிறுத்துவார்.

**அ.கை:** மேல் ஆசாரியானுக்கிரகம் பெற்றவர்கள் நிற்கும் நிலைமையைத்திட்டாந்த பூர்வமாகக் கூறுகின்றது.

**184.** தேசிகனா ரருளிங்கன் செய்த போதே
சிதானந்த மேனியாஞ் சிவமே நோக்கி
ஆசதுவா மாணவமும் வினைமாயை யனைத்து
மகன்றிடத்தான் சிவானந்தத் தழுந்தியது வேயாய்க்
காசமிலா விழியருக்க னொளியி னோடே
கலந்துநின்றே மற்றொன்றுங் காணா போல
ஏசுறுமுற் பசுகரணஞ் சிவகரண மேயா
யிசைந்திருந்து தேகாந்தத் தெங்கனுமா யிடுவர்.

**பொழிப்புரை:** ஞான ஆசாரியார் இவ்வாறு அனுக்கிரகம் செய்த பொழுதிலேயே, சத்து-சித்து-ஆனந்தமயமாகி நின்ற சிவத்துடன் ஐக்கியப்பட்டு நின்று எங்கும் சிவத்தையே கண்டிருப்பதாகி, குற்றமாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய பந்தங்கள் அனைத்தும் நீங்கி நிற்க, அருள்பெற்ற ஆன்மாக்கள் பூரணமயமான சிவானந்தத்திலே அழுந்தி அந்தச் சிவரூபமாகவே விளங்க, படலம் முதலான குற்றங்கள் இல்லாத கண் சூரிய ஒளியோடு கூடிக் கலந்து நின்று வேறொரு பொருளையும் காணாதது போன்று, முன்னர்க் குற்றமாகப் பொருந்திய பசுகரணம் சிவகரணமாகப் பொருந்தப்பெற்றுப் பின்னர் பிராரப்த தேகம் நீங்கியபின் சிவமாகி சர்வவியாபியாக விளங்குவார்கள்.

**அ.கை:** மேல் அனாதியாய் நித்தியமான ஆணவம் எப்படி நீங்குமென்னில், சீவன்முத்தரை மறையாமல் நீங்கிநிற்கையால் கெடும் என்பதுவும்,

**அ.கை:** மேல் சீவன்முத்தர் சர்வஞ்ஞத்துவாதிகளையும் சிவராகத்தையும் பொருந்தி நின்று தேகாந்தத்திலே பரமமுத்தி யடைவர்களென்பதுவும், சிவராகமாத்திரம் பொருந்திநின்று தேகாந்தத்திலே பரமுத்தியடைவார்களென்பதுவும் கூறுகின்றது.

188. தவஞ்செபங்க ளாதியெலாஞ் செய்தே முன்னஞ்
சாற்றுசிவ ராகமுற்றோர் தரணி மீதே
அவஞ்சிறிது மில்லாத சிவானு பூதி
யடைந்துகுரு வாலெல்லா வறிவுதொழி லவையும்
நவந்திகழுஞ் சித்தியுடன் முத்தி சேர்வர்
நண்ணாது தவாதிசிவ ராகமே நண்ணில்
பவந்தொலையச் சிவானுபவ மொன்றே பெற்றுப்
பரமுத்தி தேகபா தத்தடைவர் பரிந்தே.

**பொழிப்புரை:** முற்பிறவியிலே தவம், ஜபம், முதலானவற்றையெல்லாம் முறைப்படிச் செய்து சிவப்பற்றும் சிவஞானமும் மிகப் பெற்றுத் திகழ்ந்தவர்கள் நிலவுலகில் பிறந்து உத்தம குருவின் திருவருளால், வீணாகக் கழியாத சிவானுபவத்தைப் பெற்று முற்றறிவு, முற்றுத்தொழில் முதலான சிவகுணங்களை அடைந்து புதுமைப்பொலிவு மிக்க அணிமா முதலான சித்திகள் கைவரப்பெற்று உடல் நசிக்கின்ற காலத்தில் மேலான முத்திப்பேற்றை அடைவார்கள். தவம் ஜபம் முதலானவற்றைச் செய்யாமலும் முற்றறிவு முதலானவையும் அணிமாதி சித்திகளும் வாய்க்கப் பெறாமலும் சிவஞானம் ஒன்று மட்டுமே வாய்த்திருந்தால், பிறப்பு இறப்பாகிய சுழற்சி நீங்கும் வகையில் சிவானுபவம் மட்டுமே பெற்று நின்று, தேக முடிவுக் காலத்தில் சிவனருளால் மேலான முத்திப் பேற்றை அடைவார்கள்.

**அ.கை:** மேல் சிவஞானமன்றியில் சர்வஞ்ஞத்துவாதிகள் சித்திகள் இவைகளைப் பெற்று நின்றாற் பிரயோசனமில்லை யென்பதுவும், சிவஞானத்தைப் பொருந்தி சிவானுபவத்தைப் பெற்று நிற்பதே சிறப்பென்பதுவுங் கூறுகின்றது.

189. தரிப்பரிய சிவராக மின்றி மிக்க
தவமுதல்கள் புரிந்தோர்க டாரணியி லுதித்தே
பிரிப்பரிய சிவானுபவம் பெற்றி டாதே
பெற்றிருந்தும் பெரிதாய சித்திகடா மனைத்தும்
மரிப்பர்பினு முதித்திடுவர் மாயாவா ணவந்தான்
மற்றிதனா லனைத்தறிவும் வல்லமையும் பொருளோ

தெரிப்பரிய சிவானுபவஞ் சிவராகத் தாலே
தேசிகனாற் பெற்றுமுற்றுஞ் சிவமாதல் சிறப்பே.

பொழிப்புரை: தாங்கிக் கொள்வதற்கரிய மிகுதியான சிவஞானம் இல்லாமல் மிகுந்த தவம் முதலானவைகளை முற்பிறவியிலே செய்தவர்கள் நிலவுலகில் பிறந்து, பெரிய அணிமா முதலான சித்திகள் அனைத்தையும் பெற்றிருந்தும், ஆன்மாவிலிருந்து பிரிந்து இராததாகிய அரிய சிவானுபூதியைப் பெறவில்லை எனின், வீணே இறப்பர்: மீளவும் பிறப்பர். ஆணவம் முதலான பாசங்களும் நீங்கா ஆகையால் முற்றறிவு, அனைத்தையும் செய்யும் ஆற்றல் முதலியவற்றைப் பெற்றுத் திறமையுடன் நிற்பது பொருட்படுத்துவதற்குரிய ஒன்றல்ல: வாக்கால் விவரிப்பதற்கு அரிய சிவானுபவத்தைச் சிவஞானத்தாலும் குருவின் அருளாலும் பெற்று, இனியும் பிறப்பும் இறப்பும் நேராமல் பரிபூரண சிவத்துடன் இரண்டற்ற நிலையில் ஐக்கியப்பட்டு நிற்பதே சிறப்புக்கு உரியதாகும்.

அ.கை: மேல் நின்மலசாக்கிராதி பஞ்சாவத்தா லக்ஷணங்களை நாலு விருத்தங்களினாலே கூறுகின்றது.

190. அகரவுக ரமகார விந்து நாத
மாமூல மனுவினையைஞ் சத்திகடம் வடிவாய்ப்
பகருமன மகங்காரம் புத்தி சித்தம்
பாவிக்கு முளமிவற்றிற் பதிந்த ளத்தே
புகவுளதாம் புற்போலத் தாமே யாகப்
பொருந்தியே பூதவுருப் பொருள்க ளெல்லாம்
நிகரில்சிவ ரூபமாய்க் கண்டு நிற்க
நிறுத்துமித யத்திலிது நின்மலசாக் கிரமே.

பொழிப்புரை: கிரியாசக்தி, ஞானசக்தி, இச்சா சக்தி, ஆதிசக்தி, பராசக்தி எனும் ஐந்து சக்திகள் அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் எனும் சூக்கும ஐந்தெழுத்தைத் தமது திருமேனியாகக் கொண்டு, மனம், அகங்காரம், புத்தி, சித்தம், பாவிக்கவல்ல ஆன்ம ஞானமான உள்ளம் எனும் ஐந்தையும் அதிட்டித்துநிற்க, உப்பளத்தில் விழுந்த துரும்பு, புல் முதலானவை தத்தம் உருவம் கெட்டு உப்பே ஆதல் போன்று, தமது மயமாகவே ஆகப்பெற்று, ஐம்பூதங்கள் ரூபமான விடயங்கள் அனைத்தையும் ஒப்பற்ற சிவ ரூபமாகவும், விடயங்களை அனுபவிப்பதால் வரும் சுகத்தைச் சிதானந்தமாகவும் கண்டு இதயத்தானத்தில் லயித்து நிற்குமாறு விளங்குதல், நின்மல சாக்கிர அவத்தை ஆகும்.

191. சாக்கிரகா ரணமான வகாரந் தானுஞ்
சத்தாதி யிற்பற்று மனமு நீங்க
ஊக்கமுறு மகங்கார முகார மாதி
யுடனாகக் களமதனி லுறநின் றெண்ணில்
பாக்கியமாஞ் சிவயோகம்பா வனைப்பற்றிப் புலன்கள்
பற்றாத சொப்பனமாப் பகரு நூல்கள்
ஆக்கியிடுஞ் சொப்பனத்தே யுகாரமகங் கார
மகன்றிடவே தாலுமூ லத்திலடைந் தாங்கே.

பொழிப்புரை: நின்மல சாக்கிரத்துக்குக் காரணமாக நின்ற அகாரம் உகாரத்திலும் சப்தம் முதலான விடயங்களைப் பற்றும் மனம் அகங்காரத்திலும் கிரியாசக்தி ஞானசக்தியிலும் ஒடுங்கி நிற்க, பலம் பொருந்திய அகங்காரம் முதலான நான்குடனும், அவற்றைச் செலுத்தும் உகாரம் முதலான நான்குடனும் அவற்றுக்கு உயிர் போன்றனவாகிய ஞானசக்தி முதலான நான்கு சக்திகளுடனும் ஆகக் கழுத்துத் தானத்தில் பொருந்திநின்று அளவற்ற ஐசுவரிய ரூபமான 'சிவமே நான்' எனும் பாவனையைப் பொருந்தி, வெளி விடயங்களில் மனம் செல்லாமல் இருப்பது நின்மல சொப்பனம் எனும் அவத்தையாகும் என ஆகமநூல்கள் கூறும். சொப்பன அவத்தையை உண்டாக்கும் உகாரம் மகாரத்திலும் அகங்காரம் புத்தியிலும் ஞானசத்தி இச்சா சக்தியிலும் ஒடுங்கி நிற்கப் புத்தி முதலான மூன்றுடனும், அவற்றைச் செலுத்தும் மகாரம் முதலான மூன்றுடனும் அவற்றுக்குப் பிராணசக்திகளாக விளங்கும் இச்சாசக்தி முதலான மூன்று சக்திகளுடனும் சுழுத்தித் தானமாகிய தாலுமூலத்தில் பொருந்தி நிற்பது நின்மல சுழுத்தி அவத்தையாகும். இதுபற்றி மேலும் உரைக்க உளது.

192. உன்னரிய சிவனையவ னுருவாகு ஞான
வொளியாலே கண்டின்ப முளமுறுதல் சுழுத்தி
மன்னியிடுஞ் சுழுத்திக்குக் காரணமா மகார
மதியுமுட னீங்கியிட மற்றவைகள் புருவம்
தன்னடுவி னின்றந்தக் கரணங்கள் விருத்தி
தானுமறச் சிவானுபவந் தான்பெறுத றுரியம்
இந்நிலையில் விந்துவுடன் சித்தமுநீங் கிடவே
யேகாந்த மாய்பிரம ரந்திரத்தி லிசைந்தே.

பொழிப்புரை: இவ்வாறு தாலு மூலத்தில் லயித்து, நினைப்பதற்கு அரிய சிவனை, அவனது வடிவமாகும் ஞான ஒளியாலே கண்டு சிவானந்தத்தை

அனுபவித்து இருத்தலே நின்மல சுழுத்தி. சுழுத்தி அவத்தைக்குக் காரணமாகப் பொருந்தும் மகாரம் விந்துவிலும், புத்தி சித்தத்திலும், இச்சாசக்தி ஆதிசக்தியிலும் ஒடுங்கி நிற்க, சித்தம் முதலாகிய இரண்டுடனும் இவற்றைச் செலுத்தும் விந்து நாதம் எனும் இரண்டுடனும் இவற்றுக்கு உயிராக இயங்கும் ஆதி, பரை எனும் இரண்டு சக்திகளுடனும் புருவமத்தியில் நின்று, அந்தக் கரணத்தின் செயற்பாடுகள் ஒன்றேனும் இல்லாமல் ஆன்மா சிவானுபவத்தைப் பொருந்துதல் நின்மல துரியம் எனும் அவத்தையாகும். இந்தத் துரிய அவத்தைக்குக் காரணமாகும் விந்துவும் ஆகத நாதமும் குடிலையிலும், சித்தம் பிரகிருதியிலும் ஆதி சக்தி பராசக்தியிலும் ஒடுங்க உபாதி ஒன்றும் இல்லாமல் பிரமரந்திரத் தானத்தில் ஆன்மா மாத்திரமாகப் பொருந்தி நிற்றல் நின்மல துரியாதீதம்.

193. ஞானமுடன் ஞேயஞா துருவென்னு மூன்று
நாடாமற் றானதுவாய் நண்ணியிட றானே
ஊனமிலா வுன்மனைக்கு மேலான முத்தி
யுற்றதுநின் மலதுரியா தீதமென வுரைப்பர்
ஆனவிதே சுத்தமா முத்தி யாகு
மன்றிவே றுரைக்குமுத்தி யவைக ளெல்லாம்
ஈனமா முத்தியவை தம்மை யெல்லா
மியம்புவா மறிந்தவற்றை யிசையா வாறே.

பொழிப்புரை: மேலும் கூற உள்ள நின்மல துரியாதீத நிலையாவது, அறிபவன், அறிவு, அறியப்படுவது எனும் முப்புடிகளுக்கு ஞானம் பொருந்தாமல் ஆன்மா 'தத்' எனும் பதத்துக்கு உரிய பொருளாக விளங்கும் சிவமே தானாக நின்று, ஆனந்தம் அனுபவித்தல் நின்மல துரியாதீதம். இது அகாரம் முதலான சக்திகளுக்கு மேலாக நிற்கும் உன்மனா சக்திக்கும் மேம்பட்ட நிலையினதான பரமோட்சம் பொருந்தி நிற்றலாகிய அனுபவநிலையாகும். இவ்வாறு சிவஞானப் பெரியோர் கூறுவர். எனவே இத்தகைய முத்திநிலையே சுத்தமான வைதிக சைவ சுத்த அத்துவித முத்தியாகும். இதுவன்றி வெவ்வேறாக உரைக்கப்படும் முத்திநிலைகள் எல்லாம் கீழ்ப்பட்ட முத்திநிலைகளாகும். பிறமத வாதிகள் சொல்லும் பந்தநிலை முக்திநிலை ஆகியவற்றின் இலக்கணங்களை எல்லாம் நன்குணர்ந்தபடி அவற்றைப் பரிபக்குவம் வாய்ந்துள்ள ஆன்மாக்கள் பின்பற்றி நிற்காத வகையிலே கூறுவோம்.

அ.கை: மேல் சைவரல்லாத சமயிகள் சொல்லுகின்ற தசவித முத்திகளில் சாருவாகன், இந்திரியான்மவாதி, பஞ்சதன்மாத்திரான்மவாதி, நியாயவாதி, வைசேஷிகன், பௌத்தன், நிகண்டவாதி, ஆசீவகன் இவர்களுடைய

பெத்தாவத்தை இலக்கணங்களையும் முத்தியிலக்கணங்களையுங் கூறுகின்றது.

194. சைவரல்லாச் சமயிகடா முத்தி பேதஞ்
சாற்றிடுவ ரீரைந்தாச் சாரு வாகன்
மெய்வருதல் மண்ணறல்தீ வாயு நாலு
மேவியிடுங் கூட்டத்தே யுணர்வு மங்ஙன்
செய்வனவாந் தவம்வேண்டாம் பொருளைத் தேடிச்
சிற்றிடையா ருடன்வாழ்தல் சுவர்க்கந் தேரில்
இவ்வகையி லாததுவே நரக முத்தி
யென்பதுவா யுப்பிரிய விறத்தலுணர் வென்றே.

பொழிப்புரை: சைவ சமயத்தவர் அல்லாத புறச்சமயிகள் அடையக்கூடிய முத்தி பத்துவிதங்களாகும் எனக் கூறுவர். புறச்சமயத்தவருள் சாருவாகனின் கோட்பாடு கூறப்படுகிறது. நிலம், நீர், தீ, காற்று எனும் நான்கு பூதங்களின் சேர்க்கையால் உடல் உண்டாகும்: அந்த உடல் பேற்றுக்காகச் செய்யக் கடவன எனத் தவங்கள் தேவை இல்லை: பொருள்களைத் தேடித் தொகுத்துப் பெண்களுடன் கூடிப் போகத்தைக் துய்த்து வாழ்தலே துறக்கம்: ஆய்ந்துபார்த்தால், இத்தகைய போகப்பேறு இல்லாததே நரகம். காற்று நீங்கி நிற்க, உணர்வாகிய அறிவு அற்று இருத்தலே முத்தியாகும்.

195. பொருந்திடுவன் பூதங்க டமிலவன்றான் பொறிகள்
புலனறித லாலதுவே யுயிர தாகும்
அருந்திடுத லைம்புலனைப் பந்த மாகு
மவையடங்கல் முத்தியென வறைவனவன் றானும்
தருந்திகழப் பூதங்க டம்மையெது வதுவே
சாற்றியிடு மான்மாவா மெனவுணர்ந்தோன் றானும்
இருந்திடுதல் பஞ்சதன் மாத்திரைக்கே யியல்பா
வியம்பியிடு மினிஞாய வாதியுரை யிசைப்பாம்.

பொழிப்புரை:இவ்வாறு கூறும் சாருவாகன் நிலம் முதலான நான்கு பூதங்களில் இருக்கும் புவனங்களில் பொருந்தி இருப்பான். "செவி, தோல், கண், நாக்கு, மூக்கு எனும் ஞான இந்திரியம் ஐந்தும் சப்தம், பரிசம், உருவம், சுவை, மணம் எனும் ஐந்து விடயங்களையும் முறையே அறிவன ஆகையால் அந்த ஐந்து ஞான இந்திரியங்களே ஆன்மாவாகும். அந்த

ஐந்து விடயங்களையும் அனுபவித்து நிற்றலே ஆன்மாவுக்கு உள்ள பந்தமாகும், அந்த விடயங்களை நீங்கி நிற்றலே முத்திபேறு" - இவ்வாறு கூறுபவன் இந்திரிய ஆன்மவாதி. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐந்து பூதங்களையும் விளக்கம்பெறத் தோற்றுவிப்பனவாகிய சப்தம், பரிசம், ரூபம், சுவை, மணம், எனும் தன்மாத்திரையே ஆன்மாவாகும் எனக் கூறுபவன் பஞ்சதன்மாத்திர ஆன்மவாதியாவான். முற்கூறிய இந்திரிய ஆன்ம வாதியும், பஞ்சதன்மாத்திர ஆன்மவாதியும் பஞ்ச தன்மாத்திரையிலே முத்திநிலையில் இருக்கை கொள்வர் என சிவாகமம் எளிதில் உணர்த்தும். இனி நியாயவாதி கூறும் பந்த - மோட்ச இலக்கணங்களை உரைப்போம்.

196. ஆகமுட னைம்பொறியின் தொழில்க ளெல்லா
மடங்கியிடுங் கனவதனி லனைத்து முன்னிப்
போகமுறு மனமாமா லதுவே யான்மாப்
பொருந்தாது பொறிபுலனைப் புனித மாகி
ஏகமாய் நின்றிடலே முத்தி யாமென்
றியம்பிமனத் தத்துவத்தே யிசைவன் மேலும்
ஊகமுடைத் தாகியவை சேடிகன்றா னுரைக்கு
முண்டனன்யா னுணர்ந்தனன்யா னெனுமுரையி னாலே.

பொழிப்புரை: தேகத்தின் செயற்பாடுகள், ஐந்து இந்திரியங்களின் செயற்பாடுகள் ஆகியவையெல்லாம் கனவுநிலையில் நீங்கி நின்று, நீங்கி நின்ற எல்லாத் தொழில்களையும் 'வந்தேன், போனேன், கண்டேன்' என்றெல்லாம் சிந்தித்து சுகரூபமான போகங்களைப் பொருந்துவது மனம் ஆகையால் அந்த மனமே ஆன்மா: ஆன்மா ஐந்து இந்திரிய விடயங்களைப் பொருந்தாமல் பரிசுத்தமாகி ஒன்றாக நிற்பதே முத்தியாகும். என்று கூறும் மன - ஆன்மவாதி மனதத்துவத்தில் உள்ள புவனத்தை அடைவான். மேலும் யூகித்தறியும் புத்தியை உடைய வைசேடிகன் கூறும் இலக்கணமாவது: "யான் புசித்தேன், யான் அறிந்தேன் என்னும் வழக்காறு உள்ளது."

197. ஆங்கார ஞானத்துக் காசிரய மாகி
யனைத்தினையுங் கைக்கொண்டே யபிமானம் பண்ணும்
பாங்காலே யதுதனையே யான்மா வென்று
பகர்ந்திடலாஞ் சுகதுக்க பந்த மெல்லாம்

நீங்காநின் றோருணர்வு மின்றிப்பா டாண
நேராதல் முத்தியென நிகழ்த்திக் காயம்
போங்கால மகங்கார புவனந் தன்னிற்
பொருந்திடுவன் புத்தனினிப் புகலு மாறே.

பொழிப்புரை: "அகங்காரமானது அந்த ஞானத்துக்கு இடமாக நின்று எல்லா விடயங்களையும் ஏற்றுக் கொண்டு தனதாக அபிமானம் செய்யும் முறைமையால் அந்த அகங்காரத்தையே ஆன்மா எனக் கூறலாம். சுக துக்க ரூபமான பந்தங்கள் எல்லாவற்றையும் நீங்கி நின்று ஓருணர்வும் இல்லாமல் பாடாணம் (கல்) போன்று ஆகி நிற்றலே முத்தியாகும்" என இவ்வாறு அவன் கூறி நின்று, தேகநீக்கத்தின் போது அகங்கார புவனத்தை அடைவான். இனி, புத்தன் கூறும் நெறியைப்பற்றி அறிவோம்.

198. உருவம்வே தனைகுறிப்புப் பாவனைவிஞ் ஞான
மோரைந்தின் கூட்டத்தே யுளபுத்தி யதுவே
மருவியிடுஞ் சந்தான மாய்க்கெடுதல் பந்த
மற்றவைகள் சந்தான மறக்கெடுதல் முத்தி
தருமெனவே யுரைத்துமேல் முத்தி யென்றே
தானடைவன் புத்தியினி லென்று சாற்றும்
அருகன்றன் பேதமா நிகண்ட வாதி
யறைவனுட னிறைவறிவே யான்மா வாயே.

பொழிப்புரை: உருவக் கூட்டம் (ரூபஸ்கந்தம்), வேதனைக் கூட்டம், குறிப்புக் கூட்டம், பாவனைக் கூட்டம், விஞ்ஞானக் கூட்டம் (ஸ்கந்தம்-கூட்டம் சேர்க்கை) எனப்படும் பஞ்சஸ்கந்தச் சேர்க்கையால் தோன்றிய ஐந்து ஞான இந்திரியங்கள், ஐந்து கன்ம இந்திரியங்கள் ஆகியவற்றின் கூட்டத்தே உள்ளதாக இருப்பது புத்தி: அந்தப் புத்தியே ஆன்மா: பொருந்திவரும் ஞான சந்ததியாக அது அழிந்து நிற்பதே பந்தம்: மற்றும் அந்த ஞானசந்ததியெல்லாம் முழுவதும் கெட்டு புத்தியாக நிற்றலே முத்தியை உண்டாக்கும் எனக் கூறி, தேகநீக்கத்தில் புத்தி தத்துவத்தில் உள்ள புவனத்தை, முக்திநிலையாக அடைவான் இவ்வாறு ஆகம நூல் கூறும். அருக மதத்தில் ஒரு பிரிவினன் ஆன நிகண்டவாதியானவன் "தேகம் உள்ள அளவுக்கு அறிவு வியாபித்து நிற்பது: அந்த அறிவே ஆன்மா" எனக் கூறுவான்.

199. அறுதொழிலா லறம்பாவ மியற்றியதன் பயனை
யருந்துதற்குப் பிறந்திறக்கு மறுதொழிலும் விட்டே
உறுவினைக ளனைத்தினையு மொழிந்திடத்தான் புசித்தே
யுற்றிடுதல் பொன்னெயிலின் முத்தியென வுரைப்பான்
மறுவிலதோர் குணவுருவா முயிர்தான் மிக்க
மண்ணாதி நாற்பூத வணுக்களைத்தா னீங்கிப்
பெறுகுணமெட் டுடைத்தாகை முத்தி யென்று
பேசிடுமா சீவகனுங் குணத்துறுவான் பேறே.

பொழிப்புரை: "ஆன்மாவானது உழவு, தொழில், வரைவு, வாணிபம், வித்தை, சிற்பம் எனும் ஆறு தொழில்களாலே நல்வினை தீவினைகளைச் செய்து அவற்றின் பயன்களைத் துய்ப்பதற்காகப் பிறப்பையும் இறப்பையும் பொருந்தும். அந்த ஆறு தொழில்களையும் செய்யாமல், பந்தமாக அமைந்துள்ள வினைப்பயன்கள் அனைத்தையும் அனுபவித்து நீங்கிநிற்க, பொன்னெயில் வட்டத்தில் பொருந்தி நிற்றல் மோட்சமாகும்" என நிகண்டவாதி கூறுவான். ஒரு குற்றமும் இல்லாமல் குண சொருபமாக நின்ற ஆன்மா நிலம், நீர், தீ, வாயு எனும் நான்கு பூதங்களின் பரமாணுக்களை நீங்கி உண்டாகும் அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம், நிர்நாமம், நிர்கோத்திரம், நிராயுஷ்யம், சம்யதா பாவம் எனும் எண்குணங்களையும் உடையதாக இருத்தல் முத்தியாகும் என ஆசீவகன் கூறுவான். நிகண்டவாதி, ஆசீவகன் எனும் இருவரும் தேகநீக்கத்தில் குணதத்துவ புவனங்களை அடைந்து இருப்பர்.

அ.கை: மேல் மூன்று திருவிருத்தங்களால் பாஞ்சராத்திர மதத்தினுடைய பந்த முத்தி இலக்கணங்களைக் கூறுகின்றது.

200. சித்தசித்தீச் சுரமென்று மூன்றாகும் பொருள்கள்
சித்துயிர்தா னெல்வாலி னூற்றோர் பங்கை
ஒத்தணுவா யறிவாகி யுடலந் தன்னு
ளோரிடத்தே யுறைந்துவிளக் கொளியே போலச்
சத்தமுத லருந்தியிட நாலா றாகுந்
தத்துவங்க ளுடன்கூடித் தான்வினைகள் புரிந்தே
சுத்தமலாப் பிராகிருத தேகத் தாலே
தொடக்குண்டு பிறந்திறந்து துயர்தா னெய்தும்.

பொழிப்புரை: சித்து, அசித்து, ஈசுவரம் எனப் பொருள்கள் மூன்றுவகை. சித்து எனப்படும் ஆன்மா நெல்லினது வாலின் நூற்றில் ஒரு பங்குக்குச்

சமமாக நுண்ணியதாகி ஞான ரூபமாகி தேகத்துள் ஓர் இடத்தில் இடம் கொண்டு, வீட்டுக்குள் இருக்கும் விளக்கின் ஒளி வீடு முழுவதும் பிரகாசித்து நிற்பது போன்று சப்தம் முதலான விடயங்களை அனுபவிக்கும் படியாக நிலம் முதலான இருபத்து நான்கு தத்துவங்களுடன் கூடி, நல்வினை தீவினை ஆகிய செயல்களைச் செய்து, அந்த நல்வினை தீவினைப் பயன்களுக்கு ஏற்ப அசுத்தமாகிய பிரகிருதி தொடர்பான உடலாலே பந்திக்கப்பட்டுப் பிறத்தலும் இறத்தலும் ஆகிய துன்பத்தைப் பொருந்தும்.

**201.** அசித்தாதல் பிரகிருதி யதுதிருமாற் காதி
யானதோர் சத்தியதி லான்மாக்க ளெல்லாம்
வசித்தாகும் பிறப்பிறப்பை மாயோன்ற னருளால்
மற்றந்தத் திருமாலம் மாயைக்கு மேலாய்
நசித்திடா வைகுண்டந் தனிலென்று மிருந்தே
நாடரிய வனந்தகலி யாணகுண நண்ணிப்
புசித்தொழியாப் பரபோகந் தனக்கொக்க வங்ஙன்
பொருந்தினர்கட் களித்துநிற்பன் புனிதநித்த
வுருவோன்.

பொழிப்புரை: அசித்து என்பது பிரகிருதி. அது திருமாலுக்கு உள்ள பிரதானமான சடசக்தி. அந்தப் பிரகிருதியில் ஆன்மாக்கள் எல்லாம் இருந்து கன்மத்துக்கு ஈடாகப் பிறப்பையும் இறப்பையும் திருமாலின் ஆணையால் அடையும். அவ்வாறு ஆன்மாவுக்காகச் செயற்படும் திருமால் பிரகிருதிக்கு மேலாக உள்ளதாய், அழியாததாய், விளங்கும் வைகுண்டத்தில் எப்பொழுதும் இருந்துகொண்டு நினைப்பதற்கு அரிய எண்ணற்ற மங்கள குணங்களைப் பொருந்தி விளங்குவான்: அனுபவித்துத் தீர்க்க இயலாத மேலான போகத்தைத் (இலக்குமியை முன்னிட்டு) தமக்கு நிகராக அந்த வைகுண்டத்தை அடைந்துள்ள ஆன்மாக்களுக்குத் தூய்மைமிக்க, நித்திய வடிவத்தை உடைய திருமால் வழங்கிநிற்பார்.

**202.** அந்தமா யோன்றனக்கே யடிமை யாகி
யைந்துசா தனங்களணிந் தன்பி னோடே
இந்தமா நிலந்தன்னி லியற்றுமன வாக்கா
லிருவினையு மீசருடைப் பணியென்றே யிசையச்
சிந்தமா வினையனைத்தும் பிரகிருதி நீங்கத்
தேசுருவாம் வைகுண்டஞ் செறிந்துதிரு மால்போல்
அந்தமிலா நித்தவுருப் பெற்றிருக்கை முத்தி
யாகுமென வேபாஞ்ச ராத்திரிதா னறைவான்.

பொழிப்புரை: அத்தகைய திருமாலுக்கே அடியவன் ஆகி, எட்டெழுத்து மந்திர ஜபம் முதலான ஐந்து சாதனங்களையும் பக்தியுடன் தரித்துக்கொண்டு இந்நிலவுலகில் உள்ளத்தாலும் வாக்காலும் உடலாலும் செய்யும் நல்வினை தீவினைகளுக்கு ஈடாக இன்பமும் துன்பமும் அனுபவித்து வரும் காலத்தில் இவை முதல்வனாகிய திருமாலின் ஆணையால் வருபவை எனும் பாவனை திடப்பட்டுநிற்க, இவ்வாறு இருப்பதால் பெரிதுபட்டு விரிந்துள்ள கன்மங்களெல்லாம் அழிய, பந்தித்துள்ள பிரகிருதியும் நீங்க, ஒளிமயமாக விளங்கும் வைகுண்ட உலகத்தை அடைந்து அந்தத் திருமாலைப் போன்றே முடிவற்ற நித்தியமான உருவத்தை அடைந்திருப்பதே முத்தியாகும். இவ்வாறு பாஞ்சராத்திர சமயத்தவன் கூறுவான்.

அ.கை: மேல் சாங்கியனுடைய பெத்த முத்தி இலக்கணங்களைக் கூறுகின்றது.

203. சாங்கியன்றான் கூறியிடும் புருட னான்மாத்
தான்கத்தா வலன்புசிப்போன் றானு மல்லன்
ஓங்கியிடும் பிரகிருதி புருடன்சன் னிதியி
லூறுவதுவாம் விகாரங்க ளோர்பதினா றாகத்
தேங்கியிடுஞ் சுகதுக்க போகங்க ளவையே
சேர்வதுவாம் விவேகித்துத் தெளிந்துபிர கிருதி
நீங்கியிடல் முத்திநிலை யெனநிகழ்த்தி மேலே
நின்றிடுவன் புருடதத் துவந்தன்னி னேரே.

பொழிப்புரை: சாங்கிய நெறியைப் பற்றி இருப்பவன் கூறுவான்: புருடன் எனும் ஆன்மா, கன்மங்களைச் செய்யக் கர்த்தா அல்லன்: கன்ம பலத்தைப் புசிப்பவனும் அல்லன்: பரிணாமப்பொருட்டு ஓங்கும் பிரகிருதியானது, புருடனின் சன்னிதியில் விகிருதிப்பட்டு நின்று பதினாறு வகைப்பட்ட விகாரங்களை (வேறுபாடுகளை) அடைந்துநிற்கும்: சுகமயமான, துக்கமயமான போகங்கள் ஆன்ம சன்னிதானத்தில் பிரகிருதியில் திரண்டு நிற்கும். என விவேக ஞானத்தால் தெளிவாக உணர்ந்து, பிரகிருதியின் தொடர்பிலிருந்து விடப்பட்டு நிற்றலே முக்தியாகும். இவ்வாறு கூறும் அவன் தேக நீக்கத்தில் புருடதத்துவ புவனத்தில் சேர்ந்து செவ்வையாகத் திகழ்ந்திடுவான்.

அ.கை: மேல் மாயாவாதி சொல்லும் பெத்த முத்தி இலக்கணங்களை இரண்டு விருத்தங்களாற் கூறுகின்றது.

204. வாக்குமன மிறந்தபரப் பிரமந் தானே
மன்னியிடு மாயையீன்ற னுபாதி யாலே
ஆக்கியிடும் விசுவன்றே சுருவன் ஞானி
யாகுமொரு மூன்றவத்தை யவைமூன்றில் விசுவன்
ஊக்கமுறா மாயாகா ரியத்தி னாலே
யுலகுடல்கள் கரணங்க ளுயிர்க ளாவான்
நீக்கமிலாத் தைசசனு மீச னாகி
நீடுலகை யாக்கியளித் தழிப்ப னின்றே.

பொழிப்புரை: வாக்கையும் மனத்தையும் கடந்ததாய், உபாதி அற்று மேம்பட்டுள்ள பிரமம், தானாகவே ஏற்றுக்கொண்ட மாயை ஆகிய உபாதியினால் விசுவன், தைஜசன். பிராக்ஞன் (ஞானி) எனும் மூன்று நிலைகளுக்குரியதாக ஆக்கிக்கொள்ளும் இம்மூன்றனுள் விசுவன் தானாகவே செயற்படாத மாயையின் காரியத்தால் உலகங்களாகவும், உடல்களாகவும், கருவிகளாகவும் உயிர்களாகவும் வெளிப்பட்டு நிற்பான்: எங்கும் நீக்கமற வியாபித்துள்ள தைசசனும் உலகைச்செய்யும் கர்த்தா ஆக நின்று, விரிந்து பரந்துள்ள பிரபஞ்சத்தை உண்டாக்கிக் காத்து அழித்து நிற்பான்.

205. கண்டிடுமிவ் வலகாதி யனைத்தும் பொய்யே
காண்பவனா னென்றிடுத றானும் பொய்யே
உண்டுயிர்தான் பிரமமன்றி வேறே யென்றே
யுரைப்பதுவும் பொய்யெனவே யுணர்ந்து மாயை
விண்டுவிடக் கருத்துளனாய் விவேகஞ் செய்ய
விமலமாம் பரப்பிரம மாமிதுவே மிகுத்த
திண்டிறல்சேர் முத்தியென மாயா வாதி
செப்பிமேற் புருடனிலே சேர்வ னின்றே.

பொழிப்புரை: காணப்படும் இவ்வுலகம் முதலான அனைத்தும் பொய்யே (அசத்தியமே): ‘நான் காண்பவன், நான் செய்பவன்’ என வழங்கும் வழக்காறுகளும் பொய்யே. பிரம்மம் எனும் ஒன்றைத் தவிர்த்து வேறாக ஆன்மா உண்டு எனக் கூறுவதும் பொய்யே. இவ்வாறு அசத்தியமே அனைத்தும் என உணர்ந்து, மாயை ஆகிய உபாதியை விட்டு நீங்க வேண்டும் என்னும் கருத்து உடையவனாய், நித்தியம் இது, நித்தியமற்றது

இது, என விவேக அறிவால் ஆலோசித்துப்பின் வாக்கு மனம் கடந்து நின்மலமாக உள்ள பரப்பிரம்மமாக ஆன்மா ஆவன். இப்படி பரப்பிரம்மமாக நிற்பதே உறுதிவாய்ந்த, ஆற்றல்மிக்க முத்திநிலை என இவ்வாறு மாயா வாதி கூறி தேகநீக்கத்தில் புருடதத்துவ புவனத்தையே அடைந்து நிற்பான்.

**அ.கை:** மேல் வாம, தக்ஷிண மார்க்கத்தரானவர்கள் வேதவழிப்பட்ட ஆசாரத்தை கடைபிடிக்காததால் பிசாசபதத்தை அடைவர்கள் என்பது கூறுகின்றது.

**206.** ஓதல்செயுஞ் சிவனுக்கே யடிமை யென்றே
யுருத்திரசா தனந்தரித்து முண்மை யான
வேதநெறி வழுவுதலா லுமியினுளே யரிசி
மேவுதல்போல் வாமதெக் கணமார்க்க மேவி
ஏதமிலாத் தவம்புரியா தேயியன்றா ரெல்லா
மீறில்பர மானந்த சிவத்துடனே யென்றும்
பேதமிலா முத்திபெறா ருருத்திரர்தங் கணமாம்
பிசாசபதத் தடைவரெனப் பேசு நூலே.

**பொழிப்புரை:** ஆகமங்களைப் பயின்றும் சிவனுக்கே அடிமை என்று கூறியும், சிவ சாதனங்களான திருநீற்றையும் ருத்திராக்கத்தையும் அணிந்துகொண்டும், செயல்பட்டிருந்தாலும், என்றைக்கும் பொருந்துவதான வேதநெறியிலிருந்து வழுவிய காரணத்தால் பேரளவு உமியின் திரட்சியில் ஓர் அரிசி காணும் நியாயம் போன்று யாதோ ஒரு புண்ணிய விசேடத்தால் வாம நெறியையும் , தக்ஷிண நெறியையும் பொருந்தி, குற்றமற்ற வேதநெறிப்பட்ட தவச் செயல் செய்யாமல் அந்த நெறிகளுக்குரிய நடைமுறைகளைக் கடைப்பிடித்தவர்கள் எல்லாம், அழிவற்றதான பரம ஆனந்தமயமாக விளங்கும், சிவனுடன் எப்பொழுதும் நீங்காமல் இருப்பதான அத்துவித மோட்சத்தை அடையமாட்டார்கள். அவர்கள் உருத்திர கணங்கள் வாழும் பைசாச உலகையே அடைவார்கள் என மெய்ந்நூல்கள் கூறும்.

**அ.கை:** மேல் சமாவேசவாதி, சமுற்பத்திவாதி, சங்கிராந்தவாதி, அபிவியத்திவாதி, சிவாத்வைதி இவ்வைந்து மதவாதிகள் சொல்லும் முத்திகளும் பரமுத்தி அல்லவென்பது கூறுகின்றது.

**207.** சைவநெறி தனையடைந்து சிவாகமங்க ளோதித்
தானுணர்ந்து முத்தியினைச் சாற்றும் பேதம்

ஐவகையாஞ் சிவகுணங்க ளான்மாவி னிடத்தே
யாவேசித் திடலுதித்தல் பூருவந்தா னாக
மெய்வகையே சங்கிரமித் திடுதலபி வியத்தி
விமலசிவ முயிராகி மேவி நின்றே
உய்வகையா ஞானத்தால் மீளவுமச் சிவமா
யுறுமென்ற லிவைபரம முத்தியல வுணரே.

பொழிப்புரை: சைவநெறியைச் சார்ந்து சிவாகமங்களைப் பயின்று அவற்றின் பொருள் உணர்ந்து தமது சிந்தனைக்கேற்பப் பல்லோராலும் கூறப்படும் முத்தி வகைகள் ஐந்து. சிவனுடைய முற்றறிவு முதலான குணங்கள் ஆன்மாவில் பெரிதும் நுழைந்து பேரொளிகாட்ட, ஆன்மாவின்குணம் காணப்படாமல் நிற்கும் என்பது காபாலிகர் கூறும் ஆவேச முத்தி. ஆன்மாவுக்கு சிவசாமியம் உண்டு: அது முற்றறிவு முதலான குணங்களின் சொருபமாக இருப்பது. இத்தகைய சிவசாமிய நிலை முக்திக் காலத்தே ஆன்மாவில் உதிக்கும் என்பது மகாவிரதியர் கூறும் சமுற்பத்திமுக்தி, மணப்பொருள்களில் உள்ள நறுமணம் அவை வைக்கப்பட்டிருக்கும் ஆடை முதலியவற்றில் ஏறுவது போன்று சிவனின் முற்றறிவு முதலான குணங்கள் சத்தியஞான வடிவான ஆன்மாவில் ஏறி நிற்கும் என்பது பாசுபாதர் கூறும் சங்கிராந்த முத்தி: சிவனிடம் இருப்பது போன்றே ஆன்மாவிலும் முற்றறிவு முதலான குணங்கள் உண்டு: அவை பந்த நிலையில் உபாதிகளால் மறைக்கப்பட்டுள்ளன: முக்தி காலத்தில் மறைப்பு நீங்கப்பெற்று அவை பிரகாசித்து வெளிப்படும் என்பது சைவ-ஏகதேசிகள் கூறும் அபிவியக்தி முக்தி: நின்மல சிவம் பல்வேறு உயிர்களாக நின்று, விவேகஞானத்தால் திரும்பவும் நின்மல சிவமாகவே விளங்கும் என்பது சிவாத்துவைதி கூறும் முத்தி. இவை அனைத்துமே மேலான முக்தி நிலைகள் அல்ல.

அ.கை: உபசங்காரமாக (நிறைவாக) வைதிக சைவசித்தாந்தாத்துவைத முத்தி இலக்கணம் கூறுகின்றது.

208. அறைந்தனமுன் னேசைவ சித்தாந்த முத்தி
யான்மாவின் சிற்சத்தி யனாதியா ணவத்தால்
மறைந்ததுதான் பருவத்தே சிவனருளி னாலே
மாசற்று நின்றநிலை யேசிவத்தை மன்னி
உறைந்துவே றறவுப்பு நீருடனே நன்னீ
ருற்றதுபோ லோருணர்வா யுவமை யின்றி
நிறைந்துபர மானந்த மெய்தியது தானு
நிகழாம லதுதானாய் நிற்றலென நேரே.

பொழிப்புரை: இதற்கு முன்னும் சைவசித்தாந்த முத்திநிலை பற்றிக் கூறினோம். ஆன்ம சிற்சக்தி அனாதியாகவே ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு நிற்க, இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்த காலத்தில் சிவஞானத்தால் அந்த மறைப்பு நீங்கி நின்ற நிலையிலே சிவத்தைப் பொருந்தி அழுந்திநின்று, உப்புநீருடன் நன்னீர் கலந்து இரண்டறக் கலந்து நின்றது போல் எங்கும் என்றும் ஒரே சிவமய உணர்வாகி ஒப்பற்றதாகவும் பரிபூரணமாகவும் விளங்கும் பரமானந்த நுகர்ச்சியைப்பெற்றுப் பின் அந்த ஆனந்த அனுபவமும் காணாமல் அந்தச் சிவமாகவே நிற்பதுதான் வைதிக சைவ சித்தாந்த அத்துவித முத்தியாகும்.

209. செறிவரிய ஞானநிட்டை யெய்தி னோர்கள்
சீவன்முத்த ராய்ச்சரிக்குஞ் சிவமே யாவர்
அறிவரிதா மவர்செயலைப் பிராரத்த பேத
மனேகமுள வாதலினா லவ்வுடல்வா தனையால்
பிறிவரிதாய்ச் சிற்றின்ப மனைத்தினையும் பெற்றும்
பெரிதாய வீச்சைவேறுப் பினராயும் பின்னும்
நெறியான வறமறந்து மறமே செய்தும்
நீங்கியிடார் சிவன்றனையெந் நேரமுமந் நிலையே.

பொழிப்புரை: நூலறிவால் மட்டும் பொருந்துதற்கு அரிய ஞான ஆனந்த அனுபவ நிட்டை கைவரப் பெற்றிருப்பவர்கள், சீவன் முத்தர் என விளங்குவர்: அவர்கள் நடமாடும் சிவமே எனப் பொலிபவர்கள். அவர்கள் நிகழ்த்தும் செயல்களின் தன்மையை அறிவது அரியதாகும். பிராரப்த கன்ம பேதங்கள் தீவிரம், வேகம் எனப் பலவாக உள்ளன. ஆகையால் சீவன் முத்தருடைய சரீரத்தில் வாதனையாக நிற்கும் தீவிரம் வேகம் எனும் பிராரப்த கன்ம வலிமையால் அவர்கள் முரண்பட்ட செயல்களைச் செய்தாலும் அவர்களின் சிவத்துவநிலை பாதிக்கப் படாது. அவர்கள் விட்டொழிப்பதற்கு அரிய விடயசுகங்கள் அனைத்தையும் பொருந்தி நின்றாலும், பெரிதுபட்டுள்ள விடய நுகர்ச்சியில் விரக்தி ஏற்பட்டு நின்றாலும், மேலும் பொருத்தமான நெறியான அறநெறியை விலக்கி மறநெறிப்பட்ட செயல்களைச் செய்தாலும், அவர்கள் எப்பொழுதும் சிவமாகும் நிலையிலிருந்து நீங்காமல் தன்னின் வேறற்ற சிவமயமாகவே இருப்பார்கள்.

210. ஆதலினா லவர்செயல்கள் சிவன்செயலே யாகு
மவர்க்ககித மிதம்புரிந்தோர்க் காகுமவர் வினைகள்

வேதமுத லாகமங்கள் சிவன்மொழியா லந்த
விதிப்படியே செய்வமென விருப்புவெறுப் பின்றி
ஓதலுறும் வன்னத்தோ டாச்சிரமச் செயல்க
ளொழியாம லியற்றியே யுயர்தவஞ்செய் தோர்க்கும்
தீதெனவே முன்மொழிந்த சிற்றின்ப மாதி
செறிந்தோர்க்கும் பரமுத்தி தேகம்விடும் போதே.

பொழிப்புரை: ஆகையால் அந்தச் சீவன் முத்தர் செய்யும் செயல்கள் யாவும் சிவனுடைய செயல்களே: அந்தச் சீவன் முத்தர்க்கு இதமாகிய நன்மை புரிந்தவர்களிடத்தில் சீவன் முத்தரின் நல்வினைப்பயனும் அவர்களுக்கு அகிதமாகிய தீமை புரிந்தவர்களிடத்தில் சீவன்முத்தரின் தீவினைப் பயனும் பொருந்திவிடும்: வேதங்கள், ஆகமங்கள் முதலானவை சிவனுடைய வாக்குகள் ஆதலின் அவற்றில் கூறப்பட்டுள்ள விதிப்படியே செய்வோம் என அவர்கள் விரும்புவதுமில்லை: செய்யல் ஆகாது என அவர்கள் வெறுப்பதும் இல்லை. மேலும் வருண ஆசிரம நிலைகளுக்கு ஏற்ப மெய்ந்நூல்களில் கூறப்பட்டுள்ள செயல்களை விடாமல் செய்து உயர்ந்த தவத்தைச் செய்தவர்களுக்கும், முன் பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாகக் கூறப்பட்ட சிற்றின்பம் முதலான விடய சுகங்களை நுகர்வோர்க்கும் தேக நீக்கத்தின்போது மேலான முக்தி வாய்க்கும்.

அ.கை: மேல் மோக்ஷோபாய மூன்றுக்குள் ஞானநெறி கூறுகின்றது.

211. முத்திதனக் குபாயங்க ளநேகமுள வவற்றின்
முதலாகு மூன்றவைகள் மொழியுங் காலை
பத்தியுடன் பிரபத்தி ஞான மென்று
பகருமிவற் றுள்ஞானப் பான்மை சொல்லில்
தத்துவரூ பங்கள்தன் தரிசனங்கள் சுத்தி
சாரும்வினை மாயைமல தத்துவங்க ளுடனே
இத்தகைய பாசத்தை யுடைய வான்மா
விலக்கணங்கள் தரிசனங்கள் சுத்தி யென்றும்
நித்தனுருத் தரிசனம்பின் யோக போக
நிலையென்றுந் தசவிதமா நிகழ்த்து நூலே.

பொழிப்புரை: முக்திப் பேற்றுக்குரிய உபாயங்கள் பல உள: அவற்றுள் முக்கியமானவை மூன்று: அவை பக்தி, பிரபத்தி, ஞானம் என்பன. இவைகளுள் ஞானநெறி என்பது - முப்பத்தாறு தத்துவங்களுடைய சொருபம், அவற்றின் தரிசனம், அவற்றின் தூய்மை, கன்மம், மாயை

மலப்பிணிப்புக்கு உட்பட்டிருத்தல் ஆகிய பந்தங்களை உடைய ஆன்மாவின் சொரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, நித்தியனாகிய சிவனின் சொரூபம், சிவதரிசனம், பின்னர் சிவ யோகம், சிவபோகம் - எனப் பத்து விதங்களாகப் பரிணமித்து விளங்கும் என மெய்ந்நூலாகிய சிவாகமம் கூறும்.

**அ.கை:** மேல் பிரபத்திநெறி இரண்டு விருத்தங்களால் கூறுகின்றது.

**212.** இந்தவகை குருவருளா லுணர்ந்துசிவ போக
மெய்தியிட லரிதாமே லெவ்விடத்துஞ் சிவன்றான்
அந்தமற நின்றமையு மவனிடத்தே யனைத்து
மமைந்தமையு மவனருளை யன்றி யொன்றைச்
சிந்தைசெயா வென்பதையு முணர்ந்துசெயுஞ் செயறான்
சிவனேவ லெனச்செய்துஞ் சேர்பொறிக ளாலே
வந்தவிட யங்களெலாஞ் சிவனுக் காக்கி
மருவுமிரு வினையெமக்கென் னெனச்சிவன்பால்
மறைந்தே.

**பொழிப்புரை:** பத்துவகைப்பட்டு இவ்வாறு நிகழும் ஞானநெறியைக் குருவின் திருவருளால் உணர்ந்து சிவபோகத்தை அடைந்து நிற்றல் என்பது அரியதாகில், சொல், பொருள், பிரபஞ்சம் முதலாக உள்ள அனைத்து இடங்களிலும் சிவனே முடிவு என்பது இல்லாமல் பரிபூரணமாக நிறைந்து பொலிவதையும் சிவனிடத்தில் இவையனைத்தும் அடங்கி இருப்பதையும் சிவனுடைய செலுத்துதலாகிய (பிரேரகமாகிய) திருவருள் இன்றி ஒன்றும் அறியப்படாது சிவனுடைய ஆணையால் எனும் உணர்வுடன் செய்தும், பொருத்தமுறச் சேர்ந்துள்ள இந்திரியங்களால் வரும் விடயசுகம் அனைத்தையும் சிவனுக்கு அர்ப்பணித்து இந்த விடயங்களால் பொருந்தும் புண்ணியப் பயனோ பாவப்பயனோ நமக்கு ஒட்டுவதில்லை எனும் பாவனையில் சிவனிடத்தில் தன்செயலற்று நிற்றல் - பிரபத்திநெறிக்குரிய ஒழுக்கமாகும்.

**213.** அஞ்செழுத்திற் பதிபசுபா சங்க ளுண்மை
யறிந்தவற்றுட் பாசத்தைக் கீழ தாக
விஞ்சுசிவ முன்னாகத் தந்நதமாச் சிரம
விதிப்படியே யங்ககர நியாசஞ் செய்தே
துஞ்சிடுதல் கரணங்க ளுடனே சற்றுந்
தோய்ந்திடுத லறவருளே துணையாக் கொண்டே

எஞ்சலிலா வஞ்செழுத்தை மனத்தி னாலே
யெண்ணியிடல் பிரபத்தி யினிப்பத்தி யிசைப்பாம்.

பொழிப்புரை: மேலும், திருவைந்தெழுத்தில் பதியும் பசுவும் பாசமும் நிற்கும் முறைமையை நன்கு அறிந்து, பாசத்தைப் புலப்படுத்தும் நகார மகாரங்களைப் பின்னே பொருந்த வைத்து, சிவத்தைக் காட்டும் சிகாரம், சிவசக்தியைக் காட்டும் வகாரம், ஆன்மாவைக் காட்டும் யகாரம் என உள்ள இவற்றை முன்னே வைத்து, இப்படி அமைந்த திருவைந்தெழுத்தைத் தத்தம் ஆசிரம நிலைக்கு ஏற்ப நூல்கள் விதித்துள்ளவாறு, கரநியாசம், அங்கநியாசம் ஆகியவைகளைச் செய்து, விடயங்களில் சென்று படியும் இந்திரியங்களுடனும் அந்தக் கரணங்களுடனும் சற்றேனும் ஒன்றி நிற்காமல் சிவத்துக்கு அடங்கி நிற்பதாக இருந்து மனத்தளவில் மந்திரத்தின் நுண்பொருள் உணர்வுடன் கூடிய தியானத்துடன் ஜபம் செய்வது பிரபத்தி நெறியாகும்.

அ.கை: மேல் பக்தி அந்தரங்கபக்தி, பாஹ்யபக்தி என இரண்டு விதமாம். இவற்றுள் அந்தரங்க பக்தி வரும் முறைமை கூறுகின்றது.

214. இருவகைத்தாம் பத்தியாந் தரங்க மென்று
மியற்றியிடும் புறம்பென்று மிவற்றிலந்த ரங்கம்
வருமுறைதா னிதயகம லத்துறையுஞ் சிவத்தை
மாசில்பளிங் கொளியுருவா மிலிங்கமாய் மதித்தே
குருபதமா மலர்மதிமண் டலத்தமுதி னாலே
குறைவிலபி டேகஞ்செய் துபசார மனைத்தும்
ஒருமைதிகழ் மனத்துடனே புரிந்துசதி பதிபோ
லுடன்பிரியா திருக்கையென்றே யுரைத்திடுமா கமமே.

பொழிப்புரை: பக்தி என்பது அகமுகமான பக்தி எனவும் வெளிமுகமான பக்தி எனவும் இருவகைப்படும் என மெய்ந்நூல் கூறும். இவற்றுள் அந்தரங்க பக்தி எனும் அகமுக அன்பு நிகழும் முறையாவது: மூலாதாரம் முதல் இதயம் அளவாக ஆதார சக்தி முதல் சிவசக்தி வரை பாவிக்கப்படும் சிவாசனமாகிய இதய தாமரையில் மாசற்ற பளிங்கின் ஒளிமயமான லிங்கவடிவத்தைப் பாவித்து அதில் நிர்விகல்ப ஞானானந்த மயமான சிவத்தை எழுந்தருளச் செய்து. குருத்தானமாகிய பிரம்மரந்திரத்தில் ஆயிரம் இதழ்களுடன் விளங்கும் தாமரையில் உள்ள சந்திரமண்டலத்தினின்று பெருகும் அமுதத்தால் ஒருமுகப்பட்ட உள்ளத்துடன், ஆகமவிதிப்படிக் குறைவின்றி அபிடேகம் செய்து, நைவேத்தியம் முதலான உபசாரங்களைக் குறைவறச் செய்து உத்தம குலப்பெண்ணின் மனம் கணவனைவிட்டுப் பிரியாமல் நிற்பது

போன்று அந்தச் சிவத்துடன் பிரியாமல் இருத்தலாகிய தியானப் பயிற்சியை இடைவிடாது செய்தல் ஆகும்.

அ.கை: மேல் பாஹ்ய பக்தி கூறுகின்றது.

215. ஈதுமரி தேற்சிவனை யிலிங்கத்தி னிடத்து
மெழிற்குரவர் தமதிடத்துஞ் சிவபத்த ரிடத்தும்
கோதறவே கண்டுபணிந் தேத்திப் பூசை
குறைவறவே செய்தெந்த நாளும்வழி படவே
தீதறவே சிவஞானம் விளங்கியிடு நன்றாய்ச்
சிற்றறிவெ லாநீங்கிச் சிவானுபவ முளதென்
றோதியிடுஞ் சிவாகமங்க ளாதலினா லுயிர்கட்
குறுதிசிவ பத்தியன்னே யுணர்ந்து கொள்ளே.

பொழிப்புரை: இவ்வாறு நிகழும் அகமுகப்பட்ட பக்திநெறியில் ஒழுகுவது அரிதாகில் சிவனை இலிங்கத்தினிடத்தும், பெருமைக்குரிய குருவின் இடத்தும் சிவபக்தர்களிடமும் குற்றமறப் பாவித்துக்கண்டு, முறைப்படி வணங்கியும் போற்றியும், குறைவற வழிபாடு செய்தும் இவ்வாறு எப்பொழுதும் நிற்க, இச்செயல்களின் பயனாகத் தீமையவான ஆணவம் முதலான தளைகள் நீங்கப் பரிபூரணமான சிவஞானம் தோன்றிப் பிரகாசிக்கும். சிவஞான ஒளியால், சிற்றறிவு நிலை நீங்கி முற்றறிவு முதலான சிவகுணங்களெல்லாம் ஆன்மாவில் தோன்றிவிளங்க, எங்கும் சிவத்தையே கண்டிருக்கும் சிவானுபவம் முழுமையாக வாய்க்கும் என ஆகம நூல்கள் உறுதிப்பட உரைக்கும். ஆகையால் ஆன்மாக்களுக்கு உறுதி பயப்பது சிவபக்தியே என அன்னையே! நீ நன்குணர்ந்து கொள்க.

தந்தை சிவக்கொழுந்தைத் தாள்பணிந்தே தான்றனுசை
எந்தை சிவநெறியீங் கேதென்னச் - சிந்தையால்
தேர்ந்து சிவாகமத்தைச் சேர்த்தா யிரமதனை
ஓர்ந்திடச்சொன் னான்றமிழா லும்.

பொழிப்புரை: ஞானத் தந்தையாகிய சிவக்கொழுந்து சிவாசாரியாரின் திருவடிகளை ஞானமகளான சுவானந்த நாச்சியார் பணிந்து "எந்தையே! சிவநெறி என இங்கே சிறப்பித்துக் கூறப்படுவது எது?" என்று கேட்க, ஞானாசாரியார் தமது சிந்தனைத்திறத்தால் சிவநெறியின் கோட்பாடுகளை ஒருங்கிணைத்துச் சிவாகம நுட்பங்களையும் சேர்த்து உபதேசித்து, ஆயிரக்

கணக்கான உள்ளர்த்தங்களைத் தானே ஆய்ந்துணரும் வகையில் தமிழால் வெளிப்படுத்தி அருளினார்.

ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் அருளிய
சிவநெறிப் பிரகாசம்
நிறைவுற்றது.

சிவநெறிப்பிரகாசம்

## பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண் செய்யுள் எண்)



| | | | |
|---|---|---|---|
| அகரமுத | 79 | இந்தவகை | 83 |
| அகரவுக | 190 | இந்தவகை | 212 |
| அசித்தாதல் | 201 | இந்தவருட் | 97 |
| அஞ்சுமுகத் | 91 | இந்திரியம் | 129 |
| அஞ்செழுத்திற் | 213 | இப்படி | 150 |
| அஞ்ஞான | 52 | இப்படியே | 155 |
| அந்தணரே | 167 | இம்மையிலே | 60 |
| அந்தமா | 202 | இரதமுரு | 118 |
| அருந்தியிடப் | 61 | இருண்மலமு | 186 |
| அருளதனா | 6 | இருபொருட்குச் | 25 |
| அலைகடனீ | 64 | இருவகைத்தாம் | 214 |
| அவத்தைகே | 39 | இருவினைகட் | 36 |
| அறியாமை | 50 | இருவினைசேர் | 57 |
| அறிவரிதாய்ச் | 29 | இருள்வடிவாய் | 51 |
| அறிவிக்குந் | 147 | இருளொழித்திட் | 89 |
| அறிவிச்சை | 143 | இவ்வாறிங் | 135 |
| அறிவிலதாய்ச் | 55 | இறந்துபிறந் | 71 |
| அறிவுதொழி | 62 | இன்னமுங்கே | 66 |
| அறுதொழிலா | 199 | இனிச்சகல | 40 |
| அறைந்தவிந்த | 54 | ஈசர்சத்தி | 100 |
| அறைந்தனமுன் | 208 | ஈசருல | 93 |
| அன்னியமா | 35 | ஈசனார் | 144 |
| அனாதியாய் | 185 | ஈசனையு | 43 |
| அனாதியே | 58 | ஈசானி | 86 |
| அனுமானந் | 28 | ஈதுமரி | 215 |
| அனைத்துயிர்க்கு | 159 | உடம்பினி | 141 |
| ஆகத்தி | 154 | உத்தமமா | 8 |
| ஆகமுட | 196 | உத்தேசம் | 19 |
| ஆங்கார | 116 | உதித்தருள்சேர் | 153 |
| ஆங்கார | 197 | உருவம்வே | 198 |
| ஆதரவுஞ் | 177 | உருவாதி | 33 |
| ஆதலினா | 45 | உருவுளதாம் | 85 |
| ஆதலினா | 210 | உரைசெய்த | 81 |

| | |
|---|---|
| உலகனைத்து | 73 |
| உன்னரிய | 192 |
| உன்னியிடு | 179 |
| எண்ணரிதா | 126 |
| எண்ணியிடு | 171 |
| எண்ணியோர் | 152 |
| எண்ணிலுயி | 99 |
| எண்ணெயுடன் | 102 |
| எண்போதி | 69 |
| எப்பொருட்கு | 17 |
| என்புதோ | 140 |
| எவ்வுயிர்க்கு | 138 |
| ஏகமா | 46 |
| ஏதமிலாச் | 165 |
| ஏதுக்கா | 47 |
| ஏற்றியிடு | 80 |
| ஐயமறப் | 9 |
| ஐயமுடன் | 20 |
| ஓதல்செயுஞ் | 206 |
| ஓதலுறும் | 183 |
| கடபடங்கள் | 32 |
| கண்டிடுமிவ் | 205 |
| கரநான்குங் | 5 |
| கருதியிடும் | 119 |
| கருமசா | 94 |
| கரையிறந்த | 127 |
| கலையாதி | 23 |
| களமதனி | 95 |
| காமமுத | 173 |
| காயாதிக் | 137 |
| காயமே | 142 |
| காலந்தான் | 101 |
| காலம்போல் | 34 |
| குரவரிரு | 169 |
| குருசரண | 11 |
| குறைவிலா | 26 |
| கூறிடுமிக் | 175 |
| கூறிடுமிப் | 21 |
| கொல்லாமை | 172 |
| சடமாக | 68 |
| சத்தருடைச் | 76 |
| சத்திதா | 156 |
| சத்தியஞா | 2 |
| சத்தியின்றன் | 74 |
| சத்தியோ | 162 |
| சத்திநிபா | 158 |
| சன்னியாசத் | 42 |
| சாக்கிரகா | 191 |
| சாங்கியன்றான் | 203 |
| சாத்திகத்தா | 105 |
| சாம்பவமா | 164 |
| சாற்றிய | 136 |
| சாற்றியிட | 115 |
| சாற்றியிடுஞ் | 67 |
| சாற்றியிடுஞ் | 168 |
| சாற்றியிடுந் | 48 |
| சித்தசித்தீச் | 200 |
| சிவன்சத்தி | 82 |
| சிற்றறிவே | 53 |
| சீராருஞ் | 1 |
| சுத்தவித்தை | 128 |
| சூக்குமமே | 78 |
| செய்திடுநற் | 187 |
| செறிவரிய | 209 |
| சேர்த்திடவே | 96 |
| சேர்ந்திடிற்றீ | 88 |
| சைவநெறி | 207 |
| சைவரல்லாச் | 194 |
| சொல்லியிடு | 27 |
| ஞானமுட | 38 |

| | |
|---|---|
| ஞானமுடன் | 193 |
| ஞானமே | 92 |
| தத்துவ | 133 |
| தத்துவங்க | 146 |
| தத்துவங்க | 181 |
| தத்துவங்கள் | 123 |
| தந்தைதாய் | 10 |
| தாிப்பாிய | 189 |
| தருமநெறி | 108 |
| தருமமிரு | 106 |
| தருமமுடன் | 14 |
| தவஞ்செபங்க | 188 |
| தன்மைமுன் | 70 |
| தன்னியல்பும் | 18 |
| திடுக்கிடவோ | 149 |
| துருவாச | 7 |
| தேசிகரு | 176 |
| தேசிகனா | 184 |
| தொழில்செய்யு | 112 |
| நவமணி | 132 |
| நாதமுதற் | 130 |
| நாதாதி | 134 |
| நிருவாண | 166 |
| நிருவிடமும் | 65 |
| நினைத்தபடி | 72 |
| பக்குவான் | 75 |
| பசுக்களுக்குப் | 37 |
| பஞ்சசத்தி | 84 |
| பரபொருளுக் | 15 |
| பரையாதி | 3 |
| பாவமே | 49 |
| பிரகிருதி | 103 |
| புந்திதனி | 109 |
| புறக்கருவி | 24 |
| பெற்றிடிற்றி | 161 |
| பொருந்திடுவன் | 195 |
| பொருந்தியிடும் | 113 |
| பொறியைந்தால் | 22 |
| போறியைந்தும் | 111 |
| போற்றியிடுஞ் | 122 |
| போற்றியிடும் | 63 |
| மண்ணதுதான் | 121 |
| மண்ணதுநாற் | 120 |
| மண்ணாதி | 41 |
| மண்ணாதி | 44 |
| மண்முதல் | 131 |
| மந்தமாஞ் | 160 |
| மந்தமாய் | 157 |
| மந்திரங்கள் | 59 |
| மந்திரங்கள் | 163 |
| மந்திரமும் | 178 |
| மந்திரமே | 31 |
| மருவியிடு | 182 |
| மருவுசா | 87 |
| மனமதனிற் | 125 |
| மாயையுட | 16 |
| மானதனி | 104 |
| மிக்கதோர் | 98 |
| முக்குணங்க | 107 |
| முத்திதனக் | 211 |
| முந்தமனம் | 110 |
| முப்பொருளுஞ் | 174 |
| முன்னையருந் | 12 |
| முன்னைவினைக் | 139 |
| மேவியிடும் | 180 |
| மோகமற்றிவ் | 30 |
| வன்னமோர் | 151 |
| வன்னியுட | 124 |
| வனத்துறைவன் | 170 |
| வாக்குமன | 204 |

| | |
|---|---|
| வானதுதா | 114 |
| வானருவாய் | 117 |
| விஞ்ஞான | 90 |
| விடயமிதற் | 13 |
| விந்துவதோ | 77 |
| விந்துவென் | 56 |
| விழித்தினிது | 148 |
| வினையனைத்துந் | 145 |
| வேதசிவா | 4 |

## அருஞ்சொல்லகராதி

அகம் - உயிர், மனம்.
அச்சு - மெய்ப்பொருளாகிய சிவம். அது அச்சுப்போல ஆன்மாவை மலவாசனை பற்றிப் பிறழவிடாமையின் அங்ஙனம் உருவகம் செய்யப் பட்டது உடம்பு.
அங்கி - அங்கமுடையது. அக்கினி.
அங்கம் - அவயவம்.
அங்குரம் - முளை.
அஞ்சனம் - இருளாயிருப்பது.
அடங்குதல் - உள்ளமைதல்.
அடிப்பாடு - அமைவு.
அடுக்க - சமீபமாக.
அடப்படுதல் - சமைக்கப்படுதல்.
அடைவு - முறைமை.
அனு - சூக்குமவுடம்பு.
அணை - வரம்பு.
அண்டன் - முதல்வன்.
அதிகாரணம் - நிலைக்களம்.
அதிகாரம் - தலைப்பாடு
அதிகாரி - கேட்டற்கேற்ற பக்குவ முடையோன், சம்பந்தமுடையோன்.
அதீதம் - துரியாதீதாவத்தை.
அத்தன் - இறைவன்.
அத்துவா - வழி, அவை மந்திராத்துவா முதலியன.
அநர்த்தம் - கேடு.
அநாதி - தொடக்கமில்லாதது.
அநுகூலம் - இணக்கம்.
அநுக்கிரகம் - அருள்.
அநுபவம் - அறிந்தபொருளில் அழுந்துதல், அநுபூதி, புசிப்பு.
அநுபூதி - பிறபொருளின் துணையின்றி இயற்கையால் எல்லாவற்றையும் அளந்தயியும் அறிவு.
அந்தகாரம் - இருள்.
அந்தரம் - ஆகாயம்.
அந்ததரம் - தீவிரதரத்தில் தீவிரதரமான சத்திநிபாதம், சித்தம்.
அந்தம் - நான்காஞ் சத்திநிபாதம்.
அந்தியம் - வேற்றுமை.
அந்நியமின்மை - ஆன்மாவுக்கும் முதல்வனுக்குமுள்ள பிரிக்க முடியாது நிற்கும் சம்பந்தம், அஃது அத்துவித சம்பந்தம் என்பர்.
அபகரித்தல்- கவர்தல்.
அபாவம் - இன்மை.
அபேதம் - பேதமின்மை.
அப்பிரமேயம் - அளவையான் அளக்கப்படாதது.
அமைச்சு - அமைச்சன்
அமையாமை - பூரணமாகாமை.
அயராமை - மறவாமை
அரக்கு - மெழுகு.
அரு - சூக்குமம்.
அருள் - இரக்கம், திரோதானசத்தி.
அல்லன் - வேறு.
அவசித்தாந்தம் - தோல்வித்தானங்களுள் ஒன்று. அது தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவைகளைச் சொல்லிச் சித்தாந்தம் தாபித்தல்.

அவதரம் - அவகாசம்.
அவத்திதன் - அவத்தையுற்றவன்.
அவயவம் - தனித்தனி பிரிக்கப் படும் தகுதியுடையன.
அவயவி - அவயவமுடையது.
அவிச்சை - அஞ்ஞானம், ஆணவம்.
அவித்தை - அஞ்ஞானம்செய்வது.
அழுந்துதல் - அமிழ்ந்துதல், நன்றாய்ப் பதிதல்.
அளவை - பிரமாணம், அளத்தற்கருவி.
அறிவு - ஆன்மஞானம், ஞாதா.
அற்புதம் - சூனியம்.
அற்று - அவ்வியல்பிற்று.
அன்மை - உடைமைக்கு மறுதலை.
அன்றல் - மாறுபடுதல்.
அன்று - அநாதி.
அன்னர் - அத்தன்மையினர்.
ஆக்குதல் - படைத்தல்.
ஆசங்கை - வினா.
ஆசங்கித்தல் - ஆட்சேபித்தல்.
ஆசரித்தல் - அநுட்டித்தல்.
ஆசாரம் - ஒழுக்கம்.
ஆச்சிரவம் - பொறிவழிச்சேறல், கன்மத்தொடர்ச்சி.
ஆணவம் - வியாபகவுயிர் அனுத் தன்மைப்படச்செய்வது.
ஆதி - தொடக்கமுடையது, முதற் கடவுள்.
ஆமா - காட்டுப்பசு.
ஆயுள் - வயசு.
ஆய்தல் - ஆராய்ந்தறிதல், நிச்சயித்தல், நுணுகுதல்.
ஆரவாரம் - வெற்றொலி.
ஆராய்ச்சி - விசாரித்தல்.
ஆவிருதி - ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை மறைப்பது.
ஆவேசித்தல் - வெளிப்படுதல்.
ஆள் - அடிமை.
ஆற்றல் - சொற்குப் பொருளோடு உளதாகிய சம்பந்தம்.
ஆனந்தரீயம் - இவை யாய்ந்தபின் இது கேட்கற்பாற்று என்னும் யாப்பு.
ஆனாமை - நீங்காமை.
ஆன்மா - வியாபகம், சித்தசித்து.
இகலல் - பகைத்தல்.
இகல் - முரண்.
இடர்ப்படுத்தல் - ஆற்றலைக் குறைத்தல்.
இடுதல்- வைத்தல், கொடுத்தல்
இதழ் - தளம்.
இப்பி - சிப்பி.
இயங்கல் - தொழிற்படுதல்.
இயல்பு - இயற்கை, இயல்பாயுள்ளது, தன்மை.
இருதயம் - நெஞ்சு.
இலக்கு - அவகாசம்.
இலாடம் - நெற்றி.
இழுக்கு - குற்றம்.
இறுதி - சங்காரம்.
இறுவாய் - இறுதி.
இறை - விடை.
இறைவன் - தலைவன்.
இன்மை - உண்மைக்கு மறுதலை
ஈறாதல் - சங்காரப்படுதல்.
உச்சரித்தல் - உச்சாரணம்செய்தல்.
உடங்கு - ஒருங்கு.
உடைமை - உடையாரந்தன்மை.

உடையான் - பொருளைத் தனதாகக் கொண்டிருப்பவன்: வடநூலார் உடையானைச் சுவாமி என்பர்.
உணர்தல் - பாவித்தல்.
உணர்த்தல்-அறிவுறுத்தல்
உணர்வது - அநுபவிப்பது.
உன்னுதல் - விடயத்தில் அழுந்துதல்.
உண்மை - உளதாந்தன்மை, சிறப்பு.
உத்தியுத்தர் - விந்துவின் காரியங்களில் முயன்றவர்.
உத்தேசம் - பெயர் மாத்திரையான் எடுத்தோதல்.
உபதேசி - அறிவிக்க அறியும் தன்மைத்து.
உபாயம் - கிட்டியவழி.
உயிர்த்தல் - சுவாசித்தல்.
உரிமை - சம்பந்தம்.
உவமேயம் - உவமானத்தால் வருணிக்கப்படுவது.
உவர்ப்பு - வெறுப்பு.
உழப்பு - முயற்சி.
உளம் - உயிர், ஆன்மா, ஆன்ம போதம்.
உறவு - நட்பு.
உன்மத்தர் - சித்தமயக்கமுடையோர்.
ஊட்டல் - நுகர்வித்தல்.
ஊறு - பரிசம்.
எதிரது - வருவது.
எய்தல் - அடைதல்.
எழுப்புதல் - பிரகாசிப்பித்தல்.
ஏகாரம் - முதலையே என்புழி மற்றைய முதல்வரிலே இயையாது பிரித்தலும், சங்காரகாரணனாகிய முதலிலே இயையாமையைப் பிரித்தலும் அறிக, இயைபின்மை நீக்குதல்-இயைவித்தல், பிறிதினியையு-மற்றொன்றிற் போய்ப் பொருந்துதல்.
ஏது - காரணம்.
ஏலாமை - இயையாமை.
ஐயப்பாடு - சந்தேகம், துணிவு பிறவாமை.
ஒருதலை - நிச்சயம்.
ஒருவுதல் - நீங்குதல்.
ஓத்து - ஓதப்பட்டவிதி.
ஓமித்தல் - ஓமஞ்செய்தல்.
கஞ்சுகம் - சட்டை.
கடல் - நீர்க்கு இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம்.
கடா - வினா.
கட்டு - தொடக்கு.
கணித்தல் - மானதமாகச்செபித்தல்
கண் - அறிவு.
கண்கூடு - பிரத்தியட்சம்.
கண்ணல் - கருதல்.
கதி - பிறப்பு.
கதிர் - ஒளி.
கந்தித்தல் - நாறுதல்.
கரணம் - மனம் துமலிய கருவி.
கரு - கருப்பம்
கருத்தா - செய்பவன்.
கருத்து - தாற்பரியம், கருதப்பட்டது

கலை - ஒரு தத்துவம்.
களிம்பு - செம்பு முதலியவற்றில் இருக்கும் காளிதம்.
களைகண் - ஆதாரம், பற்றுக்கோடு.
கனல் - அக்கினி.
காட்சி - பார்வை.
காட்டம் - விறகு.
காட்டிற்றை - காட்டினதை.
காட்டு - காண்பிப்பது, காட்டாய கருவிகள், வியஞ்சகம்.
காணார் - உணர்தலைச்செய்யார்.
காண்டல் - ஐயுறவின்றித்தெளிதல்.
காமிகம் - சைவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று.
காமுகர் - காமமுடையவர்.
கான்மியம் - கன்மமலம்.
குரம்பை - கூடு.
குறி - இலிங்கம்.
குறை - இன்றியமையாப்பொருள்.
கூட்டரவு - கூட்டம்.
கூவல் - கிணறு.
கேசரம் - தாமரைப்பொகுட்டின் புறத்தே தொங்குமவை.
கேட்டல் - உண்மைஞானம் நான்கனுள் ஒன்று, அது குருமுகமாக ஆகமப்பொருளைச்செவிமடுத்தல்.
கேவலம் - ஆன்மா அறிவு, செயல், குறி, குணம் ஒன்றுமின்றித் தனியே ஆணவமலத்தான் மறைந்துநிற்கும் நிலை.
கோடல்-கொள்ளுதல்
கோடும் - கொள்ளுதும், கொள் பகுதி, தும் விகுதி.
கோட்டம் - ஒருபாற்சாய்தல், அநீதி.
சகம் - நிலவுலகம்.
சகலம் - ஆன்மா சரீரம் முதலிய வற்றைப் பெற்று நிற்கும் நிலை.
சங்கற்பித்தல் - எண்ணுதல்.
சங்கமம் - இயங்கியற்பொருள்.
சங்கிரமித்தல் - கலத்தல்.
சங்கேதம் - சொற்கும் பொருட்கும் உளதாகிய நியம ஆற்றல்.
சங்கை - சந்தேகம்.
சடிதி - சீக்கிரம்.
சட்ட - செப்பம்.
சதுரப்பாடு - சாமர்த்தியம்.
சத்தன் - விந்துவின் காரியங்களை ஒடுக்கியிருப்பவன்.
சத்து - உள்ளது, சத்தாகிய சிவம், நிலையுதலுடையது.
சந்நிதி - முன்னிலை.
சமயம் - மார்க்கம்.
சமவாயம் - அவயவம் முதலியவற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு, நீக்கமில்லாமை, ஒற்றுமை.
சமுதாயம் - கூட்டம்.
சமுவரம் - பொறிவழிச் செல்லாது தடுத்து முத்திக்குக் காரணமாவது.
சம்பவம் - உண்மை.
சலம் - வஞ்சனை, கோட்டம்.
சாக்கிரம் - சாக்கிராவத்தை.

சாங்கியர் - கபிலமுனிவரால் செய்யப்பட்ட சாங்கியநூலை அநுசரிப்போர்.
சாதகம் - கருவி.
சாதனம் - தொழிலைப் பயப்பிக்கும் முக்கியகாரணம், முடிப்பது.
சாதி - ஒரு நிகரனவாகிய பல பொருளுக்குள்ள பொதுவாந்தன்மை, குலம்.
சாதித்தல் - சாதனத்தால் நிறுத்துதல்.
சார்தல் - அடைதல்.
சார்பு - ஆதாரம்.
சாலுதல் - அமைதல்.
சித்தம்-அந்தக்கரணங்களுள் ஒன்று
சித்து - அறிவுடைப்பொருள்.
சிந்தித்தல் - உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது குருமுகமாகக் கேட்டபொருளை மனனம் செய்து தோஷம் நீங்குமாறு ஆராய்தல்.
சிறுமைப்படுதல் - கீழ்மைப்படுதல்.
சிறை - தடை.
சீ - புண்ணீர்.
சுதந்திரம் - தன்வயமுயமுடைமை.
சுத்தம் - இருவினையொப்பு, மலபரிபாகம் பெற்றுச் சிவனையடைந்து நிற்கும் நிலை.
சுருதி - வேறொன்றனை அவாவாதுதான் கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது.
சுழுத்தி - அந்தக்கரணங்களுள்ளே சித்த மாத்திரத்தோடு கூடிய நித்திராவத்தை.
சூக்குமம் - நுண்மை.
சூழ் - சூழ்ச்சி, உபதேசமொழி.
சூனியம் - பாழ்.
செயற்கை - இடையிலேதோன்றியது.
செய் - விளைநிலம்.
செய்தி - தொழில்.
செய்பவர் - உழவர்.
செய்வோர் - வினைநிகழ்த்துவோர்.
செல்லாது - சித்தியாது.
செவ்விது - வருத்தமின்றி.
சேடம் - குறை, யாதொன்று யாதொன்றன் பொருட்டாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃது. அதற்குச் சேடம் எனப்படும்.
சேடன் - அடிமை.
சேட்டித்தல் - செயற்படுதல்.
சேய்மை - தூரம்.
சேர்வை - சேர்ச்சி.
சேறல் - செல்லுதல்.
சைதன்னியம் - ஆன்மா, அறிவு.
சோகம் - கூம்புதல்.
சோதகம் - ஏவுவது.
சோதிட்டோமம் - ஓர் யாகம்.
தண்டம் - ஒறுத்தல்.
தத்துவம் - உள்ளது.
தமி - தனிமுதற்பொருள்.
தருக்கம் - புத்தியினால் சாதிக்கப்படும் ஆராய்ச்சி.
தருமி - தருமமுடையது.
தருமம் - பண்பு.
தர்ப்பணம் - கண்ணாடி
தலை - இடம்.
தலைப்படுதல் - கூடுதல்.

தலைமைப்பாடு - மேம்பாடு, முதன்மை.
தலைவர் - உத்தமர்.
தனி - வேறு.
தன்மை - சொருபம்.
தாக்காது - விகாரமின்றி.
தாக்குதல் - உறுத்தல்.
தாரகம் - தாங்குவது.
தாரை - நெகிழ்ச்சிப்பொருளின்கண் உள்ள இடையறாவொழுக்கு.
தார்க்கிகர் - தர்க்கநூற் கொள்கையுடையோர், தர்க்க சம்பந்தமுடையோர்.
தாவரம் - நிலையியற்பொருள்.
தாற்பரியம் - சொல்ல விரும்பிய கருத்து.
திதி - உள்பொருள்.
திருவருள்-ஈண்டுத் திரோதான சத்தி.
திவ்வியம் - தெய்வத்தன்மை
திறல் - வெற்றிப்பாடு.
திறம்-வகை, கூறு
தீக்கை - ஒரு நற்கிரியை. அது பாசத்தைக் கெடுத்து மோட்சத்தைக் கொடுப்பது. (தீ- கொடுத்தல் க்ஷ ா- கெடுத்தல்).
துணிதல் - அறிதற்பொருட்டு.
துணை - அளவு
துமிதல் - கெடுதல்.
துரத்தல் - ஓட்டுதல் , உந்தித் தள்ளுதல்.
துரியம் - இருவகைக் கருவிகளின் பிரவிருத்தியின்றி இருக்கும் அறிவு நிலை.
துலை - தராசு.
துவ்வாமை - அநுபவிக்கமாட்டாமை.
துழனி - ஆரவாரம்.
துறக்கம் - சுவர்க்கம்.
துனை - அதிவேகம்.
துன்னல் - செறிதல்.
தூலம் - பெரியது.
தெரிதல் - நிச்சயித்தல்.
தெரித்தல் - அறிவித்தல்.
தெருளுதல் - தெளிதல்.
தெளிதல் - உண்மைஞானம் நான்குனுள் ஒன்று. அது கேட்டபின் ஆராய்ந்து இதுவே கொளற் பாலது என்று நிச்சயித்தல்.
தைலம் - தேவனதுடைமை
தொகுதல் - அடங்குதல்.
தொடுதல் - தோண்டுதல்.
தொழும்பு - அடிமை.
தொன்மையே - அன்றே.
தோற்றம் - தோன்றுதல்.
தோற்றப்பட்ட - உண்டாக்கப்பட்ட,
நசித்தல்-கெடுதல், நாசமடைதல்.
நட்டோர் - நண்பர்.
நண்ணல் - புகுதல்.
நண்ணுதல் - தலைப்படுதல்.
நத்தம் - நிறைதல்.
நயம் - பயன், நியாயம்.
நலிதல் - வருந்தல்.
நல்கூர்தல் - வறுமையடைதல்.
நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த முதியோர்.
நள் - நடு.
நனவு - சாக்கிரம், விழிப்பு.
நன்னெறி - ஞானம்.
நாடி - ஆராய்ந்தறிக.

நாத்திகர் - கடவுளும், சுவர்க்க நரகங்களும், மறுபிறப்பும் இல்லை என்பவர்.
நாதம் - சிவதத்துவம்.
நாளம் - தண்டு.
நிகழ்ச்சி - உண்டாதல்.
நிகழ்தல் - உண்டாதல், நடத்தல் ஐயந்திரிபின்றி விளங்குதல்.
நிட்டை - உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டுச் சிந்தித்துத் துணிந்த பொருளுடன் பிரிவின்றி உறுதியாக நிற்றல்.
நித்தம் - நித்தியம்.
